T. 1275

உ

ஸ்ரீஜிநாயநம:

# சிவகசிந்தாமணிவசனம்

## முதற்பாகம்.

இது

மதுரைஜில்லா செம்பூர்

வித்வான்

வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்களால்

இயற்றப்பெற்று

திருப்பறம்பூர்

கனம். ஆதிநயினார் அவர்களால்

சென்னை:

கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1913ஸு.

விலை ரூ. 1—4—0.

All Rights Reserved.



ஸ்ரீ வர்த்தமானசுவாமிகள்.

K. R. PRESS, MADRAS-1913.

ஸ்ரீ.

# முகவுரை.

இது
சென்னை பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
மகா - ள - ள - ஸ்ரீ
கா. ர. கோவிந்தராஜ முதலியா ரவர்களால்
எழுதப்பெற்றது.

சீவகசிந்தாமணி என்னும் இந்நூலையியற்றினார், மதுரை ஜில்லா, செம்பூர் - மகா - ள - ள - ஸ்ரீ. வீ. ஆறுமுகஞ்சேர்வை யென்பார். இவர் மதுரை - கனம். சுப்பராயப்பிள்ளை யவர்களிடத்தும், மதுரை அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் - கனம். பாலகிருஷ்ணநாயுடு அவர்களிடத்தும் தமிழில் இலக்கண விலக்கியங்கள் நன்குபயின்றவர்; மதுரமாகவும் விரைந்தும் கவிகள்பாடுவதினும், செம்பாகமாக வசன மெழுதுவதினும் இவர் மிக்க வல்லுநர்.

இவர் ஆதியில் கல்விபயின்ற பின்னர் சிற்சில விடங்களில் உத்தியோகத்தமர்ந்து பணிபுரிந்து, அத்தொழில் தம் மனத்திற்குப் பொருந்தாமையின் அதனை விடுத்துத் தம்கல்வித் திறமையைத் தமிழ்வளர்க்குந் தனவான்களிடங்காட்டி நற்பரிசுபெற்று வாழக்கருதிச் சிலபிரபுக்களையடுத்து முடிவில், வித்வான்களுக்கு வேண்டுவன நல்குங் கற்பகம்போன்று இக்காலத்தில் விளங்கும், முறையூர். ஸ்ரீமாந். பழ. சி. சண்முகஞ் செட்டியா ரவர்கள்பாற் சார்ந்தனர். கனம். செட்டியாரவர்கள், இவருடைய கல்வி, நல்லொழுக்கம், அடக்கம் முதலியவற்றை யுணர்ந்து இவ

ரைச் சில வருடங்கள்வரை ஆதரித்து வந்தார்கள்; ஆயினும் இவர் ஓரேயிடத்தில் ஒரு தொழிலுமின்றி யூதியம் பெற்று வாழ்வது சிறப்பன்றென் றெண்ணிக் கனம். செட்டியாரவர்கள்பால் விடைபெற்று வெளிப்போந்து வேறு சில நகரங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள தனவந்தரைப் புகழ்ந்து பாடியும் சில போலிப் புலவராகிய சமஸ்தானப் புரட்டரின் பொறாமைச் செய்கையால் தமக்குக் கௌரவ மேற்படாது போக, இவர் மிகவும் மனநொந்து,

"கற்றோமென் றேயுரிய கைத்தொழிலைக் கைவிட்டுச்
சற்றேனு மன்பி றனத்தவர்பாற்—சுற்றிநின் றிங்
கல்லற்பட் டந்தோ வலைவதுபோ லம்மம்ம
தொல்லுலகி லில்லை துயர்."

எனவும்,

"போலிப் புலவரையும் பொய்ந்நிறைந்த புல்லரையுஞ்
சாலப் புகழ்ந்து தனமீவோர்—பாலேகி
நிந்தைக்கா ளாகே னிலத்தினிமே லோங்குதொழில்
சிந்தையுறச் செய்வேன் றெளிந்து."

எனவும்,

"சேரா தவர்முன்பு சேர்ந்ததனு லென்பெருமை
தேரா திகழ்ந்தாரிச் செம்மைசற்று—நேராப்
பணம்படைத்தோர் பாற்சுழலேன் பாரிலினி மேலாங்
குணம்படைத்து வாழ்வேன்சீர் கொண்டு."

எனவும்,

மூன்று வெண்பாக்களைப்பாடி அவர்களை விட்டு நீங்கிப் பின்னரும் தம் மனவருத்தந் தணியுமாறு குமாரக்கடவுளைத் துதித்துப் பழனிக்குமாரசுவாமி மாலை யொன்றும், கதிர்காம மாலை யொன்றும், திருமகளை வேண்டி இலக்குமி தோத்திரப்பதிக மொன்றும் பாடிப் பிறகு கோட்டாறு என்னும் ஊரை யடைந்தனர். அவ்வூரினர் இவரை வரவேற்று நன்குபசரிக்க இவர் மனமுவந்து,

"எட்டியன்னோர் தங்களிட மெய்தியங்குப் பட்டபெருங்
கட்டமெல்லாந் தீர்ந்தேன் களிகூர்ந்தேன்—இட்டமுடன்
ஆக்கமிக்க கோட்டாற்றி னன்பினரைக் காணுதற்கு
ஊக்கமுற்று வந்த வுடன்."

என்னுங் கவியைப்பாடக்கேட்டு அவ்வூரார், இவருக்கு ஆசுகவித்திற மமைந்திருத்தலை யுணர்ந்து, "இவ்வூர் எப்படி யிருக்கிறது? இதற்குக் கவியினாலேயே விடைபகர வேண்டும்," என்றுரைக்க உடனே இவர் விரைந்து,

"கண்ணுக் கினிதாங் கவலைசற்று மில்லதா
மண்ணிற் சிறந்த வனப்புளதாம்—விண்ணுக்கு
மன்னு மவாவிகிதம் வந்து வசிப்பதற்கே
உன்னுமிந்தக் கோட்டாரு மூர்."

என்னும் வெண்பாவினை ஆசுகவியாகப்பாடி அவர்களை மகிழ்வித்தனர். அதன்மேல் ஆங்குச்சின்னாள் வதிந்து சிலர் விரும்பியபடி கோட்டாற்று ஞானியார்மீது மாலையொன்று பாடி, கனம். தாகா லெப்பைசாகிபு அவர்கள் பாலீந்து, 1906 - ஆம் வருஷத்தில் சென்னைக்குவந்து, ஏதேனும் ஒரு தொழிலின் மூலமாகச் சீவித்தலே வேண்டு மென உறுதிகொண்டு, சில அச்சுயந்திரசாலைகளில் நூல்களியற்றிக்கொடுத்தல், நூற்பரிசோதனை செய்தல், ஒப்பு நோக்குதல், பிழைபார்த்தன் முதலிய தொழில்களைச் செய்து ஜீவித்து வருகின்றனர்.

இவருக்கு மதுரமான ஆசுகவிபாடுவதில் வன்மையிருத்தல்போலவே யமகம், திரிபு முதலிய சித்திரகவிகள் பாடுவதிலும் வன்மையுளது. இதனை இவர்பாடிய கதிர் காம மாலையிலுள்ள,

"சுரும்போ தவரும் பலருங் கடம்பணி தோள்கொளுமா
பெரும்போ தவரும் பலநலத் தாய்முன்பெப் பெற்றியரும்
வரும்போ தவரும் பலங்கொண்டு வாழ்வரென் மாட்டுன்மனம்
இரும்போ தவரும்ப லண்கதிர் காமத் தெழுந்தவனே."

என்னுஞ் செய்யுளும், முறையூர் ஸ்ரீமாந். பழ. சி. சண்முகஞ் செட்டியாரவர்களால் வெளிப்படுத்தப் பட்டிருக்கும், 'தனிச்செய்யுட்சிந்தாமணி,' என்னும் நூலிலுள்ள இவருடைய செய்யுட்களும் நன்கு விளக்கும். இன்னும் இவர் இக் கல்வித்திறத்தோடு அடக்கம், பொறுமை, கடவுளன்பு முதலிய நற்குணங்களும் வாய்ந்தவர்; இவர் சைவமதத்தினராயினும் பிறமதங்களில் துவேஷம் பாராட்டாதவர்.

இவர் மேற்கூறியவாறு சென்னைக்கு வந்து நான்கு வருடங்கள் கழிந்தபின்னர், இச்சென்னையில் சம்பீரக் கனி வர்த்தகம் நடத்தி வருபவரும், தமிழபிமான முள்ளவரும், வித்வான்களை ஆதரிப்பவரும், ஜைனமதத்தினருமாகிய திருப்பறம்பூர் மகா-ா-ா-ஸ்ரீ. ஆதிநயினார் என்பார், இவர் கல்வித்திறத்தினை யுணர்ந்து, இவரிடம் பஞ்சகாவியங்களுள் ஒன்றாகிய சீவகசிந்தாமணியைப் பயில்வான் விரும்பிப் பாடஞ்சொல்லும்படி இவரைக் கேட்ப இவரும் அதற்கியைந்து பாடஞ் சொல்லிவந்தனர்; அவ்வாறு பயின்று வருகையில் ஷை நயினார், இவரிடம் பாடங் கேட்டபடி பதவுரை யெழுதிக்கொண்டேவந்து முடிவில் அதனை இவர்பாற்காட்டி, "இதனை அச்சுவாகன மேற்றுவித்தலாமோ," என, இவர், "மற்று நும்மதத்தினர் சிலரோடு ஆலோசித்துச்செய்க," என, அவர் அங்ஙனமே சிலரைக்கேட்ப, அவர்கள், "இந்நூலுக்குப் பதவுரை வேண்டுவது அவசியமன்று; இதன் செய்யுட்களுக்குப் பெரிதும் ஒத்திருப்ப தொரு வசனமே வேண்டும்; இவ்வித வசனமொன்றிருப்பின் சீவகசிந்தாமணியைப் படித்துணர்ந்து கொள்ள முடியாமலிருக்கும் சில ஜைனருக்கும் மற்றையர்க்கும் சீவகசரித்திரத்தை யுணர்ந்துகொள்ள மிக்க உதவியாகும்; சிந்தாமணிக்கும் ஒரு திறவுகோல் போன்றிருக்கும்," என, அவர் அதனை இவர் பாற்றெரிவித்து இவரையே அத்தகைய வசனமொன் றெழுதுமாறு

வேண்டினர். இவரும் அதற்கிணங்கி, அந்நயினாரை நோக்கி, "நம்மதநுட்பங்களை நன்குணர்ந்தா ரொருவரது உதவி இவ்வசனமியற்றுதற்கண் எனக்கு வேண்டியிருக்கின்றது," என, அவர், "ஜைனசாஸ்திர பண்டிதராம் வீடூர் கனம். அப்பாசாமி நயினாரவர்கள் முத்தி யிலம்பகத்திற் சிலபகுதிகளுக்கு எங்கள் மதசம்பந்தமான சில விஷயங்களை முன்னே எனக்கு விளக்கிக்காட்டி யிருக்கின்றார்கள்; ஆதலின், அவர்கள் தங்களுக்கு வேண்டிய விஷயங்களைச் சொல்லுதல் கூடும்," என, இவர் அவ்வண்ணமே அந்த ஜைன சாஸ்திர பண்டித ரவர்கள்பால் தமக்கு வேண்டிய விஷயங்களைக் கேட்டுணர்ந்தும், மகாமகோபாத்தியாய ரும், சர்வகலாசாலைத் தமிழ்ப்பண்டிதருமாகிய பிரஹ்மஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களால் வெளிப்படுத்தப்பட் டிருக்கும் சீவக சிந்தாமணி இரண்டாம்பதிப்புப் புத்தகத்தி லுள்ள விசேடக்குறிப்பு முதலியவற்றின் உதவியைக் கொண்டும் இவ் வசனத்தை எழுதத்தொடங்கினர். இங்ஙனம் இவர் இவ் வசன மெழுதுதலைக்கேட்டு ஜைனமதத்தின ருள் முக்கியமானவர்களாகிய மற்றுஞ் சிலர், இவர்வயி னணுகி, "இவ் வசனத்தை விரைவின் முடித்துத் தருதல் வேண்டும்," எனக்கேட்டுக்கொண்டனர். அதனால், இவ ருக்குப் பல வேலைகளும் குடும்பகஷ்டங்களு மிருந்தும் அவற்றைக் கருதாமல் இவர் இந்நூலை மிக்கபிரயாசை யுடன் எழுதி வெளியிட்டனர்.

இந்நூல் பெரும்பான்மையும் ஜைனமதத்தினர்வைத் துப் பாராயணஞ் செய்யக்கூடியதா யிருத்தலின் இதில் ஜைனமதச் சார்பாகவே தெய்வவணக்கமிருத்தல் வேண்டு மெனச் சில ஜைனபிரபுக்கள் கேட்டுக்கொண்டமையால் இந்நூலாரம்பத்தில் இவர் தமது வழிபடு கடவுள் வணக் கங்கூறாது ஜைனமதச் சார்பாகவே தெய்வவணக்கங் கூறி யிருக்கின்றனர். இஃதன்றி, இவர் இவ்வசனத்தைச்

சீவகசிந்தாமணி மூலத்தோடு வைத்துப் பயில்வார்க்கு அம்மூலத்தின் பொருள் நன்கு விளங்குதற் பொருட்டு அதனோடு பெரும்பாலும் ஒத்திருக்கும் வண்ணம் எழுதியிருக்கின்றனர்; அவ்வாறெழுதினும் வசனநடைக்கு இடர்ப்பாடாகுஞ் சிற்சில விடங்களில் செய்யுளி லுள்ளபடி விஷயங்கள் எழுதப்படாமல் வசனநடைக்கு இயையுமாறு அந்நுவயப்படுத்தி யெழுதப்பட்டிருக்கின்றன; இன்னும் விஷயங்கள் தெளிவாக விளங்குதற்பொருட்டுக்காலங்களும் சில விடங்களில் மாற்றப்பட்டிருக்கின்றன. இவ்வசனம் நச்சினார்க்கினியர்தம் உரையோடு ஒத்திருக்கும்படி எழுதப்பெற்றதே யாயினும், சிலசொற்களுக்கு அவர் கூறும்பொருள் இக்காலத்து வழக்காற்றினிலதாயின் அச்சொற்களின் பொருளையும் இக்கால வழக்காற்றிற் கேற்பவும், வசனநடைக்கு அநுகுணமாகவும் இருக்குமாறு இவர் மாற்றி எழுதி யிருக்கின்றனர்; அன்றியும் பெண்களின் வர்ணனைகளில் இக்கால நாகரிகத்திற் கேற்பனவற்றைக்கொண்டு மற்றவற்றை விட்டிருக்கின்றனர். இன்னும் இவ்வசனம் செய்யுட்களைத்தழுவி யெழுதப் பெற்றதாதலின் அச்செய்யுட்களி லுள்ளபடி ஓரிடத்தில் வந்த அடைமொழிகளும் கற்பனைகளுமே மீண்டும் மீண்டும் பற்பல விடங்களில் வருகின்றன; இஃதன்றிச் சிற்சில நீண்டவாக்கியத் தொடர்களில், அடைமொழிகள் சேரவேண்டிய சொன் மருங்கிற் சேராது செய்யுளிலுள்ளபடி முன்பின்னாக மாறியும் வந்திருக்கின்றன; ஆயினும், நடை சிறுவரும் வாசித் துணருமாறு மிகச் செம்பாகமாக அமைந்திருக்கின்றது.

ஆதலின் இவ்வசனம் ஜைனமதத்தினர்க்கும் இலக்கியம் பயிலவிரும்பும் மற்றையோர்க்கும் பெரிதும் பயன் செய்வதாகும்; அன்றியும், இதனால் பண்டைக்காலத்தவரின் பழக்க வழக்கங்களையும் இல்லறவியல் முதலியவற்றையும் நன்கு தெரிந்துகொள்ளலாம்; இஃது இங்ஙனம்

நற்பயன்றருவதா யிருத்தலின் இதனைத் தமிழர் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்தல் அவசியமாம். இப்புத்தகத்தினுலுளதாம் ஊதியத்தின் ஒரு பகுதி தருமத்திற்கும், மற்றொரு பகுதி இதனுசிரியருக்குமாக உபயோகப்படும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆதலின், இதனைவாங்குவோர் ஒருபால் தருமத்தையும், ஒருபால் இதனுசிரியரையும் ஆதரித்தவராவர்.

இவ் வுரைநடைப்புத்தகம் பாடசாலைகளிற் சில உயர்தர வகுப்புக்களுக்கும் உபயோகப்படுவதாகும் என்பது எனதபிப்பிராயம். நந்தமிழ் மொழியிற் சிறந்தனவாகும் வசன புத்தகங்களில வெனுங் குறையை நீக்குவான் தோன்றிய புத்தகங்களில் இதுவு மொன்ரும்.

இத்தகைய அருமைவாய்ந்த இந்நூலைப் பிறர்சகாயமின்றித் தாமாகவே முயன்று மிக்க ஊக்கத்துடன் எழுதி வெளிப்படுத்திய இந் நூலாசிரியரது பேரறிவும், இதனை அச்சிட்டுதவிய கனம். தி. ஆதிநயினுரவர்களுடைய பெருங்குணமும் தமிழுலகம் என்றென்றும் மறக்கத்தக்கனவல்ல; மிகப் பாராட்டற் பாலனவேயாம்; இவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் இகத்தில் நீண்ட ஆயுளும் செல்வமும், பரத்தில் முத்தியும் உதவியருள்வானுக. சுபம்.

இங்ஙனம்:

கா. ர. கோ.

கடவுள் துணை.

# இவ்வசன நூலாசிரியருடைய

# விஞ்ஞாபனம்.

திருவுங் கல்வியுஞ் சிறப்புறுபுகழும் கருதுநற் குணமுங் கருணையும் பொறையும் ஒருங்கே நிறையப்பெற்ற உத்தம கனவான்களே! யான் இந்நூலை யெழுதி வெளிப் படுத்த நேர்ந்தகாரணம், கனம். கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்களால் எழுதப்பெற்றிருக்கும் முகவுரையால் நன்கு விளங்கும். எனது கல்வித்திறமையைக் காட்ட வேண்டுமென்றாவது, ஊதியம் பெருமை முதலியன பெற லாமென்றாவது கருதி யான் இந்நூலை எழுத முன்வர வில்லை. சங்கமருவிய பஞ்சகாவியங்களுள் முதன்மை பெற்றதும், மிக்க கடினமானதும், நச்சினார்க்கினியர் முத லிய பேராசிரியர்களால் உரைகாணத்தக்கதுமாகிய இச் சீவகசிந்தாமணியை வசனமாக எழுதுதற்கு இச் சிற்றறி வுடையனாகிய யான் எட்டுணையும் அருகனாகேன். ஆயி னும், என் மனக்குறிப்பறிந்து வேண்டுவன நல்கிப் பல நாளும் என்னை ஆதரித்துவரும் வள்ளலாகிய, திருப்பறம் பூர். கனம். ஆதிநயினாரவர்களும், மற்றுஞ் சில ஜைனபிர புக்களும் என்மீது வைத்திருந்த அபிமானத்தால், இதனை எழுதும் தகுதிவாய்ந்த மகா வித்வான்கள் அநேகரிருந் தும் என்னையே எழுதுமாறு வற்புறுத்திவந்ததை மறுக்க வியலாமையின், "விண்ணிலாதவன் விளங்கு நீ டெல் லையை ஊமன் கேட்டல் போலவும், கண்ணில்லாதவன்

காட்டல்போலவும்,'' ஜீவக சிந்தாமணி வசனமெனப் பெய ரிட்டு ஏதோ ஒன்றை எழுதிமுடித்தேன். இதனை, பிரஹ்மஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களால் எழுதப்பெற்றிருக்கும் மணிமேகலைவசனம் முதலிய நூல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கப்புகின் இது, மதிக்குமுன்னன்றி இரவிக்குமுன்றோன்றும் மின்மினியேயாம். ஆயினும், மக்கள் கூறும் மழலை மொழிகள் வழுச்செறிந்திருப்பினும் தந்தையர் அவற்றை அமுதினு மினியவையாகப் பாராட்டல் போல மகா வித்வான்களெல்லோரும் சிறுவனாகிய என் மொழியை இனிதாகக் கொள்வரெனத் திருப்தியடைந்திருக்கின்றேன்.

யான் இத்தகைய வசனத்தை யெழுதி முடித்தற்கு, விரைவின் மறைந்துபோகக்கூடிய நிலைமையிலிருந்த சங்க நூல்களுள் முதன்மையானவற்றைப் பிழையறப் பரிசோதித்தச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழுலகினுக்குப் பேருதவி புரிந்தவர்களும், தமிழ் வித்வான்களுக்குத் திலகம் போன்றவர்களுமாகிய பிரஹ்மஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களால் வெளிப்படுத்தப்பட்ட சீவகசிந்தாமணி இரண்டாம் பதிப்புப் புத்தகமே பெரும்பாலும் உதவியாயிருந்தது. இதுவும், கனம். வீ. ரே. அப்பாசாமிசாஸ்திரியாரவர்கள் ஜைனமத சித்தாந்தங்களுட் சிலவற்றைத் தெரிவித்துச்செய்த உதவியும், கனம். தி. ஆதிநயினார் முதலியவர்களுடைய தூண்டுதலும் இல்லாவிடின் இச் சீவகசிந்தாமணி வசனத்தில் ஒருவரியேனும் எழுதி முடிவுபெற்றிருக்க மாட்டாது. இவ்வாறு இவர்கள்செய்த உதவி என்றென்றும் மறக்கத்தக்கதன்று.

மேற் கூறியவாறு சிலருடைய வற்புறுத்துதலால் துணிவுகொண்டு இதனை எழுதினேனெனினும், அவ்வாறெழுதுங்காலத்தில் செய்யுட் பதப்பொருளை வசனநடைக்கு

இயையுமாறு திருப்பியும், இடையிற் சில விஷயங்களையும் சரித்திரங்களையும் விரவியும் எழுதுவதில் மிகக் கஷ்டமடைந்தேன். அதனால், அயர்ச்சியெய்தி இடையில் இவ்வேலையை நிறுத்திவிடவும் உத்தேசித்தேன். அப்படியிருந்தும் கனம். தி. ஆதிநயினாரவர்கள், அவ்வாறு அயர்ச்சியடையலாகா தென்றும், விரைவில் இதனை முடித்தல் வேண்டுமென்றும், அங்ஙன முடிப்பின் உடனே அச்சிட்டு வெளிப்படுத்தி விடுவதாகவுஞ் சொல்லி அடிக்கடி உற்சாகப்படுத்தி வந்ததனால் அவ்வயர்ச்சிநீங்க, இது நின்றுவிடாமல் ஒருவாறு பூர்த்தி பெற்றது. இந்நூலமைப்பின் முழுவிவரமும் முகவுரையில் துலக்கப்பெற்றிருக்கின்றது. அதனையே ஈண்டு மீண்டு மெழுதுதல் அனாவசியமாம்.

இதனை வாசிப்போர்க்கு இதன் மூலநூலாசிரியராகிய திருத்தக்க தேவர் சரித்திரமும் தெரியவேண்டியது அவசியமாகலின் அதுவும் இதன் பக்கத்தில் சுருக்கமாக எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

முடிவுவரை இதனை ஒரே புத்தகமாக அச்சிட்டால் மிக்க பணச்செலவாவதுடன் விலையும் அதிகப்படுமென்றும், அதனால் வாங்குவோர்க்கும் கஷ்டமாயிருக்குமென்றும், சில பகுப்புக்களாக வெளியிட்டால் எல்லாவிஷயங்களுக்கும் சௌகரியமாயிருக்குமென்றுங்கருதி நாமகளிலம்பகமும் கோவிந்தையாரிலம்பகமும் அடங்கிய இப் புத்தகம் முதற்பாகமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. அடுத்த பாகங்களும் தாமதமின்றி முறையே வெளிவரும்.

இவ்வசன முழுதும் பிறர் சகாயமின்றி யானே எழுதியதாதலின் இதிற் சில பிழைகளும் நேர்ந்திருத்தல்கூடும்; அத்தகைய பிழைகளை அறிந்த கனவான்கள் தெரிவிப்பின் வந்தனத்துடன் ஏற்று அவற்றை மறுபதிப்பில் திருத்திக் கொள்வேன்.

தமிழபிமானங் குறைந்துவரும் இக்காலத்தில் என்னைச் சில வருடங்களாக ஆதரித்து வந்ததோடு சீவகசிந்தாமணி முழுதையும் என்னிடம் பாடங்கேட்டு என்னைக்கொண்டே இவ்வசனநூலையும் எழுதுவித்துத் தம்முடைய சொந்தப்பணச் செலவிலேயே இதனை அச்சிட்டும் வெளிப்படுத்தி, ஜைனருக்கும் தமிழ் பயிலும் மற்றையர்க்கும் உதவிபுரிந்த கனம். தி. ஆதிநயினாரவர்களை யான் எம்மையினு மறவேன்; இன்னும் யான் எவ்வகைத் தளர்ச்சியுமின்றி இச்சென்னையில் வதிந்து வருமாறு என் குடும்ப விஷயங்களில் இவர்கள் நடத்திவரும் உதவிகள் பலவுள; இவற்றிற் கெல்லாம் இவர்களைப் புகழ்வதல்லது இவர்கள்பால் யான் செலுத்துங் கைம்மாறு யாதுளது? "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங் கொல்லோ வுலகு."

இத்தகைய நயினாரவர்கட்கும் எனக்கும் ஆதியில் நேயமுண்டாகுமாறு செய்தவர், திருநின்றவூர் மகா-௱-௱-ஸ்ரீ பொன்னம்பல முதலியார். நன்றாக ஆராயின் இந்நூல் வெளிப்பட்டதற்கு இவரே முதற்காரணமாயிருக்கின்றார்; ஆதலின், மற்றையர்பாற் செலுத்தும் நன்றியினும் பதின் மடங்கதிகமான நன்றியை இவர்பாற் செலுத்த யான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வெறுப்பின்றி இந்நூலைப்பார்த்து அபிப்பிராயம் எழுதிக்கொடுத்த கனவான்கட்கும், தமக்குப் பல இலௌகிக விஷயங்களிருந்தும் அவற்றைச் சிறிதும் கருதாமல் இதன் கையெழுத்துக் காப்பியைக்கொண்டுபோய் வீடூர். கனம். கு - அப்பாசாமிநயினார் முதலிய சில ஜைன சாஸ்திர பண்டிதர்களிடம் காட்டி வந்ததோடு தாமும் பார்வையிட்டுக் கொடுத்த ஞாயிறு உபாத்தியாயர் மகா-௱-௱-ஸ்ரீ. வச்சிரபாகுநயினாரவர்கட்கும், இதற்கு அபிப்பிராயம் வாங்கும்பொ

ருட்டுச் சில கனவான்களிடம் சென்று உழைப்பெடுத்து வந்த என்நண்பராகிய மகா-௱-௱-ஸ்ரீ. ஆற்காடு. துரைசாமி முதலியாரவர்கட்கும், இதற்குப் பேப்பர் முதலியன வாங்கிக்கொடுக்கும் விஷயத்தில் பிரயாசை யெடுத்துவந்த மகா-௱-௱-ஸ்ரீ. கூரத்தாழ்வார் செட்டியாரவர்கட்கும் யான் அளவற்ற வந்தனத்தை அன்புடன் செலுத்துகின்றேன்.

இதனால் வரும் ஊதியம் பெரும்பாலும் தருமத்திற்குரித்தாகக் கூடியதாயிருத்தலின் தமிழபிமானமும் தருமசிந்தனையுமுள்ள ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்கி அறத்தை யாதரித்து இதன் அடுத்த பாகங்களையும் விரைவில் வெளிப்படுத்துதற்காம் ஊக்கத்தை எனக்குண்டாக்குமாறு விரும்புகின்றேன். சுபம்.

இங்ஙனம்:

வீ. ஆறுமுகன்.

கடவுள் துணை.

# திருத்தக்கதேவர் சரித்திரம்.

சீவகசிந்தாமணியை இயற்றியருளிய ஆசிரியராகிய திருத்தக்கதேவர் மிகவும் புகழ்பெற்ற சோழர்குலத்திற்பிறந் தவர். இவருறைவிடம், காலம் முதலியவைகளுள் ஒன் றேனும் நிச்சயமாக விளங்கவில்லை. ஆயினும், மகா-ள-ள-ஸ்ரீ து. அ. கோபிநாதராவ் M. A. அவர்கள் மதுரைச்செந் தமிழ் ரு-ஆவது தொகுதி, கூரு-ஆவது பக்கத்திலும், பிர ஹ்மஸ்ரீ T. S. குப்புசாமி சாஸ்திரிகள் தஞ்சைத்தமிழ கம் 1-ஆவது வால்யூம் 130-ஆவது பக்கத்திலும், "இவரு டைய காலம் கி. பி. 900, அல்லது கி. பி. 900 - த்துக் குப் பிந்தியதாக இருக்கலாம்," என்று ஆராய்ந்து வெளிப் படுத்தி யிருப்பதைக்கொண்டு, ஏறக்குறைய இவர் 1013 வருடங்கட்கு முற்பட்டவரா யிருத்தல் கூடுமென்பது மாத்திரம் ஒருவாறு விளங்குகின்றது. இன்னும் நச்சினார் க்கினியர் உரைச்சிறப்புப் பாயிரத்தால், இவர், வஞ்சி யென்னும் ஊரில் வசித்த பொய்யாமொழி யென்பவரால் புகழப்பெற்றவ ரென்பதும் தெரிகின்றது. இவருக்குத் திருத்தக்க தேவரென்பதன்றி, திருத்தகு முனிவர், திருத் தகு மகாமுனிவர், திருத்தக்க மகாமுனிகள், பாலப்பி ரமசாரி என்னும் வேறுநாமங்களுமுண்டு. தேவர் என் னும் பெயரும் சிறப்பால் இவரையே உணர்த்தும்.

இவர் மேற்குறித்தவாறு சோழர் குலத்திலே யுதி த்து இளம் பருவத்திலேயே அக்ஷராப்பியாசஞ் செய்

விக்கப்பெற்றுச் சிறிது கல்விகற்றபின்னர் பண்டைக்காலத்து இலக்கணநூல்களாகிய அகத்தியம், தொல்காப்பிய முதலியவற்றையும், சங்க மருவி வழங்கிய மற்றைநூல்களையும், வடமொழியையும், தமக்குரிய ஆருகதசமயநூல்களையுங் கற்றுத் தேர்ந்து, மிக்கபாண்டித்திய மடைந்து, சத்தியம், பொறை, ஜீவகாருண்யம், ஞானம் முதலியவைகளெல்லாம் நன்கமையப்பெற்று அறிவிற்சிறந்தவராய் ஞானசிரியரை யடைந்து துறவுபூண்டு அவ்வாசிரியர் கருத்தின்படியே நடந்துவந்தனர். இவ்வாறிருந்த இவர், சிலதினங்கள் கழிந்தபிறகு தம்மாசிரியருடன் பாண்டிநாட்டிற்குத் திலகம் போன்றதும், முச்சங்கமும் நிலவப்பெற்றதும், தமிழ்வளர்த்த பாண்டியர்களுக் குறைவிடமாயிருந்ததுமாகிய மதுரைமா நகரத்தை யடைந்து ஆங்குச் சிலகாலம் வதிந்துவந்தனர்.

இப்படி வசித்துவரும்போது இவர், அம் மதுராபுரியிலிருந்த சங்கப்புலவர்களின் கல்வியுயர்வை யுணர்ந்து அவர்களோடுறவாட விரும்பித் தம்மாசிரியரிடம் அனுமதிபெற்று அவர்கள் பாற் சென்று அவர்களுடன் தினந்தோறும் பழகிப் பழைய தமிழ்ப்பாடல்களின் உயர்வாகிய கருத்துக்களை அவர்கள் எடுத்துக்கூறி அவற்றின் சொன்னயம் பொருணயம் முதலியவற்றை விளக்கிக் காட்டி மகிழ்விக்க மகிழ்ந்தும், தாமும் அப்படியே எடுத்துக்கூறி அவர்களை மகிழ்வித்தும் அவர்களோடுகூடி அளவிலா ஆனந்தமடைந்து அப்புலவரால் நன்குமதிக்கப்பெற்றிருந்தார்.

இப்படி வசித்து வருங்காலத்திலே ஒருதினம் சங்கப்புலவர்கள் இவரைநோக்கி, "ஜைனமதத்தில் பாடுந்திறமை வாய்ந்த புலவர்களெல்லோரும் துறவைச் சிறப்பித்துப் பாடத் தெரிந்துகொண்டிருக்கின்றாரே யன்றி

இல்லற வின்பத்தைப்பற்றிப் பாடத் தெரிந்துகொள்ள வில்லை; இல்லற வியலைப்பற்றி இக்காலத்தில் வெளிவந் திருக்கும் பலநூல்களுள் அவர்கள் இயற்றியது ஒன்றேனு மில்லை; இல்லற வியலைப்பற்றி அவர்களுக்குப் பாடத் தெரியா தென்பதற்கு இஃது தொன்றே தக்க சாக்ஷியா யிருக்கின்றது," என்றுகூற அதைக்கேட்டு இவர், "அவர் கள் இல்லறவின்பத்தைப் பெரும்பான்மையும் வெறுக்கு ஞ்சுபாவமுடையவர்கள்; ஆதலின் அதனைச் சிறப்பித்து ப்பாடவில்லையே யன்றித் தெரியாமலிருக்கவில்லை," என்று ரைக்க, சங்கப்புலவர், "அவ்வாறாயின் இல்லற வின்ப முழுதும் விளங்கும்படி நீரே ஒருநூலை இயற்றுவீராக," என்றுகூறினர்.

இவர் அவ்வாறே பாடுதற்கிசைந்து தம்மாசிரியரிடஞ் சென்று வணங்கித் தம்கருத்தைத் தெரிவிக்க, அவர், இத்தகையநூலை யியற்றுவதில் திருத்தக்க தேவர் வன்மை யுடையவரா யிருத்தலை அறிந்திருந்தும் இவருடைய புத் திநுட்பத்தை அளவிட்டறிந்து அதன்மேல் இந்நூலையி யற்றுதற்கு அனுமதிகொடுக்க வேண்டுமென்று ஆலோ சித்திருந்தார். அத்தருணத்தில் எதிரிலே ஒருநரி ஓடிற்று; அதனைக்கண்ட மாத்திரத்தில் ஆசிரியர், திருத்தக்கதே வரைநோக்கி, "இந்த நரியினுடைய ஜாதியியற்கையை ஆதாரமாக எடுத்துக்கொண்டு நம்புத்திக்குத்தோன்றிய வாறு ஒரு சிறிய நூலியற்றுவீராக," என்றுரைக்க, இவர் அவ்வாறே அதனை ஆதாரமாகக்கொண்டு தேகநிலையாமை, செல்வநிலையாமை முதலியவைகளெல்லாம் செவ்விதின் விளங்குமாறு, 'நரிவிருத்தம்' என்னும் நூலை விரைவில் இயற்றிக்காட்டினர். அது மிகவும் வியக்கத்தக்கதாயிருந் தபடியால் ஆசிரியர் அதனைநோக்கித் தேவர் கருத்து, துறவினிடத்தே மிகவும் உறுதிபூண்டிருத்தலை யுணர்ந்து

அதற்காகப் புகழ்ந்து, கொண்டாடி இவரை நோக்கி, "இனி நீர், சங்கப்புலவர் கூறியவாறே இல்லற வின்பம் தெள்ளிதில் விளங்கும்படி ஜீவகசரித்திரத்தை ஒரு பெருங்காப்பியமாக இயற்றுவீராக," என்றுகூறி, அஃது எவ்வகை இடையூறுமின்றி இனிதாக நிறைவேறும் பொருட்டு அருகக்கடவுளைப் பிரார்த்தித்து, "செம்பொன்" என்னுங் கவியைப் பாடித் துதித்து, "இக்கவியையே கடவுள் வாழ்த்தாகக்கொண்டு நூலைப் பாடத் தொடங்குவீராக," என்று, அப்பாடலை இவருக்களித்தனர். இவர் அப்பாடலை யேற்றுக்கொண்டு, "மூவா முதலா" என்னுங் கவியால் இரண்டாவதாகக் கூறவேண்டிய சித்த வணக்கங் கூறினர். அக்கவி, ஆசிரியர் கூறிய அருக சரணக்கவியினும் சிறந்திருந்தமைபற்றி அவர் திருத்தக்கதேவரை நோக்கி, "யான்பாடிய செய்யுளினும் நீர் பாடிய செய்யுள் அழகாயிருத்தலால் அதனையே முதலில்வைப்பீராக," என்றுகூறத் தேவர், அவர்கட்டளையை மறுக்கவியலாமல் அவ்வாறே தாம் கூறிய சித்தசரணச் செய்யுளை முதலிலும், அவர் கூறிய அருகசரணக் கவியை அதற்குப் பின்னுமாகவைத்து, சீவகசிந்தாமணியை எட்டு நாளில் பாடி முடித்து அவ்வாசிரியருக்குக் காட்டினர். அவர் இந்நூலைப்பார்த்து மிகவும் புகழ்ந்து, "இந்நூல் உலகத்தில் என்றென்றும் நிலைபெறுவதாக," என்று ஆசீர்வசனமொழிந்து, "முந்நீர் வலம்புரி" என்னும் ஓம்படைச் செய்யுளை யுரைத்துப் பின்னர் திருத்தக்க தேவரைப் பார்த்து, "சங்கப் புலவர்பாற்சென்று இந்நூலை அரங்கேற்றி வருவீராக," என்று கட்டளையிட்டனர்.

இவ்வாறு கட்டளையிட்ட மாத்திரத்தில் தேவர் உடனேசென்று பாண்டியன் சபையில் கூடியிருந்த சங்கப் புலவர் முன்னிலையில் இந்நூலைப் படித்துக் காட்டினர்.

அவர்கள் முற்றுறக்கேட்டு, இந்நூல், இல்லற வியலோடு, சொன்னயம், பொருணயம், தொடைநயம், ஒவ்வொரு வகுப்பார்க்கும் பொருத்தமாகிய வருணனைகள் முதலிய வைகளெல்லாம் செவ்விதாக அமையப்பெற் றிருத்தலை நோக்கி ஆச்சரியமடைந்து சிரக்கம்பஞ்செய்து, "இவ்வாறு பாடுதல் எவர்க்கும் அமைவ தரிது," என்று இவரைக் கொண்டாடி மிக்க மகிழ்ச்சியெய்தினர். இவ்வாறே பாண்டியனும் ஆங்குக் கூடியிருந்த மற்றையரும் புகழ்ந்து கொண்டாடினர். அத்தருணத்தில் ஆங்கிருந்தவர்களிற் சிலர், "இந்நூலில் இல்லறவின்பத்தைப் பற்றிய விஷயங்கள் மிகவும் துலக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன; இந்நூலாசிரியரோ சிறுபருவத்திலேயே துறவுபூண்டவர்; இத்தகைய இவருக்கு இவ்விஷயங்கள் எப்படித் தெரிந்தன? இவர் இரகசியமாக இல்லறவின்ப நுகர்ச்சியில் அனுபவமுடையரா யிருந்திருப்பார்," என்று தமக்குள்ளே பேசிக்கொண்டார்கள். இவ்வாறு பேசியதைத் தேவருணர்ந்து, அங்கிருந்த எல்லோரும் பார்க்கும்படி ஓர் இரும்புத்துண்டை நெருப்பிற் பழுக்கக் காயவைத்துக் கொண்டு வரும்படிசெய்து, "நான் பாலப்பிரமசாரியாக விருப்பது மெய்யானால், பழுக்கக் காய்ந்த இவ்விரும்பு என்னைச் சுடாதிருக்க," என்று கூறி அவ் விரும்புத் துண்டைக் கையாற் றடவியும், நாவினால் தொட்டும் யாதொரு துன்பமு மடையாமல் மகிழ்வுற்றிருந்தனர்.

இவர் அவ்வா றிருக்கவே மேற் கூறியபடி சந்தேகங்கொண்டு பேசியவர்களெல்லோரும் பயந்து, "தகாதனவாகிய வார்த்தைகளைக் கூறினோம்," என்று தம்மைத் தாமே நிந்தித்துக்கொண்டு இவரை வணங்கி, "நாங்கள் செய்த அபசாரத்தைப் பொறுத்தருள வேண்டும்," என்று கேட்டுக்கொண்டனர். அப்போது தேவர் அவர்களை நோக்கி, "நீங்கள் எனக்குக் குற்றஞ்செய்தவராகீர்; இச்சபை

யில் எல்லோரும் என் துறவின் உயர்வை அறியும்படி செய்தீராதலின் எனக்கு நன்மை செய்தவ ராகின்றீர்; இதைப்பற்றி எனக்கு மிக்க மகிழ்ச்சியுண்டாயிற்றே யன்றிச் சிறிதும் வெறுப்பேற்படவில்லை," என்று இனிய வார்த்தைகளைக் கூறி அவர்களை மகிழ்வித்தனர். இவ்விசேஷத்தையெல்லாம் கண்ணுற்ற பாண்டியனும் சங்கப்புலவரும் இவரை நன்குமதித்து இவருடைய துறவின் உயர்வைப்பற்றி மிகவுங் கொண்டாடினர். அதன்மேல் இவர் ஆங்குள்ள எல்லோரிடத்தும் விடைபெற்றுத் தம் ஆசிரியர்பாற் சென்று நிகழ்ந்ததைக்கூறி அவருடன் கூடியிருந்து முடிவில் தம் தவமகிமையால் உயர்பதவியெய்தினர்.

இவரைப்பற்றிய விருத்தாந்தங்கள் இன்னும் சிலவுண்டென்று ஜைனர் கூறுகின்றனர். அவற்றை அறிந்த கனவான்கள் தெரிவிப்பின் அடுத்தபதிப்பில் வந்தனத்துடன் வெளிப்படுத்துவேன்.

இங்ஙனம்:

வீ. ஆ.

# அபிப்பிராயங்கள்.

சென்னை
பிரிஸிடென்ஸிகாலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதர்
மஹாமஹோபாத்தியாயர்
பிரஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள்
அபிப்பிராயம்.

செம்பூர் மகா-ா-ா-ஸ்ரீ. வீ. ஆறுமுகஞ்சேர்வை எழுதிய சீவக சிந்தாமணி வசன புத்தகத்திற் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தேன். இப் புத்தகம் சைனமதக் காப்பியமாகிய சீவகசிந்தாமணிச் செய்யுட்களையும் அவற்றுக்கு நச்சினார்க்கினியரியற்றிய உரையையுந் தழுவி விரிவாக எழுதப்பெற்றிருத்தலின் சைனர்களும் மற்றையோர்களும் படித்துக் காப்பியச் சுவைகளையும் பொதுவான பல நீதிகளையும் சைனமதக் கொள்கைகளையும் வருத்தமின்றி அறிந்துகொள்வதற்கு இது கருவியாகுமென் றெண்ணுகிறேன்.

இங்ஙனம்:
வே. சாமிநாதையன்.

சென்னை பச்சையப்பன் காலாசாலைத்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
கனம். T. செல்வகேசவராய முதலியார், M. A.,
அவர்கள் அபிப்பிராயம்.

Perambur, Madras,
8TH AUGUST 1913.

DEAR SIR,

I have perused some portions of your prose version of Jivaka Chintamani and compared them with the original. I am very glad to find that even ordinary

readers with some acquaintance with minor classics in Tamil can now easily master this great epic. Nachi narkiniyar's commentary, which was a bugbear hitherto, can now be appreciated by such readers. Your prose version will prove to be a valuable companion to the original.

Yours truly,
T. Chelvakesavaraya Mudaliyar, M.A.,
Professor of Tamil,
Pachaiyappa's College,
MADRAS.

சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதராயிருந்த
கனம். சுவாமி வேதாசலம்
அவர்கள் அபிப்பிராயம்.

The Sacred Order of Love,
Pallavaram, 23rd August 1913.

DEAR SIR,

I read with interest the earlier portions of the prose version of Jivaka Chintamani, which you had been kind enough to send me. That Chintamani is an old classical epic of rare excellence is an admitted fact; but it has been till now a sealed book to persons of ordinary Tamil knowledge. Although the commentary of Nachchinark-kiniar is remarkable for bringing out the profound meanings and the marked beauties of the original, yet it has become very difficult to be understood even by

some of fair Tamil knowledge on account of its terse style and twisting the meanings of the original in a fantastic manner. And therefore the want for a faithful prose rendering of the beautiful epic was keenly felt by many well-wishers of the Tamil language. It now gives me very great pleasure to see the book appearing in its fitting prose garb. Your prose rendering is done excellently and that in a very faithful manner. Those who have found the original too difficult to read will read it in its present prose-form and realise to a certain extent the pleasure to be derived by a close study of the epic itself. And I am sure this work will pave the way for a careful study of the original and appreciate its inimitable beauty of style and matter.

Yours in love,
SWAMI VEDACHALAM,
Master of the Sacred Order of Love:
Editor of the Oriental Mystic Myna in English
and Jnanasagaram in Tamil,
and formerly professor of Tamil,
in the Madras Christian College.

தொல்காப்பியப் பாயிரவிருத்தி ஆசிரியராகிய
சோழவந்தான்
கனம் - அ - சண்முகம்பிள்ளை அவர்கள்
அபிப்பிராயம்.

கற்றோரால் பாராட்டப்படுகின்ற செந்தமிழ்க் காப்பியங்களாந்தனுள் முதன்மைத்தாகிய திருத்தக்க தேவரியற்றிய சீவக சிந்தாமணி யென்பது ஆசிரியர் பலரால்

மேற்கோளாக எடுத் தாளப்பட்டும், உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க் கினியரால் உரைகாணப்பட்டும் விளங்கி நிலை பெற்றதாயினும் அதன் பயன், முற்றக் கற்றார்க்கே யன்றி ஏனையோர்க்கெய்தல் கூடாமைநோக்கி, எல்லார்க் கும் பயன்படுமாறு கருதி, அந்நூலை அவ்வுரைக்கருத் தைத் தழுவி வசனநடையாகச் செய்து தரல் வேண்டு மென்று திருப்பறம்பூர் மகா-௱-௱-ஸ்ரீ. ஆதிநயினாரவர்கள் விரும்பியவண்ணம் செம்பூர். மகா-௱-௱-ஸ்ரீ. வீ. ஆறுமுகஞ் சேர்வைகாரரவர்கள் செய்து அச்சிட்டனுப்பிய சீவக சிந் தாமணி வசனநூலைக்கண்டு மிக்க மகிழ்வு கொண்டேன். இவ் வசனநூல் ஆங்கில கலாசாலை மாணவர்க்கும், ஏனை மாணவர்க்கு மிக்க பயன்படுமென்பதும், சிந்தாமணியென் னுங் கடல்கடத்தற்குக் கலமாக நின்று பிறர்க்கும் படுமென் பதும் என்றுணிபு.

அ. சண்முகன்.
சோழவந்தான்.

சென்னை கிரிஸ்டியன் காலேஜ் போதகாசிரியர்

கனம்

எஸ். அனவரதவிநாயகம்பிள்ளை, M. A. L. T.

அவர்கள் அபிப்பிராயம்.

64, Sambhudas Street,
Madras, E.
20th August 1913.

Dear Sir,

I have with pleasure read some pages of your prose version of the Jivaka Chintamani. It is a very faithful prose rendering of the great poem, and would, I am sure, serve as a key to it. Nacchinarkkiniyar's commentary

often takes the form of gloss and, even where it is elaborate, is very terse. This rendering of yours will help all classes of readers to appreciate the beauties of the original work. * * * * * * * *

Yours faithfully,

S. ANAVARATAVINAYAKAM PILLAI, M. A. L. T.

The Madras Christian College.

ராஜமஹேந்திரம் காலேஜ் தத்துவபோதகாசிரியர்

கனம் A. சக்கரவர்த்திநயினார், M. A., L. T.

அவர்கள் அபிப்பிராயம்.

Rajahmundry, 4th September 1913.

DEAR SIR,

I read through the prose rendering of the first two Ilambakams in Chintamani the great Tamil classic. The prose is simple and elegant; and successfully brings out the beauty of the original. The original classic is appreciated only by the learned few. Your work is certainly a boon to the general reader. I hope you will do the same for the remaining Ilambakams also and thus bring within easy reach of all the treasure embodied in that beautiful work-Chintamani.

Yours Sincerely,

A. CHAKRAVARTI NAYANAR, M. A., L. T.

Lecturer in Philosophy, Rajahmundry College.

ஆற்காடு, மகா-ா-ா-ஸ்ரீ
ஆ. துரைசாமி முதலியாரவர்கள்
அபிப்பிராயம்.

The prose version into which the great Tamil classical epic, Jeevaka Chintamani, has been recast by Mr. Arumugam Servai of Madura District is of an excellent and polished style. The searching light which it sheds has laid bare all the treasures of the original hitherto hidden even from some of the minds of high Tamil culture. His prose rendering done with care and endeavour, is faithful to the original and is sure, therefore, to serve as a pilot where minds are puzzled and confronted with the intricacies of the original. This proves to be a key to the original and has rendered possible a thorough appreciation of the terse and obstruse commentary of Nachchinarkiniyar.

**A. DORAISAWMI MUDALIAR.**

# சிறப்புக்கவிகள்.

வீடூர். மகா-௱-௱-ஸ்ரீ.

கு. அப்பாசாமிநயினாரவர்கள்

இயற்றியது.

நிலைமண்டில வாசிரியப்பா.

பூமிசை யொதுங்கும் பூரணற் புகழ்ந்து
மீமிசை யுலகின்மா மெய்யுட னிலகும்
புண்ணிய சீவகன் புகழ்பெறுங் கதையாம்
வண்ணமார் சிந்தா மணிதனை வளமிகு
கடற்றுறை நகராங் கனகமேய் சென்னையிற்
றிடமிகுத் துறையுஞ் செம்மைசேர் மனத்தன்
வள்ளலாந் தன்மையால் வருணனைப் புரைவோன்
உள்ளதன் பொருளா லோங்கிடு மளகையான்
போகசா தனத்திற் பொருந்திய துப்பிற்
பாகசா தனனெனப் பாவலர் போற்றும்
பெற்றியிற் சிறந்த பேரிசைத் தோன்றல்
சுற்றத் தார்க்கெலாஞ் சுகத்தை யளிக்கும்
அண்ணலா மாதி * யார்கத நெறியான்
மண்ணுல கினிலிணை மற்றிலாமதியோன்
இணக்கமாம் வசனமா விசைக்கெனச் செப்பக்
கணக்கொடு கவிகள் கணக்கிலா திசைப்பான்
தேசுடைச் செல்வன் றெளிவாற் சிவனைப்
பேசுங் கொள்கையன் பெருகுநற் குணத்தன்
ஆறுமு கப்பெய ரமைந்தமா கவிஞன்

* ஆர்கதம் - அருகசமையம்.

வீறுயர் மொழியால் விளம்பின னிதனை
இந்நூல் புவியி லென்றும் நிலவுக
பொன்னெயில் விளங்கும் புகழ்பெறு புங்கவன்
மன்னுமுக் குடைநிழல் மன்னிய வாமன்
தன்னருள் பெருகித் தழைத்திட மாதோ.

திருநெல்வேலிஜில்லா
கோவிற்பட்டிக்கடுத்த திட்டங்குளம்
மகா-ள-ள-ஸ்ரீ
க. வ. கருப்பையாப்பாவலரவர்கள்
இயற்றியன.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விருத்தத்திற் குயர்கம்பன் கற்பனையின்
சுவைபேண விழுமச் செஞ்சொற்
பொருத்தத்திற் ககமகிழப் பொதியவரைக்
குறுமுனிவன் புனிதந் தோய்நல்
லருத்தத்திற் கின்புறவீ ராயிரநா
வுடையானிவ் வருமைத் தாய
திருத்தத்திற் கவினியசீர்ச் சீவகசிந்
தாமணியைத் தெளிவிற் றேர்ந்து. (க)

நீர்பூத்த நெடுங்கடல்சூழ் நிலம்பூத்த
பலகவிஞர் நிதமும் பேணிக்
கார்பூத்தல் கண்டுமிகு களிபூத்த
மஞ்ஞையெனக் களிக்கச் செஞ்சொ
லேர்பூத்த வுறத்தமிழி னிதம்பூத்த
வசனமதா வெழுதித் தந்தான்
பார்பூத்த பலவளஞ்சேர் செம்பூர்வாழ்
ஆறுமுகப் பாவலேனே. (உ)

திருநெல்வேலிஜில்லா
கலுங்குப்பட்டியென்ற குமராபுரம், சோதிடவிற்பன மதுரகவி
மகா - ள - ள - ஸ்ரீ.

## சொக்கலிங்கத் தேவரவர்களியற்றியது·

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காரணிவா கனப்புலவன் பயனுறச்சிந்
தாமணியைக் கருதித் தந்த
நாரணனே வியப்பதெவ ஞனிலத்தி
லுயர்புலவர் நாடற் கொத்த
காரணச்சிந் தாமணியை யாவர்கட்கும்
பயனடையக் களிப்பிற் றந்த
பூரணச்செம் பூர்வளரு மாறுமுகக்
கவிஞனிவண் பொருந்த மாதோ.

இந்நூலை ஆக்குவித்தோராகிய திருப்பறம்பூர்
மகா - ள - ள - ஸ்ரீ

## ஆதிநயினாரவர்கள் இயற்றியன·

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பெற்ற மதுரையைச்சார் செம்பூர்வா
ழாறுமுகத் திருவோன் நூலில்
பேர்பெற்ற சீவகசிந் தாமணியை
விளக்கியென்றும் பிறங்க வோங்குங்
கார்பெற்ற மாரியெனக் கவிபொழியுந்
திருநாவால் கருணை கொண்டிங்
கேர்பெற்ற பொருளனைத்து மெனதகத்தி
லினிதுறைய விசைந்து சொல்லி. (க)

மற்றையர்க்கும் பயனுதவ வளமிகுமிவ்
வசனத்தை மகிழ்ச்சி யெய்திச்

சற்றுமையம் வாராம லியற்றியிந்தத்
தமிழ்நாட்டிற் குதவி செய்தான்
நற்றவருங் கொண்டாடு மிவன்றிருவும்
புகழுமுற்று நவையை நீக்கும்
வெற்றிமிகுந் தென்றென்றும் பெருவாழ்வு
பெற்றுலகில் விளங்க மாதோ. (உ)

பொன்னேரித் தாலூகா ஞாயிறு என்னும் பதியில்வசிக்கும்
ஸ்கூல்மாஸ்டர், மகா-ள-ள-ஸ்ரீ
வச்சிரபாகு உபாத்தியாயரவர்கள்
இயற்றியது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

பூமலி யசோகின் பூநிழ லுறைஜின
நாமமார் திருவோன் நான்முகக் கடவுள்
எல்லா ருந்தொழுங் கொல்லா விரதன்
நல்லார் மனமிசை நடக்குஞ் சீர்த்தியோன்
முக்குடைச் செல்வன் முழுதொருங் குணர்ந்தோன்
செப்பிய வேதச் செம்மைப் பொருளெலா
நந்தா திலக நவையில் சீவக
சிந்தா மணியெனுஞ் சிறப்புடை நூலைச்
சாதுவா நற்றிருத் தக்க தேவரிங்
கோதினர் பாக்களா லொப்பிலா வதனை
எவர்களு மெளிதா விசைத்துவந் துணர
நவமுறு வசனமா நவின்றனன் கடல்சூழ்
இப்பெரும் புவியின் மிக்கசீர்ப் பதியெனச்
செப்புமா மதுரைசார் செம்பூர் தன்னில்
கூறுமா வாசவ கோத்திரத் துதித்த
ஆறுமு கப்பெய ரறிவுசேர் கவிஞன்
ஆசுக வித்திற மமைந்தமா நாவினன்
மாசுக வுரைக்கும் வாக்கு வன்மையன்

இன்னோன் வகுத்த விவ்வச னத்தை
நன்னிலத் தார்தமிழ் நாடெலாம் விளங்கக்
காஞ்சி யென்னுங் கடிமதிற் பதியின்
பாங்க ரார்திருப் பறம்பூர் செழிக்க
அய்யண னென்னு மறிவோன் றவத்தால்
மெய்யுடன் றோன்றிய மெய்யின னென்றுங்
கொல்லா விரதமே கொண்ட குணளன்
பொல்லார் நேயம் புல்லான் புவியில்
வந்தமா வழகுசேர் மன்மத னிதியால்
நந்தலில் குபேர னற்கரு ணைக்கடல்
ஈகையு மோகையு மிசையப் பெற்றோன்
வாகைப் பெற்றிடு வண்டமிழ் சேர்ந்த
கல்வித் துறையிற் கசடறச் சென்றோன்
சொல்வித் தகத்திற் சோர்விலா வல்லோன்
நீதிசே ரொழுக்கமு நிறைந்த தகவினன்
ஆதி யெனும்புக ழுபிதா னத்தோன்
திக்குளோர் புகழத் திருநல் லுருவாம்
பக்குவ வச்சிற் பதித்தனன் மாதோ
எற்குமிந் நூலை யெழிலுறப் பயில்வோர்
நாற்பொரு ளெய்தி நன்குவாழ் குவரே.

காஞ்சிபுரம்
வஸ்திரவாணிபம், மகா-ா-ா-ஸ்ரீ
ந. சக்கரவர்த்திநயினாரவர்கள் குமாரர்
சின்னச்சாமிநயினாரவர்கள்
இயற்றியன.

நேரிசைவெண்பா.

மெய்யுணருஞ் சென்னைதனின் மேவுந் திருப்பறம்பூர்
அய்யணவே ணற்புதல்வ னாதியெனுந்—துய்யவனற்
சீவகசிந் தாமணியின் செய்யுட் களைவசன
மாவமர்ந்து செய்யுமென வாய்ந்து. (க)

சீர்க்கூடன் மாநகர்ச்சார் செம்பூர்வா ழாறுமுகப்
பேர்க்கவிஞன் வீரணமால் பெற்றோனன்—மார்க்கநல்கு
சிந்தா மணியெனவே செம்மையுறச் செய்துவப்பாத்
தந்தான் புவிபுகழத் தான். (உ)

தஞ்சை, மகா-ள-ள-ஸ்ரீ

## இராஜாராமமுதலியாரவர்கள்

இ ய ற் றி ய ன.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னெயின் மூன்று மேழும் பொற்புற வமைத்த வட்டந்
தன்னிலார் முக்கு டைக்கீழ் தனிமுத லாகி நின்ற
நன்னெறி வாமன் சொன்ன நலமிகு சுருதி யார்ந்த
பன்னெறி யறிந்து மேன்மை பகர்திருத் தக்க தேவர். (க)

சித்தியி னெறி விளக்குஞ் சீவகன் சரிதந் தன்னைப்
பத்தியாப் பயில்வோர்க் கேற்கும் பாவின மாகச் செய்தார்
இத்தலத் தவரெல் லோர்க்கு மிஃதுணர் தகைமைத் தன்றென்
றுத்தம குணத்தி னுலே யோர்ந்துமா கனக மோங்கும்.(உ)

சென்னைநற் பதியின் மிக்க ஜினனடி பணிந்து நாளும்
மன்னுவோன் றிருப் பறம்பை யய்யண மதனன் மைந்தன்
இன்சொல னுதி யென்னு மெழிற்றிரு நாம யோகன்
நன்மைசேர் வசன மாக நவில்கவென் றுரைப்பக் கேட்டே.

கூறுமுத் தமிழில்வல்லோன் கொடைத்தொழில் மிகுந்துநா
வீறுயர் செம்பூர் வாழும் வீரணக் குரிசின் மைந்தன் [ளும்
ஆறுமு கப்பா வல்லோ னவ்வண முணற்றி யிந்நூல்
பேறுறக் கொடுத்தா னென்றும் பெரும்புகழ் பரவ மாதோ.

# விஷயசூசிகை.

பக்கம்.


| | |
|---|---|
| வசன நூலாசிரியரால் செய்யப்பெற்ற கடவுள் வாழ்த்து ... ... ... ... | க |
| ஷை யாருடைய அவையடக்கம்... ... ... | ௩ |
| திருத்தக்கதேவரின் கடவுள் வாழ்த்து ... ... | ௫ |
| ஷை யாருடைய அவையடக்கம் ... ... | எ |
| பதிகம் ... ... ... ... ... | கூ |
| நாமக ளிலம்பகம் ... ... ... ... | உக |
| நாட்டுச்சிறப்பு ... ... ... ... | உக |
| நகர்ச்சிறப்பு ... ... ... ... | ௩அ |
| கோயிற்சிறப்பு ... ... ... ... | ௫கூ |
| சச்சந்தன் சரித்திரம் ... ... ... | சு௫ |
| சீவகன் உற்பத்தி ... ... ... ... | கஉஅ |
| கோவிந்தையா ரிலம்பகம் ... ... ... | கஅஉ |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௨ | 10 | சிம்மாதனுதீஸ்வர | சிம்மாதனுதீசுவர |
| ௩ | 12 | ஷை | ஷை |
| ௭ | 6 | சாத்துக்க | சாதுக்க |
| ௧௪ | 29 | முலலை | முல்லை. |
| ௧௮ | 18 | பெண்ணுய் | பெண்ணுக |
| ௧௯ | 5 | மற்ற | மற்றத் |
| ௨௧ | 11 | சரஸ்பதி | சரஸ்வதி |
| ,, | 14 | உத்தமகுடி | உத்தமமானகுடி |
| ,, | 19 | தென்னை | தென்ன |
| ,, | 20 | விழுக | விழ |
| ௩௩ | 8 | செல்லப்படுகின்றது | சொல்லப்படுகின்றது |
| ௧௦௪ | 23 | இவ்வுலத்தா | இவ்வுலகத்தா |
| ௧௭௩ | 30 | கலக் | கலக்க |
| ௨௦௫ | 31 | ழு | கூ |
| ௨௧௨ | 9 | கொடுக்குங்கொ | கொடுக்குங்கொடை |

உ

ஸ்ரீஜிநாயநமஃ.

# சீவகசிந்தாமணி வசனம்.

## வசன நூலாசிரியரால் செய்யப்பெற்ற கடவுள் வாழ்த்து.

### அருகசரணம்.

#### நேரிசை வெண்பா.

பூங்கமல வாவி பொலிந்துவண்மை யோங்கியவே
மாங்கதநா டாண்டமகா வள்ளலாந் - தாங்குபுகழ்ச்
சீவகன்ற னற்சரிதஞ் செப்பவே முக்குடையார்
காவலன்றன் பொற்பதமே காப்பு.

### சித்த சரணம்.

#### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நித்தியவுலகமூன் றுநித்தலும்போற்றமேலா
முத்திசேருலகமேவுமுதல்வனை முடிவிலாத
சித்தியார்தேவன்றன்னைச்சித்தமீதிருத்திக்கொள்வாம்
நத்தியாமெழுதுகாதைநலத்தொடுமுடிகவென்றே.

### சாது சரணம்.

#### இதுவுமது.

விண்ணவர்வணங்குமூர்த்திவிதித்தநன்னெறிவழாது
நண்ணியதவத்தோர்பாதநாண்மலர்முடியிற்சேர்ப்பாம்
வண்ணநற்றமிழினூலேவசனமாவழுத்துமிந்தப்
புண்ணியசீவகன்றன்புகழ்க்கதைபொலிகமாதோ.

தன்ம சரணம்.

கட்டளைக் கலித்துறை.

ஜினனருளோங்கிடச்செப்பியநல்லறமேபுவியில்
தினமுயர்வாகியவண்மையெல்லாந்தருசீருறலால்
வனமிகுசீவகசிந்தாமணியின்வசனமெனு
மனமகிழ்நூல்செழிப்பாகிடவேயதைவாழ்த்துதுமே.

## ஆசாரியர்வணக்கம்.

டில்லி கொல்லாபுரே ஜினகஞ்சி பெனுகொண்டா
சதுர்சித்தசிம்மாதனுதீஸ்வரரான
லக்ஷுமிசேன பட்டாரகாசாரியாரவர்கள்
துதி.

ஆசிரிய விருத்தம்.

பூதலத்துற்றவடியார்களுக்கிட்டமொடு
புண்ணியமனைத்துமருளிப்
புதுமைபெறுவேதாகமங்களைவகுத்துப்
புராதனச்சீலமுறைமை
புனிதமிகவுணர்வித்தவறைவாழிவேந்தனெழில்
பொங்குமுக்குடைநிழலிலார்
பொன்னனையமேனியன்றன்னுமாவிருவினைகள்
பொன்றக்கெடுத்தவீரன்
பாதமலரென்றென்றுமறவாதவிதயம்
படைத்திலகுதருமசீலர்
பாதகமிகுங்கொலைவிலக்குநெறிதனையிவண்
பரவுமானிடரெவர்க்கும்

பண்புடன்விளக்கிவருஜீவகாருண்யமே
பற்றியதயாளர்மீறும்
பஞ்சவிடயங்களையடக்கியுயர்நெறியான
பரமான்மபாவனைசெயும்
நீதர்ஜைனசாரமுழுவதுமடுத்தவர்
நினைப்பில்வரவேயோதனை
நித்தலும்புரிவரதர்டில்லிகொல்லாபுரம்
நிதிபெருகுஜினகஞ்சிமா
நேர்பெனுகொண்டாவெனுந்தலங்களின்மேன்மை
நிலவுசதுர்விதமாகவே
நிலைபெற்றசித்தசிம்மாதனாதீஸ்வரர்
நெடியமதியுடையரெங்கட்
காதரஞ்சேரிலக்ஷுமிசேனபட்டார
காசாரியார்கொண்டல்சூ
ழுழுகுமலிபொழில்புடையுடுத்தசித்தாமூரி
லமருமொருசமநிலையினர்
அண்டருங்கொண்டாடிடப்பெரியநூலெலா
மாராயுநிபுணர்யோக
மமைவுற்றபெரியர்குருவுரிமைமிகுமிவர்கமல
வடிநமக்குதவுதுணையே.

## அவையடக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆய்ந்தமல ராற்றொடுக்கும் வல்லவனு
லழகுமிக வமைக்கப் பெற்றிங்
கேய்ந்தமண மோங்குதொடை யிடையிடையே
யெழிலின்றி முடங்க லாகிச்

சாய்ந்தமலர் பலவிரவி யிருப்பினுந்தேன்
சுவையறிவண் டினங்கள் சார்ந்தே
தோய்ந்தமது வினைவாய்வைத் துண்டுகளித்
தின்பமுற்றுச் சூழு மாதோ.

அத்தகவே போன்றிடயா னமைத்தவுயர்
சீவகனற் சரிதை யான
இத்தகைசேர் பெரும்பனுவல் வசனத்தி
னிடையில்வழு விசைந்திட் டாலும்
வித்தகஞ்சேர் நற்புலவ ரிக்கதையி
னயநோக்கி விரும்பி யிந்தப்
புத்தகத்தைப் பொன்போலப் போற்றிடுவா
ரவரடியைப் புகழ்ந்து வாழ்வாம்.

உ

ஸ்ரீஜிநாயநமஃ.

# சீவகசிந்தாமணி வசனம்.

## கடவுள் வாழ்த்து.

### சித்தசரணம்.

"மூவாமுதலாவுலகம்மொருமூன்றுமேத்தத்
தாவாதவின்பந்தலையாயதுதன்னினெய்தி
ஓவாதுநின்றகுணத்தொண்ணிதிச்செல்வனென்ப
தேவாதிதேவனவன்சேவடிசேர்துமன்றே."

"ஆதியும் அந்தமுமில்லாத சுவர்க்கலோகம், பூலோகம், நாகலோகம் என்று சொல்லப்பெற்றனவாகிய ஒப்பற்ற மூவுலகமும் துதிக்கும்படி, கெடாததும், முதன்மைபெற்றதுமாகிய அநந்தசுகமென்னும் இன்பத்தைத் தன்னாற்பெறுவதனாலே, தன்னைவிட்டு நீங்காது நின்ற, அநந்த ஞானம், அநந்த வீரியம், அநந்ததரிசனம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என்னும் மற்ற எழுவகைக்குணங்களும் பொருந்தியவனும், முத்தியென்னும் ஒளியுள்ள நிதியையுடைய செல்வனுமான சித்தனே தேவர்களுக்கெல்லாம் ஆதியாகிய தேவன்" என்று சாதுக்கள் கூறுவார்கள். ஆதலின், நாமும் இந்நூல் இனிதாக முடிவுபெறும் பொருட்டு, காதி, அகாதி என்னும் இருவகைக் கருமங்களையும் வென்றவனும், அக்கினி யிந்திரனால் தேகத்தை நீக்கி, பரிநிர்வாணம் பெற்று மூவுலகமுடிமீதிருப்பவனும், சித்தி யடைந்தவனும், அநங்கனும் ஆகிய அச்சித்ததேவனுடைய செம்மையாகிய பாதங்களை வணங்குவாம்.

(அருகசரணம் முதலிற் கூறவேண்டிய தாயினும் இந் நூலாசிரியராகிய திருத்தக்க தேவருடைய ஆசிரியர், முதலில் வைப்பதற்காகத் தாம்பாடிய அருகசரணமாகிய, "செம்பொன்" என்னும் பாடலினும் தேவர்கூறிய இது, சிறந்திருந்ததுபற்றி, "இதனைமுன்னேவைப்பீராக" என்று அவ்வாசிரியர் கூறியதனால் தேவர், இதனையே முன்வைத்தார்.) இவ்வசனம் தேவருடைய செய்யுளைத்தழுவியதாதலின் இதன் கருத்துக்களைத் தேவருடைய கூற்றாகவே வாசிப்போர் கருதுக.

## அருகசரணம்.

"செம்பொன்வரைமேற்பசும்பொன்னெழுத்திட்டதேபோல்
அம்பொன்பிதிர்வின்மறுவாயிரத்தெட்டணிந்து
வெம்புஞ்சுடரிற்சுடருந்திருமூர்த்திவிண்ணோர்
அம்பொன்முடிமேலடித்தாமரைசென்னிவைப்பாம்."

சிவந்த பொன்மலைமேலே பசுமையாகிய பொன்னெழுத்தை எழுதினாற்போல, அழகுள்ள பொன்துளிகளை நிகர்த்த பத்மம், சங்கம், மத்ஸ்யம், ஸ்ரீவத்ஸம் முதலிய நூற்றெட்டு இரேகைகளும், மஸூரிகை முதலிய அடையாளங்கள் தொளாயிரமும் ஆகிய ஆயிரத்தெட்டு மச்சங்களைத் தேகத்தில் அணிந்து, விரும்புகின்ற இளஞ்சூரியனைப்போன்று விளங்கும் அழகிய மூர்த்தியாகிய அருகக்கடவுளுடையவும், தேவர்களுடைய அழகிய பொன்முடிமேலே பிரகாசிக்கக்கூடியனவு மாகிய தாமரைமலர்போன்ற பாதங்களைச் சிரமேற்கொள்வாம்.

## தன்மசரணமும், சாதுசரணமும்.

"பன்மாண்குணங்கட்கிடனாய்ப்பகைநண்பொடில்லான்
தொன்மாண்பமைந்தபுனைநல்லறந்துன்னிநின்ற
சொன்மாண்பமைந்தகுழுவின்சரண்சென்றுதொக்க
நன்மாண்புபெற்றேனிதுநாட்டுதன்மாண்புபெற்றேன்."

உறவும்பகையு மில்லாதவனாகிய ஜினநாதன் அலங்கரித்துக் கூறியதும், பலநற்குணங்களுக்கு இருப்பிடமாகிப் பழமையான மாட்சிமையமைந்ததும் ஆகிய நன்மை மிகுந்த அறத்தையும், அதைக் கைக்கொண்டு நிலைபெற்ற புகழமைவாய்ந்த ஆசிரிய உபாத்தியாய சாத்துக்களென்னும் கூட்டத்தினையும் யான் வணக்கமாகச் சென்றடைந்தேன்; அவ்வாறு சேர்ந்த நல்லதன்மையைப் பெற்றேனாதலின், இக்காவியத்தைச்சொல்லி உலகத்திலே நிலைநிறுத்தும்படியாகிய மாட்சிமையையும் அடைந்தேன்.

## அவையடக்கம்.

"கற்பாலுமிழ்ந்தமணியுங்கழுவா துவிட்டால்
நற்பாலழியுநகைவெண்மதிபோனிறைந்த
சொற்பாலுமிழ்ந்தமறுவும்மதியாற்கழூஉவிப்
பொற்பாவிழைத்துக்கொளற்பாலர்புலமைமிக்கார்."

"முந்நீர்ப்பிறந்தபவழத்தொடுசங்குமுத்தும்
அந்நீருவர்க்குமெனின்யாரவைநீக்குகிற்பார்
இந்நீரவென்சொற்பழுதாயினுங்கொள்பவன்றே
பொய்ந்நீரவல்லாப்பொருளால்விண்புகுதுமென்பார்."

கற்களின் வகைகள் ஈன்ற இரத்தினங்களிலுள்ளமாசையும், பிரகாசிக்கின்ற வெண்மையாகிய பூரணசந்திரன் போல * கலைகள்நிறைந்த சொல்வகைகள் தோற்றுவித்த குற்றங்களையும் சுத்தப்படுத்தாது விட்டால் அவற்றின் நல்லதன்மை கெடும். இவ்விரண்டையும் மாசுநீக்கிக்கொள்வது அறிவுடையோர் கடமை; ஆதலின், பிரகாசிக்கின்ற பதினாறு கலைகளும் நிறைந்த வெள்ளிய சந்திரனுக்கும் களங்கமுண்டான தன்மைபோல, கலைகள் நிறைந்த (அதாவது சாஸ்திரக்கருத்துக்கள் மிகுந்த) என்சொற்களிற்றோன்றிய குற்றங்களைக் கல்வியறிவுமிகுந்த சங்கப்புலவராகிய பெரி

---

* கலைகள் - சாஸ்திரக்கருத்துக்கள்.

யோர், தங்களுடைய சிறந்த அறிவினாலேநீக்கி, இந்நூலை மிகவும் அழகாகச்செய்துகொள்ளக் கூடியவராயிருந்தார்; (அதாவது இதனை ஆராய்ந்து சீர்ப்படுத்தினர்.) இன்னும், பூமியை உண்டாக்கலும், காத்தலும், அழித்தலும் ஆகிய மூன்று தன்மையையுடைய சமுத்திரத்திற்பிறந்த பவழத்தையும், சங்கையும், முத்தையும் அவற்றின் நயங்கருதி அச்சமுத்திரஜலம் உவர்க்கும் என்று கூறினாலும் அதற்காக ஒருவரும் கைவிடமாட்டார்கள். அதுபோல, இங்குக் கூறிய கடல்நீரை நிகர்த்து உவர்க்குந் தன்மையையுடைய என்சொல் குற்றமுடையதாயினும், பொய்த்தன்மை சிறிதுமில்லாத இக்கதையின் பயனாலே முத்தியடைவோமென்று கருதக்கூடிய அறிவுடையோர் இதனோடுகலந்த அச்சொல்லை உயர்வாகவே கொள்வார்கள்.

# பதிகம்.

"மீனேறுயர்த்தகொடிவேந்தனைவென்றபொற்பிற்
றானேறனையானுளன்சீவகசாமியென்பான்
வானேறநீண்டபுகழான்சரிதம்மிதன்னைத்
தேனூறநின்றுதெருண்டாரவைசெப்பலுற்றேன்."

ஆண்சுறவாகிய மீனத்தைக் கொடியாக வுயர்த்திய மன்னனான மன்மதனையும் வென்ற அழகினாலே, தான் ஆண்சிங்கத்தை நிகர்த்தவனாகிய ஒருவன், தன்னுடைய கீர்த்தியால் இன்றும் உலகத்தில் நின்று விளங்குகின்றான்; (அவன் பெயர் விளங்குகின்றது.) அவன் யாரெனில், சீவகனென்று சொல்லக்கூடிய அரசன்; சுவர்க்கலோகம் வரையும் எட்டும்படி நீண்ட புகழையுடையவனாகிய அவனது புண்ணிய கதையாகிய இதனை மிகவும் தெளிந்த அறிவுடைய பெரியோர் சபையிலே நின்று இனிமைமிகும்படி யான், சொல்லத் தொடங்குகின்றேன்:

முற்காலத்தில், ஏமாங்கத நாட்டுக்குத் தலைநகராகிய இராஜமாபுரத்திலே சாயாத செங்கோலையும், குளிர்ச்சி பொருந்திய வெண்கொற்றக் குடையையும், வாசனைபொருந்திய மாலையையும், போர்க்களத்திலே எதிரிகளுக்கிளைத்துப் பின்வாங்காத சேனையையும், இடியைப்போல முழங்கும் பட்டத்துயானையையும், எப்பொழுதும்கெடாத வெற்றியையும் உடைய சச்சந்தனென்னும் ஓர் அரசனிருந்தான்; அவனுக்கு மனைவியாக அமைந்தவளோ, பழுதுபடாத கற்பினையுடைய விஜயை யென்னும் மாதுசிரோமணி. மிகவும் சிவந்து, ஒன்றிற்கொன்று வித்தியாசமில்லாமல் சமமாகி மலர்ந்த இரண்டு செழிப்பாகிய தாமரைமலர்களை நிகர்த்தனவும், வாள்களைப்போன்றனவுமாகிய

கண்களையும், பூங்கொத்துக்கள் மலர்ந்து விளங்குகின்ற பசிய பொற்கொடிபோன்ற அழகையும், தம்மில் இணையொத்து அடிபரந்தனவும் மார்பினுல் தாங்கக்கூடியனவுமாகிய இரண்டு பயோதரங்களையும், அமிர்தம்போன்ற சாயலையுமுடைய அவ்விஜயை, மேற்கூறிய சச்சந்தமகாராஜனுக்கு அனுபவத்தில் அமுதம்போல இனிமைசெய்யக்கூடியவளாகி, நாடோறும் அவன், இல்லறவியலாகிய விளையாட்டை நடத்துவதற்கேதுவா யிருந்தாள்.

இப்படி யிருக்கும்போது, இரத்தினக்கற்களாற்செய்யப்பட்ட அழகிய ஆபரணங்களை யணிந்த அம்மன்னன், விஜயைமீது மோகமிகுந்து மனமருட்சிகொண்டு, இடைவிடாது அவளுடனிருந்து விளையாடக்கருதி, அரசாட்சியில் மனஞ்செல்லாதவனுய், அதனைக் கட்டியங்காரனுகிய அமைச்சனிடத்தில் ஒப்புவிக்கக் கருதியபோது, "அதுகூடாது" என்று மற்ற மந்திரிகள் கூறியனவும், நல்வழி பொருந்தியனவுமாகிய வார்த்தைகளைக் கேளாதவனுகித் தான் நினைத்தபடியேசெய்து "சிலநாட்சென்று அரசுரிமையைக் கட்டியங்காரனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்" என்று எண்ணிய எண்ணங் கைகூடாமல், அவன் படையெடுக்க, அதில் பகைவர் மகிழும்படி தான், தோல்வியடைந்து இறந்த விதத்தையும், அப்போது அவ்வரசன் கட்டளையால் மயில் வடிவமாகச் செய்யப்பட்ட எந்திரத்தில் விஜயை ஏறி ஆகாயமார்க்கமாகச்சென்று, கட்டியங்காரன் முழக்கியதும், வெற்றியைக்குறிப்பதுமாகிய வாத்திய வொலியைக்கேட்டு மன்ன னிறந்தானென் றறிந்து மயங்கி எந்திரத்தைச் செலுத்தும் விதத்தை மறந்து மெய் சோர்ந்து மூர்ச்சித்ததனுல், அம்மயில் எந்திரம் செல்லும் வழி தவறிக் கீழே யிறங்கிச் சுடுகாட்டில்வீழ, அங்கே அவள் சேர்ந்த விதத்தையும், அத்தருணத்தில் அவள் பூரண கருப்பமாயிருந்தபடியால், பிரசவிக்கும் சமயம்

வந்து பொருந்தவே நமக்குச் சிறந்தவனாகிய ஜீவகன் * பத்துத் திசையிலுள்ள உயிர்களும் வளர்ந்தோங்கும்படி அவள் வயிற்றினின்றும் உற்பத்தியாக, அப்போது ஒரு யக்ஷிதேவதை, விஜயைக்கு வேண்டியவளாகிய கூனியென்னும் சண்பகமாலை வடிவமாய்வந்து, கையைப்போல துணையாகிப் பிரசவத்தா லுண்டாகிய வேதனையைத் தீர்த்த விபரத்தையும், அதன்மேல் அக்குழந்தையைக் கந்துக்கடனாகிய வணிகன்வந்து எடுத்துக்கொண்டுபோய்க் கொலையுண்டிறந்த சச்சந்தனைப்போலவே மிகவும் அன்பு கொண்டு வளர்த்த விதத்தையும், அவன் அவ்வாறு ஜீவகனை எடுத்துக்கொண்டு போனவுடன், வாள்போன்ற கண்களையுடையவளாகிய விஜயை தண்டகாரணிய மென்னும் வனத்தைச்சார்ந்து, தன்மகன் செல்வமுடையவனாய் வளர்ந்து பகைவனை வெல்லவேண்டு மென்று கருதித் தவஞ்செய்து கொண்டிருந்த விபரத்தையும், பின்பு வள்ளற்றன்மையையுடையவனாகிய ஜீவகன், தனது நெஞ்சே தெப்பமாக, சாஸ்திரங்க ளென்கின்ற கடலைத்தாண்டிக் கரையேறி (சகலகலைகளையுங் கற்றுத்தேறி) அப்பொழுதே வஞ்சனை பொருந்திய வேடர்களால அபகரித்துக்கொண்டு போகப்பட்ட பசுநிரையைக் கட்டியங்காரன் சேனை மீட்க முடியாமற்போன செய்தியறிந்து அவனுக்காகத் தான் மீட்டுக் கொடுத்த செய்கையையும், அதன்மேல் விஞ்சைய ருலகத்துக்கரசனான கலுழவேகன் மகளாகிய காந்தருவதத்தையை ஸ்ரீதத்தன் என்னும் வணிகன் அழைத்துவர அப்போது அவள், வீணைவித்தையி லெதிர்த்து ஜீவகனுக்குத் தோற்று அவனைக் கலியாணம் செய்துகொண்ட விபரத்தையும், அவ்விருவரும் போகத்தை இணைபிரியாது நாகலோகத்தாரைப்போல அனுபவித்த விதத்தையும், அதன்மேல், சமுத்திரத்திலே தோன்றிய சங்கம் முழங்கவும்,

* அஷ்டதிக்குகளோடு, மேல்கீழ் என்னும் இரண்டும் கூட்டிப் பத்து.

பேரிகை சப்திக்கவும், பழமையான இராஜமாபுரத்திலே உண்டாகியதும், புதுவெள்ளத்தில் விளையாடும் பொருட்டுச் செய்யப்படுவதுமாகிய சந்தோஷமிகுந்த ஒரு புனல் விளையாட்டுத் திருவிழாவிலே, மையணிந்தனவும், குளிர்ச்சிபொருந்தியனவுமாகிய நீண்டகண்களையுடைய சுரமஞ்சரி, குணமாலை ஆகிய இரண்டு பெண்களும், தாங்கள் கொண்டுவந்த வாசனைப்பொடிகளின் பொருட்டு, ஒவ்வொருத்தியும் தன் தன் பொடியே சிறந்ததென்று கூறிப் பகைகொண்டு, "இவ்விரண்டனுள் யார்சுண்ணம் தாழ்ந்ததென்று அறிவுடையோரால் தெரிவிக்கப்படுகிறதோ அந்தச் சுண்ணத்துக்குடையவள் இந்தப் புதுப்புனலில்மூழ்கி விளையாடல் கூடாது" என்று சபதஞ் செய்துகொண்ட விதத்தையும், அவ்வாறு சபதஞ் செய்துகொண்டவர்கள், அந்த வாசனைப் பொடிகளைப் பரீக்ஷிப்பதற்காக ஆடவர்களிடமனுப்ப, அப்போது ஜீவகன், குணமாலையின் சுண்ணமே சிறந்ததென்று தக்கசாக்ஷியோடு காட்டச் சுரமஞ்சரி, தன் சுண்ணம் தோல்வியடைந்ததனால் மனஞ்சோர்ந்து, தன் தோழியும், அழகுபொருந்தி நீண்ட கண்களையுடையவளுமாகிய குணமாலையைப் பார்த்து, அவள்முன்னிலையில் ஜீவகனை, "மழையைப்போல உயர்வுதாழ்வு தெரியாதவன்" என்று பகைகொண்டு வைது, புண்ணிலே வேல்பாய்ந்தது போல நெஞ்சழன்று அழகுகெட்டு, "இனி ஆடவர்முகத்தை யான் பார்ப்பதேயில்லை" என்று கூறிப் படத்திலுங் கூடப் புருஷ ருருவத்தைப் பார்க்காதவளாய்த் தன்தந்தையால் தானிருக்குந் தெருவிலும் ஆடவர் வராம லிருக்கும்படி காவல்செய்வித்துக் கன்னிகாமாடத்தில் சேர்ந்திருந்த விபரத்தையும், பின்பு, இலக்குமி வாசஞ்செய்யும் மார்பையுடையவனாகிய ஜீவகன் அந் நீர்விளையாட்டிலே வேதியருணவில் வாய்வைத்ததென்று அவர்களால் துரத்தியடிக்கப்பட்டு வருந்தி உயிர்போகுந் தருணத்திலிருந்த ஒரு

நாய்க்கு, பஞ்ச நமஸ்காரமாகிய மந்திரத்தை உபதேசித்துத் தெய்விகவடிவத்தை உண்டாக்கிய விதத்தையும், பின்னர் அன்றைப்பொழுதிலேயே ஜீவகன், குணமாலையைத் துன்பப்படுத்தியதும், அசனிவேகமென்னும் பெயரையுடையதும், கட்டியங்காரனுக் குரித்தானதும், வெற்றிபொருந்தியதுமாகிய பட்டத்துயானையை அடக்கி வென்று, குணமாலையை யாதொரு தீங்குமில்லாமற் காப்பாற்றிய விதத்தையும், அவ்வாறு காப்பாற்றியதன்மேல், தேனின் சுவை அதிகரிக்கின்ற தித்திப்பாகிய சொற்களையுடைய குணமாலையை அவன் மணஞ்செய்த விதத்தையும், அதன்மேல் மேற்கூறியவாறு ஜீவகனால் அடக்கப்பட்ட அசனிவேகமென்னும் யானை, மதமடக்கிக் * கவளங்கொள்ளாமல் நிற்ப, அதைக் கட்டியங்கார னறிந்து, ஜீவகன்மேல் கோபங்கொண்டு அவனுயிரைக் கொல்லநினைத்து, அவனைக் கொண்டுவரும்படி மள்ளரையனுப்ப, அப்போது, முற்பிறப்பில் அன்னக் குஞ்சைச் சிறைப்படுத்தியதா லுண்டான தீவினையாகிய † சிறைவந்து ஜீவகனைப்பற்றிய தன்மையையும், (அதாவது அம்மள்ளர்கள் ஜீவகனை வளைத்துக் காவல் செய்து அழைத்துச்சென்ற விதத்தையும்), அவன் அவ்வாறு கட்டியங்காரனுடைய மள்ளர்கள் சூழ்ந்து காவல்செய்து வரச்சென்றபோது முன்னர் நாயாயிருந்து ஜீவகனால் தேவவடிவம்பெற்ற சுதஞ்சணனாகிய ஒப்பற்றதேவன், மேகமாகிய வாகனத்தின் மேலேறி, மின்னலைப்போன்று ஆகாயமார்க்கத்தினின்றும் இறங்கிப் பகைவர் மாமிசத்தின் மணம்பொருந்தியதும், பிரகாசமுள்ளதுமாகிய வேலாயுதத்தைத்தாங்கியவனும், அறிவுடையோனுமாகிய அவனைத் தூக்கிக்கொண்டு சென்ற விபரத்தையும், பின்பு, மேற்கண்டவாறு அழகியகச்சையை அணிந்தவர்களும், திரட்சி

---

* கவளம்—யானை உணவு. † சிறை - காவல்; கட்டியங்காரன் மள்ளர் ஜீவகனைச்சூழ்ந்து காவலாகச் சென்றது.

பெற்ற இரண்டு தோள்களையுடையவர்களும், வீரத்தில் கெடாதவர்களுமாகிய மள்ளர்கள், தங்கள் காவலில் அவன் அகப்படும்படி வளைக்க, அக்காவலை நீக்கி அவனைத் தூக்கிச்சென்ற சுதஞ்சணன் தானிருக்குமிடத்துக்குக் கொண்டுபோய் அவனுக்கு ஒளிமிகுந்தனவும், அழகியனவுமாகிய நல்ல ஆபரணங்களைச்சூட்டி, அவனை நோக்கி, "எப்பொழுதும் நீங்காத விருப்பத்தையுடையவனே! உனக்கு வேண்டிய காலத்தில் பின்னும் என்னை நினைப்பாயாக" என்று கூறி, மேலும் அவனுக்கு அழகான சில மந்திரங்களை உபதேசித்து அவ்விடத்துனின்றும் அனுப்பிய விபரத்தையும், அதன்மேல ஜீவகன், படத்தையுடைய ஆதிசேடனென்னும் பாம்பாகிய படுக்கையிலே படுத்து நித்திரைசெய்கின்றவனும் நீலரத்தினம்போன்ற நிறமுடையவனுமாகிய மகாவிஷ்ணுவைப்போன்று, மணக்கின்ற காந்தள் மலர்களைப் படுக்கையாகக்கொண்டு, தும்பிக்கையையுடைய யானைகள் நித்திரைசெய்யக்கூடிய மலைச்சாரல் வழியாகச் சென்று மேகம் சூழ்ந்த கோங்கமரங்களாற் சூழப்பட்ட வேலிகள் மிகுந்த பல்லவதேசத்தில் சேர்ந்து, அதற்குத் தலைநகராகியதும், புஷ்பங்களைக் கொய்வதற் கேதுவாய் வளர்ந்திருக்கின்ற புன்னைமரச்சோலைகள் சூழ்ந்திருக்கப் பட்டதும, கொடிகள் ஆகாயமட்டும் உயர்ந்து விளங்கக் கூடியதுமாகிய சந்திராபமென்னும் பட்டினத்திலே புகுந்த விதத்தையும், அவ்வாறுபுகுந்தபின், அஸ்தகிரியையொத்த பெரிய யானையையுடையவனும், அந்நகரத்துக் கரசனுமாகிய தனபதி யென்பவனுடைய குமாரத்தியும், முத்துமாலைகிடந் தழுந்துகின்ற கமலமுகைபோன்ற மெல்லியபயோதரங்களை யுடையவளுமாகிய பதுமையென்பவள், சோலையினிடத்தே முல்லைமலர்ந்ததென்று அதற்குத் திருவிழாச் செய்யச சென்றபோது, அவ்விடத்தில் படத்தையுடைய ஓர் அரவம் அவளுடைய முகத்தைச் சந்திரனென்று

நினைத்துத் தீண்டப்போய் அது களங்கமற்றிருந்தபடியி ஞலே "இது நாம் தீண்டத்தக்க மறுவுள்ள சந்திரன் அன்று" என்று நினைத்து அவள்கையிலே கடிக்க, அதனு லவள் மயங்கிக்கிடந்த காலையில், ஜீவகன், அவளுடைய சகோதரனுகிய உலோகபாலனுக்கு, "நீ மனம் வருந்தாதே; நான் இவ் விஷத்தைத் தீர்த்து விடுகிறேன்" என்று சொல்லி, அவ்விஷத்தைத் தன் மந்திரவன்மையாற் றீர்த்து அவளுடைய தந்தை வேண்டுதலின்மேல் அவளைக் கலி யாணம் செய்துகொண்ட விபரத்தையும், அதன்மேல் திரண்ட கல்லினதுபெருமையைக் கெடுத்தனவும், உயர்வும் சிறப்பும் பொருந்தியனவுமாகிய இரத்தினத்தூண்கள்போ ன்ற தோள்களை யுடையவனும், நல்ல அழகுபொருந்திய வீரகண்டையைத் தரித்தவனுமாகிய அந்த ஜீவகன் பது மையினது பொன்னுபரணங்களைத்தாங்கிய மார்பகம், தன் மார்பிலே அழுந்தும்படி சந்தோஷ மிகுதியால் தழுவி இரண்டு மாதங்கள்வரை இன்பமனுபவித்து விரும்பியிருந் தவிதத்தையும், பின்பு தன்னுடைய காரியத்தின் விரை வாலே அவன், பதுமைக்குத் தெரியாமல் இரவில்வெளி யேறி மலைகளினிடையே சென்ற வழியைப்பற்றிப் பிரயா ணங்கொண்ட விபரத்தையும், அப்படிப்பிரயாணப்பட்ட வன், இன்ன ஒலியென்று பகுத்தறிந்து நீக்கமுடியாத பேரி கைமுதலிய பலசப்தங்களும் திரண்டபேரொலி எப்பொ ழுதும் மிகுந்திருக்கின்றதும், நலமுற்றதுமாகிய தக்கநாட் டைச்சேர்ந்து, அதற்குரியவனுகிய நரபதிதேவன் இருந்து அரசுசெலுத்திய கேமமாபுரமென்னும் நகரத்தில்புகுந்து அங்குள்ள நீங்காததும், சிறந்ததுமாகிய செல்வமுடைய சுபத்திரன் என்னும் வணிகனுக்கும், அவன்மனைவி நிப்புதி யென்பவளுக்கும் பெண்ணுய்ப்பிறந்த கேமசரியைக்கண்டு ஆசைவிளைவிக்கக்கூடிய அவளுடைய வேல்போன்ற கண் களின் பார்வையானது, தன்மனத்துள்ளேதங்கி உயிரை

வருத்த, அதனாலே அவளைமணந்து, அவளுடைய உயிரும் தன்னுடைய உயிரும் ஒருயிரென்று சொல்லும்படிபொருந்தி அவளுடன் சேர்ந்திருந்த விதத்தையும், பின்புசுவை தோன்றுவதாகிய தேனினது மணம்வீசுகின்ற மாலையணிந்த அக்கேமசரியினிடத்தி லிருந்தும் நீங்கி, அவளறியாதபடி இருளிலே கதவைத் திறந்துகொண்டுபோன விதத்தையும், பின்னர் அவ்வாறுசென்றவனும், காலிற்கிடந்தசைகின்ற பொன்னாலாகிய வீரகண்டையை யணிந்தவனுமாகிய அந்த ஜீவகன், இனிய தன்மையையுடைய அமிர்தத்தைநிகர்த்தவளாகிய அக்கேமசரியென்பவளது இரண்டு கண்களும் வருத்த மிகுதியால் நீரைச் சொரிந்துகொண்டிருக்க, எப்பொழுதும் மழைபொழிந்துகொண்டிருக்கின்ற சிறப்புள்ள காட்டைக்கடந்து மத்திமதேசத்தை யடைய, அப்போது அவனை மின்னலைப்போன்று பிரகாசிக்கின்ற வெள்ளிய வேலாயுதத்தையுடையவனும், அம்மத்திமதேசத்தரசனுமாகிய * தடமித்த னென்பவன், தன்னுடைய நகராகிய ஏமமாபுரத்திலே தன்மகன் விசயன் சந்தித்து அழைத்துவரக்கண்டு, அவனது விற்றிற முதலியவற்றை அவ்விசயன் சொல்லக்கேட்டு, அதற்கேற்ப அவன்கையிலே அச்சமிகுந்ததும், கொடுமையும் வெம்மையும் பொருந்தியதுமாகிய † சிலைத்தழும் பிருந்ததையும் பார்த்துச் சந்தோஷித்து, அவனை எதிர்கொண்டழைத்த விதத்தையும், அப்படியழைத்தபின்பு தன்குமாரராகிய விசயன், கதம்பன், கனகன், அசலகீர்த்தி, சேனன் என்னும் ஐவருக்கும் வில்வித்தைகற்பிக்குமாறு அவ்வரசன் வேண்டியபடி ஜீவகன் பயிற்றுவிக்க அவர்கள் தேர்ச்சி யடைந்தபடியால், அத்தடமித்தன், பலம் பொருந்திய தேரையுடைய அரசர் சிங்கங்களாகிய அம்மக்களுடைய வில்வித்தையின் திறத்தையும், வாள்வித்தையின் திறத்தையும் கண்டு அவ்விடத்தே சந்தோஷித்து,

* இவனுக்கு நரபதியென்னும் மற்றொரு பெயருமுண்டு.
† வில்லைப்பிடித் தெய்வதினு லேற்பட்ட தழும்பு.

ஜீவகனைப் பிரியாதிருக்க விரும்பியபடியால், "இவன் இவ்விடத்தினின்றும் போகாதிருக்கும்படி * ஒருவகைத் தந்திரமாகிய காவலையிட்டுக் காத்துக்கொள்வோம்" என்று கருதி, மணம்புரிந்து கொண்டவர்களுடைய உள்ளங்கையளவாகிய கண்களையுடையவளும், தன்குமாரத்தியுமாகிய கனகமாலையை, பகைவர் புண்ணைத்தாங்குதற்குக் காரணமாகியதும், (அதாவது பகைவரைப் புண்படுத்துகின்றதும்) எரிகின்றதுமாகிய வேலாயுதத்தையுடைய குமாரனாகிய அந்த ஜீவகனுக்கு மணஞ்செய்துகொடுத்த விதத்தையும், அப்படி அவன் கலியாணஞ்செய்துகொண்டு அவ்விடத்திலிருக்குஞ்சமயத்தில் இராஜமாபுரத்திலே அவனுக்கு முறைமையால் தம்பியும், கந்துகனுக்கு மகனுமாகிய நந்தட்டன், சந்திரனை யிழந்த சிரேஷ்டம்பொருந்திய நக்ஷத்திரமாகிய உரோகிணியைப்போல அவன்பிரிந்ததற்காகவருந்தி, உலகமெல்லாம் சந்தோஷத்தோடு விளங்கும்படி தோன்றினவனாகிய அந்த ஜீவகனுக்கு முதல்மனைவியாகிய காந்தருவதத்தையின் கட்டளைப்படியே போய் மேற்கூறிய ஏமமாபுரத்தில் அவனைக்கண்ட விதத்தையும், அதன்பின்பு அவனுடைய தோழராகிய ஸ்ரீதத்தன், புத்திசேனன், பதுமுகன், தேவதத்தன் ஆகியநால்வரும் முற்கூறிய காந்தருவதத்தையிடத்திலேயே ஜீவகனும் நந்தட்டனு மிருக்குமிடத்தைக் கேட்டுணர்ந்து பொருள்தேடச் செல்வார்போன்று, வணிகர் கூட்டத்தோடு சென்று தேடித் தடமித்தனுடைய பசுநிரையைக் கைப்பற்றி, அதன்மூலமாக அவன் வந்தெதிர்க்கும்போது அவனைக்கண்ட விதத்தையும், அதன்மேல் மேற்கண்ட தோழர்கள் போகும்போது நடுவழியில் விஜயையைக் கண்டு சென்றபடியால் அவ்விபரத்தை அவர்களால் ஜீவகன் கேள்விப்பட்டு உடனே ஏமமாபுரத்தினின்றும் புறப்பட்டுத் தன்னைப் பெற்றவளாகிய அவ்விஜயமாதேவி

---

* தன் மகளை மணஞ்செய்து கொடுப்பது.

யைக் கண்டு வணங்கிய விபரத்தையும், அவ்வாறுகண்ட பின்பு, பார்ப்பவர் கண்கள் வேறொன்றிற் செல்லக்கூடா தபடி அழுந்துகின்ற அவ்வளவு அழகுவாய்ந்த மணமுள்ள மாலையை யுடையவனாகிய அந்த ஜீவகன், தன்தாயாகிய அவ்விஜயையோடு மேல் நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றி யோசித்து, தேவருலகத்தின் பிரகாசத்தையும் கெடுக் கக்கூடிய மிக்க ஒளிபொருந்திய இராஜமாபுரத்தின் வீதி யிலே மீண்டும் சென்ற விபரத்தையும், அங்குச்சென்ற பின்பு அக்குமாரன் இந்தவுலகினுக்கு ஒருவிளக்காகி, நல் லவரத்தினாலே சாகரதத்தனுக்குப் பெண்ணாய்ப் பிறந்த வளும், ஒப்பற்ற விமலையென்னும் பெயரையுடையவளும், நிறைந்த கன்னித்தன்மை யுடையவளுமாகிய பெண்ணமு தத்தின் போகக்கடலிலே அகப்பட்ட (அதாவது அவளைக் கண்டு மோகமுற்றுக் கலியாணஞ்செய்து அனுபவித்த) விதத்தையும், அதன்மேல் அவன், கெடாத இரத்தினா பரணங்களைத் தரித்த குபேரதத்தனுக்கும் சுமதிக்கும் பெண்ணாய்ப்பிறந்தவளும், சுரமஞ்சரி யென்னும் பெயரை யுடையவளும், அழகியசாயல் விளங்கியவளும், அகிற்பு கைபடிந்த ஆடையையும் ஆராய்ந்து செய்யப்பட்ட மேக லாபரணத்தையும் தரித்த இடையையுடையவளும், குறை யாத இன்பத்தைப் பொருந்தியவளுமாகிய பூங்கொடிபோ ன்ற பெண்ணிடம் கிழவடிவந்தரித்துச் சென்று அவளைச் சங்கீதத்தால் மயக்கி, அவள் "ஆடவரைக்காணுவதில்லை" யென்று முன்னே கொண்டிருந்த விரதத்தின் உறுதிகெட் டுத் தனக்குக் கீழ்படியும்படி செய்து, பின்னர் அவளை மண ந்துகொண்ட விபரத்தையும், பின்பு ஜீவகன் தன்மாமனா கிய கோவிந்தனோடு கலந்து கட்டியங்காரனைக் கொல்ல யோசித்தபடி அவனிடத்தில் நேசப்பான்மை காட்டி அக் கோவிந்தராஜன் புறப்பட்டு இராஜமாபுரத்தின் பக்கத்தில் சென்று தங்கி அக்கட்டியங்காரனை வரவழைப்பதற்காகக்

கபடத்துடன் தானே சுழல்கின்ற *திரிபன்றியந்திரமொன்று செய்து, "இதனை அம்பால் எய்து வீழ்த்தியவருக்கு என்மகளைக் கொடுப்பேன்" என்று எங்கு மறிவிக்க, கட்டியங்காரனும் மற்ற தேயத்தரசர்களுந் திரண்டு அதனை எய்ய முயன்று எல்லோரும் முடியாமல் இளைத்த சமயத்தில் அந்த நஞ்சு மிகுகின்ற வேலையுடையவனாகிய ஜீவகன் அம்மூன்று பன்றியும் ஓரே அம்பில் அற்று விழும்படி யெய்து தன்னைச் சார்ந்தவருக்கு அச்சநீங்கும்படி மேற்குறித்த கட்டியங்காரனாகிய பகைவனை அவன் சுற்றத்தோடும் கொன்று அரசாட்சியைப் பெற்றுக்கொண்ட விதத்தையும், அதன்மேல் அவன், தன் மாமனாகிய கோவிந்தனது கண்போன்ற மனைவியினுடையதும், பகைவருடைய புண்ணிலே தோய்த்தெடுத்ததும் போர் செய்தற்குரியதுமான வேலாயுதத்தைப்போல சிவந்து நீண்டதுமாகிய கண்ணின் கருமணிக்குள்ளே தோன்றும் பாவையை நிகர்த்த இலக்கணையாகிய பெண்ணமிர்தத்தை மணந்து இன்பத்தை யடைந்த விதத்தையும், பின்பு செங்கோலானது பொலிவு பெறும்படி, குளிர்ச்சிபொருந்திய பால்போன்ற நிறத்தினை யுடையதும், சந்திரனையொத்த வட்டத்தையுடையதுமாகிய வெற்றிக்குடையின் குளிர்ந்த நிழலை உலகத்திலே பரப்பி ஆட்சி புரிந்த விதத்தையும், அதன்மேல் அரசர் பகுதியைச் செலுத்தவும் இலட்சுமி தன்னிடத்தே வாசஞ்செய்யவும் செங்கோலானது ஒழுங்குடன் நடைபெறவும் எக்குறைவுமின்றி வெற்றியானது உயரவும் பகைவருடைய தேர் தனக்குக் கீழ்ப்பட்டுப் பணியவும் அவன் மேற்கண்டவாறு அரசு செலுத்தித் தங்கி யிருக்கின்ற காலத்தில் இரத்தினப்பிரபை யென்னும் சாரணரிடத்தே தரும நூலையும் தனது முற்பிறப்பின் தன்மையையுங் கேட்டு இடி யெதிர்ப்பட்ட பாம்புபோல இவ்வுலக வாழ்க்

* மூன்று பன்றி வடிவஞ்செய்து சுழலவிட்ட ஒருவகையந்திரம்.

கையில் அச்சங்கொண்டு ஸ்ரீ வர்த்தமான சுவாமிகளுடைய கோவிலாகிய சமவசரணத்தில் சார்ந்து அரசாட்சியை நீக்கிச் சுதன்மரென்னும் கணதரரால் விதிப்படி துறந்து தவஞ்செய்த விதத்தையும், பின்பு மாறுபாட்டையுடைய யானைப்படையையும், கொடிகள் கட்டிய தேர்ப்படையையும், கடல்போல் திரண்ட குதிரைப்படையையும், வெற்றி சூழ்ந்த வாளாயுதங்கள் நெருங்கிய காலாட் படையையுமுடைய அந்த ஜீவகனுடைய தம்பியாகிய நந்தட்டனும், தோழன்மாரும், ஆபரணங்கள் நிறைந்து விளங்காநின்ற இளமை பொருந்திய பயோதரங்களையுடைய மனைவியரும் அவன் துறக்கின்ற காலத்திலேயே துறவுபூண்டு தவஞ்செய்திருந்து முடிவில் இவ்வுலகவாழ்வை நீக்கிச் சுவர்க்கலோக பதவியை அடைய, அதன்மேல் வீணைத்தொழிலுக்குரியவனாகிய அந்த ஜீவகன், புதுமை நிறைந்த பதவியாகிய முத்திவழியை அடைந்த விதத்தையும், பின்பு அவ்வாறடைந்த செல்வத்தையுடையவனாகிய அவன், வாயிலுள்ள அற்ப இன்பத்தையுடைய (அதாவது விழுங்கும்வரையிலுமே உருசியைத்தரத்தக்க) தேனை உமிழ்ந்து, எப்பொழுதும் அழியாத இன்பத்தைச் செய்கின்ற (அதாவது உண்டபின்பும் நரை திரை முதலியவற்றை நீக்கி எப்பொழுதும் இளமையைத் தரத்தக்க) அமிர்தத்தைப் பருகியவன்போன்று, தேவருலகத்திலுள்ள ஸ்திரீகளையும் அழகினாலே வணங்கச்செய்கின்ற நலத்தையுடைய தேவிமார்களின் போகத்தை விரும்பாதவனாய் எல்லோரும் துதிக்கும்படி அம் முத்திவீட்டிலே முத்தியாகிய மடந்தையை அனுபவித்ததனால் அவனுக் குண்டாகியதும், நிறைந்ததுமாகிய பேரின்பத்தின் விபரத்தையும் இப்பதிகத்தில் தொகுத்துக்கூறியபடியே இவ்வுலகிலுள்ளோர் உணரும்பொருட்டு இனி விரித்துக்கூறுவாம்.

பதிகம் முற்றுப்பெற்றது.

# சீவகசிந்தாமணி வசனம்.

## 1. நாமகளிலம்பகம்.

### நாட்டுச்சிறப்பு.

“ நாவீற்றிருந்தபுலமாமகளோடுநன்பொற்
பூவீற்றிருந்ததிருமாமகள்புல்லநாளும்
பாவீற்றிருந்தகலைபாரறச்சென்றகேள்விக்
கோவீற்றிருந்தகுடிநாட்டணிகூறலுற்றேன்.”

பாடல்களிலே தங்கியிருந்த நூல்கள், தன்மனத்திலே எவ்வகைத் தடையுமின்றி நடந்த (அதாவது தங்கிய) பல சாஸ்திர விசாரணைகளையுடைய ஜீவகமன்னன், புலவர் நாவிலே தங்கியிருக்கின்ற சரஸ்பதியோடு நல்ல அழகு நிறைந்த தாமரை மலரிலே மேவியிருக்கின்ற சிறப்புற்ற இலட்சுமியும் தினந்தோறும் பிரியாது தன்னைச் சேர்ந்திருக்க, வீற்றிருந்து அரசுசெலுத்திய உத்தம குடிகளையுடைய நாட்டினது அழகைச்சொல்லத் தொடங்குகின்றேன் :

நீர்வளத்தினாலே காய்த்துத் தோன்றுகின்ற காய்களின் அழகைப்பெற்று அதனால் மாட்சிமையுடன் விளங்காநின்ற தென்னை மரங்களிலுள்ள முதிர்ந்த பழமானது தானே உதிர்ந்துவிழுக, அதனாலே கமுகமரத்தின்மேலுள்ளதும், அழகு மிகுந்த தேன்போலும் இனிமை பொருந்தியதுமான குலையானது கிழிபட்டு, அதன் கீழுள்ள பலா மரத்தின் கனிபிளப்புண்டுசிதறி, அது மோதுதலினாலே பக்கத்திலுள்ள மாமரங்களின் கனிகள் சொரிந்து, பின்னர் இவைகளெல்லாம் சேர்ந்து விழுகின்ற அதிர்ச்சியினாலே அடியிலுள்ள வாழைக்கனிகள் உதிர்கின்ற அள

வற்ற வளத்தையுடைய ஏமாங்கதமென்னும் ஒரு நாடுண்டு; இது, ஜீவகன் தந்தையாகிய சச்சந்தனென்னும் அரசனால் ஆளப்பட்டுக் கீர்த்தியினாலே அஷ்டதிக்குகளிலும் விளங்கக்கூடியது. இத்தகைய நாட்டில், பிரகாசிக்கின்ற சக்கரத்தையுடையவரும், சூரியகுலத்திற் பிறந்த நாபி மஹாராஜாவின் பௌத்திரரும், விருஷபதீர்த்தங்கரரின் புத்திரரும், பனிரண்டு மஹாசக்கரவர்த்திகளுள் முதல்வரும், எண்பத்து நான்கு லக்ஷம் யானைகளுள்ளவருமாகிய பரதேசுவர சக்கரவர்த்தியாரின் கரிய நிறமுள்ள அவ்யானைகளின் கூட்டத்தைப்போல திரண்ட மேகங்கள், அசைகின்றனவும், தெளிவுள்ளனவுமாகிய அலைகளையுடைய சமுத்திர ஜலத்தைப்பருகிச், சூன்முதிரும்வரை அவ் வேமாங்கத நாட்டுக்குரிய மலையி னுச்சியிற்சேர்ந்து, பின்பு ஆகாயத்தின்மே லுயர்ந்து பொன்போலும் நிறத்தினையுடைய கொன்றைமலர் மாலையைத் தரித்த பரமசிவக் கடவுளது சிவந்த சடையைப்போன்று மின்னி முதலில் வாய்விட்டு முழங்கும். அப்படி முழங்கிய அம்மேகங்கள், பின்னர் ஒன்றின்மே லொன்றாகாதபடி வரிசைபடப் பரந்து ஒன்றாகக் கூடித் தேனிறால்கள் ஒழுங்காக நிறைந்துயர்ந்த பலம்பொருந்திய அம்மலையி னுச்சியிலே வெள்ளியினாற் செய்யப்பட்ட வெண்மை நிறமாகிய கோல்களை ஆகாயத்திற் பொருந்தும்படி வரிசைபெற நட்டாற்போல செழிப்பாகிய மழைத்தாரைகளை வரிசைப்படுத்திச் சொரியும். அப்படிச் சொரிந்த மாத்திரத்தில் வலிமையுற்ற அம்மலையின் உச்சியினின்றும் ஜலம்திரண்டு வடிகின்றதனால் உற்பத்தியாயினவும், மத்தள சப்தத்தைப்போன்று முழங்கக் கூடியனவுமாகிய வெண்மை நிறமுள்ள பல அருவிக் கூட்டங்களும், அம்மலையானது சந்திரமண்டலம் வரையிலும் உயர்ந்து வளர்ந்திருக்கின்ற படியினாலே அங்குச் செல்கின்ற இளஞ்சந்திரனுடைய கூர்ப்பக்கங்கள் பாய்ந்து

கீற அதனால் தேனிறால்கள் கிழிந்து அவற்றினின்றும் வடியும் தேன்றிரள்களும் ஒன்ரோடொன்றுகலந்து வெண்மையும் செம்மையுமாய் விளங்குவதனால் அத்தோற்றமானது, கூட்டமாய் விளங்கும் மாளிகைகளின் மேற் கட்டப்பட்ட சிவப்பும் வெளுப்புமாகிய துணிக்கொடிகள் போன்று விளங்கும். இன்னும் அந்த அருவித்திரள்கள், அம்மலையினின்றும் மாலைபோல விழுகின்ற பொழுது, பிரகாசிக்கின்றதும், நீண்டதுமாகிய கிரீடத்தைத்தரித்த இந்திரனுடைய மார்பின்மேலே பின்னி விழுந்த முத்துமாலையையும் நிகர்த்துப், பக்கத்திலே அழகைக்கொண்ட பொன்னையும் இரத்தினங்களையும் வாரிச்சிந்துதலினாலே அவ்விந்திரனுடைய ஆபாரணப்பெட்டி மேலிருந்து கவிழ்க்கப்பட அதினின்றும் வெளிப்பட்ட ஆபரணங்களையும் போன்று பிரகாசிப்பனவாம்.

அப்படிப் பலவிதமாகத் திரண்டுபுறப்பட்ட அருவிகளெல்லாம் மலையைவிட்டுக் கீழிறங்கி ஒன்ருகக்கூடி சரயுவென்னும், ஆருய்ப்பெருகி நடக்க, அவ்வாறு நடந்தவெள்ளமானது, ஈகைபொருந்திய கையையுடைய வள்ளல்களைப் போலே, அம்மலையினின்றும் வாரிக்கொண்டுவந்த இரத்தினம், முத்து, பொன், யானைத்தந்தம் முதலிய அளவற்ற செழிப்புள்ள நிதித்திரளைத் தொழில்செய்யாமல் சோம்பியிருப்பவர்க்கு ஊர்தோறும் சென்று கொடுப்பதற்குப் பெயர்ந்து அந்நாட்டிலே பிரவேசித்து விரைந்து செல்லும்; அப்படிச்சென்றது பின்னர், காடுகளிற்புகுந்து, மயக்கம் பொருந்திய யானைகளின் மூன்று மதங்களையும் உட்கொண்டு, தேனைப்பூசி (அதாவது தேனோடு கலந்து) அழகிய பொன்னிறைந்த ஊற்றுக்களில் முழுகி, (அதாவது அவ்வூற்றுக்களோடு கலந்து) தாவிச் சிவந்த சந்தனம், தித்திப்பாகிய பழவர்க்கங்கள் முதலிய எல்லாவற்றையும் பக்கத்திலுள்ள அக்காடுகள் இழந்தோமென்று வருந்

தும்படி அவற்றை வாரிக்கொண்டும் பெரிதாக நடக்கும். அதன்மேல் அவ்வெள்ள நீரானது குடிகள் நீங்குதலில்லாத செல்வமுள்ள பட்டினத்தைக் கொள்ளைகொண்ட வோரரசனைப்போன்று, அலைகளாகிய கைகளாலே மேற்கண்டவாறு காடுகளிலுள்ளவற்றையெல்லாம் வாரித் தனக்குள்ளே அடக்கிக் கொண்டுபோய், "உயர்ச்சியைக்கொண்ட நீரையுடைய பெரியகடல்வந்து நாட்டைவளைத்துக் கொண்டதோ" என்று மனிதர்கள் மயங்கிவருந்தும்படி, அளவற்றபெருக்கோடு அந்நாட்டிற்சேரும். பின்னர் அவ்விதம் முற்கூறிய பொருள்களை உள்ளடக்கிக்கொண்டு நாட்டிற்கலந்த சரவு (சரயு) என்னும் பெயரையும் * தடாகங்களென்னும் விரும்பிய கொங்கைகளையும் உடைய சப்திக்கின்ற வெள்ளமாகிய கன்னி, அலைகளாற்கரையைமோதுகின்றதும், சப்திப்பதுமாகிய கடலென்னும் தன்கணவன் அனுபவித்தற்கு அவனுக்குச் சூட்டும்படி சிரசின்மேலே நுரையென்னும் வெண்மை நிறம்பொருந்திய மாலையைக் கொண்டு அக்கடலிற்செல்லும். (அதாவது அச்சரயுநதியானது, எல்லாப்பொருள்களையும் வாரிக்கொண்டு வெள்ளிய அலைகளோடு கடலிற்கலக்கும்.) இவ்வாறு வெள்ளம்பெருகியபோது, இந்நதியிலிருந்து, காய்த்த தென்னைமரத்தின் இலைகளைப்போலப் பலபிரிவாய்ப் பிரிந்து நெருக்கமாகப் பரவிப் பாய்கின்ற அந்நீரானது ஒவ்வொரு ஏரிக்கும் பாயும்படி நீர்வரத்தை யறிந்து முன்னே உண்டாக்கிச் சுண்ணம்பினால் கட்டப்பட்ட வாய்க்கால்களின் தலைப்பிலே, முழங்கி வேகமாகப் பாய்கின்றநீரால் அவ்வாய்க்கால்களின் உட்கரைகள் பக்கங்களில் உடைத்தலினாலே, அந்நாட்டிலுள்ள மனிதர்களெல்லோரும் அவ்வுடைப்புக்களை யடைத்து ஜலத்தை அடங்கும்படிசெய்து சிதறாமல் ஏரிகளுக்குப்

* பக்கங்களிலுள்ள தடாகங்கள் இங்கே தனங்களாகக் குறிக்கப் பட்டன.

பாய்ச்சும் பொருட்டு, முழங்குகின்ற சப்தத்தை யுடைய பம்பை யென்னும் வாத்தியத்தை முழக்கித் தோட்டியினல் "எல்லோரும் உடைப்படைக்க வரவேண்டும்" என்று ஊரில் சொல்லும்படி செய்து திரண்டு ஆங்காங்கே கூடுவார்கள்.

அப்படிக்கூடிய அவர்கள், வெல்வதற்கரிதாகிய யானை மதங்கொண்ட காலத்தில் அதனை எறியீட்டிக் காரராகிய வீரர்கள், ஆங்காங்கே நின்றுதாக்கி அடக்குவது போல, ஒவ்வொரு வாய்க்காலின் முகப்பிலும் எடுத்த உடைப்புக்களில் படலிட்டடைத்து நீரின்வேகத்தைக் குறைப்பதாலே அவ்வாய்க்கால்கள் தணிந்துபாய அதனல், சிறந்த குலஸ்திரீகளுடைய கற்பைப்போலப் பயிருள்ள நீர் நிலைகளும், மற்ற ஏரிமுதலியவைகளும் நிறைந்து ததும்பும்; இச்சமயத்தில் படலிட்டடைத்த அடைப்பினின்றும் அடங்காமல் குதித்துவிழுகின்ற நீரின் இரைச்சலும், உடைப்புக்களை அடைப்பவருடைய பேரொலியும், நேராக முழங்குகின்ற அநேகம் பறைகளின் முழக்கமும், எல்லாத்திசைகளிலும் நிறைந்த மேகமும் சமுத்திரமும் ஓரிடத்தில்கூடி முழங்குவதை நிகர்த்து ஒலிக்கும். இவ்வாறு எங்கும் நீர் பெருகியவுடனே, தம் உழவுத்தொழிலிலே மிகுந்தனவும், மாமனும் மருமகனும் போன்று ஒன்றினிடத்து ஒன்று அன்புமிகுந்தனவும், * காமனென்பவனும் சாமனென்பவனும் இணைபிரியாதிருப்பதுபோல பிரியாமற் கூடியிருக்கும் ஒற்றுமையுடையனவும், பூமியிலே பொருந்தியிருக்கின்ற மத்தங்காய்ப்புல்லை மேய்ந்து நிறைந்த வயிற்றை யுடையனவுமாகிய எருமைக்கடாக்கள் ஏரிற்பூட்டுவதற்குச் சித்தமாய் ஒவ்வோரிடத்திலும் மள்ளர்களால் தொகுக்கப்பட்டு உதய

* கண்ணபிரானுக்கு முறையே உருக்குமணியிடத்திலும், ஜாம்பவதியிடத்திலும் பிறந்தவர்; இவ்விருவரும் இராம லட்சுமணர்களைப்போன்று இணைபிரியா திருப்பார்கள்.

காலத்திலே உழவுக்காகத் திரளாய்ப் பொருந்திநிற்கும். இப்படி நின்றவுடனே, அறுபட்ட கொம்புகளையுடைய அவ்வெருமைக்கடாக்களின் பெரியகூட்டத்தையும், நெருங்கிய கொம்புகளையுடைய எருதின்கூட்டத்தையும் அதட்டுவதும், தெய்வம் வாழ்த்துதலுமாகிய இரைச்சலுண்டாகும்படி நுகத்திலேபூட்டிப் புள்ளிகளையும், இரேகைகளையுமுடைய வரால்மீன்கூட்டம் பயந்தொதுங்கும்படி, தாமரை செங்கழுநீர் முதலிய புஷ்பங்களின் வாசனை வீசுகின்ற வயல்களிலே புகுந்து அவர்கள் உழுவார்கள்; அவர்களை இவ்வளவினரென்று அளவிட்டுச் சொல்லுதல் முடியாது. இன்னும் அப்படி உழுகின்றவர்கள், பூமாதேவியை வணங்கிச் சேறுபொருந்திய நிலத்திலே ஒளிபொருந்திய செந்நெல் முளையை, "வெற்றியோடு விளைவதாக" என்று வாழ்த்தி விதைப்பார்கள்; நாற்றுக்களை, "நடுவதற்கு இதுதான்பதம்" என்று பிடுங்கி நடுவதற்கு நல்லநாட் குறிப்பிட்ட வேறு சில உழவர்கள், முந்தியே கூலிகொடுத்து, "நடுதற்கு வரவேண்டும்" என்றுசொல்லி வைத்திருந்த பள்ளியர் கூட்டங்களை அழைத்துக்கொண்டு செல்வார்கள். அப்படி அழைத்துக்கொண்டு போகப்பட்ட பள்ளியர், தங்கள் மார்பிலே சேறுதெறிக்கும்படி நாற்றுமுடியை அவிழ்த்துநட, அதனாலே பயந்து, நடாதவிடத்திலே குதித்த ஒளிபொருந்திய கயல்மீன்கள், மேலும் அவர்கள் நெருங்குதலாலே, பக்கத்திலுள்ள குறிஞ்சிநிலத்தில் கவரிமான் தன்குட்டிக்கூட்டுவதால் வடிந்த பால் பரவிய விடத்திலே பாய்ந்து அதிலேகிடந்து பிறழுந்தன்மையை உடையனவா யிருக்கும்; மேலும் அக்கயல்கள், அப்பாலை நீரென்று நினைத்துக்குடித்து, அது நீரில்லையென்பதை யறிந்து, "இது நமக்குரிய விடமன்று" என்று கலங்கிச் சமீபத்திலுள்ள வயலிலே செழித்து விளங்கிய தாமரையின்மேலே செல்லும்படி பாய்தலாலே அதற்குப்

பயந்தெழுந்த வண்டுக்கூட்டங்கள், மற்றொரு பக்கத்தில் முத்துக்களைக் கோத்துக்கொண்டிருந்த, அழகிய வளைய லையணிந்தவர்களாகிய உழத்தியர்கள் சூடிய மாலையிலே யிருந்த தேன்வண்டுகள் பறந்தெழும்பும்படி அவற்றின்மே லேபாயும். அப்படிப்பாய்ந்ததனு லெழும்பிய தேன்வண்டு கள், மேலேயிருக்கின்ற முல்லைச்செடியின் அரும்புகள் மலர்ந்து தேனைச் சொரியும்படி அதனடியிலே மலர்ந்தி ருக்கும் குவளைப்புஷ்பத்தின்மேலே சேரவே, அதிலிருந்து ஆண்வண்டுக் கூட்டங்கள் எழுந்து ஆர்ப்பரிக்க, அத் தேன்வண்டுகள், "இந்தக் குவளைத்தேனுகிய உணவை உங்களுக்கு விருந்திடுகின்றோம்; மகிழ்ச்சியோடு உண் ணவேண்டும்" என்று தழுவிக் கூறுவதுபோல அவற் றைத்தழுவ, அந்த ஆண்வண்டுகள் அத்தேன்வண்டுகளைத் தழுவி எல்லாம் அக் குவளைமலரின் மேலே விழும்.

இத்தகைய வளமுள்ள அவ் வயல்களிலே செழித்த நாற்றுமுடியை நடுபவர் இடும் அளவில்லாத குரவை முதலிய சப்தங்களை, மழைபெய்யத் தொடங்கின மேகத்தி னுடைய முழக்கமென்று கருதி மயில்கள் ஆரவாரிப்பத ஞலே, அவ்வொலியை மழையென்று நினைத்து மயங்கு கின்ற குயிலினங்கள் வருந்தி, நாயகரைப்பிரிந்து மனம் வருந்துகின்ற பெண்களைப்போல அழகிய சோலையிலே ஒடுங்கியிருக்கும்; இன்னும் அங்கே, உழத்தியர், தங்க ளுடைய வளையலையணிந்த கையாலே கள்ளைஊற்ற, உழ வுத்தொழிலில் இடைவிடாது பழகியவராகிய உழவர்கள், பருகி அவர்களுடைய கையினின்றும் ஒழுகிய அம் மது மிகுந்து நிறைந்த விடங்களிலே சேர்க்கை யின்பத்தை யறிந்த இளமைபொருந்திய அன்னம், தன்மனம் சந்தோ ஷிக்கும்படி அம் மதுவையுண்டு, சேர்க்கை யின்பத்தை அனுபவித்தறியாத கன்னியாகிய பெட்டை யன்னத்தைச் சேர, அதைக்கண்டவுடன் பெண்மயில் தன் ஆண்மயி

லைப்பார்த்து, "நீ இந்தவிதமாகக் கள்ளுண்டு மயங்கித் தகாத காரியத்தைச் செய்யாதே" என்று சொல்வதுபோல தன்னுடைய மூக்கினால் அதன் செவியோரத்தைக்கோது கின்ற மேலான தன்மையுடையதா யிருக்கும்; இன்னும் அக்கழனிகளிலே களைபறிக்கும் காலத்தில் உழவர்கள், மேற்கண்டவாறு நட்டுப் பயிராகிய நெல்லுக்குக்களையா யிருக்கின்ற குவளைமலர்களைத் தங்களுடைய மனைவியரது கண்களென்று நினைத்துப் பிடுங்கியெறிய மாட்டார்கள்; தாமரைமலர்களையும் அவர்களுடைய முகங்களென்று நினைத்து, அவற்றைப் பறிப்பதற் கிஷ்ட மில்லாதவர்களாய் அவற்றின் சமீபத்தில் போகமாட்டார்கள்; அத்தருணத்தில் இவ்விரண்டுவகைப் புஷ்பங்களும் மேற்கண்டவாறு தங்கள் மனைவிகளின் கண்களின் தன்மையையும், முகங்களின் தன்மையையும் காட்டித் தங்களுக்குக் காதலை உண்டாக்குவதால் அதற்குத்தக்கபடி இனியபாடல்களைச் சுத்தமாகப் பாடுவார்கள்; எப்பொழுதும், குளிர்ச்சிபொருந்திய நிலங்களில் உழுகின்ற மள்ளர் செய்கை இத்தன்மையுடையதாயிருக்கும்.

இன்னும் அவ்வாறு களைபறிக்கக்கூடிய பயிர்நிறைந்த வயல்களிலே நிறைந்து வரப்போரங்களில் தத்திக்கொண்டிருக்கின்ற நீரானது, முத்துப்பந்தைப்போன்ற சினையையீன்று, தனக்குச்சமமாகிய பாதிரிப்பூவை அழகினாலே, வென்ற நாவோடு அங்கே ஊர்ந்து திரிகின்ற நத்தைகளை அலையினாலே எடுத்துப் பக்கத்தில் மேய்ந்துகொண்டிருந்த நாரைகளின் மேலெறிய, அந் நாரைகள் பயந்து பொங்கியெழுகின்ற வெண்மை நிறமுள்ள * அந் நீரலைகளைப்போல மேலே மெல்ல எழுந்து பறந்துதிரியும்; இத்தகையவயல்

* வெண்மை நிறமுள்ள நாரைமுதலியன வரிசையாகிப்பறப்பது அலைபோன்றிருக்கும்; அவைபறக்கு மிடங்களில் இவ்வுண்மையையுணரலாம்.

களில் நிறைந்த நெற்பயிர்களோ, நீர்வளத்தால் செழிப்புற்றுவளர்ந்தோங்கிக் கருக்கொள்ளும் பருவத்தையடைந்து, கருவுண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கக் கூடிய (அதாவது கருவால் வயிறுபருத்துக் காட்டாத) சூலையுடைய * பச்சைப்பாம்பின் தோற்றத்தைப்போன்று மெல்லக் கருத்தங்கிக் கதிரையீன்று † பால்பிடிக்காத தருணத்தில் கனமின்மையால், உயர்குடியில்பிறவாத அற்பர் செல்வம் வந்தபோது தருக்குற்றுக் கண்ட நேயரோடும் இனியவார்த்தையாடாது தலையைத்தூக்கி ஆகாயத்தைப்பார்த்த வண்ணமாகத் திரிவதுபோலத் தலைநிமிர்ந்து, பின்பு அரிசியுண்டாய் நெல்லில் கனமேற்பட்டவுடன், ஆராய்ந்தறிந்த பலநூற்கல்விகளையுமுடைய மேலோர் அடக்கமும் வணக்கமும் பொருந்தி விளங்குவதுபோலத் தலைவளைந்து விளையும்; இவ்வாறு விளைந்தவுடனே மீன் கண்ணளவும் (அதாவதுசிறிதும்) வெற்றிட மில்லாதபடியால் தசை பொருந்திய கண்ணையுடையவர்களாகிய மானிடரால் அளவிட்டுச் சொல்லக் கூடாததாயும், தேவலோகத்தார் புகழக் கூடிய சிறப்பு வாய்ந்ததாயுமுள்ள அம் மருதநிலத்தில், திரண்ட தேனிறால்கள் தேனீக்களால் உச்சியில் கட்டப்பட்டு விளங்காநின்ற கரும்புகள் வளர்ந்த காடும், யானை நின்றாலும் மறையக்கூடிய வளர்ச்சியுற்ற செந்நெல்லின் விளைவும் ‡ ஓல்லென்னும் ஓசையை யுடையனவாய் விளங்கும். இப்படிச் செந்நெல் விளைந்தவுடனே, உழவர்கள்,

* இது பசுமைநிறமுள்ள ஒருவகைப்பாம்பு; இது கருவாயிருக்கும்போது வயிறு விரலையொத்து மெல்லிதாய்க் குரல்வளைக் கதிருள்ள நெற்பயிர்போன்று நீளமுள்ளதா யிருக்கும்.

† அரிசியின் அம்சம் உண்டாகும்போது முதலில் பால்போன்றிருக்கும்; இதனைப் பாலென்று சொல்வது தென்னாட்டுவழக்கம்.

‡ ஒல் - ஒலிக்குறிப்பு; கரும்பின் தோகையும், நெல்லின்தோகையும் காற்றினால் ஒருவகை ஓசையைச் செய்துகொண்டிருக்கும்.

ஆராய்ந்து சுவையுள்ளதாக வடிக்கப்பட்ட மதுவை முதலில் விருந்தாக வண்டுகளுக்கூட்டி (அதாவது வண்டுகள் உண்ணும்படி சேகரித்து வைத்திருந்து) பின்பு தாம் உண்டு, தேனைச் சொரிகின்ற குவளைப் புஷ்பங்களைப் பறித்துச் சந்தோஷத்தோடு சூடித் தேய்ந்த சந்திரனைப்போலும் வளைவுள்ள அரிவாள்களை எடுத்துக் கையிலேபிடித்து, அறுக்கக்கூடிய பருவமுள்ள அச்செந்நெற்கதிர்களை அறுக்கத் தொடங்குவார்கள். அவ்வாறு தொடங்கியவர்கள், வயல்களில் நெல்லோடு கலந்திருந்த தாமரைகள் நசுக்குண்டு மெலியவும், குவளைக ளெல்லாம் வாட்டத்தையடையவும், ஒருவரோ டொருவர் பேசுவதா லுண்டாகும் இரைச்ச லதிகரிக்கவும், அவ்விரைச்சலைக் கேட்டுப் பொய்கைகளிலுள்ள அன்னப் பக்ஷிகளின் குஞ்சுகள்பயந்து ஆரவாரித் தெழுந்து பறக்கவும், அந்நெல்லை அறுக்கத் தக்க வலிமைபொருந்திய கைகளினாலே, கதிர்களை மலையைப்போல அறுத்துக் குவித்துவிட்டு அரிவாள்களைக் கையினின்றும் நீக்குவார்கள்; பின்பு, அக் கதிர்அரிகளைக் கட்டாக்கி அச்சுமைகளை, அவர்களுள் அத்தொழிலின் கொள்கையையுடையவர்களும் கூட்டமுள்ளவர்களுமாகிய இளங் குமரர்கள், வழியோரங்களிலுள்ள தடாகங்களில் வாளைமீன்கள் பயந்து, இடம்விட்டுப் பெயரவும், வண்டு மிதிப்பதனாலே மலர்கின்ற தாமரைகள் அவர்களுடைய காலில் மிதிபட்டுக் கிழியவும் கொண்டு செல்வார்கள்; அப்படி அவர்கள் கொண்டு செல்கின்ற வேகத்தினாலே அதிர்ச்சியுண்டாகிப் பக்கங்களில் நிற்கும் மடல்பொருந்திய கமுக மரக் கூட்டம் பழங்களைச் சொரியும். அவர்கள் இவ்வாறு கதிர்களைக்கொண்டு சென்று பலபோர்களை வேய, அவைகள், சொரிகின்ற மழையையுடைய மேகமண்டலம்வரை உயர்ந்து, மேற்பாகமானது அம் மேகத்தை ஊடே செல்லாமற் றடுக்கும்படி, பரிசுத்தமாகிய நிலத்தின் மார்பை

யெல்லாம் (அதாவது நிலத்தின் மேற்பாகத்தை யெல்லாம்) இடமாகக்கொண்டு நிற்பதனாலே, அந்நிலமானது, "நான் இச்சுமையைப் பொறுக்கமாட்டேன்" என்று வாய்விட்டு வருந்தும்படி, வளப்பமிகுந்த சுளைகள் பொருந்திய பலாப்பழங்கள் முன்னேகிடந்து அழிந்த, (அதாவது பலாப் பழங்களைக் கொண்டுவந்து போட்டுச் சுளை கொட்டை முதலியவற்றை யெடுத்துக்கொண்டு அவற்றின் கூடுகள் நிறைந்துகிடந்த) களங்களெல்லாம், அந்நெற்போர்களால் அழகுபெற்று விளங்கும் தன்மையை யுடையனவாயிருக்கும்.

அதன்மேல் அவ்வுழவர், நல்லநாளில் பெருமைநிறைந்த அப் போர்களைப் பிரித்து, அரிகளையெடுத்துப் பக்கத்தில் வட்டமாக உதறிப் பரப்பிவிட்டு எருமைக்கடாக்களின் பிணையலாலே பொருந்த மிதிக்கும்படி செய்து, வைக்கோலை வேறாகப் பிரித்தெடுத்து நீக்கி, நெற்களைப் பதர் போகும்படி காற்றிலே தூற்றிப் * பொலிகளாகக் குவிப்பார்கள்; அப்படிக் குவித்த பொலிகள் செழிப்புற்ற பொன்மலைபோன்று விளங்கும். இன்னும், அக்களங்களின் மற்றொருபக்கத்தில், கரும்புகளைச் சிதைத்துச் சாறெடுப்பவருடைய ஆலை ஒவ்வொன்றிலும், விரும்பிவந்து சேர்ந்தவர்கள் பருகிமிஞ்சிய, (அதாவது சாறெடுப்போர்வந்தவர்களுக்கு மனஞ்சலிக்காது கொடுக்க, அவர்கள் குடித்துமிஞ்சிய) சாற்றைக்காய்ச்சிப் பாகாக்கு மிடத்திலுண்டாகிய இனியபுகையானது மிகுந்துபரந்து ஆகாயத்திற் செல்வதனாலே அங்குள்ள சூரியன் சிவப்பு நிறத்தை யடைந்து விளங்கும்.

இத்தகைய களத்தில் மேற்கண்டவாறு நெற்களைத் தூற்றிக் குவித்தபின்பு உழவர்கள், கிணையென்னும்பெயருடைய மருதநிலப்பறையை முழக்கி வேளாளரைப்புகழ்ந்

---

* நெல்முதலிய தானியக்குவியல்.

துபாடி நெல்வாங்குவோராகிய * பொருநருடைய வறுமையானது கெடும்படி வேண்டியமட்டும் ஆசைதீரக்கொடுத்து, மிகுந்தநெல்லை உயர்ந்த அம் மருதநிலத்தினிடத்தே விற்க, அதனை விலைக்குவாங்கி ஏற்றிக்கொண்டுபோவதற்காகவந்த வியாபாரிகளுடைய † பண்டிகளும், கணுக்களையுடைய கரும்புகளி லிருந்தெடுத்த சாற்றைக் காய்ச்சியதனு லுண்டாகிய பாகுமுதலியவற்றைக் கொண்டு போகும் பண்டிகளும், மணமிகுந்த புஷ்பங்களை ஏற்றிக்கொண்டு போகும் பண்டிகளும், வளம்பொருந்திய தென்னைமரங்களிற் பறிக்கப்பட்ட இளநீர்களை ஏற்றிக்கொண்டு செல்லும்பண்டிகளும், மனிதர் மென்றுதின்கின்ற வெற்றிலைகளை ஏற்றிய பண்டிகளும், மேன்மை பொருந்தியனவும், முதிர்ந்தனவுமாகிய பல பாக்குக்குலைகளை யேற்றிக்கொண்டு செல்லும் பண்டிகளும், கனிவும் இனிமையும் பொருந்திய பலவகைக்கனிகளை ஏற்றிக்கொண்டு இடைவிடாது போகும் பண்டிகளும், ‡ ஓர்க்கோலை சங்கு பவளம் முத்து உப்பு முதலிய கடலிலுண்டாகும் வஸ்துக்களை நகரில் சேர்ப்பதற்காக ஏற்றிக்கொண்டு செல்வதால் இரைச்சலிடும்பண்டிகளும், நெருக்கமாகித் துவரைமுதலிய தானியங்களை நிறைவுபெற ஏற்றிச்செல்லும் பண்டிகளும், இன்னும் மற்றபொருள்களையும் ஏற்றிக்கொண்டு பெரிய இரைச்சலோடு செல்லும் பண்டிகளும், ஆங்கு ஒழுங்காக எல்லாத்திசைகளிலும் சென்றுநிறையும். கிளிகளிருந்து மகிழ்ச்சியோடு வளரக்கூடிய மருதமரங்கள் நிறைந்து அவற்றால் அழகுசெய்யப்பட்டு, விட்டில், கிளி, யானை, வேற்றரசன், தன்னரசன், பயிர் சாவியாய்ப்போவதனு லேற்படும் நஷ்டம், பெருமழை, பெருங்காற்று ஆகிய எட்டுவகையினலும் உண்டாகும் கேடு சிறிதுமில்லாமல் விளங்கு

* பொருநர் - புகழ்ந்து பாடுவோர். † பண்டி - வண்டி. ‡ ஓர்க்கோலை - ஒருவாசனைப்பண்டம்.

கின்ற வளம்பொருந்திய வயல்களினுடையதன்மை தினந் தோறும் இவ்விதமாகவே யிருக்கும். இனி இருல்களிலி ருந்து வடியும் தேன்துளியோடு மலர்களிலிருந்து வடியும் மதுத்துளியும் எப்பொழுதும் இடைவிடாது வடிந்துகொ ண்டிருக்கும் சோலைகளாற்சூழப் பெற்றனவும், பிரகாசம் பொருந்தியனவுமாகிய அந் நாட்டார் குடியிருக்கும் ஊர்க ளின் சிறப்புச் செல்லப்படுகின்றது.

மருதநிலத்தின் தன்மை இப்படியிருக்க, அந் நாட்டின் ஊர்களைச்சார்ந்த சோலைகளில், வண்டுகள்சேர்ந்து இசை பாடுதற் கிடமாயுள்ள பூங்கொம்பு, பக்கத்தில் கூடுகட்டு வதற்காக இதழ்கள்விரிந்த தாமரைமலரைக் கவ்வி யிருக் கும் ஆண் அன்னம் விளக்காகவும், குளிர்ந்த குயிலிசை மத்தள வாத்தியமாகவும், தன்னிடத்திலிருக்கின்ற உச்சிக் கொண்டையையுடைய மயிலுக்கு மணஞ்செய்வித்து அத னைப் பெண்மயிலோடு கூடும்படி செய்யும்; (அதாவது: அன்னம் தாமரை மலரைக் கவ்வி யிருக்கவும், குயில்கூவ வும் பூங்கொம்பானது ஆண் மயில் தன் பெட்டையோடு சேர்ந்திருத்தற் கிடமாய் விளங்கும்.) இன்னும், புருஷ ரோடுகூடின பெண்களின் கண்ணைப்போலச் செழித்த குவளை மலர்கள் மிகுந்திருக்கின்ற ஓடைகளிலே நீர்வற் றிச் சிறிது குறைந்ததனால் வாட்டமடைந்த வள்ளைக்கொடி கள், ஆங்கு அவை படர்வதற்காக நடப்பட்டிருந்த மூங் கில்களின்மேல் படர்ந்து சென்று தலைகீழாய்த் தொங்க, அவற்றின் மேற் பாய்கின்ற வாளைமீன்களெல்லாம், கழைக் கூத்திகள் கழையின்மேலேறி அதனின்று மிறங்கிப் பக் கத்திலமைந்த கயிற்றிலேகுதித்து ஆபரணங்கள்சப்திக்க ஆடுகின்ற கழைக்கூத்தை ஆடுவனபோன்று விளங்கும்; கரையிலிருக்கும் நாரைகள் அக் கூத்தைப்பார்க்கும் மனி தர்கள் போன்றிருக்கும். இதுநிற்க, ஆங்குள்ள தடாகங்

களினிடத்தே கருங்குவளை மலர்போன்ற கண்களையுடைய பலபெண்களும் தினந்தோறும் மூழ்கி விளையாடுவதனாலே, பாலைக் காய்ச்சும்போ துண்டாகும் ஆவிபோன்ற வெண்மையும் அழகும் பொருந்திய ஆடைகளையணிந்த அவர்கள் இடைமீதுள்ள மேகலாபரணங்களின் சரங்கள் அற்றுப் பலமணிகள் உதிர, அவற்றை எடுப்பா ரில்லாமையாலே அத்தடாகங்களெல்லாம் அம் மேகலை மணிகளை யணிந்து, ஆகாயமானது நக்ஷத்திரங்களைத் தோற்றுவித்த தன்மை போன்று விளங்கும். இன்னும் அவ்வூர்களில் வீட்டின் முற்றத்திலுள்ள சோலையிலே காயாத பச்சை நெல்லை (அதாவது அரைவிளைச்சலாக விளைந்து பசுமைநிறத்தோடிருக்கும் நெல்லை) வறுத்து அவலிடிப்பவர்களுடைய உலக்கையின் அதிர்ச்சியானது, பல வாழைப்பழங்களையும், உதிர்த்து ஈரப்பலாவையும், வருக்கைப் பலாவையும்,மாமரத்தையும் முறித்து, அவற்றின் பழங்களையும் உதிர்த்து, அசைகின்ற பசிய கமுகு தென்னை ஆகியவற்றின் பிரகாசமுள்ள பழங்களையும் உதிர்த்து, வாசனை பொருந்திய தாழை மலரையும் சண்பகமலரையும் தீண்டி மலரும்படி செய்யும். இஃதன்றி அவ்வூர்களிலுள்ள வரிசையான மாளிகைகள், வாசனை வீசுகின்ற மடுக்களிலே புஷ்பங்களை மேய்ந்து அதனாலே மடிகளினின்றும் சுரந்த பாலானது பூமியை நனைக்கும்படி சென்று, நீண்ட தொழுவங்களிலுள்ள கன்றுகளுக்குப் பாலையூட்டிப் பால் கறப்பதற்காக மங்கையர் கையிலெடுத்த கறவைப் பாத்திரங்களும், கறந்தபாலை ஊற்றும் சால்களும் நிறைந்து வழியும்படிக்கும் அப்பாலைக் கொடுத்து முற்றங்களில் நிற்கின்ற எருமைகளினாலே அழகுபெற்று விளங்கும்; இத்தகைய மாடங்களின் மற்றொரு பக்கத்திலோ, வெள்ளித்தகட்டை இடைவிட்டுப் பிரகாசிக்கும்படி பதித்துவைத்ததை யொத்த வாயையும், அழகிய தலையையும், ஒள்ளிய அகிற்புகை திரண்டதையொத்த நிறத்

தினையும் உடைய கரிய * மணிப்புறுக்கள், அறுத்தெடுத்துக் கொள்ளக்கூடிய பவளங்களைக் கோத்ததை யொத்த சிவந்த கால்களை யுடையனவாயும், குன்றிமணிபோலும் சிவந்த கண்களை யுடையனவாயும், விளங்குகின்ற கேடில்லாத நாகணவாய்ப் பறவைகள் அடுத்திருந்து பாடக் கிளிகளோடு சேர்ந்து, வளர்ப்போரால் ஊற்றி வைக்கப் படும் பாலை உண்டு களித்திருக்கும். இன்னும், அம் மாட வரிசைகளின் மேலுப்பரிகையி லிருக்கின்ற பெண்கள் தங்களுடைய கஞ்சி தோய்த்ததும், அழகியதுமாகிய ஆடையின் நிறமானது புகையோடு கலந்து பேதந்தெரியாமல் விளங்கும்படி, புகைத்துக் கரிய கூந்தலுக்கு ஊட்டிய மணமிகுந்த அகிற்புகையில் அக் கூந்தல்கள் மறைவதனாலே, அப்பெண்க ளெல்லோரும், சிகரத்தினால் உயர்வைப்பெற்ற மலையின்மேலே கூடிய மயில்கள், தமது தோகைகளை ஆங்குப் படிந்திருக்கும் மேகத்தில் விரித்துக் கொண்டு நின்ற தன்மையை நிகர்த்து விளங்குவார்கள். அன்றியும், அங்கே ஆடவர், தமது மனைவியரை மிக்க விருப்பத்தோடு, அவர்கள் பிரதிபிம்பம் தங்கள் கண்ணுக்குள்ளே தோன்றும்படி பார்க்க, அத்தருணத்தில் அவர்களுக்கும் விருப்பம் மனத்திற்குள் அதிகரித்தபடியினாலே, "ஊடுதல் காமத்திற் கின்பம்" என்றதற்கேற்ப, அவர்கள் ஆடவரை, நோக்கி † "நீங்கள் விரும்பிப் பார்க்கிற பெண்கள் உங்கள் கண்ணுக்குள்ளே யிருக்கின்றார்கள்; ஆகையால், அவர்களிடத்திலே உங்கள் ஆசையைச் செலுத்துங்கள்; எங்களிடத்தில் பிரியம் வைக்கவேண்டாம்" என்று வீண்குறை கூறிப் பிணங்கிச்செல்ல, அவ் வாடவர்கள் அவ்

* கழுத்தில் மணிகள்போலப் புள்ளிகளையுடைய புறுக்கள்.

† தங்களையே பார்த்தாலும் பிணங்குதற்காகக் கண்ணுக்குள் தங்கும் தங்கள் பிரதிபிம்பத்தை வேறுபெண்களாகக் கூறினார்கள்; பிணங்குதற்குக் காரணமல்லாத காரணங் கூறுதல் இயற்கை.

வாறுகொண்ட பிணக்கைத் தீர்க்கும்படி அவர்களுடைய மேகலாபரணங்களைப் பற்றியிழுக்க, அவை அறுபட்டு உதிர்ந்தனவாகிய பொன்னும், நீலமணிகளும் பிரகாசித்த விடங்கள், பொன்னை உருக்கும்படியான நெருப்புங் கரியும் சிந்திய முற்றங்களைப் போன்று விளங்கும்.

இவை யிப்படியிருக்க, அவ்வூர்களில் தங்கும் செல்வச் செருக்கையுடைய இளங்குமாரர்கள், விளைவை யெல்லாம் வீடுகளிற் சேர்த்து வேனிற் காலத்தில் வேலையற்றிருப்பதால், போதுபோக்குவதற்காக, முறுக்கிய கொம்புகளை யுடையனவும், இளமையுள்ளனவுமாகிய ஆட்டுக்கடாக்களையும், உயர்வுநோக்கிக் கொய்துகொள்ளக் கூடிய செங்காந்தள் மலர்போன்ற உச்சிக்கொண்டையை யுடையனவும், அன்னியதேசங்களி லிருந்து தோணியிற் கொண்டு வரப்பட்டனவுமாகிய கோழிச் சேவல்களையும், காடைகௌதாரி முதலியவற்றின் சேவல்கள் முதலாக இன்னும் பலவற்றையும் போர்செய்யும்படி பொருத்திப் பார்க்கும் விருப்பத்தை யுடையவராய், அவற்றிற் குண்டாகும் புண்ணைச் சிறிதும் கருதாராய்ச் சண்டைசெய்யுமாறு ஒன்றின் முகத்தை ஒன்றுக்குக் காட்டிப் போரை உண்டாக்கிவிட்டு ஆர்ப்பரிக்கும் சப்தமும், அவற்றை விலக்குதலாலுண்டாகும் இரைச்சலும் ஆங்காங்கே பெரிய முழக்கமாயிருக்கும்; இன்னும் அவ் வூர்களிலுள்ளவர்களும், துவளுகின்ற இடையை யுடையவர்களுமாகிய பெண்களெல்லோரும் கையிலெடுக்கக்கூடிய இரத்தினக் கிண்ணங்களில் நிறைத்து ஏந்திய மதுவைக் குடித்துத் தெவிட்டி எஞ்சியதைப் பக்கங்களில் உமிழ்வதனாலே அதன் குளிர்ச்சியைக்கொண்டு மாளிகைகளின் இடையிடையேயுள்ள இளமைபொருந்திய புன்னைமரங்களெல்லாம் அழகுதங்கிய ஆகாயத்தில் தோன்றுகின்ற நக்ஷத்திரக் கூட்டம்போலப் பூத்து, இறகுகளையுடைய வண்டுகள் செவ்வழியென்னும்

பண்ணைப் பாடும்படி விளங்கும்; வாழைகளோ, பாவையரின் பயோதரங்களைப்போன்ற மலர்களையீன அவை, அப் பயோதரங்கள்போலவே செழித்து விளங்கிக்கொண்டிருக்கும். இத்தகைய சிறப்பினையுடைய அவ்வூர்கள், இன்னும், இக்காலத்தில் சிலர் ஏற்படுத்தியிருக்கும் சத்திரங்களில் தருமவொழுங்கின்றிச் சில உயர்ந்த வகுப்பார்க்கு மட்டும் அன்னமிட்டு ஏழைகளைத் துரத்துவதுபோலல்லாமல் எவர்க்கும் விலக்குதலின்றி அன்னமிடக் கூடிய அன்னதான சாலைகளாலும், வெம்மையில்லாமல் சுற்றியிருக்கும் மரங்களிலிருந்து கனிந்துதிரும் வாழை, பலா, மா ஆகிய முப்பழங்களும் மிதந்து கிடக்கின்ற சுனைகளிலே காலையிலெடுத்த தண்ணீரில் குளிர்ச்சிசெய்யும் வாசனை. மலர்களைக் கலந்து சந்தனச் சத்தையும் சேர்த்துத் தாகத்தோடு வருவோர்க்கு உதவும்படி உண்டாக்கிவைத்த பல தண்ணீர்ப் பந்தல்களாலும், கொலைசெய்தற்குரிய நுனியையுடைய வேலாயுதம்போலுங் கண்களையுடைய நிருத்தமாதர் கூத்தாடு மிடங்களாலும் அழகுபெற்று விளங்கும்; அன்றியும், ஆங்கே, பூமியிற்றோன்றி விளங்குவனவும், மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐம்பொறிகளாலும் அனுபவிக்கக் கூடியனவுமாகிய எல்லாப் பொருள்களும் நிறைந்து எவ்விடத்தும் ததும்பிக்கொண்டிருக்கும்; மேலும் அவ்வூர்களில் மேற்கண்டவாறு நாள்தோறும் தங்குதலையுடைய அன்னசத்திரங்களோ ஆயிரம்; தருமத்திற்காகவிட்ட வரியில்லாத ஸர்வமானிய நிலங்களோ ஆயிரம்; பூங்கொடிபோன்ற பெண்கள் அலங்காரஞ்செய்யுமிடங்களோ ஆயிரம்; தொழிலிற் சோம்பலில்லாத தொழிலாளிகளின் கணக்கோ ஆயிரம்; நடக்கின்ற கலியாணங்களோ ஆயிரம்; இவ்வாறு அவ்வூர்கள், ஒவ்வொருவகையிலும் வெவ்வேறாகிய ஆயிரம் ஆயிரம் பேர்களாய்ப் பிரிந்து தம் தம் தொழிலை நடத்திப் பாதுகாக்கக் கூடியவர்களின்

தொழிற் பாதுகாப்பில் சிறிதும் தவிர்தலில்லாதிருக்கும். இவ்வகைச் சிறப்புவாய்ந்த அவ் வேமாங்கதமென்னும் நாடு, தெய்வலோகமானது, வெற்றியையுடைய தனதின்பத்தை இவ்வுலகம் விரும்பி அனுபவிக்கும்படி செய்வதற்காக இங்கே இறங்கிவந்து வீழ்ந்தது என்று சொல்லும்படி மிக்க சிறப்போடு, தன்னை யொழிந்த மற்ற நாடுகளெல்லாம் தனக்கு எல்லையாகும்படி தங்கி விளங்கும். இன்னும் இது, முத்தியை யடைவதற்குரிய நல்ல தவத்தைச் செய்கின்ற மகான்களுக்கும் இருப்பிடமாகும்; மறுஜென்மத்திலே நன்மையை யடையக்கருதி இல்லற தருமமாகிய தவத்தைச் செய்வார்க்கும் வாசஸ்தானமாகும்; நற்கருத்துக்களைத் தரக்கூடிய கல்வியாகிய பொருளைத் தேடுவார்க்கும் (அதாவது நற்கல்வியைக் கற்றுக்கொள்வார்க்கும்) உறைவிடமாம்; நிலையாத செல்வப்பொருளைத் தேடுவார்க்கும் உரிய இடமாம்.

நாட்டுச்சிறப்பு முற்றுப்பெற்றது.

## நகர்ச்சிறப்பு.

கண்வலைக் காமுக ரென்னு மாபடுத்
தொண்ணிதித் தசைதழீஇ யுடலம் விட்டிடும்
பெண்வலைப் படாதவர் பீடி ஞோங்கிய
வண்ணலங் கடிநக ரமைதி செப்புவாம்.

கண்ணாகிய வலையாலே காமுகரென்னும் மிருகத்தைப்பிடித்து, ஒள்ளிய பிரகாசமுள்ள திரவியமாகிய தசையைக் கைக்கொண்டு, உடலைக் கைவிடக்கூடிய வேசிப்பெண்களுடைய மாய்கையாகிய வலையிலே அகப்படாதவராகிய முனிவரது தவப்பயன்போலச் செல்வமோங்கியதும், பெருமையும் அழகுமுள்ளதும், காவலைக் கொண்டதுமாகிய இராஜமாபுரமென்னும் நகரத்தின் வளமிகுதியை இனிக் கூறுவாம்:

இந் நகரமோ எத்தகைய சிறப்புப் பொருந்தியதெனில், அழகிய சிறகுகளையுடைய குயில்கள், ஆகாயத்தை யளாவிய பெரியகிளைகள் சுமையாலேவளைந்து மெலிவுறும்படி பூத்தனவாகிய சண்பகமரங்களின் அழகிய மலரை மகரந்தம் உதிரும்படி மூக்கினாலே குடைந்து, பக்கத்திலிருந்து கூவும் மயில்களோடு மாறுகொண்டு கூவப்பட்டுப் பார்ப்பவர்கண்கள் வேறிடத்திற் றிரும்பாமல் அவ்விடத்திலேயே தங்கிவிடக்கூடிய அவ்வளவு இனிமை வாய்ந்த நிழலையுடைய சோலைகள் எங்கும் சூழ்ந்திருக்கும்; அச்சோலைகளி னிடையிடையே, குளிப்பார் மார்பிலணிந்திருந்த சந்தனமும், வாசனை வீசுகின்ற மாலையும், தேகத்திலே தரித்த மகரந்தங்களும், கூந்தலிலூட்டிய அகிற்புகையும், அதிற் பூசிய புழுகும், பயோதரங்களி லணிந்த குங்குமமும் நீர் தெரியாது மேற்பாகத்தை மறைத்து விளங்குகின்ற அழகிய பொய்கைகள், பிறர் குளித்ததனாலேற்பட்ட மாசடைந்ததென்னும் வெட்கத்தினாலே அழகிய போர்வையால் தங்களுருவத்தை மறைத்துக்கொண்டிருப்பனபோன்று விளங்கும்.

இந் நகரின் வெளிப்புறத்திற் சூழ்ந்த * கல்மதிலின் உட் பக்கத்திலேயுள்ள புறப்படைவீட்டில் வாசனையுள்ள கரும்பும், விளைந்த நெற் றொகுதியுமாகிய கவளத்தை விரும்பி வரும் யானைகள் நிற்கக் கூடியனவும், அடியிளகாமல் பலத்தோடு நிற்கும் இருப்புத்தூண்கள் பொருந்தியனவுமாகிய யானைக் கூடங்கள் பொலிவுற்று விளங்கும்; அவற்றின் பக்கத்தில் தமக்குள்ளே போர்செய்வன வாகிய இரண்டு மலைகள் சண்டை புரிகின்றனவென்று பார்த்தோர் கூறும்படி, யானைகள், சலசலவென்னும் ஓசையுண்டாக மும்மதமுஞ் சொரிவதனாலே செருக்குற்றுக் கொலைசெய்யக்கூடிய இரண்டு கொம்புகளும் ஒவ்வொன்

* இது புறப்படை வீட்டுக்கப்பால் வெளியி லுள்ளது.

றின் தேகத்திலும் தைத்து மறையும்படி பாய்ந்து, நிறைந்த சண்டையைச் செய்வதற்காக, வளைவாக ஏற்படுத்தப்பட்டதும், நிலைபெற்றதுமாகிய களமானது (அதாவது யானை போர்செய்யு மிடமானது) அலங்கார மிகுந்ததாய்த் தோற்றும். இன்னும் அங்கே, முத்துக்கள் தங்கியிருக்கக்கூடிய யானைகளின் தந்தங்களைச் சீவிக் கூர்மையாக்கி, அவை வலிமையை அடையும்பொருட்டு, அணியப்படுவதும், விளிம்போரத்திலே பல சித்திரவேலைகள் செய்யப்பட்டதுமாகிய பூணிலே வைரத்தை அழுத்தி வைப்போராகிய யானைப்பாகர், தம்மிற் பொருந்தி நடக்கும் வீதிகள், ஒழுங்கோடு நீட்சிபெற்று விளங்கும்; அதற்கப்பால், ஓடுகின்ற தேரினது நடை விசேடத்தாலே சிந்துவதாகிய பொன் பிரகாசிக்கின்ற தேரேறு மிடமும், பொன்னாற்செய்த மாலையையணிந்த குதிரைகளை ஏறிச் செலுத்தக்கூடிய வட்டமாகிய இடமும், கேடகத்தையேந்தி வாள்வித்தையைப் பழகுமிடமும், கெடுதலில்லாத விற்றொழிலைப் பழகுமிடமும் நெருங்கியிருக்கும்; இவ்வாறாகிய * புறப்படை வீட்டில் தொழில்செய்வாருள்ள விடத்தைக் கடந்து சென்றபின் † இடைநகர் தோற்றும். இவ் விடைநகரினது தன்மை யெப்படி யிருக்குமெனில், இவ்விடத்தி லுண்டாகும் ஓசையானது, புறப்படை வீடென்னும் புடைநகர்க்குப் பக்கத்திலிருக்கும் மருத நிலத்தில் ஒரு கடலுடைந்ததோவென்று சொல்லும்படி சென்று ஒலிக்கும்; இவ் விடைநகரில் அவ்வாறு ஓசையுண்டாவதற்குக் காரணமாகக் கூடிய மனிதர்கூட்டமோ, அவ்வாறு உடைந்தகடலை அடைப்பதற்குத் திரண்ட தன்

* புறப்படைவீடு - கோட்டைக்கு வெளியேயுள்ள இடை நகருக்கப்பால் வீரர்கள் தங்கியிருக்கும் ஸ்தானம்.

† இடைநகர் - கோட்டைக்கும் புறப்படை வீட்டுக்கும் மத்தியிலிருப்பது.

மையை நிகர்த்திருக்கும். இன்னும், அவ் விடை நகரில் ஸ்திரீகள், சிந்துரப் பொடிகளையும், சிவந்த பொன்போன்ற வாசனைச் சுண்ணத்தையும், சந்தனத்தையும் பனிநீரோடே கலந்துகொண்டு, மட்டத் துருத்திகளிலும் நெடுங் துருத்திகளிலும் நிரப்பி, அவற்றால் வீதியிலே புழுதி ஒடுங்கும்படி சிதற, அவை மஞ்சள் சிவப்பு ஆகிய வர்ணங்களோடு, இந்திரவில்லானது பூமியிலேவந்து கிடந்தது போன்று ஒவ்வொரு வீதியிலும் விளங்கும்; இன்னும் மாற்றற்ற பொன், ஞற்கட்டப்பட்ட மாடங்களின் உச்சியிலே அழகு செய்யும்படி வரிசைபெற அமைக்கப்பட்டுத் தோன்றுவனவும், பரிசுத்தமாகத் திரண்ட நீலரத்தினங்களால் செய்யப்பட்டனவுமாகிய குடங்களின் தோற்றம் எப்படியிருக்குமெனில், புஷ்பங்கள் மலர்ந்தனவாகிய வேங்கை மரங்களின் மேலே, மேகத்தை நினைத்து ஆகாயத்தைப் பார்க்கின்ற மயிற்கூட்டங்கள் வரிசைபெற்றிருப்பன போன்று விளங்கும்; இஃதன்றி, அம் மாடங்களிலே நாட்டப்பட்டுத் தோன்றுகின்ற நீண்ட கொடிகள், சந்திரமண்டலம்வரை உயர்ந்து சென்று பிரகாசத்தையுடைய அச் சந்திரனது தலையைத் தடவ, அப்போது மத்தியிலேயுள்ள மேகங்கள் இயற்கையாக இடித்து மழையைச் சொரியுந் தோற்றம் எப்படியிருக்குமெனில், அவ்வாறு அக் கொடிகள் சந்திரனைத் தாக்குவதைப் பார்த்து, அதற்குப் பயந்து அவ் வச்சத்தால் உடம்பு புழுங்கி வேர்த்து, (மேற்கண்டபடி இடித்து மழையைச் சொரிவதனு லுண்டாகிய அருவிக் கூட்டத்தின் அதிர்ச்சியாகிய) நடுக்கத்தைச்செய்து, மலைபோன்ற அம் மாடங்களி னுச்சியிலே குவிந்து வீழ்ந்து அந்த மேகங்கள் அழுவனபோன்று விளங்கும்; இன்னும், ஆங்குள்ள தெருக்களிலே நெற்களை விரித்துக் கோழி முதலியவை உண்ணுமல் காத்திருக்கின்ற நங்கைமார்கள், அந் நெல்லை உண்பதற்கு வரும் கோழிகளின்மேல் கல்லுக்குப் பிரதி

யாகத் தங்கள் காதிலணிந்திருக்கின்ற குண்டலங்களைக் கழற்றியெறிய, அக்குண்டலங்கள், வழியெல்லாம் நிறைந்து ஆங்கு விளையாடும் சிறுவர்கள் நடத்துகின்றனவும், மேற்பாகத்தில் பைம்பொன்னாற் செய்யப்பட்ட யானைக்கன்றை நிறுத்தி அமைத்தனவுமாகிய அழகுள்ள சிறுதேர்களை உருளவொட்டாமல் செய்யக்கூடிய வளப்பம் மிகுந்திருக்கும்; இதுதவிர, அவ்விடமெல்லாம் கணவரோடு ஊடிய பெண்களால் கழற்றி எறியப்பட்ட மாலைகளும் ஆபரணங்களும் கலந்து நிறைந்து விளங்கப்பட்டும், அம்பைத் தொடுத்தெய்யக் கூடியதும், வளைந்ததுமாகிய வில்போன்ற நெற்றியையுடைய அப்பாவையரோடு ஆடவரும் கூடி நெருங்கப்பெற்றும், பொன்னொளி மிகுந்திருப்பதால் இது தேவரிருக்கின்ற பொன்னுலகமோ என்று பார்ப்போர் சந்தேகங் கொள்ளும்படி பிரகாசிக்கும்; அன்றியும், ஆங்குள்ள மாளிகைகளில், கல்லையும் வலிமையினாலே பொடிசெய்த தோள்களையுடைய ஆடவர்கள், தங்களுடைய மனைவிமார் பிணங்கித் தம்மைவிட்டு நீங்கிச் செல்கின்ற காலத்தில், தமக்கேற்பட்ட மிகுந்த காதலினால், அந்தஸ்திரீகளுடைய நல்ல வாசனைப்பொடி யணிந்த பட்டாடையைத் தங்கள் கையினாலே பிடித்திழுக்க, அப் பெண்கள், மிகவும் வெட்கத்தையடைந்து அதனால், பொன்னிறமாகிய வாசனைப் பொடியைக்கொண்டு வீசிப் பக்கத்திலிருந்த விளக்கை அவிப்ப, அப்பொழுது மேலெழுந்து காற்றினாலே சென்ற அவ் வழகிய சுண்ணமானது புறப்பணை வீட்டுக் கப்பாலுள்ள மருத நிலத்திலே சென்று பரவும்; இஃதன்றி, அவ்விடமெல்லாம், நின்று விரும்பத்தகுகின்ற வாசனைப்பொடியை இடிக்கின்ற பெண்களுடைய கையிற்பற்றிய உலக்கையின் அதிர்ச்சியால் காம்பு கழன்றனவும், தென்னைமரங்களிலுள்ளனவுமாகிய ஒள்ளிய நெற்றுக்கள், பூமியிலே சொரிதலினாலே உண்டாகிய சப்தத்திற்கு அஞ்சிய மயிலி

னங்கள், பறந்துபோய் அச்சம் நீங்கி, ஆழமாகிய * கழி முகத்தின் வழியாக நடுநகரின் மத்தியிலேவந்து நிற்கும் கப்பலின் மேலுள்ள உயர்ந்த பாய்மரத்தில் நின்று ஆடும் ஒலியானது மிகுந்திருக்கும்.

கீழேபோட்ட எள்ளானது நிலத்திலே விழாதபடி நெருங்கியவர்களும், குறைவற்ற பதினெட்டுப் பாஷைகளை யுடையவர்களுமாகிய மனிதர்களாலே நிறையப்பட்டு, பக்ஷிகளெல்லாம்வந்து கூடியிருக்கின்ற பழுத்த மரத்தைப் போன்ற அழகினை யுடையதாகிய அளவில்லாத வளம் நிறைந்த இடை நகரின் தன்மை எப்பொழுதும் இப்படியே யிருக்கும். இனி, நிறைந்த ஒளியினை யுடைய முத்து மாலையைச் சூடியனவும், விருப்பமும் களிப்பும் இளமையு முள்ளனவுமாகிய பயோதரங்களையும், வேல்போன்ற கண் களையுமுடைய பெண்கள், தாங்கள் வளர்க்கின்ற பசிய கிளிகளை முன் கையிலே தாங்கிக்கொண்டு, தாமரை மல ரின்மேல் தங்கியிருக்கின்ற அன்னக்குஞ்சுகளை அவற்றிற் குக் குறித்துக் காட்டும்படி யமைந்ததும், வாசனை மிகுந்த தாமரை படர்ந்துள்ளதுமான அகழியின் சிறப்பைச் சொல் லுவாம் :

மேற்கூறிய இராஜமாபுரத்தின் மதிலைச்சுற்றிய அகழி யின் சிறப்பு எப்படி யிருக்குமெனில், அதில் எதிர்ப்பட்ட பிராணிகளைக் கொல்லக்கூடிய சுறுமீன் கூட்டத்தோடு முதலைத் திரள்கள், கரையிலேவந்த ஆள்களின் அரவத் தைக்கேட்டு அவர்களைப் பிடிக்க முயன்றும் அவர்கள், நீருக்குள் எதிரே அகப்படாமையினாலே ஆர்ப்பரித்து உள்ளே திரிய, அவற்றிற்கு அஞ்சி விசைகொண்டு பாய் வனவாகிய உயர்ந்த இறால் கூட்டங்கள், நீரைக்கலக்க, அதனாலே, கூட்டம் பிரியாத பட்சி யினங்கள், நெரு ங்கி மேலெழுந்து பறந்து ஒலிக்கும்; அழகிய இறகுகளை

* கழிமுகம் - முகத்துவாரம்.

யுடைய பெட்டை யன்னத்தோடு ஆண் அன்னமானது பிணங்கிச் சென்று, ஆறு கால்களை யுடைய வண்டுக்கூட்டங்கள் எழுந்து ஆர்ப்பரிக்கத் தாமரை மலரிலே உடலை ஒடுக்கிக்கொண்டு தங்கி யிருப்பது, சுற்றத்தி னின்றும் நீங்கி நெருப்பின் மத்தியிலே நின்று, யோகத்தோடு மும் மலங்களும் நீங்கும்படி தவஞ்செய்கின்ற ஓர் முனிவனை ஒத்திருக்கும்; இன்னும், அருமையாகிய பொன்னாற்செய்த குடங்களும், வெள்ளியாற்செய்த குடங்களும், இரத்தினங்களாற்செய்த குடங்களு மல்லாமல் மண்ணாற் செய்தகுடம் ஒன்றுவது நீரை முகவாத உயர்ச்சியுள்ளதும், மிக்க அழகுபொருந்தியதுமாகிய அவ் வகழியின் படித்துறைகள், ஆங்குக் குளிக்கின்ற ஸ்திரீகளுடைய குரும்பை போன்றனவும், மெல்லியனவுமாகிய பயோதரங்களின்மேல் தங்கிய குங்குமங்கரைந்து புதுமையான தோற்றத்தைச் செய்ய, அதனால், வாசனைபொருந்திய தன்மேனி சிவந்து பிரகாசிக்கும்; இஃதன்றி அவ் வகழியானது, மிகவும் ஆழ்ந்து தன்னிடத்தே அகப்பட்டவரைக் கரை யேறாமல் கொல்லக்கூடியதா யிருப்பதனால் அழகுபரந்த இடையையும், உருக்கியதனாலே ஒளிமிகுந்த செவ்வரக்குப்போன்ற வாயையும், தம்மிடம் அகப்பட்டவரைக் கெடுத்தே விடுகின்ற தன்மையுமுடைய பரத்தையரை நிகர்க்கும்; அதுவுமல்லாமல் அங்கு மலர்ந்திருக்கின்ற பலவகை மலர்கள் நிறைந்த தோற்றத்தினாலே, தேன்போன்ற இன்பம் நிறைந்த புதுமணப் பெண்ணாகிய குலமகளையும் நிகர்க்கும்; பிறர், அசுத்தம் முதலிய எவ்வகைக் கெடுதியும் செய்யா திருக்கும்பொருட்டு ஏற்படுத்திய கட்டுப்பாட்டையுடைய காவலினாலே, கட்டுக்குள் அடங்கியிருக்கும் அழகிய கன்னியையும் நிகர்க்கும்; இவையன்றி, அவ் வகழ்க் கரையிலுள்ளனவும், வாசனை வீசுகின்றனவுமாகிய கமுகமரங்களின்மேல், வரிசையான கிரணங்களையுடைய முத்துக்களைக் கோத்து

வைத்தாற்போல மலர்ந்த பாளைகளும், அவ்வகழிக்குள்ளே பூத்துத் தோன்றுவனவும், பொங்குவதனாற் சப்திக்கின்ற மதுநிறைந்தனவுமாகிய, குவளை மலர்களும் புகழினோடு ஒரு * யோசனைதூரம் சென்று மணக்கும்.

இதுவரை அகழியினுடைய சிறப்பைப்பற்றிச் சொல்லி வந்தோம்; இனி நீரைச்சுமந்து இளைத்த மேகத்தைத் தான் அணைத்துக்கொண் டிருப்பதனாலே, குழந்தையை அணைத்துக்கொண் டிருக்கின்ற தாயினுடைய கொங்கை போலவும், மேகத்தைத் தன்னிடத்தே சேர்த்த பெரியமலை போலவும் விளங்கி, அம்மேகம் தங்கியிருப்பதனாலே சுரக்கின்ற ஊற்று நீங்காத உச்சியையுடைய மதிலின் தன்மையைக் கூறுவாம்: பரந்தனவாகிய சிறு பொற்கொடிகள், பெருங் கொடிகளோடுசேர்ந்து, சுளகினால் வஸ்துக்களைக் கொழிப்பதுபோன்று கொழித்து அசைந்தாடப்பட்டதும், திருத்த முள்ளதுமாகிய மதிலானது எப்படி யிருக்குமெனில், பகைவர்களுடைய வெற்றி பொருந்திய சேனையானது எதிர்த்து அகழைக்கடந்துவந்து தன்னை வளைந்து கொண்டால், அப்பகைவர் தலைநடுங்கும்படி ஓரே சமையத்தில் நூறுபேரைக் கொல்லக்கூடிய எந்திரமும், பகைவர்களைத் தள்ளி யடிக்கின்ற எந்திரமும், கண்ணுக்குத் தெரியக்கூடிய பேய் வடிவமாகச்செய்த பொறியும், தானே சென்று மோதும்படியாகச் செய்த எந்திரயானையும், பகைவர்களை விழுங்கக்கூடிய பெரிய பாம்புகளும், எமனையொத்த கழுகுகளும், தாமே சென்று பகைவரைக் கட்டக்கூடிய சங்கிலிகளும், குந்தம் முதலிய ஆயுதங்களும், புலி முதலியவைகளும், தாமே பாணப்பிரயோகஞ் செய்யும்படி வில்வடிவமாக அமைக்கப்பட்ட எந்திரங்களும், பகைவர்மேலே விடக்கூடிய வெவ்விய குதிரை வடிவ

---

* ஒரு யோசனை நாற்காதத்தளவு; ஒரு காதம் நாலு கூப்பிடுதூரம் கொண்டது.

மாகச் செய்யபட்ட எந்திரங்களும், தாமே தொடர்ந்து பகைவரைக் கொல்லக்கூடிய கூர்மை தங்கிய வாள்போன்ற பொறிகளும், வந்த எதிரிகளின்மேல் கற்களைவாரி வீசும்படியான இடங்கணி யென்னும் பொறி முதலியனவும், பாவையும் அன்னமும் மாடங்களும் அழிக்கப்படுகின்ற சிவந்ததீயும், கொல்லர்களாலே இரும்பினால் செய்யப்பட்டு நெருப்பிலே காய்ச்சிக் கொளுத்தக்கூடிய கொள்ளிகளும், பெருங் கொக்குவடிவமாகச் செய்த எந்திரங்களும், கோரமான கூகை வடிவாகச் செய்த எந்திரங்களும், பகைவர் நெருங்கிய காலத்திலே கதவுக்குச் சமீபத்தில் வாராதபடி அவர்கள் தலைகளை திருகிக்கொல்லும் வலிமையுடனே தொங்கவிடப்பட்டிருக்கும், ஐயவித்துலாமென்று சொல்லக்கூடிய நெருக்கு மரமும், எவ்விடத்திலும் திரிந்து, செம்பைக் காய்ச்சி யுருக்கிய வெவ்வியநீரைப் பகைவர்மேல் சொரியக்கூடிய எந்திரங்களும், பகைவர் வெந்து போகும்படியானவும், நெருப்பிற் காய்ச்சி யுள்ளனவுமாகிய எஃகுருண்டைகளைச் சொரியக்கூடிய பல எந்திரங்களும், வெவ்விதாகக்காய்ச்சிய நெய்யை அள்ளிச் சொரியக்கூடிய எந்திரங்களும், பாணங்களை வாரிச் சொரியக்கூடிய எந்திரங்களும், வேலைச் சொரியக்கூடிய எந்திரங்களும், இன்னும் கற்களை வாரிச்சொரியக்கூடியனவாக யவனதேசத்துத் தச்சர், தங்களுடைய புத்திக்கூர்மையினால் செய்த வேறு பலவகை எந்திரங்களும், இரும்பினாலே பன்றிவடிவமாகச் செய்யப்பட்ட எந்திரங்களும், கோபம் பொருந்திய சர்ப்ப வடிவமாகச் செய்யப்பட்ட எந்திரங்களும், பகைவர்மேல் ஏவக்கூடிய சகடங்களும், குரங்கின் வடிவமாகச் செய்த எந்திரங்களும், போர்செய்யக்கூடிய ஆட்டுக்கடா வடிவமாகச்செய்த எந்திரங்களும், பகைவர் உடலை மிகுதியாக அறுக்கக்கூடிய அரிகயிறு முதலிய வைகளும், மிகவும் திருத்தமாக அமைக்கப்பட்டுவிளங்கும்; இன்னும் அம்

மதிலானது, வயிரமலைகள் பிரகாசிப்பன போன்று உச்சியில் மேகங்கள் பிறழக் கூடியவைகளும், வயிரத்தால் செய்த அழகிய தாழ்ப்பாளையுடைய கதவுகள் பொருந்திய வைகளுமாகிய கோபுரங்களையுடைய நான்கு வாயில்களும் நான்கு முகமாகவும், பலம்பொருந்திய அழகிய * ஞாயில்கள் பயோதரங்களாகவும், உயர்ந்த பொற்கொடிகள் கூந்தலாகவும், பலம்பொருந்திய அகழியானது ஆடை யாகவும் அமைந்து ஒரு பெண்ணின் வடிவத்தைக் காட்டிக்கொண்டிருக்கும்; இத்தகைய அம் மதிலின் சிறப்பு அளவிட்டுச் சொல்லுதற்கியலாது.

இதுநிற்க, இனி இம் மதிலுக்குள்ளிருக்கின்ற † உள்நகரமோ, பசிய பொன்விளையக்கூடிய தீவினிடத்திலே நிதியை வெட்டியெடுத்துக் கொண்டுவந்து, அதனாலே மிகுந்த செம்பொன்னை, மழையைப்போல அடிக்கடி சிதறிப் பலருக்கும் பல ஆயிரம் வீதமாகக்கொடுத்து, அவர்களுடைய தரித்திரம் நீங்கும்படி செய்த புண்ணியவிசேஷத்தால் மறுமையிலே தேவலோகபதவியை அடையக்கூடிய குடிகள் நிறைந்தது; அது செல்வத்தால் தேவருலகத்தை நிகர்ப்பதாயினும், அதன் தன்மையைச் சிறிது கூறுவாம் :

மேற்கூறிய உள்நகரத்திலே மதிலைக்கடந்து நுழைந்தவுடன் ஆசையை விளைவிக்கக்கூடியதும், பவளத்தையும் கொவ்வைக்கனியையும் நிகர்த்ததும், சிவந்தநிறமுள்ளதுமாகிய வாயினையுடைய தோழியராகிய தூதிகளால் தம்மிடத்தே வந்தவனுக்கு ஒன்றுமுதல் ஆயிரத்தெட்டுக்

---

* ஞாயில்—மறைந்திருந்து பகைவர்மேலே அம்புகளை எய்வதற்காக ஏற்படுத்திய துவாரங்களின் வழியாக எய்துவிட்டு மறைந்து கொள்ளும்படி அமைக்கப்பட்ட ஒருவகை மதிலுறுப்பு † உள்நகரம் கோட்டைக்குள்ளிருப்பது.

கழஞ்சுபொன்வரை விலைகூறித் தமது நலத்தைக் கட்டுப்பாடின்றி விற்கின்றவர்களும், கைப்பில்லாததாகிய போக நுகர்ச்சியை யுடையவர்களுமான பரத்தையர் தங்கியிருக்கும் சேரிகள் மிகவும் சிறப்புற்று விளங்கும். முதலில் அவ் விடத்தின் வளப்பத்தைச்சொல்லிப் பின்பு மற்றவற்றின் தன்மையைப்பற்றிச் சொல்லுவோம். அச்சேரியின் பக்கங்களெல்லாம், சார்ந்திருக்குமிடங்களும், திண்ணைகளும் சுத்தமாக்கிக் குங்குமக்குழம்பாலே மெழுகப்பட்டும், உள்ளிடங்களெல்லாம் சந்தனத்தால் மெழுகி மாலைகள்தொங்கவிடப்பட்டும், சுவர்களெல்லாம் ஆசைக்குறிப்புண்டாகுமாறு நாடகத்தை அனுசரித்துச் சித்திரங்கள் எழுதப்பட்டும், பொருத்தமாக அமைக்கப்பட்ட மெல்லியமலர்ப் படுக்கையெல்லாம் மிகவும் உயர்வாகத் தோற்றப்பட்டும், தேவலோகத்தாரும் விரும்பும்படியான தன்மையை யுடையனவாய் விளங்கும்; இன்னும், அத் தாசிகளுடைய பட்டுவஸ்திர மணிந்த இடுப்பின்மேல் அணியப்பட்டு விளங்கும் மேகலாபரணமானது, நாம் தங்கியிருக்கும் அவயவம் நம்மைத் தாங்காமாட்டா தென்று நினைத்துச் சிதறியதுபோல உதிர்த்துவிட்ட இரத்தினங்களும், முத்துக்களும், அவர்கள் பிரகாசம்பொருந்திய குயங்களில் பூசுவதனால் சிதறிய சந்தனமும், வாசனைப்பொடியும், தேன்நிறைந்த மாலையும், வண்டுகள் வாசனையை நுகரும்படியாக வீழ்ந்து விளங்குகின்ற முற்றமானது, அரசர்களும் விரும்பித் தங்கும்படி மிகுந்த வாசனையை வீசிக்கொண்டிருக்கும்; இன்னும் அவ்விடமானது, அப் பரத்தையர்களுடைய பாதங்களில் அணிந்த சிலம்பின் ஓசையும், அரையி லணிந்த மேகலாபரணத்தின் ஓசையும், தோழியராலே செம்பஞ்சணியப்பட்ட முன்கையிலுள்ள மெல்லிய விரல்களினாலே வீணையில் பண்ணை வாசிப்பதனாலுண்டாகிய பாடலோசையும், சிவந்தவாயினாலே பாடக்கூடிய பாட்டின் ஓசை

யும், முதலில் வாயில்வைப்பதற்குக் 'கடித்துவிடுவார்களோ' என்று அஞ்சி வாயில் சேர்ந்தபின் தன்றொழிலை முடிப்பதற்கு இசைந்து வாய்வைத்தவருடைய நோக்கம்போல் ஊதுகின்ற வேய்ங்குழலின் இனிமைமிகுந்த ஓசையும், மத்தளவோசையும் ஆகிய பலவிதமான குறையாத ஓசைகள் மிகுந்து, தெய்வலோகமும் சமமாகாத தன்மையையுடையதாய்ப் பிரகாசிக்கும்; இஃதன்றி இன்னும், தேன்மிகுந்து வண்டுகள் உலாவக்கூடிய மாலையை அணிந்த கூந்தலுக்கு, அப் பரத்தையர் வாசனைப் புகையையூட்ட, அப்புகையானது பரவி ஆகாயத்திலே சஞ்சரிக்கின்ற சந்திரர் சூரியர்களை மறைத்து, அந் நகரத்தில் பகற்காலத்திலேயே இரவையுண்டாக்கவும், அப்படியுண்டான இரவை, அப்பெண்களணிந்திருக்கும் ஆபரணங்களிலுள்ள மாணிக்கங்கள் தங்கள் பிரகாசத்தால் கெடுத்துப் பகற்பொழுதை யுண்டாக்கவும், இயல்பான இராக்காலத்திலும் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற சந்திரனுடைய கிரணங்களை அவ்விரத்தினவொளிகள் மறைத்துப் பகற்பொழுதை யுண்டாக்கவும், மன்மதன் விரும்பக்கூடிய அப் பரத்தையர் சேரியானது இராப்பகலில்லாத சுவர்க்கலோகத்தை நிகர்த்து விளங்கும்; இங்குக்கூறிய அப் பரத்தையர் சேரியானது எப்பொழுதும் இத்தகைய சிறப்பிற் குறைவுபடாததாம். இது நிற்க, இனி ஒழுங்குக்காக இழுத்துப் பிடிக்கப்படும் நூற்கயிறானது கோணாதபடி தொழிலாளிகள் அதைப் பிடித்து இருமருங்கும் அவர்களால் செவ்வை செய்யப்பட்டு, ஒரு யோசனையளவு நீண்டு, தேனொழுகுகின்ற மாலைகள் தொங்கவிடப்பட்டு, சாற்சந்திகளிலே ஒலிமிகுந்திருக்கக் கூடியதும், அரசர்களாலே கொடுக்கப்பட்ட உயர்ந்த பட்டமும் பசிய பொன்னாலாகிய ஆபரணங்களும் மிகுந்து எங்கும் விளங்கக் கூடியவர்களும், தித்திப்பாகிய மதுவைச்சொரிகின்ற மாலையை யணிந்த மார்பினை யுடையவர்களுமாகிய

வணிகர் முதலானோர் தங்கியிருக்கக் கூடியதுமான கடைத்தெருவின் சிறப்பைக் கூறுவாம்:

அவ் விராஜமாபுரத்தின் கடைத்தெருவானது எப்படியிருக்குமெனில், வணிகர், இரத்தினங்களைப் பதித்துச் செம்பொன்னாற் செய்யப்பட்ட கடைமணிகளை யுடைய கச்சைகளைக்கட்டி தொங்கவிடப்பட்டனவும், கைத்தொழிலைப்பற்றிய நூலைக் கற்றுத் தேர்ந்தவனால் செய்யப்பட்டனவுமாகிய பலம்பொருந்திய பவளக்காம்புகளை, முத்துமாலைபுனைந்த மேற்கட்டியையுடைய சட்டத்திலேதொடுத்தூன்றிக் கடைகளைத் திறந்துவைத்துச் சந்தனத்தினாலே அழகிய உள்ளிடத்தை மெழுகி அகிற்புகையைப் புகைத்து, முன்னே கற்பதித்துக் கெட்டிப்படுத்தி அமைத்திருக்கின்ற முற்றத்தை அழகியபுஷ்பங்களினாலே அலங்கரித்து, தெய்வங்கள் இனிதாகக் கொள்ளக்கூடிய வெண்கடுகை மங்கலத்தின் பொருட்டாகச் சிதறுவார்கள்; அவ்வாறு சிதறியபின் பேழையிலிருந்து பொன்னைத் தானே சொரியக்கூடிய கதவைத் திறந்து, யவனதேசத்துத் தச்சரால் பொன்னாலே செய்யப்பட்டு விளங்குகின்ற அப்பேழைகளினுள்ளனவும் பிரகாசத்தைச் சொரிகின்றனவுமாகிய இரத்தினங்களையும், முத்துக்களையும், வயிரங்களையும் வெளிப்படுத்தித் திரள்திரளாகக் குவித்துப் பின்னும் அதிகமாகிய பவளத்திரள்களையும், பிரகாசம்மிகுந்தனவும் பழமையாய் ஒடிந்து சிதைந்தனவுமாகிய பழைய ஆபரணங்களையும், நடுப்பகலையும் தங்களுடைய நிறத்தினாலே இரவைப்போலாக்கக்கூடிய நீலரத்தினங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களையும் விற்கும்பொருட்டாகக் குவிப்பார்கள்; இத்தகைய வணிகரின் தன்மை எப்படிப்பட்டதென்றால், பரிசுத்தமாகிய ஆபரணங்களை அள்ளிக்குவியலாகச் சொரியும்போது அவற்றுள் சில பக்கத்தே சிதறிவீழின் அவற்றை யெடுப்பது சிறுமையென்று நினைத்து அவ்வாறு சிதறி

யவற்றைக் கையினல் எடுக்காத செல்வச்செருக்கை யுடையவர்; இன்னும் அவர்கள் அலங்கரிப்புக்காகப் பழுத்த பாக்குக் குலையையுடைய கமுகையும், உயர்ந்த தென்னை மரத்தையும், வாழை மரத்தையும் பசிய பொன்னாலும், அழகு விளங்குகின்ற இரத்தினத்தாலும் செய்து ஒவ்வொரு கடைக்கு முன்னும் நாட்டுவார்கள்; அதனல் இயற்கையான கமுகு முதலியன அவர்களால் விரும்பப்படாவாயின; இத்தகைய அவர்களுடைய செல்வத்தின் மிகுதி என்னால் உரைப்பதரிதாகும்; இதனைக் கேட்கின்ற நீங்களும் இவ்விஷயத்தைப்பற்றிக் கேட்கவேண்டு மென்னும் விருப்பத்தை விட்டும் நீங்குவீராக; இன்னும் அங்கே ஜனக்கூட்டம், விலகுவதற்கு இடம் கிடைக்காமல், அக்கூட்டத்திலுள்ள ஒருவர், தம்முடைய மார்பிலே பூசிய சந்தனக்குழம்பு முதலியவற்றை,பிர்மகுலத்தார், க்ஷத்திரிய குலத்தார், வைசியகுலத்தார், சூத்திரர், ✳ அநுலோமர், † பிரதிலோமர், ‡ சங்கரஜாதியார் ஆகிய ஏழுவகுப்பாரும் தாக்கிப் பூசிக்கொள்ளும்படி, தேனிருலிலே நெருங்குகின்ற வண்டுகளைப்போல நெருங்க, அதனலே பிறந்த ஓசையானது நெருங்கிய அலைகளையுடைய சமுத்திர சப்தம்போல சப்தித்துப் பொதுவாக ஓசையென்று தெரிந்து கொள்வதல்லாமல் பேச்சின் வடிவம் இன்னதென்று அறிய முடியாதபடி எங்கும் ஓரேசப்தமாய் மிகுந்திருக்கும்.

கடைத்தெருவின் தன்மை எப்பொழுதும் இவ்வகைச் சிறப்புடையதாகவே விளங்கும். இனி, ஸ்திரீகள், தேகத்து லணியக்கூடியதும், பசும்பொன்போன்ற நிறத்தினையுடை

---

✳ அநுலோமர் - உயர்குலத்து ஆணுக்கும் இழிகுலப் பெண்ணுக்கும் பிறந்தவர்கள்.

† பிரதிலோமர் - இழிகுலத்து ஆணுக்கும் உயர்குலப் பெண்ணுக்கும் பிறந்தவர்கள்.

‡ சங்கரஜாதியார் - பலகலப்பாகப் பிறந்தவர்கள்.

யதுமாகிய வாசனைப்பொடிகள் அலங்காரத்தின் பொருட்டு ஆங்காங்கு சிதறப்பட்டு, அவை, இன்னும் அவர்களால் பழமை பாராட்டிக் கழிக்கப்பட்டதும், உயர்ந்ததுமாகிய புழுகாலும் பனிநீராலும் இளகுதலடைந்து, ஒழுகுவதால் அக்கலவையோடு, யானையினிடத்திலே யிருந்து சொரி கின்ற மதமும் கலந்து, பின்னரும் பலராலுங் கழித்தெறி யப்பட்ட மலர்மாலைகளும் அவற்றிலுள்ள தேனும் சேர் ந்து சேறாகி, அதன்மேல் கணவரோடு பிணங்கிய பெண்க ளால் கழற்றி யெறியப்பட்ட ஆபரணங்களும் சிந்தப் பெற்று, அதனால் மனிதர்கள் விரைவாக அடிவைத்து நடப்பதற்குக் கூசக்கூடிய மற்றவீதிகளின் வளப்பத்தைக் கூறுவோம்:

அத் தெருக்களில் ஒருபக்கம், திருவிழாவின் பொரு ட்டு, மத்தள வோசைகள் அதிகரித் தொலிப்பனவும், பழமைபெற்றனவுமாகிய கோயில்களிலே பேரிகைகளும் சங்குகளும் மிகுந்து முழங்க, அத்தருணத்தில் அத்த கைய சிறப்பையுடைய திருவிழாவைப் பார்க்கச் செல்வ தற்காக அலங்கரித்துக்கொண்ட மாதர்களுடைய வாசனை வீசுகின்றனவும், இளமை பொருந்தியனவுமாகிய பயோ தரங்களிலணிந்த ஆபரணங்களின் அழகிய பிரகாசமா னது இள வெயிலை யுண்டாக்க, அவர்கள் கூந்தலுக்கு இடு கின்ற அகிற்புகையானது பரவி அப் பிரகாசத்தைமறைத்து இளஞ்சூரியனை மறைக்கின்ற மேகத்தைப்போல விளங் கிக்கொண்டிருக்கும்; மற்றொரு பக்கத்தில் குடைகளோடு குடைகளும் பல யானைகளோடு யானைகளும் நெருங்கப் பல அரசர்களும்வந்து அரசனைச் சேவிப்பதற் கேதுவாகிய மிக்க செல்வமானது அவ்வரசனுக் குண்டாகும் பொருட்டு அவனால் பிரார்த்தனை செய்யப்பட்டுக் கரையை யுடைக் கின்ற கடலைப்போன்ற வாத்திய முழக்கத்தோடு தேவர் களுக்குப் பூஜைநடப்பதாலே, அத்தேவர்களைச் சேவிக்க

வந்த அரசருடைய முடிகள், ஒன்றோடொன்று தாக்கி நெருங்கி, அதனால் வெளிப்படுகின்ற ஒளியானது, மேகத்தினிடத்திலே தோன்றுகின்ற மின்னலைப்போல பிரகாசிக்கும்; மற்றொருபக்கம், காந்தள் மலரையொத்த உச்சிக்கொண்டையை யுடைய கோழிச்சேவல்களைச் சண்டைக்குக் கொளுவி விட்டுச் சந்தோஷிக்கின்ற தொழிலையுடைய வாலிபர்கள், அப்போரில் தாம் வெற்றிகொண்ட படியினாலே நாவைமடித்து ஒருவிதமான சப்தத்தைச் செய்துகொண்டு ஆடுகின்ற சீழ்க்கையென்னும் கூத்தோடு நெருங்குவதால், அப்பொழுது அவர்களால் வெற்றிக் கறிகுறியாகச் சிந்தப்படுகின்றனவும், உருக்கிய பொன்னாற் செய்யப்பட்டனவுமாகிய பொடிகளும், வாசனைவீசுகின்ற மகரந்தங்களும் கலந்து அழகோடு விளங்கும்; மற்றொருபக்கம், கணவரோடு பிணங்கிய பெண்கள் பிரிந்து செல்லும்போது, அவர்களுடைய ஆடையை அக் கணவர்கள் பிடித்திழுக்க, அப்போது மேகலாபரணத்தின் சரங்கள் அறுபட்டு, அவற்றிலுள்ள மணிகள் அழகு விளங்காநின்ற நல்ல நிலத்தின்மேல் சொரிவதனாலே, அந் நிலமானது மிகுந்தபிரகாசத்தைத் தோற்றுவித்து, அழகிய வானவில்லைப் போல அழகைச் செய்துகொண்டிருக்கும்; மற்றொருபக்கத்தில், சங்கைச் சிறிதுசிறிதாக அறுத்ததுண்டுகள் போன்றனவாகிய வெண்மையான அரிசிகளாலே சமைத்த சோற்றையும், அளவற்ற நல்லநெய்யினாலே ஆக்கியகறியையும், நன்றாக உறைந்து முதிர்ந்த தயிரால் செய்த பானவர்க்கங்களையும், “உண்ணுங்கள்! உண்ணுங்கள்!! இவற்றை உண்பீர்களானால் பின்பு உங்களுக்குத் தருவதற்கு ஆபரணங்களு மிருக்கின்றன” என்று யாசகரைப்பார்த்து ஜனங்கள் சொல்லுகின்ற பேரொலியே மிகுந்திருக்கும்; மற்றொருபக்கம், மலையிலே ஒழுங்காக வடிகின்ற அருவியை ஏற்றுத் தம்மீது சொரிவனபோல மதத்தைமேலே

வடியும்படி சொரிகின்றனவும், மேன்மைபொருந்தியனவுமாகிய யானைகளோடும், மணிகள்கட்டித் தொங்கப்பெற்ற தேரிலே பூட்டினால் விரைந்து செல்லக்கூடியனவும் வரிசைபெற்றனவுமாகிய குதிரைகளோடும், அவற்றைக் குளிப்பாட்டுவதற்காக இளைஞர் நெருங்கிக் கூடப் பெற்றதும், குளிர்ந்த ஜலத்தையுடையதுமாகிய ஆற்றையுடையதாய் விளங்கும்.

மேற்கூறிய வீதிகளின் சிறப்பு எத்தகையராலும் அளவிட்டுச் சொல்லக்கூடாததாகும். இதுநிற்க, இனி, இரேகைகளையுடைய சங்குகளின் முழக்கமும், அழகிய மத்தளங்களின் ஓசையும், செவ்வரிபடர்ந்த கண்களையுடைய பெண்களின் ஆபரணங்களின் ஓசையும், விருப்பம் அதிகரிக்கின்ற வேய்ங்குழலினது ஓசையும்கூடி, அவற்றால் அழகுசெய்வனவும், சிறப்புமிகுந்த இலக்குமி விரும்பிக் குடியிருக்கக் கூடியனவும், எப்பொழுதும் சிறப்புநீங்காதனவும், அரசனுக்குரியார் வசித்திருப்பனவுமாகிய, மாளிகைகளின் தன்மையை, மிகவும் அழகாக எமது புத்திக்கு எட்டியவரையில் ஆராய்ந்து கூறுவோம்:

அம் மாடங்கள் எத்தகைய சிறப்பினையுடையன வென்றால், சித்திரப்பாவையை நிகர்த்த பெண்கள் பந்தடிப்பதனாலே, அழகிய இறகுகளையுடைய அன்னங்கள் அப்பந்தடியோசைக்குப்பயந்து அம் மாடங்களின் மேற்பாகத்தில் தோன்றுகின்ற சந்திரனைத் தம்முடைய இனமென்று கருதி, அதனோடு சேர்வதற்குச் சென்று, முத்துமாலைகள் தொங்குகின்ற அம் மாடத் திரள்களின்மேலே அவ் வெண்மையாகிய சந்திரனோடுகூடி விரும்பியிருக்கும்; இன்னும் செல்வத்தையுடைய அந் நீண்ட மாளிகைகளில், செம்பொன்னாலே காம்புமுதலியன செய்யப்பட்டு ஓங்கிவிளங்குகின்றனவும், அழகிய பிரகாசமுள்ளனவுமாகிய கொடிகள், ஒழுங்காகக் காற்றினாலே அசையும் தோற்றம், விரும்பக்

கூடியதும், பரந்ததுமாகிய கிரணத்தையுடைய சூரியனது தேரிற் கட்டப்பட் டிருப்பனவும், நெருங்கிய வுரோமங் களையுடையனவுமாகிய குதிரைகளின் வெப்பத்தை ஆற் றும் விசிறிகளைப்போன்று விளங்கும்; பின்னும், அவ்வி டங்களில், தங்களுடைய கணவர் விரும்பும்படி ஆபர ணத்தை யணிந்த பயோதரங்களில், அவர்களால் பூசப் பட்ட சந்தனக்குழம்பு முதலியவற்றின் ஈரத்தை உலர் த்துகின்ற ஸ்திரீகள், உலரும்பொருட்டு அதனிடத்தே புகைத்தூட்டிய வாசனைப்புகையானது சூழ்ந்து, அதனால் மறைக்கப்பட்டனவும், குண்டலத்தை யணிந்தனவும், ஒளி பொருந்தியனவுமாகிய அவர்களுடைய முகங்கள், மேகத் துக்குள்ளே மறைந்து விளங்குகின்றனவும், குளிர்ச்சியும் அழகுமுள்ள கிரணங்களை யுடையனவும், சிறப்புள்ளனவு மாகிய சந்திரன்களைப்போலத் தோன்றும்; இஃதன்றிப் பெண்கள், தங்களுடைய தேகத்திலே பூசிக் காய்ந் துதிர் ந்த சந்தனமும், அவர்களுடைய கூந்தல் குலைந்து சோர அதனாலே வீழ்ந்தனவும் அழகிய பொன்னிறமுள்ளனவுமா கிய மாலைகளும், சிறுவர்கள் களைந்தெறிந்தனவும் சிவந்த பொன்னாற் செய்யப்பட்டனவுமாகிய மாலைகளுமே, அவ் விடங்களில், வண்டுகள் சேர்ந்து மதுவையுண்டதனாற் பழ மையான மாலையையணிந்த சேடியர் கூட்டியொதுக்கும் குப்பைகளாகும்; அவ்வாறு கூட்டி ஒதுக்குகின்றவர்கள், நல்ல வாசனையும் பிரகாசமும் இனிமையாக நிறைந்த வஸ் துக்களினாலே அழுத்தித் தேய்த்து மெழுகிய மெழுக் குள்ளனவும், வாசனையும் மென்மையும் அழகும் பொருந் தியனவுமாகிய அம்மனைகளின் நிலங்களிலே, அழகாகப் பல சித்திர வேலைப்பாடுகள் தோன்றச் சந்தனத்தைக் கரைத்துப் பூசியபின்பு, அழகு செய்வதன் பொருட்டா கப் பொன்னாற்செய்த பூவினோடு சமுத்திரத்தில் தோன் றிய முத்துக்களையும் ஆங்காங்கே வரிசையாக வைப்பார்

கள் ; வீடுகள்தோறும் செல்வத்தினுடைய இயற்கை இத்தன்மை யுடையதா யிருக்கும்; இன்னும் அவ் விடங்களிலே சமைக்கப்பட்ட பொறிக்கறியினது வாசனைப்புகையும், கருமையும் நீட்சியுமுள்ள கூந்தலையுடைய பெண்கள், அக்கூந்தலுக்கு ஊட்டிய அருமை நிறைந்த அகிலினது வாசனைப் புகையும் நெருங்க, அதைச் சகிக்கமுடியாமல் கண் சிவந்து கண்ணீர் வருவதனாலே அம் மாளிகைகளின் மேற்பாகங்களி லுள்ளனவும், பிரகாசம் பொருந்திய நிறத்தினை யுடையனவுமான புறா வினங்கள் பறந்துசென்று, வாசனை நிறைந்த சோலைகளிலே இறங்கி, அவற்றைத் தமக் குரிய விடமாகக் கொண்டு வசிக்கும் ; மேலும், ஆங்குள்ள மனிதர்கள், வெள்ளி யடுப்பிலே, நறைக்கொடி யென்னும் ஒருவகை வாசனைக் கொடியையிட்டு, அதன்மேலே கஸ்தூரியைத்தூவி, நல்ல வாசனைப்புகை எழும்பும்படி நெருப்பைவளர்த்து, அதன்மேல் சந்தனக்கட்டை முதலிய விறகுகளை வைத்தெறித்துப் பாகசாஸ்திரத்திற் சொல்லிய ஒழுங்குகளெல்லாம் நிறையச் சமைத்ததும், நல்ல நெய்சேர்ந்ததும், மிக்க இனிமையானது மாகிய உணவைப் பொற் பாத்திரங்களிலே நிரப்பி, ஒவ்வொரு நாளும் தம்மைத் தேடிவருகின்ற விருந்தினரோடும் உண்டு மகிழ்வார்கள் ; இஃதன்றியும், பல மாதர்கள், வெண்மையாக நீண்ட மாடங்களின்மேல் நின்றுகொண்டு, பூமியிலிருந்து அவர்கள் நிற்கும் ஸ்தானம்வரை வளர்ந்திருப்பதும், மெல்லிய மணத்தை யுடைய பாளை பொருந்தியதுமாகிய கமுகிலுள்ள பாக்குப் பழத்தையும், அதன்மேல் படர்ந்திருக்கின்ற வெற்றிலையையும் பறித்துச் சிங்கத்தைப் போன்ற வலியினையுடைய தமது கணவருக்குக் கொடுத்து, அவர்களணிந்திருக்கின்றனவும், நல்ல நேரத்திலே தொடுத்தனவுமாகிய சண்பக மாலைகளை வாங்கிக்கொண்டு, அவற்றை, முடித்தற்குரிய நேரமல்லாத நேரத்திலும், ஆசை மிகுதி

யால், தங்கள் முத்துமாலையை யணிந்த முடியிலே தரித்துக் கொள்வார்கள்; பின்னும், மையெழுதப் பெற்றனவும், வாள்போன்றனவு மாகிய நீண்ட கண்களையுடைய அப் பெண்கள், சேர்க்கைக்குரிய காலங்களிலே, குங்கும மணிந்த தம் கணவருடைய மார்பாகிய நிலத்திலே விருப்பம் தங்கிய தமது அவயவமாகிய கலப்பை யாலே யுழுது, மாலையையும் வாசனைச் சாந்தையும் விதைகளாக விதைத்துத் தாங்கள் அனுபவிக்கக்கூடிய இல்லற வின்பங்களாகிய விளைவில், விரும்பிய எல்லாவற்றையும் விளைவிப்பார்கள்; (அதாவது: கணவரோடு முறைப்படி இல்லறவின்பத்தை அனுபவிப்பார்கள்.) அவ்வாறு அனுபவிப்பவர்களும், வட்டோட்டையணிந்த கூந்தலை யுடையவர்களுமாகிய அப் பெண்களினுடையவும், அனிச்சமலரின் தன்மை முழுதையும் பெற்றனவுமாகிய சிற்றடிகள், கணவரோடு பிணங்குகின்ற காலத்தில் அவர்களுடைய சிரசில் மிதிக்கும்போது, அவ்விடத்தில் கோபத்தினாலும் நடுக்கங்கொள்ளும்; அவர்கள் பிணக்குத்தீர்ந்து சேருகின்ற காலத்தில், மேகங்கள்வந்து மேற் பாகத்தில் தங்கி யிருக்கின்றனவும், அழகுள்ளனவுமாகிய மாடங்களில், புஷ்பங்கள் நிறைந்த மெத்தையின்மேல் படும்போது சந்தோஷத்தினாலும் நடுக்கங்கொள்ளும்; இவ்வாறு வாசனைப்புகை மணக்கின்றதும், பட்டினாற் செய்யப்பட்டதுமாகிய மெத்தையின் மேல் இல்லற வின்பத்தை அனுப விப்பவர்கள், தம்முடைய விருப்ப மிகுதியினாலே இரவு இன்னதென்றும் பகல் இன்னதென்றும் உணராமல் எப்பொழுதும் ஒரே விதமாயிருப்பதனாலே இப்பூமியிலுள்ள அவ்விராஜமா புரமானது, இரவும் பகலுமில்லாத தேவர் நகரத்தை நிகர்த்திருக்கும்; இன்னும், அந் நகரத்திலே, நாகத்தில் உற்பத்தியாயினவும், அழகிய பிரகாசத்தையுடையனவும், சிறப்புற்றனவுமாகிய நாகரத்தினங்கள், உலாவுகின்ற நீரையுடைய சமுத்திரத்

8

தில் தோன்றிய முத்துக்கள் முதலான இரத்தினங்களெல்லாம் யாசகரிடத்திலும் குறைவற்று நிறைந் திருக்கும்; ஆதலால், அவ் விராஜமா புரத்திலுள்ள எல்லோரும், விரும்புவோர்க்குத் திரவியத்தை கொடுக்கக்கூடிய கொடைத் தன்மையையே பெற் றிருப்பார்கள்; அங்கே யாசிக்கக் கூடியவர் ஒருவரு மிரார்; இன்னும், பொன்னுலகத்திலுள்ள தேவர்கள் எப்பொழுதும் தம்முடைய கண்களை இமையா திருக்கும் தன்மை, எதை நிகர்க்குமென்றால், அவர்கள், தங்கள் கண்களைப்பார்த்து, "இந்த இராஜமா புரத்திலேயுள்ள முல்லை மாலையைத் தரித்த அழகிய கூந்தலையுடைய பெண்களது சுகானுபவமாகிய செல்வமிகுதியையும், மாளிகைகளிலுள்ள திரவியச் செல்வ மிகுதியையும், நேர்மையாகிய வீரகண்டையையணிந்த பாதத்தையுடைய ஆடவரது வீரமாகிய செல்வத்தையும் நீங்கள் காணும்பொருட்டே நாங்கள் இவ்வாறு விழித்திருக்கின்றோம்" என்று சொல்லி அதன் பொருட்டாகவே விழித்திருப்பதுபோலிருக்கும்; இன்னும் திருவிழாக்களும், கல்யாணங்களும் அவ்விடத்தைவிட்டு எப்பொழுதும் நீங்காமல் நடந்து வருவதனாலே, அவற்றின் பொருட்டாக ஒவ்வொரு வீட்டின் முற்றங்களிலும், முழங்குவனவாகிய மத்தளங்களும், சங்குகளும், சகரரால் தோண்டப்பட்டதும் சிறப்புற்றதுமாகிய கடலின் முழக்கத்தைப்போன்ற பேரொலியைச் செய்துகொண்டிருக்கும்; ஆதலால், அமராவதியைப்போன்ற இவ் விராஜமா புரத்தின் சிறப்பு, எம்மைப்போன்றவரால் அளவிட்டுச் சொல்வதற் கியலாது; இன்னும், சந்திரனைப்போன்ற மூன்று குடைகளையுடைய அருகக்கடவுளின் அழகிய கோவில்கள், எவ்விடத்திலும் ஒவ்வொரு மனைதோறும் ஏற்பட்டிருக்கின்ற படியால், அக் கடவுளின் அருள் விசேஷத்தினாலே, விசாலமும் அழகுமுள்ள இவ் விராஜமாபுரமானது, எப்பொழுதும் குறைவு

படாததும், அளவற்றதுமாகிய திரவியத்தாலே செழிப் புற்றோங்கும்; அன்றியும், இத்தகைய செல்வத்தையுடைய இந் நகரம் எல்லா நலத்தையும் தரக்கூடியதா யிருப்பத னாலே, தேனைத் துளியாகச் சொரிகின்ற மாலை, பசிய ஆடை, சிவந்த பொன் முதலியவற்றை எவ்விடத்திலும் நிறையும்படி செய்து, அலங்காரமாக ஆங்காங்கே தொங் குவனவாகிய வயிர மாலைகளையும், பிரகாசிக்கின்ற கிரணத் தையுடைய முத்துமாலையையும் தோற்றுவித்து, எவருக் கும் அருளைக்கொடுத்துச் செல்வத்தையும் உதவுகின்ற ஒரு கற்பகச் சோலையாகும்.

---

## கோயிற்சிறப்பு.

இதுவரை இராஜமாபுரத்தின் சீர்த்தியைப் பற்றிச் சொல்லிவந்தோம்; இனி, வேகமாகிய யானையையும், வெற் றிபொருந்திய வேலாயுதத்தையும், வெவ்விதாகிய சேனை யையும், தேவலோகத்திற்கு இறைவனாகிய இந்திரனும் வியக்கத் தக்கதும், நீட்சி பொருந்தியதுமாகிய இரத்தின கிரீடத்தையும், மேகத்தைப்போன்ற கொடையையுடைய கையையும், குற்றமற்ற புகழையும், ஒருவருக்கும் சொந்த மின்றித் தனக்கே யுரியதாகப் பூமியையாளும் ஆளுகை யையும், வெண் கொற்றக் குடையையுமுடைய, இவ் விரா ஜமா புரத்திற்கு அரசனது வாசஸ்தானமாய்த் தேவர் நக ரத்தை நிகர்த்து விளங்கும் நல்ல அரண்மனையினது சிறப் பைச் சிறிது கூறுவாம்:

ஜலமானது பரந்துவந்து பாயும்படி நீண்ட பூமியை வெட்டி வெளியேயுள்ள பேரகழியோடு சார்ந்து இவ் வரண்மனையைச் சுற்றிக் கொண்டிருக்கும்படி இயற்றப் பட்டதும், உள்ளே நுழைவதற்கு மதகாகிய அழகியவழி யையுடையதும், இவ்வுலகத்திலே கொலையும் மிகக் கொடு

மையு முள்ளவைகளென்று சொல்லப்படும் சுறுமீன்கள் வாசஞ்செய்யக் கூடியதும், மிக்க விசால முள்ளதுமாகிய சிற்றகழியானது, பூமிதேவிக்கு ஓர் இடையணியைச் சூட்டியதுபோல இவ் வரண்மனை மதிலின் பக்கத்தே விளங்கும்; இவ் வரண்மனையைச் சூழ்ந்துள்ள மதிலோ, ஆகாயத்தின் நடுவைப் பிளந்துகொண்டு தெய்வலோகத்தின் எல்லையைக் காணும்பொருட்டுச் செல்வதுபோல மேக மண்டலத்தையும் தாண்டிச்சென்று அதற்குமேல் அதிகமாக உயர்ந்திருக்கும்; அத னடிப்புறத்திலே படிந்திருக்கின்ற மேகமானது, "நீ இப்படியே செல்வாயாயின் தெய்வ லோகமானது உன்னைக் கண்டஞ்சும்; ஆகையால், நீ செல்ல வேண்டாம்" என்று தடுத்து, அதன் காலைக் கட்டிக்கொண்டு பணிவது போன்றிருக்கும்; இம் மதிலின் மேலுள்ளனவும், கொடி நாட்டும் குழிகளிலே நாட்டப்பட்டு மேலுயர்ந்து அசைந் தாடுகின்றனவு மாகிய கொடிகள், காற்றினல் ஆடுந் தோற்றம் எப்படி யிருக்குமெனில், மேற் கூறிய வாறு மேகம் காலைப் பிடித்துக்கொண்டு தடுத்தவளவிலே மதிலானது அம் மட்டோடு நின்று தெய்வலோகத்தைநோக்கி, "நீ இங்குவந்து நம்மைக் கண்டு செல்வாயாக" என்று தன்கையினல் அழைப்பதுபோன்று விளங்கும்; இஃதன்றி, இவ் வரண்மனையின் நான்கு பக்கத்திலும் அமைந்துள்ளனவும், உயர்ந்த மாணிக்கத்தாற் செய்த கதவுகளை யுடையனவும், தம்மில் உயர்வு தாழ்வில்லாமல் ஒத்திருக்கக்கூடியனவும், நீல ரத்தினத்தாற் கட்டப்பட்டனவுமாகிய நான்கு கோபுரங்களின்மேலும், பிரகாசிப்பனவாகிய இடிதாங்கிகள் என்னும் சூலங்களி னுச்சியிலே சூட்டிய முப்புரியுள்ள முத்துமாலைகள், உலகளந்த நீலமணி வண்ணனகிய மகாவிஷ்ணுவின் ஒளிமிகுந்த இரத்தின கிரீடத்தில் தொங்கும் மாலையைப்போன்று விளங்கும்; இன்னும், சங்கானது கருப்பமுதிர்ந்து பெற்ற முத்தி

னால் தொடுக்கப்பட்ட மாலையையும் சந்தனத்தையும் தாங்கிய அலங்காரத்தையுடைய பயோதரங்களையும், வாசனை அதிகரிக்கின்ற மாலைவிளங்கக்கூடிய கூந்தலையும், அழகிய சாயலையுமுடைய பெண்கள், ஆசைக்குறிப்போடு தம் மனத்திற் கூடிய சந்தோஷத்தினாலே சென்று விளையாடக்கூடியதும், அவ் வரண்மனைக்குள் ளிருப்பதுமாகிய அழகு நிறைந்த உத்தியானவனமானது, சிவந்த கண்களையுடைய இந்திரனது நகரத்திலே யிருக்கின்றதும், மிக்க செல்வத்தைத் தரக்கூடியதுமாகிய கற்பகச்சோலை எத் தன்மையுடையதோ அத்தன்மை யுடையதாய் விளங்கும்; இவ்வகைச் சிறப்பையுடைய அச் சோலையின் நடுவே அரசன் தங்குகின்ற ஒரு மண்டபத்தில், வெள்ளியாற்செய்த ஆண்யானையும், பிரகாசிக்கின்ற பசும்பொன்னாற்செய்த பெட்டையானையும், செம்பொன்னாற்செய்த ஆண்மானும், அம்பொன்னாற்செய்த பெண்மானும், ஒன்றை யொன்று ஆசையோடு நோக்கும்படி அமைக்கப்பட்டு, அவற்றைப்பார்த்து அவ்வரசன் விருப்பங்கொள்ளத்தக்கவிதமாக அலங்காரத்துடன் ஏற்படுத்திய பள்ளியறையானது, பசியகிரணத்தையுடைய நாகலோகத்தைப்போன்று விளங்கும்; ஆங்குப் பொன்னாற்செய்த அழகிய பழத்தையும், மரகதத்தினாலே செய்த குலையையும், வெள்ளியாற்செய்த பாளையையும், பச்சை மணியாற்செய்த வழுவழுப்பாகிய அடிப்பாகத்தையும், நீலரத்தினத்தாற்செய்த மடலையுமுடைய செயற்கைக் கமுகின்மேலே ஒழுங்காகத் திரண்ட முத்து வடங்கள், ஊசலாடும் கயிறுகக்கட்டித் தொங்கவிடப்பட் டிருக்கும்; இன்னும், நீல நிறம்பொருந்திய யானையையுடைய அரசன், மிகுந்த விளையாட்டின்பத்தின்பொருட்டு விரும்பியதும், மன்மதனுக்கு மகிழ்ச்சி செய்யக்கூடியதுமாகிய அச்சோலையின் அழகிய நிலத்திலே செய்யப்பட்ட செய்குன்றில் உற்பத்தியாக்கியதும், திரட்சி யுற்றதுமாகிய தினையையும்,

அக் குன்றினின்றும் குதித்து விழும்படி செயற்கையாக ஏற்படுத்தியிருக்கின்ற அருவியையும், ஆங்கு வளர்க்கப்படுகின்ற ஆண்மானும் பெட்டைமானும், பக்கத்திலுள்ள சுனையிலிருக்கின்ற குவளைமலர், காவல்காரருடைய கண்களைப்போல விழித்துக்கொண்டிருந்தும், பயமில்லாமல் உண்ணும்பொருட்டு நின்று நோக்கும்; இன்னும், அச் சோலையில், இனிய குயில் சத்தமாகிய எக்காளம்பொருந்தி, தேன்வண்டின் நல்ல இசையாகிய வீணை வாத்தியமும்சேர, அவற்றோடு கூடிக் கருவண்டுகள் இனிமையாகப்பாட, அப்பாடலுக்குப் பரிசிலாக வேங்கை மரமானது, கேட்டானந்திப்பார் நின்று பொன்னைச் சொரிவதுபோல மலர்களைச் சொரியும்; இன்னும், முன்கூறிய செய்குன்றைச் சந்தன மரங்களும், உயர்ந்த அசோக விருட்சங்களும், சண்பக மரங்களும், முறைமையாக மலர்ந்து மணக்கின்ற நாக விருட்சங்களும் சூழ்ந்திருக்கும்; இச் சோலை சூழ்ந்த இச் செய்குன்று, எவர்க்கும் மிக்க இனிமையைச் செய்யக்கூடியதா யிருப்பதால், எவரேனும், இச்சோலையையும் செய்குன்றையும்விட்டு நீங்கினால் அப்படி நீங்கினோர்க்கு உயிர் நீங்கினதுபோலவிருக்கும்; இவற்றை நினைத்தால் போன உயிர் திரும்பிவந்து நின்று செழித்துபோல அவர்க்கு உயிர் செழிக்கும்; இன்னும் இவ்விடத்திலே, இளம் பருவமுடையவர்கள் பந்தை எறிந்து விளையாடக்கூடிய பூமிகள், முத்துக்களை ஓரங்களிலே அழுத்தப்பட்டனவாயும், நிறைந்த பிரகாசத்தை யுடைய பொன்னாலே சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டனவாயும், செல்வ மிகுந்த பல இரத்தினங்களை இடையிடையே வரிசை வரிசையாகப் பதிக்கப்பட்டனவாயும், தெய்வ லோகத்தை இவ்வுலகத்திலே கொண்டுவந்து பதித்து வைத்தாற்போன்ற அழகுபெற்றனவாயும் மிக்க சிறப்புடன் விளங்கும்; அப் பூமியிலே பந்துவிளையாடுவோர், கீழேவைத்த பந்தைக் கையி

ஞல் தொடாது காலாலேதட்டி எடுப்பதும், அது எழும்பி வரும்போது தாங்களணிந்திருக்கின்ற மாலையிலே மறையும்படி செய்வதும், பின்பு கையாற் பிடித்து அடிப்பதும், அப்படி அடித்த பந்தை மாலையையணிந்த நெற்றியிலே படும்படி செய்வதும், அப் பந்தானது படிப்படியாக உயரும்படி வரிசையாக அடிப்பதும், அது, எப் பக்கத்திற் சென்ருலும் தாங்கள் ஓரே நிலையில் நின்று படமெடுத்தாடும் அரவத்தைப்போல நான்கு பக்கத்திலும் சுழன்று பரவும்படி அடிப்பதுமாக விளையாடுவார்கள்; இத்தகைய பந்து விளையாட்டிஞல் உண்டாகும் இன்பத்திற்கு அளவேயில்லை; இன்னும், அவ் வரண்மனையிலே, எமனையொத்தனவும், மிக்க கூர்மையும் பகைவர்களுடைய இரத்தமும் வெண்மையான பிரகாசமுமுள்ள கொம்புகளினிடையிலே கோப மிகுந்த பகையரசர்களுடைய தலைகளைப் பந்துபோலத்தூக்கி எறிந்து விளையாடுவனவும், ஊற்ருய்ச்சுரந்தொழுகுகின்ற மூன்று மதங்களையுடையனவும், முகபடாத்தையணிந்தனவுமாகிய யானைகளும், பெருமை நிறைந்தனவும், காற்றைப்போல் வேகமாகச் செல்லக் கூடியனவுமாகிய குதிரைகளும், தேர்களும்கூடி எப்பொழுதும் ஒலிமிகுந்திருக்கும்; இஃதன்றியும், மனச் செருக்கால் ஆரவாரத்தைச் செய்கின்ற வீரர் கூட்டம் அரசனுடைய எதிரிகள் வரக்கூடுமென்று நினைத்து இரவில் ஒவ்வொரு சாமத்திலும் பற்பல போராக மாறிமாறிக் காத்திருந்து நித்திரை செய்கின்ற மாடங்களும், பகையரசர்கள் கொடுத்த பகுதிப் பொருள்களாகிய அளவற்ற திரவியங்கள் நிறைந்திருக்கின்றனவும், செம்பொன்னுற் செய்யப்பட்டனவுமாகிய மாடங்களும், முல்லை மாலையைத்தரித்த அழகிய கூந்தலையுடைய பெண்களது இரத்திஞபரணங்களை நிறைத்து வைத்திருக்கின்ற மாடங்களும், இவையல்லாத இன்னும் பல மாடங்களும் அவ் வரண்மனையில் அளவற்று நிறைந்திருக்கும்;

இன்னும், பார்த்த மாத்திரத்திலே ஆடவரது தேகத்தை வெதுப்பி, அவர் நெஞ்சிலே நின்று சுடக்கூடிய கண்களை யுடையவர்களும், * காமர் வல்லிக்கொடி போன்றவர்களு மாகிய நிருத்த மாதர்கள் ஆடுகின்ற நாடகம் எப்பொழு தும் நீங்காத நாடகசாலைகளும், பகையரசர்களிடமிருந்து வசப்படுத்திக் கொண்டுவரப்பட்டு, 'பெண்களைக் கொல் வது தோஷம்' என்று கருதிக் கொல்லாமல் கோவிலுக் குத் தொண்டுபுரியும்படி விட்ட மாதர்கள், அரசனுக்கு வெற்றியுண்டாகும் பொருட்டுத் தினந்தோறும் துதிக்கின்ற துதிநிறைந்த ஸ்ரீகோவிலும், இடையிலே, மலர்ந்த கோங்கு விருட்சங்களும், வேங்கைமரங்களும், பொன்போன்ற பூங் கொத்துக்களை யுடைய கொன்றை மரங்களும், வளர்ந்து விளங்கும்படி அங் கமைந்திருக்கும்; இவைதவிர, அரசன் தங்கியிருக்கும் மாளிகை, திரண்ட இரத்தினத்தையே தூணாகக் கடைந்து நிறுத்தி அமைக்கப்பட்டிருப்பதனா லும், செம்பொன்னாலாகிய நீண்டசுவரின்மேல் சந்தன மரத்தை அறுத்து அதனால் செய்யப்பட்ட நீட்சிபொருந் திய கைமரத்தைச் சேர்த்து, அதன்மேல் வெள்ளித்தகட் டால் மூடப்பட்டிருப்பதனாலும், இந்திரனுடைய அழகிய நகரமானது, அங்குள்ளதேவர்களோடும் இவ்விடத்தில் வந் திருந்த தன்மை போன் றிருக்கும்; இத்தகைய மாளிகை யில் குடியிருக்கும் அவ் வரசனுக்குத் தினந்தோறும் மாதர் கள், தாளத்திற்கேற்றபடி கைகொட்டி யாடும் நாடகத்தா லுண்டாகு மொலியும், மனம் மகிழும்படி பாடுகின்ற பாட்டினொலியும், கருமையாகிய மத்தளங்களி னொலியும், மற்ற வாத்தியக் கருவிகளோடு இசைகின்ற அழகும் இனி மையு முடைய வீணையி னொலியுமாகிய குறைவில்லாத வாத்திய வோசைகளைக் கேட்பதனாலேயே எப்பொழுதும் நேரங் கழியும்.

---

* காமர்வல்லி - கற்பகத்தருவில் படரும் கொடி.

## சச்சந்தன் சரித்திரம்.

மேற்கூறிய அரண்மனையில் வசித்துவந்த அரசன் எத்தன்மையை யுடையவனென்றால், கச்சையணிந்த பயோதரங்களையுடைய பெண்களுக்கு மிக்க விருப்பத்தைச் செய்கின்ற சச்சந்த னென்னும் பெயரையுடையவன்; குருகுலத் தோன்றல்; தாமரைபோன்ற சிவந்த கண்களையுடையவன்; அச்சங்கொண்டு தன்னிடத்தே அடைக்கல மென்று சேர்ந்தவருக்கு அமிர்தத்தைப்போல் இனிமை செய்யக்கூடியவன்; தன்னைச்சேராத பகைவரிடத்தில், உயிர்போகுமளவும் வேகமாய் ஏறி அதன்மேல் அடங்குகின்ற அரவத்தின் நஞ்சைப்போலும் மிகுந்த அழல்பொருந்திய கோபத்தை யுடையவன்; தன்னுடைய ஈகைபொருந்திய கையினால் அளவற்ற திரவியங்களை வாரிச்சொரிந்து, அடுத்தவரது தரித்திரத்தை நீக்கினவன்; கூர்மைதங்கிய வேலாயுதத்தினாலே மிக்க வலிமைபொருந்திய பகைவர்களுடைய தேர்க் கூட்டங்களை யெல்லாம் நாசப்படுத்தினவன்; ஆராயத்தக்க சாஸ்திரங்களுக்கு இருப்பிடமாயும், அழகிய மகாலட்சுமியினுடைய கண்களுக்கு வாசஸ்தானமாயு மிருக்கின்றதும், மலர்மாலையின் வாசம் பொருந்தியதுமாகிய மார்பையுடையவன்; முத்துச்சரங்கள் சூழ்ந்து தொங்கப்படுவதும், குளிர்ச்சி பொருந்தியது மாகிய வெண் கொற்றக் குடையால் சமுத்திரஜலம் சூழ்ந்த இவ் வுலகினுக்குச் சமமாக நிழலைச்செய்வதனாலே, இங்குள்ள உயிர்களுக்கெல்லாம் தந்தைபோன்றவன்; இவன் இவ்வாறு தந்தைபோன் றிருப்பதனாலே இவ் வுலகத்திலுள்ளவர்க ளெல்லோரும் எப்பொழுதும் இவனுடைய பாதநிழலிலேயே தங்கவேண்டுமென்று நினைத்து இவன்மேல் வைத்த விருப்பத்தினாலே மிகவும் களிப்படைவார்கள்; இன்னும், செல்வச் சிறப்புள்ள இவ்வரசன், அமிர்தத்தை நிகர்த்து, உல

கத்திற்குத் தன்குடை நிழலைச்செய்வதாகிய குளிர்ந்த கிருபையால் அறக்கடவுளை நிகர்த்தவன்; அடுத்தவர் தரித்திரத்தை நீக்குகின்ற தன்னுடைய ஈகையால், உலகினுக்கெல்லாம் மழையை வழங்கிப் பேருபகாரஞ் செய்கின்ற வருணனை நிகர்த்தவன்; பகைவருடைய தேர்க்கூட்டங்களையெல்லாம் நாசப்படுத்துகின்ற போரில், அழல்பொருந்திய கோபத்தை யுடையவனுய்ப் பகைவர் உயிரைக்கொல்வதில் எமனை நிகர்த்தவன்; சாஸ்திரங்களுக்கெல்லாம் இருப்பிடமா யிருக்கின்ற மேன்மையினுலே வாமக்கடவுளை நிகர்த்தவன்; ஸ்திரீகளுக் கெல்லாம் விருப்பத்தைச் செய்யக்கூடிய அழகினுலே பஞ்சபாணங்களை யுடையவனும், இலக்குமி குமாரனுமாகிய மன்மதனை நிகர்த்தவன்; பகைவராகிய மற்ற அரசர்களுடைய இனிய உயிரைக் கொன்றவரும், வேலாயுதத்தைத்தரித்த சேனையை யுடையவரும், தன்மரபிலுள்ளவருமாகிய அரசரில், தான், மிக்க செருக்கினுலே, திமிலையுடைய காளையை நிகர்த்தவன்; தேன்மாரிபோன்ற இனிமையான வார்த்தைகளை யுடையவன்; அஷ்டதிக்குகளையும் தன்வசப்படுத்திக் காக்கின்ற வன்மையையுடையவன்; இத்தகைய இவன் தெய்வலோகமட்டும் சென்று பரவிய புகழினுலேமிகுந்து விளங்கினுன்.

மேற்கூறியபடி செல்வமெல்லாம் பொருந்திய இவ்வரசனுக்கு இவ்வாறு நல்வினை நடந்ததாலே, இதற்குத் தகுதியாக இவனுக்கு மனைவியாகும் பொருட்டு, இனிமையாகிய நீர்வளம் மிகுந்த விதையதேசத் தரசனுகிய ஸ்ரீதத்தன் மகள், பெண்ணுசையால் வருந்தாத தேவர்களும் விரும்பித் துதிக்கக்கூடிய தன்மையை யுடையவளாய்த் தோன்றி யிருந்தாள். அவள் தாமரை புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற இலக்குமியும் துதிக்கத்தக்க ஒரு தெய்வப் பெண்போன்றவள்; வில்லைப்போல நீண்ட புருவங்களி

னடியிலே தங்கிக் கன்னத்தின் புறத்தைத் தாக்குகின்ற னவும், வேல்போன்றனவுமாகிய கண்களை யுடையவள்; அவளுடைய வடிவமும் மெல்லிய தன்மையும் இத்தன் மையை யுடையனவென்று உவமை கூறுவதற்கரியனவாம்; ஆயினும், வளையலையணிந்த தோள்களையுடைய அப் பெண் ணிடத்தே மிகுந்திருக்கின்ற அழகைச்சிறிது கூறுவாம்:

வாசனைத்தைலம், புழுகு ஆகிய இவைகளிலே மூழ் கிக் கடை சுருண்டிருக்கின்ற அவளுடைய கரியகூந்த லானது, இருளைப்பிடித்து நீட்சியாக முறுக்கி ஒரே அள வாக இரண்டு பக்கமும் அறுத்துப் பிரகாசமுள்ள நல்ல பட்டினாலே செய்த உறைக்குள்ளே பொதிந்து வைத்தி ருந்து, பின்பு அவ்வுறையை நீக்கிவிடப்பட்டது போலப் பார்ப்பவர்களுடைய கண் இருளும்படி * நெறிப்புமிகுந்து சேடியர் அழகிய புஷ்பங்களைச்சூடி வழிபட, எப்பொழு தும் மகிழ்ச்சியடங்காத தன்மையை யுடையதா யிருக் கும்; பிள்ளைப்பருவத்தில் ஒரு கலையையுடைய வளைவா கிப் பின்பு இளமைப்பருவத்தில் மூன்று கலையையுடைய தாகும் மூன்றாம்பிறைச் சந்திரனும், குளிர்ச்சி பொருந் திய பூரணச்சந்திரனும் ஓரிடத்திற் கூடினாற்போல அழ கைக்கொண்ட சிறிய நெற்றியும், வட்டமும் வனப்புமுள்ள சந்திரன் போன்ற முகமும், தன்னால் தொழப்படும் கண வனுக்கு இன்பமாகிய வரத்தைக்கொடுக்கும் கொவ்வைக் கனிபோன்றவாயும், பரிசுத்தமாகிய பற்களும், வளருகின்ற அழகினையுடைய நீண்டமூக்கும் ஊர்வசிக்கும் மனமுரு கும்படி செய்யும்; எழுத்து ஒழுங்குபடுவதற்கு எழுது கோலின் நுனியையுதறிச் சித்திரத்தொழிலிலே கைதேர்ந் தவன் எழுதியவைபோல், தமக்குரிய குணமெல்லாம் நிறைந்த கொடிய புருவங்கள், சிறப்புற்ற வில்லின் அழ கைக் கெடுத்துத் தாம் செல்லும் அளவுவரை நீண்டு

* நெறிப்பு - சுருண்டு சுருண்டு வளைவாக வளர்ந்திருத்தல்.

சென்று, அதற்கு மேற் செல்லாதவைகளாயும், மிக்க கருமையைக்கொண்டு வளைந்து, நெற்றியில் தாம் எவ்வளவு வரை செல்லலாமோ அவ்வளவுவரைசென்று பரவித் தம்மில் ஒன்றோடொன்று சேராமல், நாசிக்கு நேரே இடைவிட்டனவாயும், புகழ்வதற்கரியனவாயு மிருக்கும்; வடிவத்தில் சேல்மீனைப் போன்று, சில செவ்வரிகளையுடையனவாய்க் கடைப்பாகம் சிவப்புற்று, மகாவிஷ்ணுவையும் பாற்கடலையும் முகத்திலேசேர்த்து வைத்தாற்போன்று நடுப்பாகம் கறுத்தும் சுற்றுப்பக்கம் வெளுப்புற்றும் விளங்குவனவாயும், உலகத்தை வெறுத்த முனிவர்களுக்கும் மயக்கத்தைச் செய்யக்கூடியனவாயும், கணவனுக்கு மகிழ்ச்சியைச் செய்யக்கூடியனவாயும், சேர்ந்தார்க்கு இன்பத்தையும் மற்றவருக்குத் துன்பத்தையும் தரக்கூடிய தன்மையால் அமுதத்தையும் நற்றன்மையில்லா நஞ்சையும் நிகர்க்கின்ற குணத்தை யுடையனவாயும் மேற்கூறிய கயல் மீனைப்போலப் பிறழுகின்ற கண்கள், காதளவும் நீண்டு விசாலமுடையனவாய் விளங்கும்; உரோமங்களைக் கத்திரிக்கின்ற கத்திரிகையை நிகர்த்தனவாய், வாடுகின்ற வள்ளையின் அழகைக் கெடுத்துப் பின்மடங்காது முன்னே பொருந்தி, அலங்கார மிகுந்தனவும், கோபம் பொருந்திய மகரமீனின் வடிவாகச் செய்யப்பட்ட குண்டலங்களும் தோடும் எப்பொழுதும் நீங்காது அசைந்துகொண்டிருப்பனவும், சிறப்பு நீண்டனவுமாகிய காதுகளும், வயிரத்தின் ஒளியைத் தம்மிடத்தே யுடையனவாய் அழகு குடியிருக்கப் பெற்றிருக்கும்; பாளைவிடாத இளங்கமுகினுடைய மரகதம்போன்ற * கணுவிலுள்ள வரைகளும் வழுவழுப்பாகிய வடிவமும், எப்பொழுதும் தன்பிரகாசம் குறையாமல் இருளைக்கெடுக்கக் கூடியதும், உதயகிரி

---

* கணு - இரண்டு பக்கத்து வரைகளும் நடுவுள்ள பாகமும் சேர்ந்தது.

யில் சிந்தூர அருவிவீழ்ந்த சிந்தூராகர மென்னுமிடத்தில் பதினாறு சதுர்யுகம்வரை கிடந்து சிவப்பேறினதும் திரட்சியாகக் கடையப்பெற்றதுமாகிய மாணிக்கமும், ஓரிடத்திற் சேர்ந்து, ஒருருவமாய், மிக்க இருளையும் ஒரு பெரிய தாமரைபுஷ்பத்தையும் தாங்கிக்கொண் டிருந்தது போல, கரியகூந்தலையும் அழகிய முகத்தையும் தாங்கிக் கொண்டிருப்பதும், வாசனையும் திரட்சியும் உத்தமவரைகளும் மினுமினுப்பும் சிவந்தநிறமு முள்ளதுமாகிய கழுத்தானது, அளவிடற்கரிய அழகு குடியிருக்கப் பெற்று விளங்கும்; அசைகின்ற மூங்கிலையொத்த தோள்கள், தம்மிடத்தே யணியப்பட்டிருப்பதும், வாயிலே முத்துச்சரங்களைக்கடித்துத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கும் ஓர் மகரமீனின்வடிவமாகச் செய்யப்பட்டதும், அழகிய மகர மென்னும் பெயரை யுடையதுமான தோளணி யானது வாயைத் திறந்து கொண்டிருக்க, அதிலே மேற்கூறியபடி தூங்கிய முத்துவடம் சூழப்பட்டு, அழகிய செம்பஞ்சாற் செய்த மெத்தையைப்போல மென்மையும் சிவப்புநிறமு முடையனவாய்ப் பிரகாசிக்கும்; தெளிவான பிரகாசம் பொருந்திய வளையலையணிந்த முன்கையிலே திரண்ட விரல்கள், அழகுநிறைந்த செங்காந்தளி னரும்பைநிகர்த்திருக்கும்; உள்ளங்கை, தாமரைமலரை யொத்திருக்கும்; இத்தகைய உறுப்புக்களையுடைய இரண்டு கைகளும் ஜாதிலிங்கம் ஊட்டப்பெற்று மிக்க சிவப்புநிறம் பொருந்திய அழகினை யுடையனவாயிருக்கும்; மாலையையணிந்த பயோதரங்கள், இளம் பிறையையொத்த முத்துவடத்தைச்சூடித் தம்மீது தங்கும் அழகுக்குரிய வீற்றுத்தெய்வ மென்னும் இலக்குமி குடியிருக்கப்பெற்று, அழகிய தேமல் படர்ந்து விளங்கும்; உள்ளங்கைபோலும் வயிற்றை அழகோடு பிரகாசிக்கும்படி செய்வதும், வலஞ்சுழித்தல் பொருந்தியது மாகிய தொப்புளானது, கங்கையில் தோன்றும்

நீர்ச்சுழியைத் தன் உருவத்தினாலே வருத்தக்கூடியதா யிருக்கும் ; கண்ணால் பார்க்கமுடியாததும், அசைவுள்ளது மாகிய இடை, பார்வைக்கு அகப்படாமல் மிக நுட்பமா யிருந்தாலும் அப்பெண்ணுக்குரிய தாய்மார் சேடியர்முத லானவர்கள் அதனோடு கூடவேயிருந்து பழகுவதனாலே அதனை உண்டென்று மதிப்பார் ; மற்றவரெல்லாம் அது பார்வைக்கு அகப்படாமையினால் இல்லையென்றும், அத ற்குக் கீழுமேலு முள்ள மற்ற அவயவங்க ளிருப்பதனாலே அவ் விடையும் இருக்கக்கூடு மென்றும் சந்தேகங்கொள் வாரேயன்றி, நிச்சயமாக உண்டென்றாவது அல்லது இல்லை யென்றாவது தீர்மானிக்க மாட்டார்கள் ; இதனாலே அவ் விடையின் தன்மை அவளைச் சூழ்ந்திருக்கும் பெண்களுக் கன்றி மற்றையர்க்கு அறியக்கூடாததா யிருக்கும் ; அவ் விடையின்கீழ் அணியப்பட்டிருக்கும் மேகலையும், பார்ப்ப வர் கண்களுக்கு இனிமையைத் தரக்கூடிய பட்டாடையும் சிறப்பினாலே எல்லோரையும் மதிமயக்கக் கூடியவைகளா யிருப்பதனாலே அவை, இந்திரனாலும் புகழ்வதற்கு அருமை யானவைகளா யிருக்கும் ; அயிராவத மென்னும் வெள்ளை யானையின் கையைத் தம் அழகினாலே மயக்கிய ஊருகளோ, இளமையான கன்னிவாழைத் தண்டுகள்போல திரட்சி யுற்று, ஒளிபொருந்திய ஜாதிலிங்கக்குழம்பை யுண்டு மிக்க சிவப்பேறிய செம்பஞ்சானது இவைகளிடத்திலே சினே கங்கொண்டு இவற்றின் மென்மையையும் நிறத்தையும்பெற் றுக்கொண்ட தென்று சொல்லும்படி, மென்மையையும் நல்ல நிறத்தையு முடையனவாய் மிகவும் பிரகாசித்து, பொன்னால் மகரவடிவாகச் செய்யப்பட்ட அழகிய மகர மென்னும் * குறங்குசெறி கவ்வப் பெற்று, மிக்க சிறப் போடு விளங்கும் ; மேற்பக்கத்திலே சிறிது கவிழ்ந்தன

* குறங்கு செறி - தொடையில் அணியப்படும் ஒருவகை ஆப ரணம் ; தொடையிற் சேர்ந்திருப்பது என்பது இதன்பொருள்.

வாயும், பார்ப்பவர், தமக்குச் சமமாகத் தம்முடைய அழகு வேறொன்றில் இருப்பதாகக் கருதாதபடி சிறப்புற்று நீங்காத வட்டமாய் உள்ளேபொருந்திய * சந்தை யுடையன வாயும், தளர்ச்சியுற்றுப் பின்னே வளையாமல் ஒப்பற்றிருக்கின்ற முழந்தாள்கள், மனிதர்களுக்கு ஏற்படாத பேரழகைப்பெற்றதனாலே மிக்கச்சிறந்து விளங்கும்; இரண்டு கணைக்கால்கள், ஆடுகின்ற தசைநிலை விட்டுப் பெயராதன வாயும், வற்றிப்போகாதனவாயும், மயிர் மிகுந்து நீடாமலும் குறுகாமலும் இருக்கவேண்டிய கிரமப்படி அமையப்பெற்றனவாயும், அழகில் ஒப்பில்லாதனவாயும், ஒரே அளவினை யுடையனவாயும், பெருமை மிகுந்த அம்பறாத் தூணிபோலத் திரண்டு, தேனூற்றி வளர்க்கப்பெற்ற மூங்கிலை நிகர்த்து இனிய அழகினை யுடையனவாய்ப் பிரகாசிக்கும்; உள்ளே முத்துக்களைப்போன்ற பருக்கைக்கற்கள் சேர்க்கப்பெற்றுப் பசும்பொன்னாற் செய்யப்பட்ட கிண்கிணியும், பாடகமும் அசைந்து தாம் கிடக்கின்ற இடத்தை வருத்த, அதைக்கண்டு சிரிப்பதுபோல, விரும்பிப் பிரகாசிக்கின்ற பொன்னாலாகிய சிலம்பு சப்திக்க, அழகும் நன்மையும் நிறைந்த ஆமைப்பார்ப்பினது கூன் பொருந்திய முதுகைப்போன்ற இரண்டு புறவடிகளும், அறிவுடையோராலும் புகழ்தற்கரிய அழகினை யுடையன வாய் விளங்கும்; இசைந்து அவற்றைப் புகழத்துணிவார்க்கு அவற்றின் சிறப்பு அளவுக்கடங்காமற் போவதனாலே தம் அறிவுமயங்கிக்கெடும்; இனி இலக்குமியினது கால் விரல்களின் அழகைக்கொண்ட பாதவிரல்களோ, நுனியானது பரப்பாயில்லாமல் உயர்ந்து தோன்றிக் குற்றமின்றித் திரண்டு, நீட்சியுற்று, எல்லாம் கூட்டமாக நெருங்கிப் பொன்னாற் செய்யப்பட்டதும், ஒளியுள்ளது மாகிய மோதிரம் சூட்டப்பெற்று, ஜாதிலிங்கக்குழம்பை யூட்டின

* சந்து - முழங்கால் பொருத்து.

செங்கழுநீர் மலரின் உள்ளிதழ்போலச் செம்பஞ்சூட்டிய நகங்களைத்தரித்து, அவற்றை மலரென்று நினைத்துத்தேனை யுண்ணுவதற்காக வண்டுகள் நெருங்கிச் சப்திக்கக்கூடிய தன்மையை யுடையனவாயிருக்கும்; எலும்பும் நரம்புமில் லாமல், இலவமலரின் இதழைத் தம் மென்மையினாலே கெடுத்துக் கண்ணுக் கினியனவாகிய சுற்றுப்பக்கங்களின் அளவு உயர்ந்து இந்தப் பெரியநிலத்தில் பொருந்தும்படி சேர்ந்து, பெரியோரை வழிவிடுதற்காக ஏழடித்தூரம் நடந்தாலும் அதை ஒருகாததூரமாக நினைத்து அச்சத்தை யடையக் கூடியனவும், மெல்லிய பஞ்சுபோன்றனவுமா கிய சிற்றடிகளும், பெருமைமிகுந்தனவும், விருப்பத்தை யுடையனவுமாய் விளங்கும்.

இதுவரை கூறிவந்த அப் பெண்ணினுடைய இவ் வடிவத்தைச் சச்சந்தன், தனியாயிருந்து தன்னுடையநெஞ் சென்னும் படத்திலே குறித்து, அதனை நினைப்பென்கின்ற எழுதுகோலாலே அவயவங்கள் சரியாக விளங்கும்படி எழுதித் தான் கைக்கொண்ட தியானத்தினாலே அவ் வுரு வத்திற்குக் * கண்திறந்து, அவள் தனக்கு மாமன் மக ளானபடியினாலே அவள்மீது, அன்பென்னும் நீரை அழ காகச் சொரிந்து, அடங்காத விருப்பமாகிய பூவைச்சிதறி அர்ச்சித்து, அவளை வழிபட்டான். (அதாவது: அவளு டைய முழுவடிவத்தையும் மனத்தி லமைத்து அவள்மீது விருப்பங்கொண் டிருந்தான்.) இவ்வாறு வழிபட்டவனும், போர்நீங்காத செருக்குள்ள யானையை யுடையவனும், வண்டுகள் நெருங்கிச் சப்திக்கின்ற மாலையையுடையவனு மாகிய அச் சச்சந்தன், † எழுத்து வடிவைப் பெற்றுத்

* கண்திறத்தல் - படம் எழுதி முடிந்தபின் கடைசியில் அவ் வுருவத்திற்குக் கண்ணை விளங்கும்படி எழுதிச் சிற்பிகளால் செய் யக்கூடிய ஒருவகை நற்கிரியை. † எழுத்துவடிவு பெறுதலாவது, எழுத்துக்களின் தன்மை விளங்கும்படி மழலைவார்த்தை சிறிது சுத் தமா யிருத்தல்.

தோன்றுகின்ற இளமையான வார்த்தைகளையும் இனிய பல்வரிசைகளையு முடைய அப் பெண்ணினது, நீட்சியும் விசாலமுமாகிய கண்களென்னும் வலையிலே அகப்பட்டு, அவளுக்குப் பாதம் நிலத்திலேபடுதல் முதலாகிய குறிப்புக்களை யறிந்தும் மானிடப் பெண்ணென்று நினைக்காமல் சிறிதும் ஐயமின்றி அவளைத் தெய்வப்பெண்ணென்றே மனத்திற் கருதியிருந்தான்.

கன்னத்தில் வடியும் மதத்தை உண்ணும் பொருட்டு நெருங்குகின்ற வண்டுக் கூட்டங்களை முகபடாம் போல் அணிந்து, மதத்தைப் பெருக்கிச் சிந்துகின்ற யானையை யுடைய வீரனாகிய விதையதேசத் தரசனது மகளும், மலர்ந்த மலரினால் தொடுக்கப்பட்ட மாலையை யணிந்தவளும், மேலே வர்ணிக்கப் பட்டவளுமாகிய இப் பெண்ணுக்குப் பொருத்தமான பெயர் விஜயையென்பதாம்; இது, பெண்களெல்லாரையும் தன் அழகினால் வெற்றிகொண்ட தன்மையாலே ஏற்பட்ட காரணப் பெயராம்; இத்தகைய சிறப்பையுடைய இவ் விஜயை யானவள், ஹிமவான், மஹாஹிமவான், நிஷதம், நீலி, ருக்மி, சிகரி என்னும் ஆறு மலைகளிலும் ஏற்பட்ட பத்மை, மஹாபத்மை, திங்கச்சை, கேசரி, புண்டரீகை, மஹா புண்டரீகை என்னும் ஆறு பொய்கைகளிலும் முறையே வசித்திருக்கின்ற ஸ்ரீ, ஹ்ரீ, த்ருதி, கீர்த்தி, புத்தி, லக்ஷ்மி என்னும் ஆறு தெய்வ மங்கையருள்ளும், முதன்மையான ஹிமவான் என்னும் இமயமலையில் விளங்கும் அருமையான மரகதப்பாறையிலுள்ள, பத்மை யென்னும் பொய்கையில் தோன்றியதும், அக்கினிபோன்ற நிறத்தினையுடையதும், பொன்னிறமான இதழ்களைப் பெற்றதுமாகிய தாமரை மலரின்கண்ணே வீற்றிருக்கின்ற ஸ்ரீ என்னும் திருமகள் இவளே என்று சொல்லும்படி, குடைகளுக்கெல்லாம் திலகம் போன்றதும், உயர்வுள்ளதுமாகிய வெண்கொற்றக் குடையை

யுடைய விதையதேசத் தரசனுடைய அரண்மனையிலே தங்கி வளர்ந்து வந்தாள்; நற்குலமே ஒரு பெண்ணின் வடிவத்தை எடுத்ததுபோன்றதன்மையை யுடைய இப் பெண்ணனவள், மேகலாபரணத்தைத் தரித்த இடையினை யுடைய ஆட்டுவாள், ஊட்டுவாள், * ஓலுறுத்துவாள், † நொடிபயிற்றுவாள், கைத்தாய் என்னும் ஐவகைத் தாய் மாரும், அவர்கள் மக்களாகிய தனக்கு மூத்தபெண்களும், சிலம்புகள் விரும்பித் தங்கியிருக்கப்பெற்ற தன்னுடைய அழகிய பாதங்களைப் போற்றும்படி வசித்திருக்குந்தன்மை, ஆயிரம் வலம்புரிச்சங்குகள் ஒரு சலஞ்சலத்தை வளைந் திருந்த தன்மையை நிகர்த்திருக்கும்; இனிய அகிலினது செழித்த புகையானது மணக்கப் பெற்றதும், குளிர்ச்சி பொருந்தியதுமாகிய கூந்தலையும், மெல்லிய மலர்மாலையை யுமுடைய இப்பெண்ணனவள், மேற்கூறியவாறு தங்கியி ருக்கின்ற காலத்தே இவளுக்கு மங்கைப்பருவம் வந்து சேர, அதனாலே அவயவங்கள் உருக்கொண்டு பூரித்து விளங்கி, மின்னலும் தன்னியல்புகெட்டு வருந்தக்கூடிய இடைமெலிவுற்று, இவளுடைய அழகின் நலமானது மிகு ந்து விளங்கிற்று.

இவள் இப்படியிருக்கப் பெரியசேனையையும், கட்டுத் தறியை முறிக்கின்ற ஆண்யானையையு முடைய சச்சந்த மகாராஜன், இவள்மீது தனக்கேற்பட்டிருந்த ஆசைமிகுதி யினாலே இவளை மணஞ்செய்துகொள்ள வேண்டு மென்ற எண்ணங்கொண்டு, பசியவளையலையும் மற்ற பொன்னாபா ணங்களையும் அணிந்த இவ்விஜயையின் தந்தையும், முன்னே நாம்கூறிய விதையத் தரசனுமாகிய ஸ்ரீ தத்தனிடத்திலே மந்திரி முதலியோரை யனுப்பித் தன் எண்ணத்தைத் தெரி

* ஓலுறுத்துவாள் - தாலாட்டுபவள், அல்லதுகுழந்தைக்குச் சொல்நிரம்புத லில்லாத பலவகை ஒலிகளைக் கற்றுக்கொடுப்பவள்,

† நொடி பயிற்றுவாள் - பேச்சுப்பழக்குபவள்.

விக்கும்படி செய்தான் ; அவ்வாறு தெரிவித்த மாத்திரத்திலே, அவ் விதையதேசத் தரசனும் அவன் மனைவியும், மருமகன் சொல்லியனுப்பிய விதத்தையும், விஜயை இயற்கையாகவே அவனிடத்தில் வைத்திருந்த நல்ல அன்பின் மிகுதியையும், அருமையான புத்தியையும் தந்திரங்களையுமுடைய தங்கள் மந்திரிமார் ஆலோசித்து இதற்கு இணங்கிய செய்கையையும் பார்த்துச் சச்சந்தன் இவளுக்குமைத்துனன் முறையாய் அமைந் திருப்பதனாலே யாதொரு தடையு மின்றிப் பார்வையால் பெண்மானை நிகர்த்தவளாகிய இவ் விஜயையைப் பெருமையிற் சிறந்தவனாகிய அச் சச்சந்தனுக்கு மணஞ்செய்து கொடுத்தார்கள்.

அவ்வாறு மணஞ்செய்தபின் நீண்ட பொன் மலையை நிகர்த்தவனாகிய சச்சந்தனும், அம் மலையில் படரும் அழகிய பொற்கொடியை நிகர்த்தவளும் அமுதத்தைப்போன்றவளுமாகிய விஜயையும், முதலில் வசந்தன் மலர்ப் பகழிகளை எய்வதற்குக் குறியிடமாகிப் பின்பு, இல்லற வியலில் விருப்பமுடையவர்களாய் உறவாடிச் சிறப்பினால் தமக்கிணை எங்குமில்லாதவர்களாய்க் கோபம்மிகுந்து விளங்குகின்ற விருஷப வாகனத்தை யுடையவனாகிய சிவனும், அவன் மனைவியாகிய உமாதேவியும் சேர்ந்து இணைபிரியாதிருக்குந் தன்மையை நிகர்த்து எப்பொழுதும் நீங்காதவராய்க்கூடி இருவருடம்பும் ஒருடம்புபோலாகப் பொருந்திவாழ்ந்தார்கள் ; அவ்வாறு சேர்ந்திருந்தவர்களும், தீதில்லாதவர்களுமாகிய விஜயையும் ஆண்யானையை நிகர்த்த சச்சந்தனும் சேர்க்கைக்குமுன், அனுபவித்தற் குரியார் அனுபவித்தற்கு விரும்பப் படுகின்ற போகபூமியின் செல்வத்தைப்போன்று, ஒருவர்மீ தொருவர் விருப்பத்தைச் செலுத்தி அனுபவிக்கக் கூடியவர்களாயிருந்தார்கள் ; பின்னர், மகிழ்ச்சியை யுடைய முயக்கத்தினால் அரவத்தை நிகர்த்தும், ஆசைவளர்கின்ற அன்பினால் அன்னத்தை நிகர்த்

தும், கண்முதலிய அவயவங்களைத்தீண்டி அனுபவிக்கும் முறையால் காட்டுப்பசுவை நிகர்த்தும், ஒருவர்மீ தொருவர் செலுத்தும் ஆசையினலே, அப் போகபூமியிலிருந்து அங்குள்ள செல்வங்களின்மேல் விருப்பத்தைச் செலுத்தி அனுபவிக்கின்றவர்களும், கிரணமிகுந்த ஒளிபொருந்திய தேகத்தையுடையவர்களுமாகிய போகபூமி வாசிகளையும் நிகர்த்தார்கள்; இன்னும் தன்னிடத்திலே நிறைந்த காதலையுடையவனாகிய அச் சச்சந்தனும் அவ்விஜயையும் முன் கூறியபடி இல்லறவியல் நடத்திய காலத்திலே, உலகத்தாரெல்லாம் புகழ்கின்ற அவன், இலக்குமியை நிகர்த்தவளாகிய அவ் விஜயையை அமுதத்தைப் பருகுவதுபோல அனுபவித்தான்; விஜயையும் மின்னல் விளங்காநின்ற ஆபரணங்களை யணிந்த அச் சச்சந்தனே, வேல்போன்ற கண்களையுடைய பெண்களுக்குச் சேகரித்து வைக்கப் பட்டதும், பொருத்த முள்ளதுமாகிய மதுவைப் பருகுவதுபோல, அவன் நலத்தை யெல்லாம் கைக்கொண்டு அனுபவித்தாள்; இன்னும், வேலாயுதத்தைத் தாங்கிய அச் சச்சந்தன், அழகிய மேகலாபரணத்தைத்தரித்த அவ்விஜயையின், பவழம் போன்ற அதரத்தைச் சுவைக்கத்தகுந்த தென்றுகருதிச் சுவைத்துக் கரும்பை யுண்கின்ற யானையை நிகர்த்தான்; அத்தருணத்தில் அவள், அவ்யானையா லுண்ணப் படுகின்ற கரும்பை நிகர்த்தாள்; இன்னும் நலங்குலையாமல் கொடுக்கின்ற இன்பத்தால் தேனெழுகுகின்ற மாலையையணிந்த அவ் விஜயை, தேனைக்கொடுக்கின்ற தாமரைப்பூவாக, பிரகாசத்தைக் கக்குகின்ற வேலாயுதத்தை யுடைய அச் சச்சந்தன், அத் தாமரைப் பூவினிடத்தே யிருந்து அப் பூவின் தன்மை சிதையாமல் அதிலுள்ள தேனை யுண்கின்றதும், பிரகாசம் பொருந்திய சிறகுகளை யுடையதும், அழகிய தன்மை யுள்ளதுமாகிய வண்டை நிகர்த்தான்; மேலும், பளிங்குப்பாறையிலே யுள்ள பவழப்பாவையின் தன்மை

யைப்போல விளங்குகின்ற சாயலையும், சேற்றிலேயுள்ள இரண்டு கயல்மீன்கள் எதிர்த்துப்போர்செய்வன போன்று புரண்டு கடைப்பாகம் சிவப்புற்று, விசாலமாக விளங்கு கின்ற கண்களையு முடையவளாகிய அவ் விஜயை, பிரகா சம் மிகுந்ததும், அழகைக் கொண்டதும், கிரமமாகிய ஆசை நிறைந்ததுமாகிய கனியை நிகர்த்தாள்; அவளி டத்தே அன்பைச் செலுத்தி அவளை அனுபவிக்கின்ற அச் சச்சந்தமன்னன், அக்கனியை யுண்ணும் அழகிய இறகு களையுடைய வௌவால் பறவையை நிகர்த்தான். இவ்வாறு அனுபவித்தவர்களும், பெருந்தன்மையை யுடையவர்களு மாகிய இவ்விருவரும், சேர்க்கை நீங்கியிருக்கின்ற காலத் திலே எப்படி யிருப்பார்க ளென்றால், நெருங்கிய மலரால் தொடுக்கப்பட்ட மார்பின் மாலையும், நெற்றி மாலையும், வாசனைப்பொடியும், நல்லமலரினால் தொடுத்து முடியிலே சூட்டுகின்ற முடிமாலையும், மணக்கின்ற சந்தனமும், அறு சுவையோடு பொருந்திய உணவுகளும், அகிற்புகையும், புழுகும் தங்களை அனுபவிக்கும் அவயவங்களைச்சேர்ந்து பற்றி இனிமையைச் செய்யும்படி (அதாவது: இவற்றை யெல்லாம் அனுபவித்து) தங்கியிருப்பார்கள்; இப்படி யிருந்த இவர்களுடைய இன்பம், எப்படி யிருக்குமெனில், மயிர்ச்சாந்தை யுடையதும், கரிய நிறமுள்ளது மாகிய கூந் தலையும், வண்டுகள் தேனை யுண்ணக்கூடிய மாலையையு முடைய விஜயையினது மாவடுவின் பிளப்பை யொத்த கண்களாகிய நீலோற்பல மலர்கள், ஊடுதலையும் கூடுதலை யும் குறிப்பால் உண்டாக்கின நோக்கத்தோடு, அவள் ஊடின காலத்திலே கோபித்து மிதித்த அடி, சச்சந்தனு டைய சிரசிலே படுவதனாலே உண்டாகிய சிலம்பின் சப் தத்தோடும், ஊடல் நீங்கிக் கூடிவிளையாடுகின்ற காலத் திலே உண்டாகிய மேகலை முதலாகிய ஆபரணங்களின் ஒலியோடும்கூடி எப்பொழுதும் நீங்காத தன்மையை

யுடையதா யிருக்கும்; இன்னும், பகைவர்களுடைய இரத்தம் தோய்ந்த வேலாயுதத்தை யுடைய சச்சந்தன், முன்கூறிய இன்பத்தினாலே, ஆபரணங்கள் விளங்கா நின்ற இளமையான பயோதரங்களையும், நலங்கருதிச் சித்திரக்காரர்கள் தினந்தோறும் எழுதிப் பழகக்கூடிய நுட்பமான இடையையும், தழையோடுகூடி வளர்ந்ததும், மதுவையுடையதுமாகிய மலரினால் தொடுக்கப்பட்ட மாலை விளங்குகின்ற அழகிய மயிர்முடியையும், குண்டலங்கள் இரண்டு கன்னப்புறங்களிலும் விளங்குகின்ற முகத்தையு முடைய ஒரு பூங்கொடிபோன்ற விஜயையோடு, கார்காலத்தில் மழையைச் சொரிகின்ற மேகத்தைப்போலவும் அவள்மீது அருளைச் சொரிந்து தங்கினான்; இஃதன்றி இவர்களுடைய மிகுந்த சேர்க்கை உரிமையானது எப்படி யிருந்ததெனில், சச்சந்தன், விஜயையி னுடையதும், சமுத்திரத்திலே யுண்டாகிய பவழத்தை நிகர்த்ததுமாகிய இதழமுதத்தை உண்டும், அவ்விஜயை ஒழுங்காக வளர்கின்ற அச் சச்சந்தனுடைய மார்பகத்தே தங்கியும், இடிக்கப்படுகின்ற மாவைப்போலவும், பின்னிய கொடியைப்போலவும், இருவருடைய உணர்வும் உடம்புமாகிய எல்லாம் ஒரே தன்மையாகக்கலந்து ஒப்பற்ற கடலைக்காட்டினும் அதிகரித்திருந்தது. இப்படி இவர்களுக்கிடையில் இன்ப மதிகரித்து வருங்காலத்திலே பச்சைக்கற்பூர முதலிய வாசனை வஸ்துக்களோடுகலந்த பசுமையாகிய வெற்றிலைச்சுருளை, பிரகாசத்தைச் செய்கின்றதும், சிறந்ததுமாகிய இரத்தினச்செப்பிலே வைத்துத் தாதிப்பெண்கள் ஏந்த, அதனைத்தின்று அனுபவித்து ஐம்பொறிக்கும் இனியனவாகிய அனுபவங்களைக் கணவனுக்குக் கொடுத்து, எப்பொழுதும் இல்லறவின்பத்தை அனுபவிப்பதற்குச் சுழன்று கொண்டிருந்தவளும், காமர் வல்லிக்கொடிபோன்றவளுமாகிய விஜயை, அவனிடத்தே, ஒப்பற்ற வொரு சித்திரப் பாவையைப்போன்று வசித்து வந்

தாள். இப்படி வசித்துவரும்போது, மேற்கண்டபடி இவள் செய்த இன்பத்தினாலே, சச்சந்தன், அரசாட்சியைச் சிறிதும் கருதாதவனாய், இவளுடைய சேர்க்கையிலேயே கவனத்தைச் செலுத்தி, இவளைவிட்டு நீங்காமல் அந்தப்புரத்திலேயே தங்கிவரத் தலைப்பட்டான்; இவ்வாறு இவ்வரசன், பூமியெல்லாம் மயக்கத்தைக் கொள்ளும்படி காக்கும் தொழிலைவிட்டு நீங்கிப் பெண்களுக்கெல்லாம் அரிய ஆபரணம் போன்ற விஜயை யுடனே சேர்ந்திருந்த பெரிய அன்பானசெய்கை எப்படியிருந்ததெனில், வெண்மையாகப் பிரகாசிக்கின்ற சந்திரன், ஆகாயமெல்லாம் இருளடையும்படி அவ்விடத்தை விட்டு நீங்கித் தன்பிரியநாயகியும், பிரகாசம்பொருந்திய நிறத்தினையுடையவளுமாகிய உரோகிணியோடு வேற்றிடத்திற்சென்று மறைந்திருந்த தன்மையை நிகர்த்திருந்தது.

மேற்கண்டவாறு குங்கும மணிந்த தோள்களையுடைய சச்சந்தனும், செழித்த கயல்மீன்போன்ற கண்களையுடைய விஜயையும், தங்களிடத்தே தங்கிய அளவற்ற இன்பத்தை நீங்காது அனுபவிக்கின்ற காலத்தில், சந்திரனைப்போன்ற வெண்கொற்றக் குடையையுடைய அச் சச்சந்தனுக்குச் செல்வமானது பசிய கிரணத்தையுடைய தேய்பிறைச் சந்திரன்போல வரவரக் குறைந்த தன்மையை இனித்தெளிந்துகூறி, அதன்மேல் சீவகன் சரித்திரத்தை எடுத்துரைப்பாம்.

இங்குக் கூறப்பட்டவனும், ஆண்யானையை நிகர்த்தவனுமாகிய சச்சந்தன், மேற்காட்டியவாறு வாழ்ந்துவருங் காலத்திலே, தன் அமைச்சர்களுக்குள்ளே மடைமையில்லாத சாஸ்திரக்கேள்வியை யுடையவனும், நற்காரியங்களை எடுத்துச்சொல்லும் தன்மை யுடையவனுமாகிய நிமித்திக னென்பவனைத் தனக்கு வேறாகக்கொண்டும், தன்மனம்போல் நடக்கின்ற கட்டியங்காரனைத் தன்னுடைய

உயிர்போலக் கருதியும்வந்தான்; அப்படிக் கருதியிருக்கும் சமையத்தில், தான் விஜயையைவிட்டு நீங்காதிருக்கும் பொருட்டு, அக்கட்டியங்காரனையே இராஜ காரியங்களை நடத்தும்படி செய்ய உத்தேசித்துப் பிரகாசிக்கின்ற வாளாயுதத்தைத் தரித்ததும், நீட்சிபொருந்தியதுமாகிய கையையுடையவனை அக்கட்டியங்காரனுக்குக் கிரீடமும் குடையுமொழிய, மற்ற இராஜசிறப்புக்களை யெல்லாம் செய்து, வாரினால் கட்டப்பட்டதும், பேரொலியைச் செய்யக்கூடியதுமாகிய முரசத்தை முழக்கி, இக் காரியத்தை யுலகமெல்லாம் அறியும்படிசெய்து, அதன்மேல் அச் சச்சந்த மன்னன், அக் கட்டியங்காரனுடனேயிருந்து கீழ்க்கண்டவாறு சொல்லத்தொடங்கினான். அவ்வாறு சொல்லத்தொடங்கினவன் அவனை நோக்கி, "விளங்குகின்ற ஆபரணங்களைத்தரித்த மார்பையுடைய கட்டியங்காரனே! என்மனைவியாகிய விஜயை சிறந்த சுவையுள்ள அமிர்தத்தை நிகர்த்த இனிமைவாய்ந்தவள்; போரிலே அசைந்து பின்வாங்காத குதிரைச்சேனையையுடைய அரிஞ்சயனது குலத்திலே உதித்து, நான் முற்பிறப்பில்செய்த வேண்டுகோளாலே எவ்வகைப்பழிப்பு மில்லாதவளாய் மிக்க புகழோடு என்னிடத்தேவந்து மனைவியாகச்சேர்ந்தாள். ஆகையினாலே, என்னுயிபோன்ற அவ்விஜயையை இமைப்பொழுதும் நீங்கியிருக்கச் சகியேன்; அதனால், இராஜகாரியங்களைக் கவனித்தல் என்னால் இயலாது; சிறிதுகாலம்வரை நீயே எனக்குப் பிரதியாக அரசனாகி இப்பூவுலகத்தை மிகவும் புகழுண்டாகும்படி ஆட்சிபுரிந்து வரவேண்டும்" என்றுகூறினான். அவ்வாறு பெருமையிற் சிறந்தவனாகிய சச்சந்தன் சொல்லக்கேட்டுக் கட்டியங்காரன், முன்னமேயே இப்படியானால் மெத்த நலமாகுமென்று கருதியிருந்தவனாதலால், இவ்வார்த்தை பிறந்தவுடனே மனத்திற்குள் அடங்காமகிழ்ச்சிகொண்டு, வெளிக்குமாத்திரம் இவ்விஷயத்திற்கு

இணங்காதவன்போல நடித்து, அரசன் முகத்தைநோக்கி, "எமதிறைவரே! தாங்கள் கூறுகிறபடியே இவ்வரசாட்சியை அடியேன் ஏற்றுக்கொள்வது தகாது; அவ்வாறு ஏற்றுக்கொண்டு இடமகன்ற இப் பூமியைக்காக்குந் தொழிலை யான் தாங்குவது எனக்கு எப்படியிருக்குமெனில், பகைவர்களைக் கொல்லுகின்ற பட்டத்துயானையின் பிடரியின்மேல் வைக்கப்பட்டதும், மிக்க அழகுபொருந்தியதுமாகிய அம்பாரியை ஒரு நாயின்மேல் வைத்ததைப்போல எள்ளளவும் பொருத்த மற்றதாயிருக்கும்" என்றுசொல்ல, மணக்கின்ற மலர்மாலையை யணிந்தனவும், தம்முடைய பலத்தினாலே பகைவரொழிய இப்பூலோகம் செழிப்புற்று வளர்வதற்குக் காரணமாய் ஏற்பட்டனவுமாகிய தோள்களையுடைய அச் சச்சந்தன், மீண்டும் அவனைநோக்கி, "இஃதெப்படியாயினும் என்னுடைய சௌகரியத்தை உத்தேசித்து என்னாற் செய்யப்படுவதால் இக்காரியத்தை எள்ளளவும் மறுத்துச்சொல்லுதல் கூடாது" என்றுகூறினான். சித்திரக்காரராலும் எழுதுவதற்கு அருமையான அழகையுடைய மார்பினனாகிய சச்சந்தன், இப்படிச் சொன்ன மாத்திரத்திலே கட்டியங்காரன், கைகூப்பி அவனுடைய பாதங்களை வணங்கி, "கொடியரென்று சொல்லப்படும் பகைவர்களை யெல்லாம் கொன்று தொலைத்த வேலாயுதத்தையுடைய மன்னரேறே! தாங்கள் இவ்வாறு வற்புறுத்திச் சொல்வதனாலே, இவ்விஷயத்தைத் தடைசெய்தற்கு என்மனம் இசையவில்லை; ஆதலின், தாங்கள் மிகவும் அதிகரித்த காதலையுடையவராகிய மனைவியாரிடத்தே தங்கி மிக்க இன்பத்தை அடைவீர்களாக; யான் எவ்வகைப் பழிப்புமுண்டாகாதபடி இப்பூவுலகத்தைக்காக்கும் பெரிய பாரத்தைத் தாங்குகின்றேன்" என்றுகூறி, இராஜகாரியத்தில் பிரவேசித்துச் சேனைகளை யெல்லாம் தன்வசப்படுத்தி ஆளத்தொடங்கினான்.

இவ்வாறு இவன் ஆளத்தொடங்கிய மாத்திரத்திலே வலம்புரிச் சங்குபோன்ற உத்தம இரேகை பொருந்தியதும், ஈகையிற்சிறந்ததுமாகிய கையையும், மிக்கவலிமையையுமுடைய சச்சந்தன், உபசாரமாகச்சேனையைக்காப்பாயென்று கையினுலேகாட்டி அனுப்ப, அவன்சொற்படியே சென்று கட்டியங்காரன் சேனையைக்காக்கும் தொழிலைக் கைக்கொண்டானென்று பலரும் கூறக்கேட்டு, அரசனுக்குவரும் நன்மைதீமைகளை அறிந்து எப்பொழுதும் இதஞ்சொல்வோனும், மகா உத்தமனும், ஒப்பற்ற அறிவையுடையவனுமாகிய நிமித்திகனென்னும் அமைச்சன், உடனே அரசனிடத்திற்சென்று அவன் முகத்தைநோக்கி, "திரண்ட கல்லையொத்த தோள்களையுடைய மன்னரே! நீர் உம்மையன்றி மற்ருெருவனிடத்தில் உமது வெற்றி பொருந்திய ஆளுகையைக் கொடுத்தால், இப்பூமியின் சுதந்திரமும் மிக்க செல்வமும் உம்மைவிட்டு நீங்கும்; இதனை நீர் ஆராய்ச்சி செய்வீராக" என்று தனக்குத் தெரிந்த நீதியாற் கூறினுன். இவ்வாறு நிமித்திகன்கூறிய நீதிவாக்கியத்தைக்கேட்டுச் சச்சந்தன், தனக்குவந்தெய்திய கெட்டகாலத்தால், சிறிதும் மதியாது, தான்கொண்ட எண்ணத்தை விடாத கொள்கையையுடையவனுய், அந்நிமித்திகனைநோக்கி, "நிமித்திக! கட்டியங்காரன் எனக்கு உயிரென்று சொல்லப்பட்ட தகுதியை யுடையவன்; அவன் என்னை யன்றி வேருெருவரையும் தனக்குத் துணையாகப் பெருதவன்; என் பகைவர்களுடைய கோபத்தின் வலிமையை யெல்லாம் கெடுத்து, முற்காலத்திலே நெருங்கிய பலபோர்களை யெல்லாம் வென்று, எனக்கு மிக்க கீர்த்தியைச் சம்பாதித்துக்கொடுத்தான்; இத்தகைய அவனுக்கு இச்சமயத்தில் யான்செய்யக்கூடிய ஒரு தகுதியான காரியத்தையே செய்தேன்; அவன் ஒருகாலத்திலும் எனக்குத் தீங்குசெய்ய எள்ளளவும் கருதான்; அப்படியே நீகு

றித்தவாறு அவன் எனக்குச் செய்யக்கூடிய பலதீங்குகளைச்செய்தாலும் செய்யட்டும்; நீ மனத்திற்குக் கவலையைக் கொடுக்கத்தக்க பொருமை வார்த்தைகளைச் சிறிதும் கூறவேண்டாம்; நீ உனக்கு ஏற்பட்ட தொழிலைச் செய்துகொண்டு வாழ்வாயாக; இனி இவ்வாறு எனக்குச்சொல்லும் தொழிலை விட்டுவிடுவாய்" என்று அவன் மீது வெறுப்புற்று மொழிந்தான். இவ்வாறு சொல்லியும் நிமித்திகன் அரசன்மீது மிக்க விசுவாசமுள்ளவனாதலால், நிச்சயமாகக் கட்டியங்காரனால் அவன் பிற்காலத்தில் கெட்டேபோவானென்று உறுதிகொண்டு, அக்கேட்டிற்குச் சகியாதவனாய், மீண்டும் அவனைநோக்கி, "புவனகாவல! மந்திரிகள் சமையத்தில் இடித்துச்சொல்லும் உறுதிவாக்கியங்களை மந்திரம்போலக்கருதி ஏற்றுக்கொண்ட மன்னர்க்கு எப்பொழுதும் நன்மைவந்து சேருமே யன்றிச் சிறிதேனும் தீங்குவராது; ஆதலால், யான் இப்பொழுது கூறுவது மனத்திற்குச் சம்மதமற்றதாயினும் நீர் சற்று கிருபைசெய்து கேட்கத்தான் வேண்டும்; அன்னியனிடத்தில் அரசாட்சியை ஒப்புவிக்காமலிருக்கின்றதே சிறந்தசெய்கையாகும்" என்று எடுத்துச்சொன்னான். அதற்கும் அவன் இணங்காதபடியினாலே, அதன்மேலும் அவனிடத்தில், "எமதிறைவ! உம்மைப்போலவே முற்காலத்திலும் புஷ்பங்கள் மலர்கின்ற கொடியை நிகர்த்த பெண்களிடத்தே உண்டாகிய இச்சையே அதிகரித்து, இப்பிறப்பில் மிக்க பழிப்பையும் மறுபிறப்பில் அளவற்ற பாவத்தையும் அடைந்தவர் பற்பலருண்டு; இன்னும் இம் மோகத்தால் நேர்ந்த தீங்கினையுமெடுத்துக்கூறுவேன்" என்று முற்காலத்துச் சரித்திரங்களையும் உதாரணமாக எடுத்துக் கூறத்தொடங்கினான்.

அவ்வாறு தொடங்கிய நிமித்திகன், அவ்வரசனை நோக்கி, "நல்லமணமிகுந்த மலர்களைச்சேர்த்துத் தொடுக்

கப்பட்ட மாலையையணிந்த மார்பினையுடைய அரசசிங் கமே! தவத்தினால் சிறந்ததன்மையைப் பெற்றவனாகிய பிர மனென்னும் பெரிய பெயரினையுடையவன், முற்காலத் தில் தனக்கேற்பட்ட மோகமிகுதியால் சுவர்க்கலோகம் போய், அவ்விடத்திலேயுள்ள தேவஸ்திரீகளைப்பெற விரு ம்பி முயற்சித்தும், தன்னை அவர்கள் மதியாது இகழ, 'நாம் இந்திரபட்டத்தை அடைந்தால் இவர்களை எளிதி லனுப விக்கலாம்' என்று கருதி, உடனே திரும்பிவந்து, அதனை யடையும் பொருட்டாகத் தவஞ்செய்தற்குத் தகுந்த ஓரி டத்திலிருந்து, மூன்றரைக்கோடி வருஷம் கடுமையான தவம்புரிந்தான்; அவ்வாறு தவம்புரிந்ததை இந்திரன் அறிந்து, 'இத்தவம் முடிந்தால் நமது பதவிக்குக் கேடு வரும்' என்று நிச்சயித்துத் தன்குருவினிடத்தே இவ் விஷயத்தைச் சொல்லி முறையிட்டதன்மேல், அவர், 'அத்தவம் கெடுதற்குரிய உபாயத்தைச்செய்வாய்' என்று கட்டளையிட்டருளினார்; அதன்மேல் அவ்விந்திரன் திலோ த்தமை யென்னும் பெண்ணை யுண்டாக்கி மேற்கூறிய பிரமனுடைய தவத்தைக் கெடுத்துவரும்படி அனுப்ப, அவள்வந்து அப் பிரமனுக்கு எதிரேநின்று, ஆசையையுண் டாக்குவதற்குரிய ஆடல்பாடல்களைச் செய்தாள்; அவ் வாறு செய்யவே அப் பிரமன் ஆசைமிகுந்து விழித்துப் பார்க்கத் தொடங்கினான்; அப்போது அவள் அவனுக்கு வலப்பக்கத்தில் சென்று அவ் வாடல் பாடல்களைச் செய் தாள்; அத்தருணத்தில் இப் பிரமன், 'அப்பக்கம் திரும் பிப்பார்த்தால் நம்மைச்சூழ்ந்திருக்கும் முனிவர்கள் இத் தகாச் செய்கையைப்பற்றி நகைப்பார்களே' என்று கரு தித் தான்செய்துவந்த தவங்களுள் ஒருகோடி வருஷத வத்தால் அப் பக்கத்தில் ஒருமுகத்தை யுண்டாக்கிக்கொ ண்டு பார்த்தான்; உடனே அவள் பின்புறத்திற் சென்று அவற்றைச்செய்ய ஆரம்பித்தாள்; இவன் அப் பக்கத்தி

லும் மற்றொரு கோடிவருஷ தவத்தினாலே ஒருமுகத்தை யுண்டாக்கிக்கொண்டு பார்த்தான்; அதன்மேல் அவள் இடப்பக்கத்தே சென்று பாடியாடினாள்; இவன் பின்னும் ஒரு கோடிவருஷ தவத்தால் அப் பக்கத்திலும் ஒருமுகத்தை யுண்டாக்கிக்கொண்டு பார்த்தான்; உடனே அவள் அவ்விடத்தினின்றும் நீங்கி ஆகாயத்திற்சென்று அத்தொழில்களைச் செய்தாள்; இவன் ஒழிந்தவைபோக மிஞ்சியிருந்த அரைக்கோடி வருஷ தவத்தால் மேற்பக்கத்திலும் ஒரு முகத்தை யுண்டாக்கிக்கொண்டு பார்த்தான்; அவ்வாறு செய்த மாத்திரத்தில் அவள், 'நாம் கோரிவந்தபடியே இவன் தவமுழுதும் ஒழிந்தது, இனி நம்மிருப்பிடம் செல்லலாம்' என்றுகருதி, உடனே மறைந்து சென்றாள்; பிரகாசிக்கின்ற பயோதரங்களையுடைய அவள்பொருட்டாக மேற்கண்டவாறு தன்னுடைய தவத்தை யெல்லாம் செலவிட்டு நான்கு திருமுகங்களு முண்டாகும்படி செய்துகொண்டு விரும்பிப்பார்த்தும் அவள் இவ்வாறு மறைந்து போய் விட்டபடியினாலே அவளைச் சேரமுடியாதவனாய், மோகம் அதிகரித்து அப்பால் ஆகாயமார்க்கமாகச் செல்லும் தேவஸ்திரீகளை யெல்லாம் மேல்விழுந்திழுத்துத் துன்பப்படுத்தத் தொடங்கினான்; அவ்வாறாகவே, அதையறிந்த தேவர்கள் சதாசிவமூர்த்தியினிடத்தில் முறையிட, அவர் வந்து பிரமன் இக் கொடுஞ் செய்கையைச் செய்யா திருக்கும்பொருட்டு அவனுடைய மேற்றலையைக் கிள்ளியெறிந்தனர்; அதன்மேல் இப் பிரமன் எல்லாராலும் அவமதிக்கப்பட்டுத் தன்னுடைய உயர்ந்தபதவியையும் இழந்ததல்லாமல், பின்பு தவஞ்செய்து தன்னுடையபாவத்தைத் தீர்த்துக்கொண்டும், இவனுக்கு இன்றளவும் அச்செய்கை பலரும் புறங்கூறுதற் கேதுவாக நிலைபெற்றிருக்கின்றது; இஃதன்றியும், ஸ்திரீகள் கையைப்போன்ற மலரையுடைய காந்தள் செடியின் வேலியமைந்த மலைக்கூட்டங்களுக்கெல்

லாம் தலைவனான மலையரசன்மகளும், நீலமலரால்செய்த மாலையை யணிந்தவளுமாகிய உமாதேவி, தன்னுடைய நாயகனாகிய சிவபெருமான் கங்காதேவியின்மீது ஆசை கொண்டு அவளை மணம்புரிந்ததை அறிந்து பிணங்கிய போது, அப் பிணக்கைத் தீர்க்கும்பொருட்டு அச் சிவன் தனது திருமேனியின் பாதியாகிய வாமபாகத்தைக் கொடுக் கப்பெற்றுக்கொண்ட தன்மை, கொய்யப்பட்ட கொன்றை மலர்மாலையையும், சூட்டும் பூவாகிய குளிர்ந்த மதிக்கண் ணியையுமுடைய அச் சிவபெருமானுக்குப் பெருங்குற்ற மானதோடு பெண்ணாசையினாலேற்பட்ட பெரியபழியு மாயிற்று; வேலாயுதங்கள் மிகுந்து விளங்குகின்ற பிர காசம்பொருந்திய சேனையையுடைய அரசனே! இன்னும் நீலநிறமாகிய அழகுபொருந்திய கிருஷ்ணன், பெண்ணாசை யால், அக்காலத்தில் யமுனையாற்றிலே நீரில் விளையாடிக் கொண்டிருந்த கோபிகா ஸ்திரீகளுடைய பல வஸ்திரங் களைக் கவர்ந்துகொண்டு கரையில்நின்ற குருந்தமரத்தி லேறி நிற்கும்போது, அவன் தமையனாகிய பால்போன்ற நிறத்தினழகு பொருந்திய பலராமன் வருவதையறிந்து, தனது செய்கையை அவன் காணில் மிக்க பழிப்புண்டாகு மென்று கருதியல்லவோ, வஸ்திரங்களோடு அக் குருந்த மரத்தின்கிளையை முறித்து மிகுந்த நீரையுடைய அந்த யமுனையாற்றில் விழும்படிசெய்து, திரட்சியும் அழகும் பொருந்திய வளையலையணிந்த அப் பெண்களுக்கு அவ்வஸ் திரங்கள் எளிதில் கிடைக்கும்படி யுதவித் தந்திரமாகத் தானும் ஜலத்திலே குதித்து மறைந்தோடினான்; இஃது எவ்வளவு நிந்தையான விஷயமென்பதை நீரே ஆலோ சித்துப்பாரும்; அச்சம்பொருந்திய வேலாயுதத்தைத்தரித் ததும், விசாலம் பொருந்தியதுமாகிய கையையுடைய மன் னவ! நாம் இப் பெண்ணாசையைப்பற்றி ஆராயின் இது மிகவும் பழிப்புடையதாகும்; எப்படி யெனில், முற்கா

லத்திலே மிகவும் மோகம் அதிகரித்து அதனாலே மனங் கன்றி நின்ற ஒரு கழுதையைக்கண்டு, தமக்கேற்பட்ட கிருபையினாலே, புத்தனார், அதன் வேதனையை மாற்றும் பொருட்டு, அதற்கினிமையான அதனுடைய இனத்தின் வடிவமெடுத்துப்போய் அதனோடு சார்ந்து, அதற்கு இன் பத்தைச்செய்து, அதனாலே அவரை உலகத்தாரெல்லோ ரும், 'நீர்மோகத்தால் வருந்தினீரே' என்று தூற்ற, அச் செய்கையானது, இப் பூவுலகத்திலே சுடுகாட்டிற்கழித்துக் கிடக்கின்ற மாலையைப்போல மிகவும் இழிவாகக் கருதக் கூடியதா யிருக்கின்றதல்லவோ? இஃதன்றியும் இன்னும் கேட்பீராக; இப் பெண்ணாசையா லுண்டாகும் பழியை எவராலும் மறைத்தல் முடியாது; பஞ்சபாண்டவர்கள், இவ்வாசை காரணமாகப்பெற்ற பழிச்சொல் எவராலும் நீக்கமுடியாததாய் இன்னும் உலகத்தில் நிலைபெற்றிருக் கின்றது; இன்னும், அம்மோகமானது பலராலும் வாயா கிய பறையையறைந்து தூற்றப்படுவதா யிருப்பது மல் லாமல் மறுபிறப்பிலும் நரகம் முதலிய துன்பங்களைத் தரக்கூடியதாயு மிருக்கின்றது; ஆதலால், அவ் விருப்பத் தைப் பெரும்பான்மையும் நீக்கி நடுநிலைமையிலே நின்று உலகத்தை ஆட்சிபுரிவதே நல்லதாகும்" என்று கூறினான்.

இவ்வாறு நிமித்திகன், பல உறுதிமொழிகளைச்சொல் லியும் சச்சந்தன் அவற்றைச் சிறிதும் மனங்கொள்ளாமல் இகழ்ந்து தள்ளிவிட்டான். அப்படி அவனுடைய சொல் லைக்கொள்ளாது தள்ளவே, அதைக்கண்டு பக்கத்திலே யிருந்த உருத்திர தத்தனென்னும் மந்திரி, தான் சில நீதி மொழிகளை அரசனுக்கு எடுத்துச்சொல்லக்கருதி, அவ்வ ரசன்முகத்தை நோக்கி, "மன்னவ! பிறரால் இகழப்ப டாத பெரிய அறிவினையுடையவனும், ஆயிரஞ் சிவந்த கண்களையுடையவனுமாகிய இந்திரனும், மிக்க அறிவுபொ ருந்திய தன்மையை யுடையவராகிய மந்திரிகளின் சொற்

கருத்தை மிகவும் மேன்மையாகவே கொண்டு நடப்பான்; அவனைப்போலவே தாமும் பெரிய அறிவினையுடையீர்; ஆதலின், நீர் இப்பொழுது மந்திரிகளாகிய எம்முடைய சொற்களை இகழலாகாது; அவ்வாறு இகழாதிருப்பீராயின் உமக்கு மிக்கநன்மை உண்டாகும்; அதைவிட்டு நீர் இப்பொழுது இந் நிமித்திகன் சொல்லைக்கேளாமல் இகழ்வதனாலே பின்பு உமக்கு நிச்சயமாகக் கேடுண்டாகும்; அக் கேட்டைக்கண்டு இப்பொழுது உம்மால் மிகவும் பிரியமாகப் பாராட்டப்படுகின்ற விஜயமாதேவி சகிக்கக்கூடாத துன்பக்கடலி லழுந்துவாள்; அவ்வாறாயின் உம்மிடத்தே இன்பத்தை அனுபவிக்கத்தகுந்த அப் பெண்ணுக்கு நீர் துன்பத்தைச் செய்யும் ஓர் அறிவைப்பெற்றவராவீர்" என்று சொன்னான்.

இதைக்கேட்டவுடன் விளங்குகின்ற பிரகாசத்தையுடைய ரத்தினங்கள் பதிக்கப்பட்டு அவற்றால் வெளிப்படுகின்ற கிரணத்தை வீசுகின்ற ஆபரணங்களையுடைய சச்சந்தன், முதலில் உருத்திரதத்தனையும் நிமித்திகனையும் பார்த்து, "அளவிட்டுக் கைக்கொண்டு செய்து காக்கப்பட்டதும், அருமை யுடையதுமாகிய தவம் பொருந்திய தன்மையை யுடையவர்களுக்குக் கருவிலுதிக்கின்ற அக்காலத்திலேயே இவ்வுலக அனுபவங்களெல்லாம், அவரவர்கள் தவத்திற்குத் தக்கபடி கடவுளால் அளந்து ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; ஆயுள்களும் அவரவருக்கு அப்பொழுதே இவ்வள வென்று அமைக்கப்பட் டிருக்கின்றன; கடவுள் அமைப்பிற்கு மாற்றமாக உலகத்தி லொன்றும் நடவாது; இவ்வுண்மை எனக்குநன்றாகத்தெரியும்" என்று சொல்லிப்பின்பு நிமித்திகனை மாத்திரம் நோக்கி, "நீ நிலையாமையாகிய அவ்விஷயத்தைப்பற்றி இனி யெனக்கொன்றும் சொல்லவேண்டாம்" என்று அவன்மீது வெறுப்புற்றுக்கூறினான். இவ்வாறு கோபித்துக்கூறவே நிமித்தி

கன், மீண்டும் அரசனைநோக்கி, "தேனொழுகுகின்ற பெரி யமாலையைத்தரித்த எமதிறைவரே! நீர் எம்மீது மிகவும் கடுகடுத்துக் கோபித்தாலும், அரசன் ஒழுங்கில்லாத வழி யில் பிரவேசித்த காலத்தே அமைச்சர் இடித்துக்கூறி அவனை அவ் வழியினின்றுந் திருப்புதல் நட்பமாகிய தரும நூலின் முறைமை யாதலால், அந் நூல் ஒழுங்கை ஆராய் ந்தே அதன் உறுதியைக்குறித்து இவ்வளவுதூரம் விரி வாகப் பலவிஷயங்களையும் எடுத்துக்கூறினேன்; அவ்வார் த்தைகளெல்லாம் உம்முடைய கெட்டகாலத்தால் உமது செவிக்கேறாவாயின; இனிப்பெருமையும்இளமையு முள்ள பயோதரங்களையும், வாசனையும் தேனும் நிறைந்த மாலை யையு முடைய விஜயை யென்னுந் தேவியாருடைய அழகை உமக்கு எப்பொழுதும் விருந்தாகக்கொண்டு அத னாலேற்படும் இன்பத்தை அனுபவிப்பீராக; பின்னுலு மக்குவரும் கேட்டையெல்லாம் யான் நேரேயிருந்து என் னுடைய கண்களால் காணமல் துறவுபூண்டு தவத்திற் குச்செல்வேன்" என்றுகூறி மனவெறுப்பின் மிகுதியால் அவ்வாறே புறப்பட்டுக் காட்டிற்குப் போய்விட்டான்.

அதன்மேல் சச்சந்தன், தன்னுடைய நோக்கம்போ லவே இராஜகாரியங்களைக் கவனியாமல் விஜயையோடு கூடி இன்பமனுபவித்து வந்தான்; அக்காலத்தில், பின்ன ரும், "நீர்கொண்ட இப் பெண்ணசை முற்கூறிய தேவர் ளின் பெண்ணசையைப் போலவே பழிப்புண்டாகக்கூடி யது; இதுவும் அவற்றோடு சேர்ந்த இனமாம்" என்று உருத்திரதத்தன் முதலியோர் பன்முறை எடுத்துக்கூறியும், பூந்தோட்டத்திலே தோன்றிய சிறந்த மலர்மாலையை யணி ந்தவளும், மிக்க அழகினை யுடையவளுமாகிய விஜயை யின் மனத்திலுண்டான நோக்கம்போலவே நடந்து, மேற் கண்டபடி அவளை அனுபவித்த சச்சந்த மகாராஜன், தன க்கு முற்பிறப்பிலே யுண்டாகிய தீவினையானது இப்பிறப்

பிலே முளைத்துத் தோன்றியபடியினாலே, அவ்வார்த்தைகளைச் சிறிதும் எடுத்துக் கொள்ளாமற் றள்ளினதோடு, இச் செய்கையால் பின்னே தனக்கு வரக்கூடிய கெடுதியையும் எண்ணாதவனாயினான்; அப்படி எண்ணாத தன்மையினாலே, மலைச்சாரல்களில் தோன்றியனவும், சிறந்தவைகளுமாகிய இரத்தினங்களாற் செய்யப்பட்ட ஆபரணங்களையணிந்த மார்பினையுடைய அம்மன்னவன், மேலும்மேலும் அவ்விஜயையின் அவயவங்களின் நலத்தாலுண்டாகிய இன்பக்கடலிலே சிறிதும் வெறுப்படையாமல் முழுகி, அந்த இலக்குமி போன்றவளுடைய நேயமென்னும் நீங்காத இனிமையுடைய அமிர்தத்தைப்பருகி மகிழ்ந்தான்; இவ்வாறாகவே, பிரகாசிக்கின்றதும், சிறந்ததுமாகிய இரத்தினாபரணத்தை யணிந்த மார்பகத்தையுடைய அம் மன்னனும், உயர்ந்த பல ஆபரணங்களைத் தாங்கிய விஜயமாதேவியும், மார்பிலே யணியப்பட்டிருப்பதும், சிறப்புமிகுந்ததுமாகிய இரத்தின மாலையும், கருமணிபோன்ற மயிர்முடியிலே தங்கியதும், இலக்குமி வடிவமாகச் செய்யப்பட்டதுமாகிய தெய்வவுத்தி யென்னும் ஒருவகை இரத்தினாபரணமும் அறுபட்டுச் சிந்தக்கூடிய சரசவிளையாட்டையுடையவர்களாய், அருமையும் சிறப்புமுள்ள சிரோரத்தினத்தை யுடைய நாகரைப்போல, இணைபிரியாது, இருவருடம்பும் ஒருடம்புபோலாகி, மகிழ்ந்து தங்கியிருந்தார்கள்.

அப்படித் தங்கியிருக்கின்ற காலத்தே அவ்விருவரும் சேர்ந்து இன்பமனுபவித்த ஒருநாளிரவில், தேன்நிறைந்ததும், மிக்க இளமை யுடையதுமாகிய ஒரு தாமரைமலரின்மேல், அழகு நிறையும்படி வீழ்ந்த ஒள்ளிய பிரகாசத்தையுடைய முத்தைப்போன்று, பலம்பொருந்திய ஜீவகன்,விஜயையின் வயிற்றிலே கருவாகப்பொருந்தினான்; அவ்வாறு கருத்தரிக்க, அச்சமையத்திலேயே, பகைவர்களு

டைய இரத்தக்கறைதோய்ந்த வேல்போன்ற கண்களை யுடைய அவ் விஜயை, அவர்கள் மேற்கண்டவாறு அநுப வித்த இன்பத்தை நீங்கச்செய்யும் கெட்டகாலம் வருவ தற்கு முன்னறிகுறியாக ஏற்பட்டதும், அப்பொழுதே அவர்கள் சந்தோஷத்தை நீக்கியதும், கொடுமையானது மாகிய கனவைக் கண்டனள்; பஞ்சுபோன்ற அடியினை யும், பவழம்போன்ற சிவந்த வாயினையுமுடைய அவள், தூங்குகின்ற காலத்திலே மேற்கண்டவாறு கண்டகனு மூன்று; அம் மூன்றும் மறந்துபோகாமல் விழித்தபின் பும் அவளுடைய மனத்தினிடத்தே தோன்றிய படியி னாலே ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்த அவ்விஜ யை, அச்சங்கொண்டு நடுங்கினாள்; அக் காலத்திலே விருப்பந் தங்கிய சூரியன் கிழக்குத்திக்கிலே யுதயமாக இருள் நீங்கி விடியற்கால மாயிற்று; அவ்வாறு விடிந் தமாத்திரத்திலே மூங்கிலையொத்த தோள்களை யுடைய அவ் விஜயை, பண்ணமைந்த வீணையினிடத்தே தடவிப் பழகி விளங்குகின்ற விரல்களையுடையகையினால் தந்தசுத்தி முதலியன செய்து, கண்கழுவி நல்லவஸ்திரத்தை யணி ந்து, தேவர்கள் சொரிகின்ற புஷ்பமாரியையும், தீயினை யைவெல்லக்கூடியதும், பிரகாசம் மிகுந்ததுமாகிய அறவா ழியையும், வளப்பம்பொருந்திய புகழையுமுடைய அரு கக்கடவுளின் அடியைக் கனவினாலேற்பட்ட அச்சம் நீங் கும்பொருட்டு வணங்கத்தொடங்கினாள்; அவ்வாறுதொ டங்கினவள், இவ்வுலகத்திலே யில்லாத மணமும் சிறப்பும் வாய்ந்த பல புஷ்பங்களையும், சந்தனத்தையும் கைக்கொ ண்டு, 'எம்பெருமானே! நின்னடிக்கு இவை பொருந்து வனவாக' என்று அருச்சித்துத் துதித்து, அதன்மேல் வெவ்விய குதிரைகள் பூட்டிய தேர்க்கூட்ட மிகுந்தசே னையையுடைய தன்கணவனாகிய அச் சச்சந்தனிடத்தே சென்று அவனடியையும் வணங்கினாள்.

அவ்வாறு வணங்கினபின்பு, சிறந்த வலிமையையுடைய சச்சந்தன், தான் விரும்புகின்ற மனைவியாகிய அவ் விஜயையைப்பார்த்து, தேவர்கள் பார்வையினாலே இன்பத்தை நுகர்வதுபோல நோக்கத்தால் அவள் நலத்தைப்பருகி மகிழ்ந்தான்; அவ்வாறு மகிழ்ந்தபின்பு, வாசனை பொருந்திய மாலையையணிந்த அவ் விஜயை யானவள், அக் கனாக்களின் விபரத்தை அவனிடத்தே வெளிப்படுத்தக்கருதி, மேற் கூறிய மூன்று கனாக்களுள் ஒன்று, தேன் பருகும்போது இனிமையைச் செய்து பின் புளிப்பதுபோல முதலில் இனிமையைச் செய்து பின்பு கேடாகக்கூடியதா யிருந்ததால் அதை, ஒழுகுகின்ற நல்ல தேனைப்போலவும், மற்றொன்று, பாலைப்போல் எப்பொழுதும் பரிசுத்தத்தோடு விளங்கக் கூடியதாயிருந்த தாதலால் அதைப் பாலைப் போலவும், இன்னுமொன்று, அமுதூற்றானது எப்பொழுதும் சுரந்து இனிமை செய்வதுபோல, மிகவும் வளர்ச்சியுற்று உலகத்துக்கெல்லாம் இன்பத்தைச் செய்யக்கூடியதா யிருந்தபடியால், அதைச் சிற்சில கண்களாகச் சுரக்கின்ற அமிர்தூற்றைப்போலவும் அம் மூன்றையும் சொல்லத்தொடங்கினாள். அவ்வாறு தொடங்கியவள், சச்சந்தனைநோக்கி, "எனதுயிர்த்துணைவரே! யான் மிகவும் அஞ்சத்தக்க சில கனவுகளை நேற்றிரவு நித்திரையில் கண்டு விழித்தேன்; அவைகளாவன: பூங்கொத்துக்களை யணிந்த ஒரு அசோக விருட்சம், தான் அணிந்த பூங்கொத்துக்க ளெல்லாம் உதிர்ந்துகெடப் பின்பு தானும் நேராக அடியற்று வீழ்ந்தது; அப்படி வீழ்ந்தவுடனே அதனடி வழியாக ஒருமுளை, அவ் விருட்சத்தை நிகர்த்து, முத்தைப்போன்ற வெண்மையான பிரகாசத்தையுடைய எட்டு மாலைகளை யணிந்த ஒரு கிரீடத்திற்கு இருப்பிடமாக நட்டுவைத்தாற்போல ஓங்கி நின்று வளர்ந்தது" என்று கூறினாள். அப்படிக்கூறிமுடித்தவுடன், மேகங்கள் படிந்து விளங்காநின்ற மலையைப்

போல் அசையாத நிலைமையை யுடையவனாகிய சச்சந்தன், இக்கனவுகளின் இயல்பாகிய பயனை, இவ்வுலகத்திலே விளங்குகின்ற கனாநூலின் விதியினாலே ஆராய்ந்து, அசோக மரம் பூங்கொத்துக்க ளுதிர்ந்து அடியற்று வீழ்ந்ததனால் கட்டியங்காரன் தீங்கு செய்யத் தன் சுற்றமெல்லா மழிந்து தனக்கும்கேடுண்டாகுமென்றும், எட்டுமாலைகளை அணிந்த முடிதோற்றியதனால், விஜயைகருப்பத்தில் தனக்குச்சிறந்த புத்திரன்தோன்றி அவன் எட்டுப் பெண்களை மணந்து வாழ்வா னென்றும், அவ் வசோகமரத்தை நிகர்த்து ஒருமுளைதோன்றி அம்முடிக்கிருப்பிடனா யமைந்து வளர்ந்தோங்கியதால், தன்அரசுரிமை போன்ற அரசுரிமைச் செல்வமானது அப் புத்திரனுக்குப் பிற்காலத்திலே யுண்டாகி உலகமெல்லாம் நன்மையை யடையும்பொருட்டு வளர்ந்தோங்குமென்றும் தெரிந்து, தனக்குவரும் கேட்டைக்குறித்துநேர்மையாகிய குண்டலம் பிரகாசிக்கச் சிறந்த முடியை அசைத்து அசோகு முறிந்து வீழ்ந்ததனாலேற்படும் தன்னுடையகேட்டைச் சொன்னால் விஜயைவருந்துவாளென்றுகருதி, அதனை மறைத்துவிட்டு, மாலைகளை யணிந்த முடியைக் கண்டதில் மாலைகளை ஒரு கனவாகவும் முடியை ஒரு கனவாகவும் பிரித்து இரண்டு கனவாக்கி, அவற்றோடு அரசுரிமைச் செல்வம் வளர்வதற்குக் காரணமாகிய முளை தோன்றியதையும் சேர்த்து மூன்று கனவாக முடிவுசெய்து, அவள் துன்பத்தால் வருந்தி அழகுகெடா திருக்கும்படி அவற்றை நன்மையாக எடுத்துரைக்கத் தொடங்கினான். அவ்வாறு சொல்லத் தொடங்கியவன், அவ் விஜயை முகத்தைநோக்கி, "காதலி! நீ கண்ட கனவுகளின் பலனை எடுத்துக் கூறுவேன் கேட்பாயாக; அவற்றுள், தோற்றிய நல்ல முடியானது, இனிமேல் உன் வயிற்றில் பிறக்கப்போகிற மகனும்; நல்ல வாசனையுடைய எட்டுப் பூமாலைகள், அவனால் விரும்பிக் கல்யாணம் செய்யப்படும் எட்டு மனைவியர்;

நல்ல முளையானது உன்மகனுடைய செல்வமாம்'' என்று கூறிப் பின்பு அசோகமரம் முறிந்ததனுலேற்படும் தன்னுடைய சாவாகிய பயனைக்கூருமல் விட்டுவிட்டான். அப்படிச் சொல்லாதுவிடவே விஜயை மீண்டும் அவன் முகத்தைநோக்கி, "எனது பிராண நாயகரே! தாங்கள் கூறிய மற்றக் கனவுகளின் பயன்சரியே; அசோகமரம் முறிந்ததனுல் ஏற்படும் பயன்யாது? தயவுசெய்து அதனையும் கூறவேண்டும்'' என்றுகேட்கச் சச்சந்தன், அவளைப்பார்த்து மிக்க கவலையோடு, "அழகுபெற வணிந்த ஆபரணங்களையுடைய பெண்கள் நாயகமே! எனக்கு இந்த அசோகு முறிந்து வீழ்ந்ததுபோலவே ஓர் இடையூறுவரப்போகின்றது; இதைக்கேட்டு நீ வருந்துவாயென்றே இவ்விவரத்தைச் சொல்லாதுவிடுத்தனன்'' என்று கூறினுன். அப்டிச் சொன்ன மாத்திரத்திலே பொன்னுலாகிய வளையலையணிந்த விஜயை திடுக்கிட்டு மதிமயங்கி, யாதொரு வார்த்தையும் பேசாதவளாய், அழகிய நிலத்திலே அறுந்து விழுந்த ஒரு மாலையைப்போலச் சோர்ந்து வீழ்ந்தாள். மேற்கண்டவாறு அழகு நிறைந்த விஜயையானவள், உருவத்தினுலே நீலோற்பல மலரைவென்ற கண்களினின்றும் வடிகின்ற நீருடனே கீழேவிழுந்து உயிர்போனதுபோல அழகுகெட்டுக் கிடக்க, உடனே ஆண்தன்மையிற் சிறந்த சச்சந்தன் அக் கோலத்தைக்கண்டு ஆற்ருெணுத்துயரமுடையவனுய், அவள் பக்கத்திலேசென்று, "என் கண்மணியே! இந்தப் பாவியேனுடைய ஆவியை வருத்துகின்ருயே'' என்று கூறித் தன் மனைவியாகிய அவளைத் தன் இருகரங்களாலும் தீண்டித் தூக்கினுன்; அப்படித் தூக்கியவுடன் குளிர்ச்சி பொருந்திய தன்னுடைய விசாலமான மார்பிலே பொருந்தும்படி தழுவினுன்; அவ்வாறு தழுவி அவனுடைய தேகஸ்பரிசம் பட்டமாத்திரத்திலே அதன் இனிமையால் அவள் சோகம்தீர்ந்து கண்ணைத்

திறந்தாள்; அப்பொழுது அச் சச்சந்த மகாராஜன், அவளை முகமலர்ச்சியோடுபோர்த்து, "பெண்ணே! பொய்த்தோற்றமாகிய கனவின்பயனை மெய்யென்று கருதுகின்ற பெண்தன்மை உனக்கு மிகவும் அதிகரித்திருக்கின்றது; கனவின் பயனெல்லாம் நிச்சயமாகப் பலிக்குமென்று கருதுவது மிகவும் பேதைமை; யான் கனுநூலிற் கூறியபடி இவற்றின்பயனை எடுத்துச்சொன்னேனே யன்றி இவை உறுதியாக நடக்குமென்று நிச்சயப்படுத்திக் கூறவில்லை; உலகத்தில் இவ்வாறே ஒவ்வொருவரும் இரவிற் கனவு காண்பதும் விடிந்தவுடன் அதன் பயனைக்கேட்டுத் தெரிவதும் இயற்கை; ஆனால், இக்கனவின் பயனைச் சொல்லுகிறபடி நன்மையோ தீமையோ நடக்குமென்று சிறிதும் கருதுவதில்லை; அவற்றை யொரு வேடிக்கையாகப் பேசி மறந்து விடுவார்கள்; ஆகையால், நான் சொல்லியபடி நடக்குமென்று கருதி நீசிறிதும் கவலைகொள்ள வேண்டாம்; இவ் வெண்ணத்தையுடனே அகற்றிவிடு" என்று பண்ணைப் போன்ற இனிய வார்த்தைகளை எடுத்துச்சொல்லி, இக்கனவுகளின் பயன்கள் மெய்யாக நடக்கக் கூடியவைகளாயிருந்தும் அவள் கவலை நீங்கும்பொருட்டுப் பொய்யானவைகளே யென்று அவளுடைய மனத்திற் படும்படிசெய்து தேற்றித் துன்பத்தைத் தீர்த்தான். அவ்வாறு தீர்த்துப் பின்னரும் அவளுடைய அழகையும் குணத்தையும்பற்றிப் பலவாறு புகழ்ந்து அவள் நினைவை வேறுவழியிற்றிருப்பி அக் கனவுகளை மறக்கும்படி செய்யவே, தாமரை புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற மகாலக்ஷ்மியை நிகர்த்த அவ் விஜயை யானவள், தன் காதலனாகிய சச்சந்தன், அவ்வாறு கொண்டாடிய விருப்பத்தினாலே, கவலைநீங்கி மிக்க சந்தோஷத்தை யடைந்து, மாலையையணிந்த அழகிய பூங்கொம்பை நிகர்த்தவர்களாகிய சேடியர் கூட்டம் தன்னைத்தொழ, மகரந்தம் உதிர்கின்ற மாலைகளணியப்பட்டு, அகிற்புகை நிறைந்த

தும், புஷ்பங்கள் பரவியதும், மெல்லியதுமாகிய அணை யின்மேலே சேர்ந்திருந்தாள். அதன்மேல் சச்சந்தனும் விஜயையும் பாடல்களை மிகுதியாகக்கேட்டும், மிகுதியான பயனைத் தருகின்ற நாடகங்களைக் கண்களுருகும்படி பார்த்துக் களித்தும் இருந்தார்கள். இப்படியிருந்து சில நாட்கள் சென்ற வளவிலே, தேவலோகத்தாரும் பார்த்து மனமுருகும்படி அழகைப் பரப்பியனவும், வேல் போன்றனவுமாகிய கண்களையுடைய அவ் விஜயை, தன் வயிற்றி லிருக்கின்றவனும், இளம் பருவத்திலும் தான் செலுத்துகின்ற அரசநீதியாலும் முடிவிலே பெருந்தவத்தைச் செய்து முத்தியடைகின்ற தன்மையினாலும் உலகத்தா ரெல்லோரும் தன்னைப்பார்த்து மகிழ்ச்சியால் மன முருகும்படி செய்யக்கூடியவனுமாகிய சீவகன், நாடோறும் யாதொரு குறைவுமின்றிக் கருப்பத்தில் வளர்ச்சி யுற்று வருவதனாலே அக் கருப்பவாதனையால் மிகவும் தளர்ச்சியடைந்து வந்தாள். அப்போது அவ்வாறு கருப்பவேதனையடைந்து, அனுபவிக்கப்படும் பொருள்களின்மேல் செல்லும் ஆசையினால் கரும்பை நிகர்த்த தோள்கள் மெலிவுற்று அவற்றி லணியப்பட்டிருந்த மணிமகர மென்னும் தோளணியானது கழன்றும், சிவந்த வாய் வெளுத்தும், கண்கள் பசலைபூத்தன; பின்பு கருப்பம் முதிர்கின்ற சமைபத்தில் அனுபவத்தை விரும்புதற்குக் காரணமான அழகுநிறைந்த பயோதரங்களின் கண்கள் கருமையடைந்து, வெண்மையாகிய கிரணங்களை நிறைத்து வைத்திருந்த பொற்செப்புக்களைப்போல அருமையான பால்நிறைந்து, பார்ப்பவர் கண்ணுக்குத் தோற்றாத நுட்பமான இடையும் கருப்ப வீக்கத்தால் இருப்பதாகக் கண்ணறிவிற்குத் தோற்றிற்று; அதனாலே அவ்விஜயைக்குக் காம்பாய்ந்தெடுத்த அனிச்சமலரினால் தொடுக்கப்பட்ட மெல்லிய மாலையும் மிக்க சுமையாய் அதையும் அவள் தாங்கமாட்டாது, நல்ல கருப்

பம் நிறைந்த சலஞ்சலமென்னும் சங்கைப்போல மிகவும் வருந்த, "கெற்பத்தால் மங்கையருக் கழகு குன்றும்" என்றபடி அவளுடைய அழகின் நலமெல்லாம் குறைந்தது.

இப்படி யிருக்கின்ற காலத்திலே, பின்னால் கெடப்போகின்றவனும், மாலையைத்தரித்த மார்பினை யுடையவனும், மன்மதனை நிகர்த்த அழகுவாய்ந்தவனுமாகிய சச்சந்த மகாராஜன், துளைபொருந்தியதும் நீண்டதுமாகிய கையை யுடைய * யானையென்னும் நோய்பற்றிய விளாங்கனி, வெளிக்குமாத்திரம் பழவடிவமாய் உள்ளே ஒன்றுமில்லாதிருத்தல்போலப் பார்வைக்கு மாத்திரம் அரசனாயிருந்து, அரசுரிமையைத் தன்னிடத்தி லில்லாமல் நீக்கி, மேற்கூறியபடி கட்டியங்காரனிடத்தில் ஒப்புவித்துத் தான் அதைவிட்டும் நீங்கித் தனியனாகவே, அவனைச்சேர்ந்திருந்த திருமகளும், அவனிடத்தே பரிகாரவார்த்தை ஒன்றும் சொல்லாதவளாய் மெல்ல மறைந்து நீங்கினாள்; (அதாவது: அவனுக்கிருந்த சிறப்பு நீங்கிற்று.) அவ்வாறு நீங்கவே, விஜயைகண்ட கனவினால் நிச்சயமாகத் தனக்குக் கேடுசம்பவிக்கு மென்று அவனுக்கு ஓர் அறிவு உண்டாயிற்று; அப்படி உண்டான அறிவானது, பின்னை தனக்குப் புத்திரன் பிறக்கப்போவதையும், அவனைக்காப்பாற்றுவதற்காகத் தான் செய்யவேண்டிய காரியங்களையும், இன்னும் மற்ற உபாயங்களையும் மந்திரிபோல எடுத்

* யானை - என்பது விளாமரத்துக்கு வருகின்ற ஒருவகை நோய்; இஃது அம்மரத்துக்குப் பற்றினால், தேரைபிடித்த தேங்காய் போல அம்மரத்திலுள்ள பழங்களெல்லாம் வெறுங் கூடாயிருக்கும்; விளாமரங்க ளடர்ந்த விடத்தில் இவ்வித நோய்பற்றிப் பழங்கள் வெறுங்கூடாக உதிர்ந்து கிடப்பதை மிகுதியாகக் காணலாம்; துளைபொருந்திய நீண்டகை என்பது பாட்டிலுள்ளபடி யானைக்குரிய அடைமொழியாகச் சேர்க்கப்பட்டது; ஆயினும், யானை என்பதை யானை என்னும் நோயென்றே கொள்ளவேண்டும். யானை விழுங்கிய விளாங்கனியும் கூடாயிருக்கு மென்று சொல்வதுமுண்டு.

துக்கூறத் தொடங்கிற்று. (அதாவது: பின் நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி அவனுக்கு ஓர் ஆலோசனையுண்டாயிற்று.) அவ்வாறு தொடங்கிய அவ்வறிவானது, அவனிடத்தில், "மன்னனே! கொலைபொருந்திய வேலாயுதத்தையுடைய அரசர்களுக்குக் கண்ணைப்போலக் கடவுளால் ஏற்படுத்தி வைக்கப்பட்ட நீதிவழியிற் செல்லாதவனாய், ஒழுங்கில்லாத தீயவழியைச் சேர்ந்து, மிகவும் குற்றம் பொருந்திய பெண் விருப்பென்னும் கள்ளிலே நீ முழுகிய அன்றே, பெரியோர்களாற் சொல்லப்பட்ட நல்வினையினின்றும் நீங்கினவனாய்விட்டாய்; நீ இனி உனக்கு வரும் கேட்டினின்றும் தப்புவதரிது; ஆதலால், உனக்குப் பிறக்கப்போகும் புத்திரனையாவது காப்பாற்றும் பொருட்டு விஜயை தப்பிச்செல்வதற்காக ஓர் அருமையான எந்திரத்தைச் செய்விப்பாய்" என்று கூறிற்று. (அதாவது: தனக்கு ஆபத்துவருஞ் சமயத்தில் புத்திரனைக் காப்பாற்றுவதற்காக, 'விஜயையைக் கருப்பத்துடன் வெளிப்படுத்திக் கொண்டுபோகும் தகுதிபெற்ற ஓர் எந்திரத்தை இப்பொழுதே சித்தப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டு,மென்ற அறிவு அவனுக்குண்டாயிற்று.) அவ்வாறாகவே பகைவர்மீது கோபத்தைச் செலுத்தி யுத்தம்புரிந்து அதனாலடையும் வெற்றியையுடைய சச்சந்தன், மிகவும் யுக்தி பொருந்திய தொழில்களுடனே தன்ஜாதிக்குரிய நூலையுங் கற்றுத் தேர்ந்தவனும், வடிவத்தினால், 'இவன் தெய்வலோகத்திலே பொருந்திய தேவதச்சனாகியமயனே,' என்று பார்ப்போர் சந்தேகிக்கக் கூடியவனுமாகிய ஒரு பெரிய தச்சனை யழைத்து, "தச்சனே! யாதொரு தடையுமின்றி, மேலேறி ஆகாயமார்க்கமாகச் செலுத்தக்கூடிய சூஸ்திரம் பொருந்திய ஒரு மயில்வாகனத்தைச் சிருஷ்டித்து எனக்கு விரைவில் தருவாயாக; அவ்வாறு செய்யின் உனக்கு உன்வேலைத் திறமைக்குத்தக்க பரிசளிப்பேன்"

என்று கட்டளையிட்டான். உடனே அத் தச்சன், இக்கட்டளையைச் சிரமேற்கொண்டு சென்று, நன்மை நிறைந்தனவாகிய பல சீலைகளையும், பற்றுதற்குரியன வாகிய பிசினிவஸ்துக்களையும், வெண்மையாகிய நூல்களையும், நல்ல அரக்கையும், மெழுகையும், இன்னும் அதற்குரிய பலவற்றையும் சேர்த்து ஏழுதினங்களுக்குள்ளே அரசன் கூறியபடி ஆகாயமார்க்கமாகப் பறந்து செல்லக்கூடிய ஒரு சிறந்த மயில் எந்திரத்தை, அரும்பெரும் பிரயாசத்துடன், மிக்க வேலைப்பாடுகளெல்லாம் விளங்கப் பார்ப்போர் அதிசயிக்கும்படி செய்து முடித்தான். அவ்வாறு முடித்தவுடனே அவன், தோகைபொருந்திய ஒரு நல்ல இயற்கை மயிலையும், தான் வேறாகச்செய்த தோகையையுடையதும், அழகும் நன்மையும் பொருந்தியது மாகிய எந்திரமயிலையும் கொண்டு சென்று அரசனைக்கண்டு, பூமி முழுதையும் தனக்குரிமையாகக் கொண்ட அவனுடைய பாதங்களைக் கையினாலே தொழுது, அவ்விரண்டு மயில்களையும் அவன் முன்னிலையில் விட்டு, "இறைவர்பெருமானே! இவ்விரு மயில்களுள்ளும் இயற்கையாக ஆடக்கூடிய மயிலை இன்னதென்றறிந்து சொல்வீராக" என்று சொல்லித் தான் இயற்கை மயிலோடு வேற்றுமை தெரியாதிருக்கும்படி செய்த வேலைத்திறமையைக் காட்டினான். அவ்வாறு காட்டவே புகழ்மிகுந்தவனும், எல்லாராலும் விரும்பத் தக்கவனுமாகிய சச்சந்தன், அவ்விரண்டு மயில்களையும் பார்த்து, எந்திரமயிலுக்கும் இயற்கை மயிலுக்கும் எவ்வித வேறுபாடு மில்லாதிருப்பதைக்கண்டு அதிசயித்து, "இந்த எந்திரமயிலானது, நல்ல ஒழுங்குபொருந்திய சிற்ப நூலினுடைய இலக்கண வடிவமானதே; இது மிகவும் நன்றாயிருக்கின்றது; சிற்பநூற்றொழிலில் மிகவும் பெரியவனே! இப்பொருள்களை இவ்வேலைத்திறமைக்கு மகிழ்ந்து நான் கொடுக்கும் பரிசாக ஏற்றுக்

கொள்வாய்'' என்று பிரகாசத்தை வீசுகின்ற பல ஆபரணங்களை உயர்வாக நிறைத்துவைத்த ஒரு பொற்பெட்டியை அவனுக்குக் கொடுத்தான்; அத் தச்சன் அதனைப் பெற்று மகிழ்ந்து அரசனை வணங்கித் தனதிருப்பிடம் சேர்ந்தான்.

பின்பு, ஆடுதல் பொருந்திய அவ்வெந்திர மயிலாகிய வாகனத்தைச் செலுத்தும் விதத்தைச் சச்சந்தன் விஜயைக்குக் கற்றுக்கொடுக்க, அவ்விஜயை, இசைப்பாடலைச் சுரங்களின் இயல்புப்படி, படிப்படியாக உயர்த்திப் பாடுவதுபோலப் பையப்பைய அதனை மேலே செலுத்தி, மாளிகைகளின் மேலும் சோலைகளின்மேலும் சேர்ந்துவரப் பழகினாள்; இப்படிச் சிலநாள் செல்லவே, ஒரு நாள் மீண்டும் அச்சச்சந்தன், தான் கற்றுக்கொடுத்த அம் முறைப்படியே, விஜயையோடு சேர்ந்து அம் மயிலானது வேகமாக ஆகாயத்தி லோடும்படி எந்திரத்தை முறுக்கி அதன் சூட்சுமத்தைக் காண்பிக்க அதையும் உணர்ந்து கொண்டாள். அதன்மேல் அவள் தினந்தோறும் அம் மயிலை ஆகாயத்திற் செலுத்தத் தொடங்கினாள். அப்படிச் செலுத்திவருங்காலத்திலே, கண்டவர் ஆச்சரியப்பட்டு மயங்கும்படி சித்திரப்பாவையை நிகர்த்த அவ்விஜயை யானவள், வீணையைமீட்டுதலினா லுண்டாகும் இசைசாரப்பெற்ற தன்னுடைய விரலினாலே, அம்மயிலிலுள்ள எந்திரத்தை வலப் பக்கத்தில், முறுக்கினால், அம்மயிலானது மேற்கூறியமுறைப்படியே பலம் மிகுந்தெழுந்து, ஆகாயத்தில் படர்ந்திருக்கின்ற மேகத்தையும் பிளந்துகொண்டு அதற்குமேலே சென்று பறக்கும்; இன்னும், பகைவர்களுடைய புண்ணிலே நுழைந்து செல்கின்ற வேலாயுதம் போன்ற கண்களையுடையவளும், சித்திரப்பாவைபோன்ற தோற்றத்தையுடையவளுமாகிய அவள், அப் பொறியின் இடப்பக்கத்தைமுறுக்கினால், அம்மயில் கீழேயிறங்கிப் பூமியில் சார்

ந்து கால்களைக்குவித்து உட்காரும். இவ்வாறே அவள் ஒவ்வொரு நாளும் அம் மயிலை மேலே செலுத்திக் கீழிறக்கிப்பழகி ஆகாயத்தில் எவ்வளவு தூரமானாலும் செலுத்துதற்குரிய வல்லமை பெற்றிருந்தாள்.

இப்படி நடந்துவரும் காலத்திலே, நூல்களில், பயனில்லாதவை யென்று கூறப்பட்ட தீமையைச் செய்கின்ற கெட்டகுணங்களி லெல்லாம் வடித்தெடுத்த சக்கையாகிய செய்ந்நன்றி மறத்த லென்னும் குற்றத்திற் பொருந்தியிருக்கின்றவனும், நற்குணங்களாகிய சாரமெல்லாம் நீங்கிய சக்கைபோன்றவனும், கொலைபொருந்திய வேல்யுத்தத்திலே வல்லமை யுடையவனுமாகிய கட்டியங்காரனும், அரசன் சம்மதித்து அரசாட்சியைக் கொடுக்க, அவ்வரசுக்குட்பட்ட பூமியை யெல்லாம் தான் ஒழுங்கோடுகைப் பற்றிக்கொண்டபின், அவ்வரசனுக்குத் தீங்குசெய்து அரசுரிமையைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று கருதி, நீதிசாஸ்திரங்களை யுணர்ந்த மந்திரி முதலிய விவேகிகளெல்லாரும் கூறிய நீதிவாக்கியங்களைக்கேளாது, அவர்களைத் தனக்கு மாறானவர்களாக எண்ணிச் சில கொடிய வார்த்தைகளைக் கூறத்தொடங்கினான்.

அவ்வாறு தொடங்கிய அவன், அவர்களை நோக்கி, "இப்போ தேற்பட்டிருக்கும் சச்சந்த மகாராஜனுடைய பகையாகிய ஒரு சிறந்த தெய்வம் என்னிடத்தே வந்து, என்னைத் தனக்கு இடமாகக்கொண்டு தங்கியது; (அதாவது: அவனை ஒழித்துவிட வேண்டு மென்ற ஒரு பகையானது என்மனத்தில்வந்து குடியேறியது.) அவ்வாறு தங்கிய அப்பகையாகிய தெய்வம், இரவும் பகலும் இடை விடாது நெருங்கி நின்று, 'நீ அச்சச்சந்தனைக் கொன்று அரசுரிமையைக் கைக் கொள்வாய், என்று சொல்லித் தூண்டுகின்றது; அதற்கு நான் செய்யத்தக்க காரியங்கள் யாவை? அவற்றை நீங்களும் ஆராய்ந்து கூறுவீராக" என்றுசொன்

ஞன். அவ்வாறு சொல்லவே, அவன் சச்சந்தனைக்கொல்ல வேண்டு மென்று கருதிய பகைச் செய்கை உறுதிப்பட்டதை நோக்கி மந்திரிமா ரெல்லோரும், அருமையாகிய சிரோரத்தினம் சிதையும்படி நாகத்தின்மேல் ஓர் இடிவிழுந்தாற்போல, மனத்தி லச்சங்கொள்ள, அவர்களில் தைரியமுள்ளவனுகிய தருமதத்த னென்பவன் எல்லோரும் அறியும்படி சில நீதியான வார்த்தைகளைக் கட்டியங்காரனுக்கு எடுத்துச் சொல்லத்தொடங்கினன்.

அவ்வாறு தொடங்கியவன், வணக்கத்தோடு அவன் முகத்தை நோக்கி, "கட்டியங்கார னென்னும் தலைவ! பெருமையிற் சிறந்தவராகிய அச் சச்சந்த மகாராஜர், தவளை சப்திப்பது போலச் சப்திக்கின்ற கிண்கிணியை அணிந்தனவும், தாமரை மலர்போன்றனவுமாகிய சிறிய பாதங்களையும், நீலோற்பல மலரே போன்ற செழித்த கண்களையு முடையவளாகிய அவ் விஜயைமா தேவியையே தமக்கு அமுதமாகக்கருதி அவளைவிட்டு நீங்குதற் கிஷ்டமில்லாமல் அந்தப்புரத்தையே தமக்குரிய இருப்பிடமாகக் கொண்டு, மற்ற எக்காரியங்களிலும் விருப்பமின்றி அடங்கினர்; உம்மைக்காட்டிலும் தாழ்ந்த நிமித்திகனென்னும் மந்திரி, அக்காலத்திலே அவ்வரசர் பெருமானை நோக்கி, 'நீர்விரும்பிய இப்பெண்ணின் இன்பம் விண்ணுலகமும் அங்குள்ள அமுதமும் தனக்கு விலையாகக்கூடிய அவ்வளவு உயர்வுடையதே; ஆயினும், அரசு இத்தகைய பெண்ணின்பத்தைக் காட்டிலும் பெரிதாகும்; ஆதலா லிதனைக் கட்டியங்கார னிடத்தில் ஒப்புவித்தல் கூடாது' என்று சொல்லியும், அவ்வரசன் கேளாதபடியினலே, அந்நிமித்திகன் இங்கிருந்து இச் செல்வத்தை அனுபவிக்கும் இஷ்டமில்லாதவனுய், அம்மன்னனிடத்தே வெறுப்புற்றுத் துறவுக்குச் சென்றுன்; அதனலே, இப்பூமியானது குளிர்ச்சி பொருந்தியதும், அழகுள்ளதுமான தாமரை புஷ்பத்தில்

வீற்றிருக்கின்ற இலக்குமியோடும் உம்மிடத்தே தங்கிற்று; இனி வேறொரு மனக்கவலையுமில்லை; ஆயினும், நீர் நம் மன்னரை ஒழிப்பதாகிய இக்கெட்ட எண்ணங்கொள்வது எள்ளளவும் சரியன்று; தன்னை உயர்வு படுத்தினவனும், மாலை விளங்குகின்ற மார்பை யுடையவனுமாகிய அரசனை ஒருவன், பிற்காலத்திலே அந்நன்றியைச் சிறிதும் எண்ணாமல் கொல்வானாயின், அவன் குலமும் செல்வமும் இப்பூமியில் அவனைவிட்டு நீங்கிவிடும்; அவ்வாறு செய்யாமல் அவ்வரசன் எண்ணத்தின்படியே நடந்தால் அப்படி நடப்பவனுடைய குலத்தையும் செல்வத்தையும் இப்பூமியினின்றும் அகற்றுவாரில்லை; (அதாவது: அவன் குலமுஞ் செல்வமும் இப்பூமியை விட்டகலாது.) முடிகளுக்கெல்லாம் மேலாகியதும், நீண்டதுமாகிய முடியையுடையதேவரைக்காட்டிலும் அரசர், பலகுணங்களால் மிகுந்தவராயினும் உலகத்திலுள்ள சில மனிதர்கள் அத்தகைய தேவரும் அரசரும் சமமானவ ரென்று கூறுவர்; அப்படிக் கூறுவோர், உலக விஷயத்தில் தக்க ஆராய்ச்சி யில்லாதவராவர்; யான் தேவரைக்காட்டிலும், விளங்குகின்றமாலையையணிந்த அரசர்க்கு அதிகரித்துள்ள விசேஷ குணங்களை எடுத்துக்கூறுவேன்; அதனைக் கேட்பீராக; அரசென்கின்ற தெய்வமானது ஒருவனிடத்தே கிருபையைச் செய்யுமாயின், உடனே அரசாட்சியையும் அவனுக்குண்டாக்கும்; மிகுதியாகக் கோபிக்குமாயின் பயப்படும்படி அவனைச்சுட்டுவிடும்; மயக்கத்தையுடைய மற்றுமுண்டான அத் தெய்வங்களிடத்தில், ஒருவன் தம்மைவாழ்த்தினால் அவன்மீது கிருபையைச்செலுத்தி அவனை வாழச்செய்தலும், ஒருவன் தம்மைவைதால் அவனைக்கோபித்து அடித்தலும், அச் செய்கைகள் நிகழ்ந்த அப்பொழுதே யுண்டாகுமோ? மேற்கண்டவாறு அரசன் உடனே கிருபையையும் கோபத்தையும் காட்டுமாறுபோல அத்தெய்வங்கள் அப்

பொழுதே காட்டமாட்டா; 'அரசன் அன்றேறுக்கும் தெய்வம் நின்றேறுக்கும்' என்ற பழமொழியும் இவ்வுண்மையை விளக்கும்; இன்னும் அரசன் நித்திரை செய்வானுயினும் அவனுடைய ஆக்ஞையாகிய ஒளியானது எங்கும் பரவி, முழங்குகின்ற அலைகள் பொருந்திய சமுத்திரத்தாற் சூழப்பட்ட இப்பூமியைக்காக்கும்; தமக்கு ஆயுள் பதினைந்துநாளிருக்கும்போது தமது தெய்வத்தன்மை குலைந்து இமைக்கின்ற கண்களை மற்றைக்காலத்தில் இமையாதிருக்கின்றவர்களாகிய தேவர்கள், எப்பொழுதும் கண்களைமூடாமல் விழித்துக்கொண்டேயிருந்தும், உலகத்தார் தம்மைநோக்கிச் செய்யும் அறங்களையெல்லாம் அசுரர்கைப் பற்றும்போது அவற்றைக் காத்துக்கொள்ள முடியாதவராவர்; இன்னும் இவ்வுலகத்தில் மனிதர்களுள் சிலர் மிகவும் தாழ்ந்தவர்களாயிருந்தாலும் அப்பேர்ப்பட்டவர்களில், நான்கு பேர்களைக் கைகட்டிக்கொண்டு தங்களுக்குப்பின்னே திரியும்படி அரசர்கள் ஏற்படுத்துவார்களேயானல், 'மேருவையண்டிய காகமும் பொன்னிறம்' என்றதற்கேற்ப அரசரைச்சார்ந்த விசேஷத்தினுல் அவ்வகைத் தாழ்மையுடையவர்களையும், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணமாகிய நல்வினை தீவினைகளை ஏற்படுத்தும் (அதாவது: நன்மை தீமைகளை இன்னது இன்னது என்றுவகுக்கும்) தெய்வங்களென்றே இவ்வுலத்தாரெல்லோரும் தீர்மானிப்பார்கள்; அரசருடைய உயர்வு இத்தன்மையையுடையதாகும்; ஆகையினுல், அவ்வரசர்களால் வரப்பட்ட தண்டனைக்குப் பயப்படும் இவ்வுலகத்தார் அவ்வரசர் கோபிக்கக்கூடிய காரியங்களை * உவமை

---

* உவமை கூறவேண்டு மிடத்துச் சொல்வதாவது: இவர்களுடைய விஷயத்தை வேறொரு விஷயத்திற்கு உவமையாக எடுத்துச் சொல்லவேண்டியபோது சொல்லல்; அதாவது:— "கூகையைக் காக்கை பகற்பொழுதிலே வென்று விடும்; அதுபோலப் பலத்

யாகச் சொல்லவேண்டிய விடத்தும் நாவினல் சொல்ல மாட்டார்கள்; மனத்தினலும் அவற்றை நினையார்; இன்னும் நெருப்பானது தொட்டவர்களையே சுடும்; அரசர்களுடைய கோபத்தீயோ தீங்குசெய்தவர்களை அவர்களுடைய திரண்ட சுற்றத்தோடும் சேர்த்தெரித்துவிடும்; அவர்களுடைய தன்மையானது, அவர்கள்நேயத்தை விரும்பினல் அப்படி விரும்பினேர்க்கு அமிர்தத்தைப் போலவும், அவர்களுடைய பகையை விரும்பினல் அவ்வாறு விரும்பினேர்க்கு மறைந்திருந்து கொல்லுகின்ற நஞ்சைப் போலவுமாகும்; ஆகையினலே நீ இப்போது சொல்லுகிற வாய்மொழியாகிய தெய்வம் (அதாவது: உன்வாய்மொழி) மாட்சிமைப் பட்டதன்று," என்று இந் நீதியைக்கூறினன்.

இவ்வாறு கூறிப் பின்னும், வேறு சில உறுதிவாக்கியங்களையுஞ் சொல்லக்கருதி, வாள்வல்லமையினலே, எமனுக்கும், "நீ என்னேடு சண்டைசெய்யத் திறமையுடையவனயின் வந்தெதிர்ப்பாயாக" என்று ஓலை எழுதி அனுப்பிவிட்டு நடத்துவது போன்ற திறமையை நடத்தக்கூடியவனகிய அத் தரும தத்தன், கட்டியங்காரனை நோக்கி, "அரசருடைய தன்மை இப்படியிருப்பதனலே, நீ இன்னும், 'நமது சச்சந்தமன்னனை வேலாயுதத்தினலேகொன்று பொன்னுலகத்திற்கனுப்பி இப்பூமியை யாள்வது எனக்கு மிகவும் நன்மையாகும்' என்று சொல்வாயானல், அஃது எள்ளளவும் உனக்கு நன்மை தரக்கூடியதாகாது" என்று கூறினன்; இவ்வாறு கூறியது மல்லாமல் தனக்கிருந்த ஆத்திரத்தால், பின்னும் அவனை நோக்கி, "இவ்வுலகத்தில் துன்பம் மிகுந்த நோய்களுக்கு இரைகளாகின்றவர்

தில் மிகுந்த அரசர்களா யிருந்தாலும் காலமல்லாத காலத்தில் எதிர்ப்பார்களே யானல் அவர்களைத் தாழ்ந்தவர்களும் வென்று விடுவார்கள்; ஆகையால், எவர்களும் எக்காரியத்தையும் காலமறிந்து செய்யவேண்டும்" என்பதுபோலக்கூறுவது.

கள் யாரென்றால், மயிர்முடியிலே நல்ல புஷ்பமாலையைச் சூட்டித் தன்னைக் கல்யாணம் செய்துகொண்டவ னிருப்ப, வேறொரு பிரகாசம்பொருந்திய வேலாயுதத்தை யுடைய புருஷனைக் கரவாக இச்சித்துத் தேடிச் சேர்ந்தவளாகிய நீண்ட கண்களையுடைய பெண்ணும், எவ்விதக் குற்றமு மில்லாத கற்புவாய்ந்த தன்மனைவியைத் தேடாமல்விட்டு வேறொரு பெண்ணை இச்சித்த புருஷனும், அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்னும் ஐங்குரவரையும் பாதுகாவாமல் தவறியவரும் ஆகிய இவர்களே யாவர்; சிநேகத்தில் வஞ்சனை புரிந்தவனும், பிறர்மனையாளுடைய அழகைவிரும்பி அவளைச் சேர்ந்தவனும், மிகுந்த நெருப்பைப்போலும் காமாக்கினியினாலே அழியாத கன்னிப்பெண்ணை வலியவிழுத்து அவளுடைய அழியாத் தன்மையைக் கெடுத்துப் பின்பு மணஞ்செய்யாமலும் கைவிட்டு, அவளுக்கு மிக்க கலக்கத்தைச் செய்தவனும், ஜீவசெந்துக்களுடைய உயிரைக்கொன்று தன்னுடைய உடம்பை வளர்ப்பதற்காக அவற்றின் மாமிசத்தைத் தின்றவனும், மந்திரியாயிருந்து அரசனைக் கெடுத்தவனுமாகிய இவர்கள், இப்பிறப்பில் குஷ்டநோயினும், மறுமையில் நரகத்தினும் அழுந்தி வருந்துவார்கள்; இளம்பிறையானது பூர்வபட்சத்தில் வளர்ந்து பூரணச் சந்திரனாகும் வரையிலும் தானும் கூடவேவளர்ந்து பெருகி, அமரபட்சத்தில் தேய்தற்குரிய அப்பூரணச் சந்திரன் தேய்ந்துவரும் போது தானும் தேய்கின்ற சிறு * முயலைப்போல, ஒருவன், தன்னைத் தலைவனாகச்செய்து செல்வச் சிறப்பைக்கொடுத்த புண்ணிய புருஷனுடைய மனநோக்கப்படியே நடந்து அவன் வளர்ந்தோங்குகின்ற காலத்தே தானும் வளர்ந்து, அவனுக்குக் கெடுதிவரும்போது தானும் அக்கெடு

* முயல் - சந்திரனுக்கு நடுவே களங்கமாக முயல்வடிவம்போலத் தோற்றுவது.

தியைத்தாங்கி ஒற்றுமையா யிருப்பானாயின் அவ்வொழுக்க மானது இருளை விலக்குகின்ற சந்திரனைப்போலப் பழியை நீக்கும்; புகழையு முண்டாக்கும்'' என்றுரைத்தான்; இவை யன்றிப் பின்னரும், "அரசனானவன் தான் நடத்தும் செங் கோல் முறைமையில் தவறி நடப்பானாயின், இவ் வுலக மானது, கிரகங்கள் நிற்கும்நிலை குலைந்து, இராநாழிகை குறையப் பகற்பொழுதுக ளதிகப்பட்டு, மழையில்லாமல் நீண்ட நிலங்கள் விளைவுகுறைந்து, பசியும் அதிகரித்து, ஆபரணங்களைத்தரித்த பயோதரங்களையுடைய ஸ்திரீக ளினது அழகிய கற்பழிந்து, தருமங்களெல்லாம் இல்லா மற் போய்க் கெடும்; செங்கோல் முறைமைக்கு மாறாக உலகமெல்லாம் மேற்கண்டவாறு கெடும்படி அரசுரி மையை உனக்களித்துக் கேடடைந் திருக்கின்ற நமது சச்சந்தமன்னரே இதற்குச் சாட்சியா யிருக்கின்றார்; ஆத லின், நீரும் செங்கோல் முறைமையில் தவறி நடப்பீரா யின் உமக்கும் கேடுசம்பவிப்பது திண்ணம்; மேற் கூறி யபடி கொண்ட எண்ணத்தை விட்டுவிடுவீராக'' என் றும் கூறினான்.

மார்பில் தரித்த வெற்றிமாலையினால் சிறப்படைந்து விளங்குகின்ற இத்தருமதத்தன், மேற்கண்டவாறு நீதிகளை எடுத்துக்கூறியபின்பு, ஜலம்மிகுந்த கடலிலே வாழ்கின்ற மகரமீனின் வாயைப்போன்ற பெரிய வாயையுடைய *மதனன், மலையிலே கார்த்திகை விளக்கிட்டது போல, வாசனை வீசுகின்ற பசிய குவளைமலர்மாலை நிறைந்த தன் னுடைய மார்பெல்லாம் கோபத்தினாலே சீக்கிரமாகவியர் த்து, உடனே எழுந்து தருமதத்தன் முதலியவர்களை நோக்கி வெறுப்புற்றுச் சிலவார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினான்.

---

* மதனன் - கட்டியங்காரன் மைத்துனன்.

அவ்வாறு தொடங்கியவன், "தோள் வலியினலே சிறந்தவர்களாகிக் கூடிய பகைவர்களுடைய தலைகள் சிதறும்படி வெட்டி, அதனலே வீரம்பேசுவ தல்லாமல் வீணுகவாயினலே பேசுவதை யான் அறியமாட்டேன்; நீங்களெல்லோரும் பகைக்கஞ்சிக் கரிய மேகத்தைப்போல இவ்வாறு முழங்கி நீதிகளை எடுத்துக் கூறுவதனலே, பொரிக்கறியோடு சேர்ந்த சோற்றைப் பிசைந்து உண்பதற்காகத் திரட்டும் உங்களுடைய கைகள், சண்டையில் எதிர்த்துப் போர்செய்து அப்போராகிய கடலை நீந்தும் பொழுது பயத்தினல் வேர்த்து வழுவழுப்பாகி வாளாயுதத்தைப் பிடிப்பதற்கு உபயோகமற்று வழுக்கி அதனை விட்டொழியும்; ஆதலால், உங்களுடைய கைகள் சோற்றைப்பிசைவதற் குதவுமே யன்றி வாளைப்பிடிப்பதற்குதவா; இஷ்டமில்லையாயின் நீங்கள் போருக்கு வராமலிருக்கலாம்; இனி இவ்வித வார்த்தைகளைக் கூறவேண்டாம்" என்று இக் கொடுமொழிகளைச் சொன்னன்.

அதன்மேல் கட்டியங்காரனும், தருமதத்தன் கூறிய வார்த்தையினலே, தேகமெல்லாம் முத்துக்களை அழுத்திவைத்தாற்போல விரைவாக வியர்த்து, அவ் வளப்பம்பொருந்திய முத்துக்கள் போன்ற வியர்வைத்துளிகள் வரிசையாக நிறைதலைக்கொண்ட நெற்றியிலே நீண்ட புருவத்தை வளைத்து மேலேற்றிக் கண்களிலே நெருப்புப் பொறியுண்டாக, வண்மை பொருந்திய தன்கையிலே அணியப்பட்டு, இரத்தினங்களாலே பிரகாசித்த கடகத்தைத் தரையில் மோதி யுடைத்து, வெண்மையாகிய பற்களினலே வெடிசிரிப்பாகச் சிரித்து, மிகவும் கோபங்கொண்டு, அவனைநோக்கிச் சிலவார்த்தைகள் கூறத் தொடங்கினவனய், "தருமதத்த! நீ கூறிய இக் கடிய சொற்களைப் பொறுக்குந்தன்மையை யுடையவர் வேறுயாவர்? யானதலாற் பொறுத்தேன்; வேறுயாரும் பொறுக்கமாட்டார்கள்; தன்

னைச்சேர்ந்தவர்க்குப் பொருந்தாத காரியங்களை ஆலோசித்துச் சொல்பவர் உன்னையன்றி வேறுயாவர்? மற்றவர் இவ்வாறு கூறவேமாட்டார்கள்; நீயாகையால் துணிந்து கூறினாய்; இனி இத்தகைய வார்த்தைகளைக்கூறாதே; உன் சொற்கள் என் செவிக்கேறமாட்டா; யான் கோரியகாரியத்தை முடிப்பதல்லது வேறொன்றையும் இனிச்சிந்தியேன்; மிகவிரைவில் சச்சந்தமன்னன் என்கை வாளினாலேமாண்டு தெய்வலோகத்திற்சென்று தேவர்களுக்குத் தலைவனாகும்படி செய்து, இந்தப்பூமி யெல்லாம் பொன் விளைந்து பிரகாசிக்கும்படியாக யான் அரசாட்சிபுரிவேன்; இது சத்தியம்'' என்று சொன்னான்.

அவ்வாறு கூறவே, அதைத் தருமதத்தன் கேட்டுக் கட்டியங்காரனை நோக்கி, "நீர் கூறியவாறே பூமி யெல்லாம் விளைவதாக; உமது அரசாட்சியில் பொன்னும்மிகுந்து விளங்கட்டும்; யாங்கள் உமது நோக்கம்போலப் பேசவில்லை; அவ்வாறு பேசாததனாலேயே உமக்கு இத்தகைய கோபமுண்டாயிற்று; இனி உமது நோக்கத்திற்கு மாறாகப் பேசமாட்டோம்; நீர் கோபிக்க வேண்டாம்; இப்பொழுதே அரசனைக்கொல்லுவதற்கேதுவாகிய முயற்சியை யுடையவர்களாய் எல்லோரும் சண்டைக்குப்புறப்படுவோம்; நீரினால் சூழப்பட்ட இப்பூமியே அரசனைக்கொல்லும் எமனாயமைந்தது; (அதாவது: இந்தப்பூமியை யடையவேண்டுமென்ற விருப்பத்தை நீகொண்டதனாலேயே அரசனுக்கு இக்கொலை நேரப்போகின்றது) இஃதன்றி, அவர் உமக்கு அரசாட்சியைக் கொடுத்ததாகிய தவறான காரியமும் அவரைக் கொல்லக் கூடியதாயமைந்தது; அளவற்ற திரவியமும் அவரை அழிப்பதற்கேதுவாயிற்று; அவர் உம்மீது வைத்திருந்த கிருபையும் இப்பொழுது அவரைக்கொல்லத் தலைப்பட்டது; (அதாவது: அவர் உம்மீது அருள்கொண்டு நம்பியதே இக்கொ

லைக்குக் காரணமாயிற்று) உம்மீது யாதொரு குற்றமு மில்லை; குற்றமெல்லாம் சச்சந்த மகாராஜ னிடத்திலேயே யமைந்திருக்கின்றது; ஆதலால், அவருக்கு இக்கொலை நேரவேண்டிய தவசியமே" என்று அரசன் தலைவிதி யைப்பற்றி நொந்தும் கட்டியங்கார னுடைய செய்கையைப் பற்றி வெறுப்படைந்தும் கூறினன்.

அதன்மேல், பூமியினிடத்தே தோன்றிய இலக்கு மியை நிகர்த்த விஜயையினுடைய நீக்குதற்கரிதாகிய காத லானது மிகுந்ததனாலே, அவளுடைய அவயவ நலத்தின் அனுபவமாகிய கடலிலே யழுந்தி, வெல்லுதற் கரிதாகிய அவனுடைய சேனைகளை யெல்லாம் கட்டியங்காரனுக்கு வசமாகும்படி விட்டுவிட்டுத் தனித்திருந்தவனும், பிரகாச முள்ள தாமரையரும்புபோன்ற சிகரத்தோடுகூடிய முடி யையணிந்த சிரசை யுடையவனுமாகிய அரசனை மிகக் கொடியவனாகிய அக் கட்டியங்காரன், மிகவும் வெறுத்துக் கருப்பத்திலிருக்கும் பிள்ளையுடனே கொல்லக்கருதி, அதற் குரிய கடுமையான தொழில்களை மதனனோடு கலந்து ஆலோசித்தான். அப்படி ஆலோசித்த அவன், சச்சந்த மன்னனுடைய சுற்றத்தா ரெல்லோரும் விலங்கிலே அகப் பட்டுச் சிறைச்சாலையைச் சேர்ந்து துன்பத்தி லாழ்ந்து வருந்தும்படி செய்து, (அதாவது: எல்லோரையும் சிறைப் படுத்திவிட்டு) தன்னிடத்தே பொருந்தித் தனக்கு வசப் பட்ட மனிதர்களுக் கெல்லாம் அளவற்ற திரவியங்களை வாரிக்கொடுத்து, எல்லோரையும் தன்னுடைய நோக்கத் திற்கு இணங்குமாறு செய்து, தன்னுடைய ஒப்பற்றகுடை நிழலைப் பரப்பி நாட்டையெல்லாம் தனக்கு வசப்படுத்தித் தான் உத்தேசித்தகாரியம் நிலைப்பதற்காக வேண்டும்முயற் சிகளைச்செய்து மலையினுச்சியிலேயிட்ட விளக்குப் போலப் பழியாகிய விளக்கையிட்டு (அதாவது: எங்கும் பழியைப் பரப்பி) விளங்கினன்; அதன்மேல் அவன், மன்னனோடு

போர்க்கெழும்படி ஆக்ஞாபிக்க, அவனுடைய செல்வ மிகுந்த சேனையானது, பெரியயானைகளையும், குதிரைகளையும், பரந்து செல்கின்ற தேர்களையும் அலங்கரித்துப் பிரகாசம் மிகுந்த வாளாயுதங்களையும், விற்களையும், விளங்குகின்ற வெற்றிலைபோன்ற வடிவமுள்ள வேலாயுதங்களையும் தாங்கிப் பழமையாகிய இராஜமாபுரத்தின் தெருக்களிலெல்லாம் நெருங்கி, முடிவாகப் போர்த்தொழில் மிகுந்த வேலாயுதத்தையுடைய சச்சந்தனது அழகிய அரண்மனையிற் புகுந்து, உள்ளேநின்ற அரசனுடைய வாகனம் முதலியவைகளையெல்லாம் கைப்பற்றி, அதன்மேல், அவ்வரசனிருக்கும் அந்தப்புரத்தைச் சுற்றி வளைந்து கொண்டது; அச் சேனையுடன் கட்டியங் காரனும் போர்க்கோலங் கொண் டெழுந்தான்.

மேற்கண்டவாறு சேனைகள் சென்று அந்தப் புரத்தை வளைக்கவே, செவ்விய கோலையும், வெவ்விய சொல்லையுமுடைய வாயில் காப்பாளன், சச்சந்தனிடத்தில் விரைந்தோடி, "நீண்ட நிலத்தையாளக்கூடிய மன்னர் பெருமானே! உம்மைப் பாதுகாத்துக் கொள்வீராக! நீட்சியையுடைய கிரீடத்தைத் தரித்த பெருமை பொருந்திய வள்ளலே! உம்மைப் பாதுகாத்துக் கொள்வீராக!! உயர்ந்த ஆபரணங்களை யணிந்த மார்பழகு பொருந்தியவரே! உம்மைப் பாதுகாத்துக் கொள்வீராக!!! மகா புண்ணியங் தங்கிய வேந்தரே! உம்மைப் பாதுகாத்துக் கொள்வீராக!!!! கட்டியங்காரன் உம்மைக் கொல்ல வேண்டுமென்று கருதிச் சேனையோடும்வந்து வளைந்து கொண்டான்" என்று, தூரமாக நின்று நிலத்தில்விழுந்து வணங்கி, மிகவும் பரபரப்போடு கூறினன். இவ்வாறு கூறவே, மேகத்தில் தோன்றுகின்ற பேரிடிபோல வெடித்த லுண்டாகப் பேசுகின்ற சொல்லையுடையவனுகிய சச்சந்தன், ஆச்சரியத்தையடைந்து, தன்னிடத்தில் எவ்வகைச் சேனை

யுமில்லாதிருந்தும் தனக்குள்ள * இராசத குணத்தன்மையி ஞலே, மிக்க வீராவேசத்தை யடைந்து, தன் பக்கத்தில் சேனைகளிருப்பதுபோல நினைத்து, உடனே அச் சேவகனை நோக்கி, "பலம் பொருந்திய நிலையையுடைய வாயிற் கதவு களை யெல்லாம் உள்ளே பகைவர்வராதபடி திருத்தமாகிய தாழிட்டுப் பூட்டுவீராக; சீக்கிரத்தில் பசிய பொன்னுலா கிய தேரையும், மிக்க மதம் ஒழுகுகின்ற யானைகளையும், குதிரைகளையும் போருக்கெழும்படி அலங்கரிப்பீராக; இடமகன்ற மதிற்புறத்தைக் காக்கும் காவலர் விரைவாக அவ்விடத்திலே சேர்ந்து போரைத் தொடங்குவாராக" என்று துடிதுடித்துச் சொன்னான். அவ்வாறு சொல்லி, மேலும் பொன்னினாலே பிடி முதலியன செய்யப்பட்டு விளங்குவதும், சப்திக்கின்ற வீரக்கழலை யுடைய பகை யரசர்கள் கண்டு அஞ்சி நடுங்கக்கூடிய வடிவத்தையுடை யதும், மின்னலைப்போல பிரகாசிப்பதுமாகிய வாளாயுதத் தை வரிகளையுடைய புலித்தோலால் செய்யப்பட்ட உறை யினின்றும் நீக்கிக் கையிலே யேந்தி அதைநோக்கி, "வஞ்ச னையிலே தலைமையாகிய நெஞ்சையுடைய கட்டியங்காரன் நம்மைக்குறித்து எண்ணிய எண்ணத்தைப் பார்ப்போம்" என்று பிரகாசம் பொருந்திய பற்கள் வெளியில் தெரியும் படி கோபச்சிரிப்புச் சிரித்தான்.

அப்படிச் சிரித்துவிட்டு அதன் மேல் கருப்பத்தோடி ருக்கின்ற விஜயையை இத்தருணத்தில் காப்பாற்ற வேண்டு மென்ற எண்ண முண்டானபடியால், உடனே அவளிடத் தில் விரைந்து சென்று, அவள் முகத்தை நோக்கி, "நங் கையே! நீ இப்பொழுது சிறிதும் வருந்தாதே; நமக்கு நற் பொருளாகிய பிள்ளை பிழைப்பதற்காக நீ இப்பொழு

---

* இராசதகுணம் - முக்குணங்களுளொன்று; இஃது ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தானம், கல்வி, கேள்வியென்னும் எழுவ கைக் குணங்களை யுடையது.

தே இவ்விடத்தைவிட்டு எந்திர மயிலிலேறிப் புறப்பட வேண்டும்; ஏனென்ருல், நீ அன்றிராப்போதிலே கண்ட கனவெல்லாம் பொய்யென்று யான் கூறியும், நம்முடைய கெட்டகாலத்தால் அவை மெய்யாகவே அவற்றின்பயனைத் தரக்கூடியவையாகின; இப்பொழுது கட்டியங்காரன் என்னைக் கொல்லக்கருதித் தன் சேனையுடனேவந்து சூழ்ந்து கொண்டான்; இனியான் தப்புவது சந்தேகம்; நீ இப்பொழுதே தவறிச் சென்ருல் உன் கருப்பத்திலிருக்கும் புத்திரன் அவன் கையால் மடியாமல் இவ்வுலகத்திலே தோன்றிப் பிற்காலத்தில் இப்பகையை முடிப்பான்; ஆகையால், சிறிதும் தாமதிக்காதே; இஃது அபாயமான தருணமாயிருக்கின்றது," என்று கூறினன். இப்படிக்கூறவே, சிவந்த கயல்போன்ற கண்களையுடையவளாகிய அவ் விஜயை, இவ் வார்த்தைகளைக் கேட்டுத் திடீரென்று மயங்கிக் குண்டலத்தை யணிந்த முகத்திலே கையாலறைந்துகொண்டு, அறுந்து வீழ்கின்ற வாசனை மிகுந்த மலர்மாலை போலத் தரையில் வீழ்ந்து சோர்ந்து புரண்டு, அவ்வாறு புரளுவதனுல், தன் கருப்பத்திலிருக்கின்ற விருப்பமுள்ள மன்மதன்போன்ற புத்திரனுக்கு மிக்க வருத்தத்தை யுண்டாக்கினுள். இப்படி விழுந்து புலம்பவே, மல் யுத்தத்தையுடையவர்களை யெல்லாம் தோற்கும்படிசெய்து வருத்தி, அதனலே உயர்ச்சியுற்றுவீங்கி, மலைகள் திரண்டிருப்பது போலத் திரண்டிருக்கின்ற தோள்களை யுடையவனும் வீரக்கழல் பொருந்திய பாதங்களையுடையவனுமாகிய சச்சந்தன், மேற்கண்டவாறு துன்பப்பட்டுத் தன்னிலைமை கெட்டு மயங்கிப் பூமியிலே விழுந்தவளும், அமுதத்தை நிகர்த்தவளுமாகிய அவ்விஜயையின் பக்கத்திலே சேர்ந்து, அவளை எடுத்துத் தழுவி, அவளுடைய வருத்தத்தை நீக்கி, இளமையாகிய பயோதர வனப்பையுடைய அவளுக்கு முன்னே எப்பொழுதும் அன்பினின்றும் நீங்காத வார்த்தைகளையே கூறுகின்றவனுயிருந்தும் அச்சமையத்திலே கீழ்க்

கண்டவாறு அன்பினின்றும் நீங்கியவைகளாகிய வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினவனாய், அவள் முகத்தை நோக்கி, "பேதையே! அணியப்பட்ட வளையல் பிரகாசிக்கின்ற தோள்களை யுடையவளே!! இவ் வுலகத்தில் மானிடர்கள் சாவதும், அவ்வாறு இறந்து பின்பு பிறப்பதும், அப்படிப் பிறந்து இவ்வுலகத்தில் வளர்கின்ற காலத்திலே நல்ல செல்வமுள்ள வாழ்வையடைவதும், தரித்திரப்பட்டுத் தாழ்ந்துபோவதும் அவரவர்கள்செய்த வினைகளின் பயனுக்குத் தக்கபடி யுண்டாகும்; ஆகையினால், மேற்கூறியபடி சாவதற்கும் வாழ்வுகெட்டுத் தாழ்மையடைவதற்கும் வருந்துவதும், பிறப்பதற்கும் பிறந்து செல்வத்தோடு வாழ்வதற்கும் சந்தோஷத்தை யடைவதும் ஆகிய செய்கைகளெல்லாம் நுட்பமாகிய அறிவில்லாத தன்மையினாலே நிகழ்வனவாம்; உலக வுண்மை யிப்படி யிருக்கின்றது; இஃதை யுணராமல் இப்போது வருந்துவதனாலே நீ அறிவில்லாதவளாயிருக்கின்றாய்; உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் மேற்கூறிய அவ்வினைகளை யடைவது இயற்கையாகும்; நீ இதற்காக வருந்துவது தகாது; இன்னும் நம்முடைய பழமையான பிறப்புக்களை எண்ணினால், அவ்வாறு எண்ணிப் பற்பல எண்ணின் தொகுதிகளாக ஏற்படுத்திக் கணக்கிடும் பொருட்டுச் சமுத்திரத்திலே தோண்டப்பட்ட மணல்களும் * உறையிடுவதற்குப் பற்றாத அளவை

* உறையிடல் - நெல் அளக்குங் காலத்தில் அறுபது மரக்காலுக் கொருமுறை ஒரு கைப்பிடி நெல் அள்ளிவைப்பது; இதற்கு உறையீடு என்றும் பெயர்; அறுபது மரக்கால் கொண்ட அளவை உறையென்பதும் இவ்வாறு பல உறைகள் கூடியபோது உறையொன்றுக்கு அறுபது மரக்கால் வீதமாகக் கூட்டிக் கொள்வதும் பாண்டிநாட்டு வழக்கம்; அறுபது மரக்கால்கொண்ட உறை அந்நாட்டு வழக்கப்படி ஐந்துகலம். இக்கணக்கை இங்கே காட்டிச்சொன்னதன் கருத்து, பல எண்ணுக்கு ஒரு பிடியாக அள்ளி வைப்பதற்கும் பற்றா என்பதாம்.

யுடையனவாகும்; அப்பிறப்புக்களி லெல்லாம் நாம் பிறந்தும் எப்பொழுதும் ஒன்று சேராமல் வேறுபட்டிருந்தோம்; இனி இவ்வுடம்பைவிட்டு நீங்கி நாம் செல்லுகின்ற வேறாகிய அக் கதிகளுள்ளும் ஒன்று சேரமாட்டோம்; இப்பொழுது நாம் இல்லறத்திலே சேர்ந்து நின்றது மிகவும் அற்பமான இரண்டுநா ளுறவாகும்; இவ்வாறு குறைந்த உறவை நீ பெரிதாக நினைத்து மனம் வருந்தவேண்டாம்; ஒள்ளிய வளையலையணிந்த என தாருயிர்த்துணைவியே! வண்டுகள்நெருங்கிச் சப்திக்கும் அசோக விருக்ஷத்தி னடியிலே வீற்றிருக்கின்ற அருகக் கடவுளால் ஆராய்ந்து சொல்லப்பட்ட நுட்பமாகிய நூல்களையெல்லாம், உள்ளே நிறையும்படி உண்டதுபோலப் படித்துணர்ந்திருக்கின்ற நீயும் அறிவில்லாத தன்மையை யுடையவளாய், என்வார்த்தையைக் கேட்பதினின்றும் வேறுபட்டுக் கண்களிலே அருவிபோல நீர்வடிய அழுது பெருமூச்சுவிட்டு, இத்தன்மையை யுடையவளாய்ப் புலம்புவது நின் உயர்ந்த அறிவுக்குத் தகுதியான காரியமன்று; ஆகையால், உன்னுடைய கவலையை நீக்கிவிடுவாயாக," என்று கூறினான். இவ்வாறு கூறிப் பின்னும், நெருப்பின் தன்மை சேர்ந்திருப்பதும் மிகப் பிரகாசிக்கக் கூடியதுமாகிய வாளாயுதத்தைப்பிடித்த கையினை யுடையவனும், இளமையாகிய ஆண் சிங்கத்தைப் போன்றவனுமாகிய அச் சச்சந்தன், அவளை நோக்கி, "முறுக்காகிய வீணையின் நரம்பும்கேட்டு இரங்கக்கூடிய இனிமைவாய்ந்த சொற்களையுடைய பெண்ணே! புகழையுடைய அரசர்கள் தங்களுக்கு ஆபத்து வந்த காலத்தில், முதலில் தங்களுடைய மனைவியரை வெளியேற்றிவிட்டுத் தான் பின்பு தாங்கள் செல்வதற்கு வழி பார்ப்பார்கள்; அவ்வாறு மனைவியரை வெளியேற்றாமல் தாங்கள் போவதற்கு மனந்துணியார்; ஆதலால், இப்பொழுது நீ புறப்படுவது, எனக்கு மிகவும் பொருத்த

மானகாரியம்; உனக்கும் தகுதியானதே; நீ ஏறிச்செல்வதற்குத் தகுதியான எந்திர மயில்வாகனமும் அமைந்திருக்கின்றது; இதில் ஏறி யாதொரு தீங்குமில்லாமற் செல்லலாம்; இனி நீ சிறிதும் கவலை கொள்ளவேண்டாம்; நீ எவ்வகைச் சிந்தனையுமின்றி இப்பொழுதே புறப்படுவது தகுதியான காரியமாகும்'' என்றும் சொன்னான்.

இவ்வாறு சொல்லவே இவ் வார்த்தைகளெல்லாம் நியாயமாகத் தோற்றினபடியால், விஜயை, ஆற்றுத்துயரத்தோடு இக் காரியத்திற் கிணங்கினாள். அதன்மேல், சச்சந்தன், எலும்பெல்லாம் நெகிழ்ந்துருகி, மனங்கனிந்து நின்றொழுகிச் சோரும்படி சேர்ந்த அன்பானது மிகுவதனாலே, தன்னைவிட்டு நீங்குவதற்கு வருந்தி ஆற்றாதிருந்தவளும், தனது நிறைந்த உயிர்த்துணைவியுமாகிய விஜயையைத் துன்பமில்லாத எந்திரமயிலாகிய வாகனத்தில் ஏற்றுவித்தான். அப்படி ஏற்றுவித்தபின்பு, அவன், விஜயை சுகமாகப்போய்ச் சேரும்பொருட்டு அநந்தசுக மிகுந்து அதனாலே சிறப்படைந் திருக்கின்ற கடவுளுடைய, 'ஓம் ணமோ அரஹந்தாணம்' என்னும் மந்திரத்தைக் கூறி வாழ்த்த, துணைவியாகிய அவ் விஜயையும், யாதொருசெய்கையும் செய்ய முடியாதவளாய்ச் சோர்ந்து அதன் மேற் சேர்ந்து புறப்பட்டாள். உடனே சச்சந்தன் அந்த எந்திர மயில்மேலேறிச் செல்லக்கூடிய சூஸ்திரத்தை முறுக்கவே அது விஜயையைத் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்றது.

மேற்கண்டவாறு விஜயை யானவள், ஜலமானது நீங்காது தங்கியிருந் தொழுகுகின்ற குவளை மலர்போல நீண்ட கண்களினின்றும் வெவ்விய கண்ணீரானது வடிந்து, கச்சணிந்து விளங்குகின்ற மார்பகத்தை யெல்லாம் நனைக்கும்படி அழுதுகொண்டு சென்றபிறகு, செல்வச் சிறப்பையுடைய சச்சந்தனும், நெஞ்சகம் சிவந்து தீப்பற்றி

யெரியும்படி கோபித்து, ஊழிக்காலத்தில், பூமியையெல்லாம் தனக்குள்ளே அடக்கியதும், குளிர்ச்சி பொருந்தியதுமாகிய சமுத்திரஜலத்தை, ⁕ முன்னே அதனை உண்டாக்கியதும், ஒப்பற்றதுமாகிய ஊழி நெருப்பின் திரளே சுட்டெரிப்பதுபோலத் தான் முன்னே உண்டாக்கின படையை அழிப்பதற்கு அச்சேனைகளோ டெதிர்த்து முழங்கினன். இவ்வாறு எதிர்த்து, இச் சச்சந்தன், குண்டலம் பிரகாசிக்கின்ற முகத்தினையுடைய பெண்கள் காக்கின்ற அந்தப் புரத்திலே அகப்பட, அப்போது குகைக்குள்ளே யிருக்கின்ற இடிபோன்ற முழக்கத்தையுடைய சிங்கத்தை யானைக் கூட்டங்கள் வளைத்ததுபோல, நூல் பிளக்கும்படி அதனிடத்தே எய்யக்கூடிய கூர்மைவாய்ந்த வேலாயுதத்தையும், பிரகாசிக்கின்ற வாளாயுதத்தையுமுடைய வீரர்களாகிய கடலின்நடுவே சேர்ந்து, அதனோடு மழைபோல மதமொழுகுகின்ற முகத்தினையுடை யானைப் படைகள், † 'யானைச்செண்டு' என்னும் விளையாட்டை விளையாடக்கூடிய செண்டு வெளியென்னும் இடத்திலே அவனை வளைந்தன. அவ்வாறு வளைந்த மாத்திரத்திலே சச்சந்தன், நெஞ்சம் வெதும்பிக் கோபித்து, கூர்மையோடு செய்யப்பட்ட வாளாயுதத்தை உறையினின்றும் உருவி, அதனுடனே பிரகாசம்பொருந்திய பெரிய இரத்தினங்களை யழுத்திப் பல மயிர்களைச்சேர்த்துச் செய்யப்பட்ட கேடகத்தையும் சூரியனைக் கையிற்பிடித்துச் சுழற்றுவதுபோலச் சுழற்றி, விண்ணுலகத்திலிருந்து தவறிப் பூமியிலே விழுந்தவனும்,மூட்டுவாயையும், அழகிய பிரகாசத்தையுமுடைய

---

⁕ நெருப்பிலிருந்து நீருண்டாகுமென்பது பெரியோர் அபிப்பிராயம்.

† யானைச்செண்டு - ஒருவகை விளையாட்டு ; இவ்விளையாட்டைச்செய்யு மிடத்தை வாரியென்றும், செண்டுவெளி யென்றும் சொல்வதுண்டு ; இவ்விடம் அந்தப்புரத்துக்கு வெளியேயுள்ளது.

முத்துவடத்தை அணிந்தவனுமாகிய ஒருதேவனை நிகர்த்து ஆர்ப்பரித்தான். அச்சமயத்தில், கட்டியங்காரனுடைய சேனையைச்சார்ந்த வீரர்கள், இவன்மீது, மழையைப்போலக் கடுமையானபாணங்களை வில்லினின்றும் விடுத்துச்சொரிந்து கோபத்தோடு முழங்கினார்கள். அப்படி முழங்கிய பின்பு, மிக்க வீரமும் பெருமையும் பொருந்திய இச் சச்சந்தனும், அவர்களா லேவப்பட்ட அப் பாண மழையைத் தன்னுடைய வாள்வல்லமையினாலே விலக்கி மேற்கூறிய செண்டு வெளியிலே நின்று கடுமையோ டெதிர்த்து நால்வகைச் சேனைகளையும் நாசப்படுத்தி அப்பாற்சென்றான். அவ்வாறு சென்ற மாத்திரத்தில், அக் கட்டியங்காரனுடைய பேரணியினின்ற பெரிய யானைப்படைகள் நெருங்கி வந்து இவனோ டெதிர்த்தன. அப்படி யெதிர்த்தவுடனே, கோபமிகுந்தவனாகிய சச்சந்தன், தனக்கு முன்னே வந்தெதிர்த்த மதவொழுக்குடைய யானைக்கூட்டங்களின் நெற்றியிலே சொல்லுதற் கரிதாகிய சிறப்பினையுடையதும், இரத்தந் தோய்ந்ததுமாகிய தன்னுடைய வாளாயுதத்தை, ஊற்று நீரொழுக்கையுடைய நீண்ட மலையிலே இடியானது கோபித்து இடிப்பதுபோல அழுத்தி, அவ் வாளானது வளைந்து போகும்படி வேகங்கொண்டு வெட்டினான். அப்படி வெட்டியதனாலே, நீக்குதற்கரிதாகிய மதத்தினையுடையனவும், மிக்கவீறுப்போடு வந்தெதிர்த்தனவு மாகிய அந்த யானைகளெல்லாம் மத்தகம்பிளந்து இறந்தொழிந்தன. இப்படியே இச் சச்சந்தன், வேலாயுதங்கள் நெருங்கப்பெற்ற வேலிபோன்ற வேற்படையையும் பிளந்து, வெவ்விதாகிய கோபம்பொருந்திய கண்களையுடைய வீரர்களையெல்லாம் சிறந்த மயிரினாற் செய்யப்பட்ட கேடகத்தினாலே இடித்துத், தன்னை வலைபோலச்சூழ்ந்த வாட்படையை அறுத்துச் சிதைத்து, ஆங்குப் பெருகியோடிய மாமிசத்தை யுடைய இரத்த வெள்ளத்திலே படிந்து கலக்

கித் திரிதலினாலே, தேன்பொருந்திய மாலையை யுடையவனாகிய இச் சச்சந்தனது சிவந்த போர்க்களமானது, மிகவும் சிறப்புற்று இவனுடைய வீரத்தோடு விளங்கிற்று.

பூமிக்குத் தலைவனாகிய சச்சந்தன், உவர் பொருந்தியதும், உலகத்தை ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களை நடத்துதலாகிய தன்மையை யுடையதுமாகிய கடலானது தன்னைக் காத்திருக்கின்ற கரையை யுடைத்துக் கெடுப்பது போன்று, தமக்குக் காவலாகிய அரசனைத் தாமே கொல்லத்துணிந்த படைகளுக்குள்ளே நிகரற்றுத் தனிமையை யுடையவனாகி, மேற்கூறியவாறே பெரிய யானைகளைவெட்டிக் கொல்ல, அதைக்கண்டு தற்பெருமையிற் சிறந்தவனாகிய கட்டியங்காரனும், மிகக்கோபித்து, யானையின் மேலேறிச் சண்டையில்லாத படியால் நெடுநாள் ஆயுதசாலைக்குள்ளேயே யிருந்துவந்ததும், பிரகாசம் மிகுந்ததுமாகிய சக்கரத்தை வெற்றியோடு கையிலேந்தி, அப் படையுள்ளே புகுந்து, கேதுவென்னும் பாம்பானது பிடிக்க அதனாலே பாதிப்பாகம் மறைந்து ஆகாயத்திலே ஓடுகின்ற சூரியனைப்போலாகும்படி சச்சந்தனுடைய கேடகத்தை இருபிளவாக அறுக்க, அதுகண்டு அச் சச்சந்தன், விரைவாக இடிபோல முழங்கிப் பெருங்காட்டைப்பற்றி யெரிக்கின்ற நெருப்பைப்போல அக்கட்டியங்காரனுடைய மிகுதிப் பாட்டிற்காகச்சீறி மிகவும் கோபித்தான்; அப்படிக் கோபித்து, உடனே முகத்தில் பகைவருடைய கொழுப்பாலுண்டாகிய நெய்யை அணிந்து, அதனாலே மிகவும் பிரகாசந்தங்கி நெருப்பின் தன்மை மிகுந்து, தலைப்பில் மிகவும் கூர்மையைப்பெற்ற நுனியை யுடையதாகிய வாளாயுதத்தை, நெருப்புப்பொறி சிதறும்படிவீசிக் கட்டியங்காரன் ஏறிவந்ததும், முகத்திலே மையெழுதப் பெற்றதுமாகிய மதயானையை மிகவும் பலங்கொண்டு வெட்ட, அதனாலே அந்தயானையானது, கையின்

அடிப் பாகம் அறுபட்டுக் கீழேவிழுந்தது. அப்படி விழவே கட்டியங்காரன் அதற்குப் பொறுதவனாய், மாலையை நுனியிலே சூட்டப்பெற்று, மேகத்தில் தோன்றுகின்ற மின்னலைப்போல விளங்குகின்ற வேலாயுதத்தை வலக்கையிலேயேந்திச் சச்சந்தன் அணிந்திருந்த மாலையானது சிதைந்து அழகுகெடும்படி, சோலையில் பொருந்தியிருக்கின்ற மயில்களைப்போன்ற தேவியர்கள் தழுவி நித்திரைசெய்கின்றதும், அழகிய மலைபோன்றதுமாகிய அவனுடைய மார்பிலே வலிமிகுந்த எமனைப்போல எறிந்தான். அப்படி எறிந்த மாத்திரத்திலே அவ் வேலாயுதமானது மிக விரைந்து சென்று, சச்சந்தன் மார்பிலே தைத்தது; அவ்வாறுதைத்து மார்பிலுள்ள மாமிசத்தைத் தனக்கு இடமாகக்கொண்டு தங்கியிருந்த அவ்வேலாயுதத்தைத் தன் கையினால் சச்சந்தன் பிடுங்கினான்; அவ்வாறு பிடுங்கவே பாய்ந்த வேகத்தினாலே அது வளைவுற்றிருந்தது; இலக்குமியை நிகர்த்த தேவியர்களுடைய கண்களெல்லாம் தமக்கு இடமாகக்கொண்ட (அதாவது: அழகைநோக்கும்பொருட்டு அவர்களுடைய பார்வைகள் தங்கியிருந்த) தன் மார்பிலே மோதி அவ்வாறு வளைந்துபோ யிருந்ததும், கொலை பொருந்தியதும், பிரகாசமுள்ளதுமாகிய அவ்வேலாயுதத்தைக் கொண்டே பகைவர்களை நாசஞ்செய்யக் கருதி, வீரர்களெல்லாம் உயிர்நீங்கிப் பொன்னுலகத்தையடையும்படி, அவன் அவ்வேலாயுதத்தை,வெட்டுண்டு பூமியைத் தனக்கு இடமாகக்கொண்டு வீழ்ந்துகிடந்தயானையினுடைய அழகிய தந்தத்தின் இடையிலே புகுத்தியழுத்து, அது வளைந்ததற்கு ஏதுவாயிருந்த இளக்கத்தைப் போக்கி அவ்வளைவை நிமிர்த்தெடுத்து, மிகவும் பிரகாசமுடையதாகச் செய்தான். பெருமையிற் சிறந்தவனாகிய சச்சந்தன் மேற்கண்டவாறு தன்மார்பிலே பாய்ந்த வேலாயுதத்தைப்பிடுங்கி வளைவைப் போக்கிய பின்பு அதனைக்

கையில் பிடித்து வீரர்களோ டெதிர்த்துப் போர்செய்யத் தொடங்கினன்; அவ்வாறு செய்யவே வீரர்களெல்லோ ரும் அந்த வேலினால் இவனை எமனென்று நினைத்து நடுங் கிக் கீழேவிழுந்து உயிர்துறந்தார்கள்; யானைக்கூட்டங்க ளெல்லாம் பயந்து ஓடின; இவற்றைப்பார்த்து பிரகாசிக் கின்ற பொன்னலாகிய மாலையையணிந்த மற்ற வாள்வீ ரர்கள் இவன் சமீபத்தில் நெருங்காது பயந்து நீங்கினர் கள்; இவ்வாறாகவே, அஞ்சாத்தன்மையையும் ஆண்மை யையுமுடைய கட்டியங்காரன், அவ் வீரர்களை மிகவும் கோபித்தவனாய், முன்னேதான் ஏறியிருந்த யானை சச்சங் தன் கையினால் மேற்கண்டவாறு வெட்டுப்பட்டிறந்தபின்பு ஏறியிருந்த மற்றொருயானையை மிகவும் வேகமாகச்செலு த்தி, இரும்பினாலே ஆனைநெருஞ்சிமுள் வடிவ மாகச் செய் யப்பட்ட கப்பணமென்னும் ஆயுதத்தை அச் சச்சந்தன் மீது சிதறினன்; அப்படிச் சிதறினபோது, சச்சந்தனை வன், வெள்ளிய வேலாயுதத்தினாலே கிரௌஞ்சகிரியின் மார்பைப்பிளந்து மிகவும் உயர்வாகிய மயில்வாகனத்தின் மேலேறி முன்னே நின்ற முருகக்கடவுளினுடைய புரு வத்தைப்போலத் தன்னுடைய புருவங்களை நெரிந்தொ டிந்த புருவங்களாகும்படி கோபத்தினாலே வளைத்து, அக் கட்டியங்காரன் ஏறிவந்த வேறு யானையை முன்திருத் திப்பிடித்த வேலாயுதத்தினாலே கொன்று வீழ்த்த அவன் பின்னும் மற்றொரு யானையின்மீது ஏறினன்; அப்படி ஏறவே அக் கட்டியங்காரனுடைய வீரர்க ளெல்லோரும் மிகக் கோபித்துச் சச்சந்தனை வளைந்து கொண்டார்கள்; அப்போது சச்சந்தன், அவ்வாறு வளைந்து நின்ற வீரர் களுக்கெல்லாம் ஆயுதங்களை ஏவுவதற்கு ஓர் இலட்சிய மாகி நின்றான். (அதாவது: வீரர்கள் தன்மீது ஆயுதங் களை யேவும்படி நடுவேநின்றான்.) அப்படி நின்றபோது மேற்கூறியவாறு வளைந்து போர்செய்த வீரர்களுடைய

ஆயுதங்களெல்லாம், நஞ்சு தங்கப்பெற்ற வளப்பமிகுந்த சேஷசயனத்தில் பள்ளிகொள்கின்ற விஷ்ணுவை நிகர்த்த வனாகிய அச் சச்சந்தனது நெஞ்சை இருப்பிடமாகக்கொண்டு தைத்து நிறைந்தன; அவ்வாறு நிறைந்தும் அவன் அதற்குச் சிறிது மஞ்சாமல், பூமியி லுள்ளவர்களுக்குக் கொடை கொடுக்கக்கூடியதும், மேகம்படர்கின்ற மலையை நிகர்த்ததுமாகிய தோள்பொருந்திய கை அசைந்து சுழ லும்படி வாளாயுதத்தைவீசி அதனாலே யானைகளை யெல்லாம் வெட்டிக்கொன்று முடிவாக அவ் வாளாயுதத்தை ஒடித்துவிட்டு வெறுங்கையோடு நின்றான்; (அதாவது: வெட்டிய வேகத்தினாலே வாள் ஒடிய நிராயுதபாணியாயினான்) அவ்வாறாகவே, பகைவர்களுடைய ஆயுதங்களெல்லாம் அளவில்லாமல் சென்று அவன் தேகத்தில்தைத்து நிறைந்தன; வீரர்கள் ஏவிய ஆயுதங்களெல்லாம் மேற்கூறியபடி தன்மீது தைத்து அழுந்தியும், அந்த நிறைந்த யுத்தத்திலே ஆண்தன்மையிற் சிறந்தவனாகிய அச் சச்சந்தன் அதற்குச் சிறிதேனும் வருந்திக் கண்களை இமைக்காதவனாய், அக்காலத்திலே பதினெட்டுநாள்வரை நடந்த பெரிய பாரதயுத்தத்தில், வீரர்கள் புறங்கொடாததும் ஒருவரோ டொருவர் பொருதலை யுடையதுமாகிய பதின்மூன்றாநாட் சண்டையிலே தன் பெரிய தந்தையாகிய கன்னனோடு எதிர்த்துநின்ற இளங்குமாரனாகிய அபிமன்னுவைப்போல அஞ்சா நெஞ்சுடன் விளங்கினான்.

அப்படி விளங்கியும் மேன் மேலும் பகைவர்களுடைய சக்கரங்களும் வேலாயுதங்களும் ஒன்றின்மே லொன்றாகச் சேர்ந்து அவன் மார்பைப்பிளந்து உள்ளே சென்று மறைந்து அழுந்துதலினாலே, தேகவலிமை குறைந்து அஞ்சாமையையுடைய கண்களில் கோபத்தினாலே நெருப்பெழும்படி விழித்து, இப் பூமியாகிய சிறந்த பெண்ணினது மார்பகம் அழுந்தும்படி வீரத்தால் பகைவர் முகத்தை நோக்கிக்

கீழேவீழ்ந்து, பகலெல்லாம் மிக்க பிரகாசத்தோடு உலகத்தில் சஞ்சரித்து மாலையில் தன் பிரகாசம் மழுங்கி மறைகின்ற வெவ்விய சூரியனைப்போலத் தளராதிருக்கும் வரையில் மிக்க வீரத்தோடு போர்புரிந்து, தளர்ந்த இந் நிலைமையில் தன்னுடைய ஆண் தன்மை குறைந்தான். இப்படி விழுந்த மாத்திரத்திலே, மனிதர்கள் நிறைந்த சுவர்க்கலோகமென்று சொல்லத்தக்க சிறப்பு வாய்ந்ததும், பழமையானதுமாகிய ஏமாங்கத நாட்டிலேயுள்ள பெரியோர்களெல்லோரும் அச் சச்சந்தனைத்தொழுது, அவனுடைய பரிதாப நிலைமைக்காக வருத்தத்தையடைந்து மயங்கவும், கற்பைக்கொண்ட பெண்க ளெல்லோரும் வருந்தியழுகவும், கொடுங்கோலாகிய இருளானது எங்கும் பரவவும், உயர்ந்ததாக ஆராய்ந்து கூறப்பட்ட குருகுலமாகிய ஆழ்ந்த சமுத்திரத்தினுள்ளேயிருந்து முளைத்துத் தோன்றிய சிறந்த சூரியனை நிகர்த்தவனும், தருமம் நிறைந்த செங்கோலை யுடையவனும், அரசர்களுக்கெல்லாம் தலைவனுமாகிய அச் சச்சந்தனை, அரவத்தைப் போன்றவனாகிய கட்டியங்காரனென்னும் மந்திரி, செம்பாம்பானது சூரியனை விழுங்கி அதன் வலிமையைக் குறைப்பதுபோலத் தனக்குள் அடக்கி வெற்றியை கைக்கொண்டான். அந்தோ! இஃதென்ன பாவம்! பாலருவிபோலும் கிரணத்தையுடைய முத்து மாலைகள் பிரகாசிப்பதும், பழிப்பில்லாததும், நீண்டதுமாகிய குடை நிழலின் கீழே, தாவிச் செல்லக்கூடிய குதிரைகள் பூட்டிய தேரின் மேலிருந்து, பாணங்களை இடைவிடாமல் ஒழுங்கோடு தொடுக்கக்கூடிய வெவ்விய வில்லை யுடையவனாகிய சச்சந்தன், கட்டியங்காரனிடத்தில் ஆட்சியை ஒப்புவித்த காரணத்தால், அவை யெல்லாம் தனக்குக் கிடைக்காமற் போனபடியினாலே, தான் தனியனாய்க் கூர்மை பொருந்திய வாளாயுதத்தையும், கேடகத்தையும், தன்னுடைய வீரத்தையுமே துணையாகக் கொண்டு

யுத்தம்புரிந்து, முடிவில் பகைவர்களால் அம் மூன்றையு மிழந்து மேற்கண்டவாறு மயங்கி விழ்ந்து உயிர் நீங்குந் தருணத்தில், அருகக்கடவுளுடைய *சுக்கிலத்தியானமாகிய அருவியிலே மூழ்கி (அதாவது: சுக்கிலத்தியானஞ் செய்து) அக் கடவுளுடைய பாதங்களாகிய தாமரை மலர்களைச் சிரசின்மேற்சூடி (அதாவது: அவை சிரசின் மேலிருப்பதாகத் தியானித்து) பஞ்ச நமஸ்காரமென்னும் மந்திரமாகிய மெல்லிய சந்தனத்தைப்பூசி (அதாவது: பஞ்ச நமஸ்கார மந்திரத்தை மனதிலே ஜெபித்து) வேல் ஒழுங்கு போன்ற கண்களை யுடைய அந்தப்புரத்துப் பெண்களெல்லோரும் ஓடிவந்து சூழ்ந்து தன்னுடைய தேகத்தைக் காத்துப் புலம்பியிருக்க, உயிர் நீங்கிப்போய்ச் சுவர்க்கத்தையடைந்து அங்குள்ள தேவர்களுக்கு விருந்தினனாயினன்.

மேற் கண்டவாறு அரசன் உயிர் நீங்கிய வுடனே, இளமைப் பருவத்தையுடைய கீதவாத்தியப் பெண்கள், சிவந்த நெருப்பினாலே சுட்டு உண்டாக்கப்பட்ட துவாரங்களையுடையனவாகிய இனிய வேய்ங்குழல்களையும், வீணைகளையும், தேம்தேமென்று முழங்குகின்ற மத்தளங்களையும், தாம் தாமென்று முழங்குகின்ற ஓர்கட் பறைகளையும் இறந்தவிடத்தே கொண்டுவந்து, மெல்லிய விரல்களினாலே வாசிக்க, முன் சொல்லியபடிவந்து அரசனைச் சூழ்ந்த அழகும் இனிமையும் வாய்ந்த சொற்களை யுடையவர்களாகிய † அகப்பரிவாரப்பெண்கள் ஐந்நூறுபேரும், பரத சாஸ்திரத்திலே பூரணமாகத் தேர்ச்சியடைந்து சபையிலே ஆடுகின்றவர்களும், அரம்பையரை நிகர்த்தவர்களுமாகிய நிருத்த மாதர்களும் இறந்து கிடந்த அரசனை நோக்கி,

---

* சுக்கிலத்தியானம் - பரமான்ம பாவனை செய்தல்.

† அகப்பரிவாரம் - அந்தப் புரத்தில் சுற்றத்தாராகச் சூழ்ந்திருக்கிறவர்கள்.

"எந்தையே! நீ உயர்ந்த மலர்கள் பரப்பிய பஞ்சணையில் படுத் திருப்பதைவிட்டு இப்பொழுது வெறுமையாகிய நிலத்திலே கிடக்கின்றாயோ," என்று மிகவும் வருந்தி அழுது, சந்தனக்கட்டை முதலிய விறகுகளை அடுக்கிச் சயனம்போலச் செய்து, அந்த ஈமப் பள்ளியின்மேல் அவனைத் தூக்கி வளர்த்தினார்கள்; அவ்வாறு செய்த பின்பு சூழ அணிந்திருக்கின்ற பெரிய முத்துக்களாகிய நாவினாலே மழலைச் சொற்களை மொழியக்கூடிய (அதாவது: முத்துக்கள் மழலைமொழிபோல் சப்திக்கின்ற) கிண்கிணியை அணிந்த அப் பெண்களெல்லோரும், இரத்தினச் செப்பைக் கடைகின்ற காலத்திலே அதனைக் கடையக்கூடிய ஆயுதங்கள் அதற்குள்ளே அழுந்துவதுபோல அங்கே யுத்தத்தால் பரவிக்கிடந்தனவும், மூட்டுக்கழன்றனவும், வெற்றிலை வடிவ முள்ளனவுமாகிய வேலாயுதங்களும், அம்புகளும் கட்டவிழ்ந்த மலர்மாலையும் முத்துமாலையும் அணியப்பட்டு விளங்குகின்ற நெஞ்சகத்திலே தைத்து அழுந்தும்படி, மன்மதனுடைய அம்பும் தோற்றுப் போகக்கூடிய அழகு வாய்ந்த கண்களிலே கண்ணீரானது ஒழுகப் புரண்டு கிடந்து, பின்பு பெய்கின்ற மேகத்தினுள்ளே மின்னல் தோன்றுவது போலப் பக்கத்திலே அவிழ்ந்து சோர்ந்த கூந்தல் அவர்கள் தேகத்தை மறைத்துப் பூமியிலே விழுந்து இரத்தத்திற்படிந்துக் கிடக்க, அதற்குள்ளேயிருந்து அழுதார்கள்; அப்படி எல்லோரும் சூழ்ந்து அழும்போது, ஒரு சிங்கமானது பல மயில்கள் சூழ்ந்திருக்க, மெல்லிய அணைமேல் கிடந்ததுபோல அந்த ஸ்திரீகள் எல்லோரும் சூழ அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஈமப்பள்ளியின்மேல் கிடந்த சச்சந்தனை, கருகிய இயல் புள்ள நெஞ்சை யுடையவனாகிய கட்டியங்காரன் கண்டான்; அவ்வாறு கண்டமாத்திரத்தில், அவன் மீது தனக் கேற்பட்டிருந்த பகை நீங்கித் தனக்கு முன்னே

அரசனுயிருந்த தன்மையை யெண்ணி அச் சச்சந்தனைத் தொழுதான்; அவ்வாறு தொழுதபின் அவனுடைய மனம், இரங்கி அரசனுடைய வழிபாட்டிற் சென்றமையினாலே, தன்னை அறியாமல் கலங்கியதோடு, ஜெயங்கொண்டோ மென்கின்ற மகிழ்ச்சியால் அவனுக்கு ஆனந்தக் கண்ணீர் சொரியத் தலைப்பட்டது; அக்கட்டியங்காரன் அவ்வாறு இரங்கிக் கண்ணீர் சொரிந்த பிறகு அவன் கோபம் நீங்கினு னென்று தெரிந்து, ஆங்குக் கூடியிருந்த அழகிய வளை யலை யணிந்த பெண்க ளெல்லோரும், "நாம் அரசனுக்கு இரங்கி ஈமக் கிரியைகளைச் செய்தால் இவன் கோபிப் பானோ" என்று கொண்டிருந்த அச்சம் நீங்கி, அரசனுக் குச் சயனமாக அடுக்கப்பட்டிருந்ததும், எரியும் இயல்பினை யுடையதுமாகிய சந்தன விறகிலே நிறைந்த நெய்க்குடங் களையும், சந்தன முதலிய பற்பல வஸ்துக்களையும் அவனு டலுக்குப் பொருந்தும்படி சொரிந்து, தணல் மூட்டி ஓ வென்றலறி, மேலும் அவர்கள், "எம்பெருமானே! நெருப்பானது உன் தேகத்தையுண்ண நீ எங்களை விட்டும் நீங்கி மறைகின்றாயோ" என்று பெரிய கண்களினின்றும் நீரைச் சொரிந்து, முன்னிலும் அதிகமாக்கதறுவார்களும், கைகளிலே நிறைந்த வளையல்களைத் தரையில் மோதி யுடைத்துவிட்டு இரங்கி அழுவார்களும், பிரகாசம்பொருந் திய மார்பிலணிந்திருந்த மாலைகளை அறுத்தெறிந்துவிட்டுக் கதறுவார்களும், தைலம் நிறைந்த கூந்தலின்மே லணியப் பட்டிருந்த மாலைகளையும் அவிழ்த்துச் சிதறிப் பூமியிலே எறிவார்களும், அழகிய பிரகாசத்தை வீசுகின்ற நீண்ட குண்டலங்களையும் நீலநிறம்பொருந்திய கடிப்பிணை யென் னும் காதணியையும் கழற்றி யெறிவார்களும், கைகளி னாலே வயிற்றைப் பிசைந்துகொள்பவர்களும், ஐயோ! ஐயோ!! என்று கூவியழுபவர்களும், நீர்க்கடன் முதலி யன முறையாகச் செய்யப்பெறாமல் இவ்வாறு எரிக்க

நேர்ந்தமையால், இதற்கேதுவாக அரசன்செய்த கொடுமை யான காரியம் மிகவும் கெட்டதென்று சொல்லிக் கதறுவார் களுமாகித் தேனிறைந்த மலர்களையுடைய சோலை சூழ்ந்த ஒரு மலையின்மேலே, பிளந்த வாயையும், படத்தையும், அனல்போன்ற விஷத்தையுமுடைய ஒரு நாக மானது, பால்போன்ற நிறத்தினையுடைய மூன்றுநாள் பிறையை யொத்த தந்தங்களையும், பசிய கண்களையுமுடைய ஒரு பெரிய யானையைக்கடித்து வீழ்த்த, அதன் காவலுக்குட் பட்டிருந்த சிறிய பெட்டை யானைகளெல்லாம் அதைச் சூழ்ந்து வருந்துவதுபோல, மேற் கண்டவாறு கொடியவ னாகிய கட்டியங்காரனால் கொல்லப்பட்டுக் கிடந்த அர சனைச்சூழ்ந்து துன்பத்தினாலேவருந்தி, "எமதரசர் பறித்து அனுபவிக்கும்படி நல்ல பணிவிடையாகிய புஷ்பத்தைப் பூத்த இந்தப் பூங்கொடிகள் இனிப்பிறர் பறித்து அனுப விக்கும்படி அப்புஷ்பத்தை மலர்விக்கமாட்டா (அதாவது: அரசர் அனுபவிக்கும்படி பணிவிடைகளைச்செய்து அவ ருக்கு நலத்தைக்கொடுத்துவந்த பூங்கொடிகள் போன்ற இப் பெண்களாகிய நாங்கள் இனிப் பிறருக்குத் தொண்டு செய்து அவருக்கு நலத்தைக் கொடுக்கமாட்டோம்) எம் பெருமானே! உம தடியிற் சார்ந்தவர்களாகிய நாங்கள், உம்முடைய பணிவிடையில் குறைவுபடாமல், நீர் போய்ச் சேர்ந்த அவ் வுலகத்திற்கும்வந்து உமதடியிலே சார்ந்து தொண்டு புரிவோம்" என்று சொல்லி மேலும் மேலும் பலவாறு பிரலாபித்து அழுது, தங்களிருப்பிடஞ் சேர்ந் தார்கள்.

அதன் மேல் இருள்பொருந்திய மனத்தினையுடையவ னும், இச் சண்டையில் வெற்றி பெற்றவனுமாகிய கட்டி யங்காரன், மேற் கண்டவாறு, வெவ்விதாகிய கண்களும் செருக்குமுள்ள யானையையும், வேலாயுதத்தையு முடைய சச்சந்தனை நெருப்பிட் டெரிக்கும்படி செய்து விட்டுத்

திரும்பித் தனதிருப்பிடம் சேர்ந்து, சிவந்த கண்களை யுடைய ஒரு சிறு நரியானது, ஒரு பெரிய ஆண் சிங்கத்தைக்கொன்று, அப்பொழுதே அச் சிங்கத்துக்குச் சொந்தமாயிருந்த இடத்தைக் கைப்பற்றி, அச் சிங்கத்தின் மேன்மையான தொழிலை நடத்தாமல் ஞெண்டு முதலியவற்றைப் பிடித்துத் தின்றுவாழும் தன்னுடைய அற்பமாகிய தொழிலை நடத்தினதைப்போல, அரசனுடைய உயர்ந்த ஆளுகைக் குட்பட்ட பூமியைத் தான் கைக்கொண்டு, தன்னுடைய தாழ்ந்த ஆளுகையை நடத்தத் தொடங்கினான்; அவ்வாறு தொடங்கிய தல்லாமல், தன்னைச் சூழ்ந்திருந்தவரிடம் "ஏமாங்கத நாடு முழுதும் எனக்குரியது; இந்நாட்டிலுள்ளோரியாவரும் எனது ஆக்ஞைக் குட்பட்டு நடக்கவேண்டும்; இல்லையாயின் தக்க தண்டனை புரிவேன்; இன்றுமுதல் இந் நாட்டிற்குக் கட்டியங்கார னென்னும் பெயரை யுடைய யானே அரசன்" என்று அரசுரிமை தன் பெயரால் விளங்கும்படி சொல்லி இவ்விஷயம் எங்கும் பரவுமாறு முரசறைவோரை யழைத்துப் பசிய கண்களையுடைய யானையின்மேல் முரசையேற்றி ஆங்காங்கே தான் அரசனென்பதைத் தெரிவித்து, ஊரெங்கும் முழக்கும்படியும் செய்தான். அதைக்கேட்டு, எவ்விடத்திலுமுள்ள மனிதர்களும் வேல்மழை பெய்தால் அதற்காக எப்படி வருந்துவார்களோ அப்படியே வருந்தி மனங்கலங்கினார்கள். அன்று முதல் இக் கட்டியங்காரன் மிக்க மகிழ்ச்சியோடு இராஜமா புரத்திலேயிருந்து தன்னுடைய அரசாட்சியை நடத்திவந்தான்.

## சீவகன் உற்பத்தி.

இவன் தன்மை யிப்படி யிருக்க, இனிக் காற்றின் முன்னே எதிர்ப்பட்டு நின்ற விளக்கானது நேரே நில்லாமல் அசைந்துகொண் டிருப்பதுபோல, ஒருவழிப்பட்டு

நில்லாமல் கலங்கிச் சுழலுகின்ற மனத்திஞேடு, களிக்கின்ற ஒழுங்கையுடைய வண்டுகள் நெருங்கித் தேனையுண்ணக்கூடிய மாலையானது, கழுத்தணியின் கடைப்பூட்டு விளங்குகின்ற பிடரியிலே அசைந்து சோர மயங்கிக், கோபிக்கின்ற முகத்தையுடைய யானையை நிகர்த்தவனுகிய சச்சந்தனது வார்த்தையின் பயனை உட்கொண்டு, அதன்படியே மயிற்பொறியி லேறிச்சென்றவளும், கிளியினுடைய வாயிலே தோற்றுகின்ற சொற்களைப்போன்ற வார்த்தைகளை யுடையவளுமாகிய விஜயைமாதேவிக்கு இதற்கிப்பால் வந்து பொருந்திய தீங்கு இத்தன்மைத் தென்பதைச் சொல்லுவாம்.

கூர்மையே ஒரு வடி வெடுத்ததென்று சொல்லும்படி விளங்குகின்றனவும், அரசனுயிரைக் கொல்வதற்கு வாள் போன்றிருந்தனவுமாகிய கண்களையுடையவளும், அலைகளை வீசுகின்ற பாற்கடலிலே தோன்றிய அமிர்தத்தை நிகர்த்தவளுமாகிய விஜயை, முன்கூறியபடி எந்திர மயிலிலேறி ஆகாயமார்க்கமாகச் செல்கின்றபோது, அரசனைப் பிரிவதனுலுண்டாகிய வருத்த மிகுதியினுல் செயலற்று, அதனுலே வலிகுறைந்தமையால் அம் மயிற்பொறியின் வலப்பக்கத்தைச் சரியாக முறுக்க முடியாமல் இலகுவாகமுறுக்கி அதனுலே விசைகுறைந்து சென்ற அம் மயிலைச்செலுத்திக்கொண்டு போனுள்; அவ்வாறு போகுஞ் சமயத்தில் அவ் வாகாயத்தினிடத்தே, அரசாட்சியை விரும்பியவனும் வீண் புகழ்ச்சியை யுடையவனு மான கட்டியங்காரனது வெற்றிபொருந்திய முரசமானது, அரசன் இறந்ததற்கு அறிகுறியாக முழங்க, அதைக்கேட்டு வேலினு லெறிந்த பெட்டைமானைப்போல மனமயங்கி மூர்ச்சித்து, மெய்ம்மறந்து சோர்ந்தாள்; அவ்வாறு மூர்ச்சித்தவுடன் முன்னே வலப்பக்கமாக முறுக்கின எந்திரவிசை, தானே அவளுடையகையைவிட்டு நீங்கினமையால் அஃது இடப்பக்கத்

தே சுழல, அதனாலே அம்மயில் தானாகவே கீழேயிறங் கிற்று. அவ்வாறு இறங்கியபின், அழகிய தோகையையு டைய அந்த எந்திரமயிலானது, உயர்ச்சியை யுடைய இராஜமா புரத்தைவிட்டு நீங்கிப்போய்ப் பழமையானமரங் கள் செறிந்து உலகமயக்க முற்றும் துறந்த பெருமை யையுடைய முனிவர்களும் கண்டு மனம் அஞ்சும்படி பல பிணங்கள் எவ்விடத்தும் அதிகரித்து விளங்கித் தான் வியாபித்திருக்கின்ற எல்லையெல்லாம் கழுகுகளிருந்து நித் திரை செய்கின்ற நிழலையுடையதாய்த் தோன்றும் பயங்க ரமான சுடுகாட்டிற்கு நேரே பைய்யப்பையப் பூமியில்விழுந் தது. அப்படி வீழ்ந்ததும், பலபொறிகளை யுடையதும், உச்சிக்கொண்டை பொருந்திய நெற்றியைப் பெற்றதும், அழகிய மயிருள்ளதுமாகிய அம் மயிலானது, மேகம் சூழ் வதைப்போன்று பிணப்புகை மிகுந்து, அதனாலே ஆங் குச் சஞ்சரிக்கின்ற பேய்களும் பயப்படக்கூடிய மயான த்தினுள்ளே மேற்கண்டவாறு விழுகின்றபோது, அகிற் புகை உள்ளே நிறைந்த ஒரு மாலையானது மெல்லிய பஞ் சின்மேல் விழுவதுபோல மிருதுவாக விழுந்து விஜயைக்கு யாதொரு அபாயமுமில்லாமல் கால்களைச்சேர்த்து இயற் கையான மயிலிருப்பதுபோல இருந்தது.

இவள் இவ்வாறு மயிற்பொறியிலேறி ஆகாயமார்க்க மாகச் சென்று கீழிறங்கிய காலத்தில், பகைவனாகிய கட் டியங்காரனும் இவள் சகோதரனாகிய கோவிந்தராஜனும் தேடி அறிந்து கொள்ளா திருக்கும்படி, இவளுக்குப் பிர சவகாலத்தில் உதவிசெய்த எக்ஷிதேவதையானது இவளை மறைத்து உதவிபுரிந்தமையால் இவள், அவ்விருவர்கண் ணுக்கும் மற்றவர் பார்வைக்கும் அகப்படாமல், இச்சுடு காட்டைச் சேர்ந்தாள்; பின் நடக்கவேண்டிய காரியங் களை உத்தேசித்தே எக்ஷிதேவதையானது இவளை மேற் கண்டவாறு ஒருவர் கண்ணுக்கும் அகப்படாமலிருக்கும்

படி செய்தது. இதுநிற்க, மேற்கண்டவாறு எந்திரமயில் கீழே இறங்கியிருந்தவுடன், அழகைத்தருகின்ற மயிலினது சிறந்த சாயலையுடையவளும், தளர்ச்சியினாலே சோர்ந்த வஸ்திரத்தைத் திருத்திக் கட்டமுடியாதவளுமாகிய விஜயை, அலைகளூர்ந்து செல்கின்ற சமுத்திரம்போன்ற விசாலமாகிய அச் சுடுகாட்டிலே மயக்கம்நீங்கிச் சிறிது உணர்ச்சியடைந்து, அரசனுக்காக இரங்கி, ஒழுகுகின்ற நீண்டகண்ணீரானது தன்னுடைய அழகிய நெஞ்சகத்தை நனைக்கும்படி அழுது, தான் வருத்தம் அதிகரித்து நிற்கின்ற நிலைமையினாலே ஆங்குள்ள பேய்முதலியவற்றிற்கு அச்சங் கொள்ளாதவளாய்த் தன்னுடைய துணையைப் பிரிந்த * மகன்றி லென்னும் பட்சியைப்போல வருந்தினாள்; ஆகாயத்தை அளாவும்படி உயர்ந்த அரண்மனையிலே, தன்னுடைய நல்வினைப்பயனால் ஒரு தேவஸ்திரீயைப் போல வசித்து வந்தவளும், பிரகாசிக்கின்ற ஆபரணங்களையணிந்தவளுமாகிய இவ் விஜயை, மேற்கண்டவாறு சுடுகாட்டிற் சேர்ந்து வருந்தும்போது உடனே பிரசவவேதனையடைந்து, "உலகத்தில் தோன்றிய பல உயிர்களும் அனுபவிக்கக்கூடிய பாவம் உண்டென்று சாஸ்திரங்களிலே கூறக் கேட்கின்ற எல்லோரும், முன் பாவஞ்செய் திருந்தமையினாலே பிரசவகாலத்தில் இவ்வாறு தனிப்பட்டுத் துன்பத்தை அனுபவிக்கின்ற என்னைக்கண்டு, இனி அவ்வுண்மையை அறிந்து கொள்வீராக" என்று காட்டுகின்றவள் போலத் தீவினை வசத்தினாலே, நெருப்பிலெரிந்து வெண்மையான பலதலைகள் நிறைந்து கிடக்கின்ற சுடுகாட்டினுள்ளே யாதொரு திக்குமின்றித் தனிப்பட்டவளாயினாள்; இவ்வாறு தனிப்பட்டு வருந்துகின்ற காலத்திலே, இருள்

* மகன்றில் - இது நீர்வாழ் பறவைகளி லொன்று; துணையைப் பிரிவதனால் அன்றிலைப்போல இஃது அளவற்ற துன்பத்தையடையும்.

கெடும்படி மற்ற விளக்குக்களோடு பகைகொண்டு இரத்தின விளக்குக்கள் எவ்விடத்தும் மிகுந்து எரியவும், (அதாவது: அச்சுடுகாட்டில் இரத்தினங்கள் எங்கும் கிடந்து விளக்குப்போலப் பிரகாசிக்கவும்) கிருபை பொருந்திய மனத்தினை யுடையனவாகிய தேவதைகளெல்லாம் பின்பு இவன் மோட்சவீட்டை யடைவானென்று கருதி வணங்கி நிற்கவும், பெறுதற்கரிதாகிய பொன்போன்றவனாகிய புத்திரன், கரையை மோதுகின்ற கடல்முகட்டிலே தோன்றும் இளஞ் சூரியனைப்போல அவ் விஜயையின் துன்பமாகிய இருள் நீங்கவும், கட்டியங்காரனாகிய சந்திரன் ஒளி குறைந்து கெடவும் பிறந்தான்; அப்படிப் பிறந்தபொழுதே மயக்கத்தையுடைய விஜயை அடைந்திருந்த பிரசவ வருத்தமானது, உடனே மறைந்தது. அதன் மேல் வாசனை வீசுகின்ற கூந்தலையுடைய அவ் விஜயை, அழகிய வீரக்கழலை யணிந்தவனும், பெருமையிற் சிறந்தவனுமாகிய சச்சந்தன் தனக்குத் துணையாயிருக்கும்பொருட்டுப் பகைவன் கையில் அகப்படாமல் காப்பாற்றிக் கொடுத்த அப்பிள்ளையை மிக்க விருப்பத்தோடு பார்த்துச் சந்திரனுடைய வெண்மையான கிரணம் பொழிவதுபோல உயர்ந்த பயோதரங்களில் சுரந்து காம்பின் கண் திறந்து பாலானது வெளிப்படும்வரையிலும் பொறாதவளாய் அக் குழந்தை மீது தனக்கிருந்த விருப்பத்தினாலே, தானே அப்பாலை வலியக்கறந்து, அதனாலே அக் குழந்தைக்குத் திலகமிட்டு, அரசர்களுக் கெல்லாம் திலகம்போன்ற அப் பாலகனைத் திருத்தமாக மடிமீது வைத்தாள்.

அப்படி மடிமீது வைத்தவுடன், மிக்க சிறப்போடு அந்தப் புரத்திலே பிறக்கவேண்டிய இவன் இவ்வாறு சுடுகாட்டில் தனியாய்ப் பிறந்ததை முன்னிட்டு உண்டாகிய வருத்தத்தினாலே, அவ் விஜயைமாதேவி அப் பிள்ளையை நோக்கி, "எனதுயிர்க்குயிராகிய செல்வப் புதல்வனே!

நீ பிறந்த மாத்திரத்திலே விசாலம்பொருந்திய அரண்மனையிலே சோதிடர்களெல்லோரும், தங்கள் தங்களுடைய மார்பிலே அருமையாகிய பொன்னுபரணங்களும் மாலைகளும் பிரகாசிக்கும்படி வந்து ஒன்றாகக்கூடி ஜாதகம் கணிக்க, உனது தந்தையாகிய அரசர் பெருமானுர், நீ பிறந்ததாகிய சந்தோஷ சமாசாரத்தை மற்ற எல்லாத் தேசத்தரசர்களுக்கும் உடனே எழுதியனுப்பிக் கரியகையையுடைய யானைகளையும், மேற் போர்வைகளையும், காசுகளையும் பெருமங்கலம் பாடுவோராகிய வித்வான்கள் ஆசை தீரக் கொள்ளும்படி கொடுத்து, அதன் மேல் பக்கத்தில் நிற்கும் மந்திரி முதலியோரை நோக்கி, 'குழந்தைகளுக்குப் பன்னிரண்டு வருஷமளவும் பிடித்து வருத்துகின்ற பேய்களாலேற்படும் தீங்காகிய பாலக்கிரகாரிட்டம் உண்டாகுமாதலினாலே, அதற்குச் சாந்தியாக அப் பனிரண்டு வருடமளவும் நமது நாட்டில் பகுதி முழுமையும் வாங்காமல் உடனே தானமாக விட்டுவிடுங்கள்; அழகிய தர்மசாலை கோவில்கள் ஆகிய வற்றைப் பாலனுடைய ஞாபகார்த்தமாகக்கட்டி நிலை நிறுத்துங்கள்; சிறைப்படுத்திய சிங்கம் போல அடங்கிப் பகையரசர்கள் கோபம் மழுங்கத் தங்கியிருக்கின்ற சிறைக் கூடங்களை உடனே இடித்துப் பரிசுத்தமான இடமாக்குங்கள்; பிரகாசம் பொருந்திய பொன் மிகுந்தவைகளும், மலைபோன்றவைகளுமாகிய திரவிய சாலைகளைத்திறந்து அவற்றிலுள்ள திரவியங்களையெல்லாம் ஊர்தோறும் எடுத்துக்கொண்டு சென்று, இராஜகுமாரன் பிறந்தானென்று மகிழ்ந்து இரப்பவர்களுக் கெல்லாம் தானம் செய்யுங்கள்; உப்பரிகைகளாலே உயர்ந்து விளங்குகின்றதும், வளப்பம் பொருந்தியதுமான அரண்மனையில் நெல் முதலிய அளவற்ற பண்டங்கள் நிறைந்த சாலைகளைத் திறந்துவிட்டு, எல்லோரும் வாரிக்கொள்ளும்படி செய்து, அவற்றினின்றும் ஆடைகள், செம்பொன்னுலா

கிய ஆபரணங்கள், இன்னும் மற்ற வஸ்துக்கள் ஆகிய எல்லாவற்றையும் குறைதலின்றிக் கைக்கொண்டு போகின்றவர்களை ஏழுநாள்வரை எவரும் விலக்க வேண்டாம்; எழுபிறப்பிலுள்ள தீவினைகளும் நீங்கும்பொருட்டு இத்தானம் செய்யக்கூடிய தாதலின், மேற்கண்டபடி எல்லோரும் அவரவர்க ளிஷ்டம்போல் ஏழுநாள் வரையிலும் வேண்டியவற்றை யெல்லாம் எடுத்துக் கொள்ளும்படி செய்யுங்கள்; இன்னும் நாட்டிலுள்ள யாசகர்களிடத்தில், பெரிய தானத்தைப்பெற விரும்பின உங்களுக்கு, தம் தேகத்தில் மூன்றரைக்கோடி ரோமங்கள் உள்ளனவாதலால், உரோமம் ஒன்றுக்கு ஒரு பொன் விகிதமாகக் கூடிய மூன்றரைக்கோடி செம்பொன்னை அரசர் தானமாகக் கொடுப்பார், நீங்கள் உடனேவந்து பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லுங்கள்; அவர்கள் வரின் அவ்வாறே கொடுங்கள்' என்றுசொல்லி, மிகவும் விருப்பத்தை யடைய மிக்க சிறப்போடு பிறக்கின்ற நீ, தீவினை செய்தேனாகிய யான் காணும்படி பிறக்கின்ற விதம் அந்தோ! தாழ்ச்சியான இத்தன்மை யுடையதா யிருக்கின்றது; எனதரசே! மேற்கூறிய இரண்டுவகைப் பிறப்பிலும் இங்குக்கூறிய சிறப்புடனே பிறப்பது அரசர் குலத்திலுதிப்பவருக்குத் தகுதியாகுமா? வெவ்விய வாயை யுடைய நரியின் சப்தம் மத்தளயாகவும், இறந்தவர்கள்மீது அடுக்கி எரிகின்ற கொள்ளிக் கட்டைகளே விளக்காகவும், உலகத்திலே பிறப்பவருக்கு ஆகாமல் வெறுக்கத்தக்கதாகிய சுடுகாடென்னும் உயர்ந்த நாடக மேடையிலே பேய்கள் நிழலைப்போல அசைந்தாட, எந்தப் பக்கத்திலும் கூகையிருந்து இரங்கிக் குழறுதலாகக்கூவி அவ் வாட்டத்தைப் புகழ, இந்தக் கெதியாகப் பிறப்பது அரசர் குலத்திலுதிப்பவருக்குத் தகுதியாகுமா? இவற்றுள் இன்னது சிறந்ததென்பதை நீயே அறிந்து எனக்குக் கூறுவாயாக;

இந்தப் பூமியின் ஆளுகையைச் சொந்தமாக வுடைய எனது புத்திரரத்தினமே! நீ இவ்வாறு தாழ்ந்த நிலைமையில் பிறந்து கிடக்கின்ற இடமும், முன் நமக்குச் சொந்தமான விடமாயிருந்தாலும் இப்போது பகையரசனுடைய நகரைச்சார்ந்த விடமாயிருக்கின்றது; அழகிய பஞ்சணையில் படுக்கக்கூடிய உனது படுக்கை இப்பொழுது பிணங்கள் சூழ்ந்திருக்கின்ற சுடுகாடாயிருக்கின்றது; உன்னைப் பெற்ற பாவியாகிய யானும் வாய்ப்பேச்சுப் பேசுவதற்கும் ஓர் துணையுமில்லாத அநாதையா யிருக்கின்றேன்; உன்னை எங்கேனும் நகர்ப்புறத்துக்கு எடுத்துச் செல்லலாமென்றாலோ வழிதெரிந்து போகமுடியாத மிக்க இருள் சூழ்ந்திருக்கின்றது; பின்னாலே நீ வளர்ந்தோங்கக் கூடிய மார்க்கத்தையும் இன்னதென்று நான் அறியாதவளா யிருக்கின்றேன்" என்று கூறி மேலும் தன்னுடைய உயிரைநோக்கி, "எனது கொடிய உயிரே! எனக்கும் என்புத்திரனுக்கும் நேர்ந்திருக்கின்ற இக்கெதியைப்பார்த்தும் நீ இன்னும் போகாதிருக்கின்றாய்" என்று சொல்லி அழுது, அதன் மேலும் வருத்தம் சகிக்கமுடியாதவளாய்ப் புத்திரனைநோக்கி, "சிந்தாமணியே! இவ்வாறு வருந்துகின்ற எனக்குத் தேறுதலாகிய வார்த்தை ஒன்றேனும் சொல்லாமல் கிடக்கின்றாய்; என்னுடைய வருத்தத்தை நீக்கப் பிறந்த நீயும் அழகிய அசோக விருட்சத்தி னடியிலே வீற்றிருக்கின்ற பெரிய அறத்தையுடைய கடவுளும் என்னைப் பாதுகாத்து என்னிடத்திலே யுண்டாயிருக்கின்ற துன்பக்கடலை நீந்தும் தெப்ப மாகாவிட்டால் வேறு என்னைக்காப்பாற்றக் கூடியவர் யாவர்? உங்களைக் காட்டிலும் எனக்குச் சிறந்தவர்கள் இருப்பார்களாயின் அவர்களையாவது எனக்குக் கூறவேண்டும்; அப்படியுங்கூடாறு திருக்கின்றாய்; வெற்றி மிகுந்த உன்னுடைய தந்தையினது சொற்படியே மயிற்பொறியிலேறித் தனித்துவந்து அவர்கோரிய காரியத்தைச்

செய்த யான் உன்னைக்கண்டும் இனி மயக்கம் பொருந்திய துன்பத்தினாலே வருந்தி அதனைச் சகித்திருப்பேனா? ஒரு போதும் சகியேன்; ஆதலால், எனக்குத் தேறுதலாகிய ஒருவார்த்தை கூறுவாய்; நீ அவ்வாறு கூறுவா யானால், எனக்குத் துன்பமெல்லாம் நீங்கிவிடு மாகையினாலே இனி மேல் யான் வருத்தத்தை யடையமாட்டேன்; இனி நீயே எனக்குத்துணை" என்று கூறி அதன்மேல், தனக்கு மிகுந்த துன்பம் ஏற்பட்டிருந்தாலும் புத்திரனைக்கண்ட மகிழ்ச்சியால் சிறிது மனந்தேறி யிருந்தாள். அப்போது, பனி மிகுந்திருந்தபடியால், அச்சுடுகாட்டில் விளங்கிய மரங்கள், உள்ளங்கையானது உடனே திரும்பிப் புறங்கையானாற்போல மிகவும் சீக்கிரமாகக் கட்டுத்தறியிற் பொருந்திய யானையை யுடைய தன்கணவன் இறக்க, ஒரு மயிலானது மற்றொரு மயிலின்மேலேறி வந்ததுபோலத் தன்னியல்புகெட்டுச் சுடுகாட்டுள் வந்தவளாகிய விஜயைதனியே அடைந்த தீங்குகளை மனத்திற்கொண்டுசிந்தித்து அந்தோ வென்று இரங்கி அழுவனபோல, இலைகளில் தங்கிச்சொரிகின்ற பனித்துளிகளாகிய கண்ணீரை உதிர்த்துக்கொண்டிருந்தன; (அதாவது மரங்களிலிருந்து பனி, துளித்துளியாகச் சொரிந்துகொண் டிருந்தது) அத்தருணத்தில், உலகத்திலுள்ள தீங்கை நீக்கியவனும், நெருங்கிய பசும்பொன்னாற் செய்யப்பட்ட ஆபரணத்தை யணிந்தவனுமாகிய அரசன் இறக்க, உடனே மேற்கண்டவாறு அருமையாகிய அழகுவாய்ந்த புத்திரனைப் பெற்றிருந்தவளும், இவ்வாறு புருஷன் உயிர் நீங்குவதற் கேதுவான குற்றத்தைச் செய்ததும் கரிமருப் பன்னதுமாகிய சாயாத பயோதர நலத்தையுடையவளும், துன்பத்தைக் கொண்டிருந்த நெஞ்சை யுடையவளும், மேற்கூறிய அரசன் தேவியுமாகிய விஜயை, முன் கூறியபடி சிறிது துன்பம் நீங்கியபடியால், பெரிய இடமகன்ற பூமியிலே பரவிய இருளை உண்டு சூரி

யனானது மேற்குத்திசையிற்போய் மறைய, அந்திநேரமானது, விளங்குகின்ற ஒளியினையுடைய இளஞ் சந்திரனைப்பெற்றுச் சிறிது மனங்குளிர்ந்து துன்பம் நீங்கியிருந்த அத்தன்மையை நிகர்த்தாள்; இவ்வாறு சிறிது துன்பநீங்கினும் தேனிறைந்த மாலையையணிந்த இவ் விஜயையானவள், பின்னே பகைவனாகிய கட்டியங்காரனை ஜெயித்துப் பகைமுடித்து அளவற்ற சிறப்பை யடையப் போகின்ற தன்னுடைய அழகுநிறைந்த புத்திரனது தன்மையை யறியாதவளாய், "யான் இனிமேல் என்ன செய்வேன்? எவர் துணையைக் கொண்டு இப்புத்திரனை வளர்ப்பேன்," என்று அவனைப்பற்றி மிக்க வருத்தத்தை யடைந்திருந்தாள். அப்படியிருக்குந் தருணத்திலே இவள் பொருட்டிரங்கி இவளுடைய துன்பத்தைத் தீர்ப்பதற்காக அவ்விடத்திற்றங்கிய ஒரு * யக்ஷிதேவதையானது, இவ் விஜயை அந்தப்புரத்திலிருக்குங் காலத்தில் எப்பொழுதும் இவளிடத்து நின்றும் நீங்காதிருந்த கூனியாகிய சண்பகமாலை யென்னும் தாதி வடிவத்தைக்கொண்டு, தொண்டு செய்வதில் மிகவும் விருப்பத்தை யடைந்து இவளிடம்வந்து சேர்ந்தது.

இவ்விஜயையின் துன்பத்திற்காகக் கலங்கி வருந்துகின்ற வருத்தத்தை யுடையதும், அவ்விடத்தில் தங்கியிருப்பதுமாகிய அத் தேவதை மேற்கூறியவாறு கூனியாகிய சண்பகமாலையின் வடிவத்தைக்கொண்டு வந்தமாத்திரத்திலே, இவள் சீக்கிரமாகப் பெருமூச்சு விட்டுத் தான் சுழற்சி யடையும்படி நெஞ்சிற் கொண்டிருந்த கவலைநீங்கினாள். அவ்வாறு நீங்கவே அவ் வேடக்கூனி, இவ்விஜயையின் சமீபத்தில் நெருங்கி, இயற்கையான சண்பகமாலை போல நடித்து, இவளைநோக்கி, "எனதன்னையே! சிவந்த

* யக்ஷிதேவதை - யக்ஷர் வகுப்பைச் சார்ந்தது; இந்தயக்ஷர் வியந்தர லோகவாஸிகள் எட்டு வகுப்பினருள் ஒரு வகையார்.

தாமரை மலரிலே வீற்றிருக்கின்ற மகாலட்சுமியை நிகர்த்த அழகுவாய்ந்த சித்திரப்பாவையே!! நீ இவ்வாறு பிரசவகாலத்தில் தனித்தவளாகி இத்தகைய துன்பத்தை யடைந்ததெல்லாம் யான்செய்த தீவினையினாலேயேயாகும்; அவ்வாறு யான் தீவினை செய்ததனாலேயே நீ இவ்வாறு துன்பத்தை யடையவும் யான்வந்து என் கண்களாற் காணவும் காலம் நேர்ந்தது; ஆயினும், யான் இப்பொழுது உனக்குத் துணையாய் வந்திருப்பதனாலே இனி நீ வருந்த வேண்டாம்; நீலோற்பல மலரை நிகர்த்த கண்களையுடைய என்னம்மையே! தாமரை மலரிலே பிறந்த தலைமைவாய்ந்த புண்ணியனாகிய முருகக்கடவுளை நிகர்த்த உனது புத்திர ரத்தினமாகிய நமது தோன்றலது வார்த்தைப்படியே இனி இவ்வுலகமெல்லாம் அடங்கி நடக்கும்; பிற்காலத்திலே இவன், நம் பகைவனாகிய கட்டியங்காரனையும் கொன்று பகையை முடித்து இந் நாட்டை யெல்லாம் தன்வசமாக்கியாண்டு, நமக்கு மிக்க மனமகிழ்ச்சியைத் தருவான்; அவ்வாறே இப்புத்திரன், நம்மிடத்தே சிநேகங்கொள்ளாது கெட்டவழியிலே நின்று வருபவனாகிய அக்கட்டியங்கார னென்னும் போலி மன்னனைக் கொல்வதற்கு, அதுவரை யாதொரு தீங்குமின்றி வளர்க்கும் பொருட்டாக இம்மைந்தனை இப்பொழுதே ஒரு மனிதன் இங்குவந்து எடுத்துச் செல்வான்; நாம் இவ்விடத்தில் நின்றால் அவன் அவ்வாறு எடுத்துச் செல்வதற்கு மனங்கூசுவான்; அதனால் இக்காரியம் தடைப்படும்; இதனால் நமக்கு மிக்க நன்மை யுண்டாகக் கூடியதா யிருப்பதால் இதில் எவ்வித தடையும் ஏற்படக்கூடாது; ஆகலால் அவன் யாதொருசந்தேகமு மின்றி இக் குழந்தையை எடுத்துச் செல்லும் பொருட்டு நாம் அவன் கண்களிற்படாமல் சிறிது நேரம் மறைந்திருப்பதே நல்ல காரியமாகும்," என்று கூறினாள்.

இதைக் கேட்கவே, விஜயைக்கு அவள் சொன்னதெல்லாம் உத்தமமாகத் தோற்றியபடியால், "எப்படியாவது எனது புத்திரன் சுகமாக வளர்ந்து பகை முடித்தால் போதும்," என்று மனத்துட்கொண்டு அவ்வாறே மறைந்து நிற்பதற்கு இணங்கினாள். அதன்மேல் அக்கூனியானவள், அச்சுடுகாட்டிலே பிணங்களுக் கிடப்பட்டுக் கழிந்து கிடந்த நகைகளினின்றும் உதிர்ந்து நிறைந்திருந்த பல இரத்தினங்களை ஒதுக்கித்தள்ளி ஒரு நிழலிடத்திலே சயனமொன்றை விஜயைக்குத் தெரியாமல் உண்டாக்கி, அதில் அக்குழந்தையைப் படுக்கவைத்து, "பகைவர்கள் பல நூறு இடர்களை உனக்குச் செய்தாலும், அப்படிச்செய்த எல்லாத் தீங்குகளும் நன்மையாகவே முடிக," என்று வாழ்த்தி, விஜயையின் தனக்காம்பை யெடுத்து அக் குழந்தையின் வாயில்வைத்துப் பாலை உண்பித்து, அதன்மேல் அப்பிள்ளையை எடுத்துச் செல்பவன் இராஜபுத்திரனென்றறிந்து ஜாக்கிரதையுடன் வளர்ப்பதற்காக அவ் விஜயையின் கணவனாகிய சச்சந்தனது பெயர் எழுதப் பெற்ற பிரகாச முள்ள இரத்தின மோதிரத்தை அதன் விரலிலணிந்தாள். அவ்வாறு செய்ததன்மேல் விஜயை, ஒலியையுடைய மணிகளாகிய நாவினாலே மழலைச்சொற்களைப் பேசக்கூடிய (அதாவது: மழலைச் சொற்களைப் போன்று மணிகள் சப்திக்கக்கூடிய) பாத கிண்கிணியும் சிலம்பும் சப்திக்கவும், மின்னுகின்ற இரத்தினாபரணங்கள் பிரகாசிக்கவும் பக்கத்தில் ஒதுங்கிநடந்தாள். அக் கூனியும் உடன் சென்றாள்; அப்படி நடக்கும்போது அவ் விஜயை எப்படி யிருந்தா ளெனில், சமுத்திரத்திலே வாழ்கின்ற சலஞ்சல மென்னும் உயர்ந்த சங்கானது நல்ல பரிசுத்தமான முத்தையீன்று அக் கடலுக்குள்ளே ஒதுங்கிச் செல்வதை நிகர்த்தாள். அதன்மேல் அவ்வாறு சென்றவளும், மாலை தங்கிய கூந்தலை யுடையவளுமாகிய அவ் விஜயையை அக்

கூனி அழைத்துக்கொண்டுசென்று தன்னுடைய உருவமும் அவளுடைய உருவமும் எவருக்கும் தெரியாமல் மறையும்படி, பக்கத்தில் ஒளித்து நின்றாள். அப்பொழுது விஜயை தன்மகன் பிரிவுக்காற்றாதுவருந்தி அவனை நோக்கி, "என தாருயிரே! உன்னைப் பெறுவதற்கு மாத்திரம் நல்வினையைச்செய்து வளர்ப்பதற்கு நல்வினை செய்யாத பாவியாகிய என்னுடைய மகனே! நீ யாருந்துணையின்றித் தனித்தவனாகிக் கொல்லுந்தொழிலை யுடைய கொடிய மிருகங்கள்சூழச் சுடுகாட்டிலே கிடக்கின்றாயோ? இக்கெதியைப் பார்ப்பதற்கோ யான் பெண்ஜன்ம மெடுத்தேன்," என்று அழுது ஒரு கொம்பைத்தழுவிய கருவிளையானது ஒரு பூவைப் பூத்ததுபோல, ஒரு கொம்பைப்பற்றி மறைந்து தன்னுடைய ஒரு கண்ணாலே புத்திரனைப்பார்த்துக்கொண்டு நின்றாள்.

விஜயை கூனியுடனே சேர்ந்து இவ்வாறு நிற்க, குளிர்ச்சி பொருந்திய சந்திரனானது, நக்ஷத்திரங்களோடு ஆகாயத்தில் நடப்பதைத் தவிர்த்து, மின்னலோடு செல்கின்ற மேகத்துடனே சேர்ந்து பூமியில்வந்து விழுந்தாற்போல, அந் நகரத்திலுள்ள கந்துக்கடனென்னும் நாமத்தையுடைய வைசியன், இறந்த தன்னுடைய புத்திரனை அடக்கம் செய்வதற்காக அச் சுடுகாட்டில்வந்து அக்கிரியையை நடத்திவிட்டுத் திரும்புகையில்,கருப்பாகிய ஆடையையுடையவனாய், கையில் வாளாயுதத்தைத் தரித்து மிக்க இருளிலே விஜயை புத்திரனுக்குச் சமீபத்திலே வந்து சேர்ந்தான். அவ்வாறு சேர்ந்தவுடனே, இரண்டு வாளாயுதங்களைக்கடைந்து முகத்தில் அழுத்திவைத்தாற்போன்ற கண்களை யுடையவர்களும், தனக் குரியவர்களு மாகிய பெண்கள், தம் தோள்களினாலே ஸ்பரிசித்தழுத்தித் தழுவும் மார்பை யுடையவனாகிய அக் கந்துக்கடன், பெண்பேய்கள் ஆங்குவருகின்ற ஆள்களைக் கோபித்து வருத்து

கின்ற அச் சுடுகாட்டினுள்ளே, பக்கத்தில் சூழ்ந்திருந்த மிக்க இருளை, அப் புத்திரன் மீதுள்ள நீண்ட கிரணங்கள் பொருந்திய பிரகாசத்தையுடைய இரத்தினங்கள் கிழித்து நீக்கியதனாலே அப் பிள்ளையைப் பார்த்தான். அப்படிப் பார்த்தவுடன், பின்னாலே அக் குமாரன் வளர்ந்து யானைக் கொம்மை நிகர்த்த இளஞ் சந்திரனைப்போன்ற நெற்றியையும், கமலமுகைபோன்ற இளமையாகிய பயோதரங்களையுமுடைய பெண்களுக்கு மன்மதனைப்போல விளங்கும்படி அவனை எடுத்து வளர்க்கும்பொருட்டுப், பிரகாசத்தினால் பார்ப்பவர் கண்மயங்கக்கூடிய மயக்கத்தைச் செய்வதும், விருப்பம் தங்கியதுமாகிய இளஞ் சூரியனானது தன்னுடைய கிரணங்களைப் பரப்பிக் கிடந்ததுபோலக் கிடந்த அப் புத்திரனிடத்தில், விருப்பத்தையுடைய மனமகிழ்ச்சியோடு விரைவாகச் சேர்ந்தான்; அப்படிச் சேர்ந்தவுடன், தொடுக்கப்பட்ட மலர்மாலையை யணிந்தவனாகிய அக் கந்துக்கடன், அப் புத்திரன் கையில் அரசனுடைய முத்திரை மோதிரம் விளங்கக்கண்டு இராஜ புத்திரனென்றுட்கொண்டு, இவ் விரகசியத்தைப் பிறர் அறிந்தால் மோசம் வருமென்றெண்ணி, அலங்காரத்தை யுடையதும், கிரணங்கள் பொருந்திய அழகுள்ள இரத்தினத்தாலும் பொன்னாலும் செய்யப் பட்டதுமாகிய அம் மோதிரத்தை மறைத்து, இருளை நீக்குதற்கு விரைந்து தன்னுடைய கிரணங்களை வீசுகின்ற ஓர் இளஞ் சூரியனை எடுப்பதுபோல அப் புத்திரனை ஈகை பொருந்திய தன்னுடைய கையினாலே எடுக்க, அப்பொழுது அப் புத்திரன் தும்மினான்; அத் தும்மல் உண்டானவுடனே, குழந்தைகள் தும்முங்காலத்தில் தாய்மார்கள், ✻ 'நூறு' என்று இக்காலத்தில் வாழ்த்தும் முறைமைபோல 'ஜீவித்திருப்பாய்' என்று பொருள்படும், 'ஜீவ'

---

✻ நூறு - வயது நூறு; அதாவது நூறு வயதுவரை வாழ்வாயாக என்று வாழ்த்துவது.

என்னும் சொல்லைக்கொண்டு கூனிவடிவாயிருந்த யக்ஷி தேவதையானது மரக்கிளையில் மறைந்து நின்று தன்னுடைய ஒரு குரலால் 'ஜீவ' என்று வாழ்த்திற்று; விஜயையோ பயத்தினால் தன்னுடைய குரல் வெளிக்குத் தோற்றாமல் மனத்திற்குள்ளேயே வாழ்த்தினாள். அவ்வாறு வாழ்த்தி மேலும் அவ்விஜயை, கந்துக்கடன் தன்னுடைய புத்திரனைக் கையினாலெடுப்பதைக்கண்டு, முன்னே அரசன் பொருட்டாக எலும்புக்குள்ளே யிருந்தெழுந்து, உடலுருகித் தன்னை மறக்கும்படி தன்னிடத்தே வளர்ந்த பழைய அன்பானது உண்டானபடியினாலே, "புத்திரன் முகத்தைப் பார்க்கும் பாக்கியத்தை நமது தலைவர் பெறவில்லையே," என்று அரசனுக்காகவருந்திப் பின்பு தெய்வத்தைவணங்கி, அதன் மேல் புத்திரனைநோக்கித் தன்னுடைய இனிய கனிபோன்ற வார்த்தையினாலே, "உன்னுடைய பழைய பகையைச் சுற்றத்தோடு ஒழியும்படி மிகுதியாகக் கொல்லுவாய்," என்றும் வாழ்த்தினாள். அதன் மேல் கந்துக்கடன், ஒழுக்கத்தாலே பொருந்திய அரிய தவத்தைச்செய்த உடம்பைவிட்டு நீங்கியவர், அழிப்பதற்கரிதாகிய பொன்னுடம்பைப்பெற்ற தன்மையை நிகர்த்து, இறந்துபோன தன்னுடைய புத்திரன் அச் சுடுகாட்டிலே கிடக்கச், சிறந்த இரத்தினம்போலப் பரிசுத்தம் பொருந்திய விஜயை புத்திரனைக் கைக்கொண்டு அவனோடு விரைவாகத் தன திருப்பிடத்திற்கேகினான். அவ்வாறு சென்ற அவன், மின்னலையும் கெடுக்கக்கூடிய வலிமை மிகுந்த இருளைக்கடந்து, மேம்பாடுற்ற பொன்நிறைந்ததும், வளப்பம் பொருந்தியதுமாகிய தன்னுடைய மாளிகையிலே அழகு விளங்கும்படி புகுந்தான். அவ்வாறு சேர்ந்த பின், புத்திரன் இறந்த சோகத்தாலே வெம்பிய தன்னுடைய பெண்மதியானது சுட, அதனாலே தளருகின்ற அவனுடைய மனைவியாகிய சுநந்தைக்கு, முன் புத்திரர் இறந்துபோவ

தைப்பற்றி வருந்தியிருந்த காலத்தில் ஒரு முனிவர்வந்து, "ஒரு புண்ணியம் பொருந்திய புத்திரனைப் பெறுவீர்", என்ற இனியமொழி, "அவன் பொருட்டாக எல்லோரும் இறங்கும்படி பின்னும் நடக்கும் விசேஷ மொன்றுண்டு" என்று கூறிய அருள்மொழி ஆகிய இரண்டு வார்த்தைகளிலும், "புண்ணியம் பொருந்திய புத்திரனைப் பெறுவீர்" என்று கூறிய மொழியின் விசேஷத்தை ஞாபகம் வரும்படி எடுத்துச் சொன்னான். அவ்வாறுகூறி மேலும் அக் கந்துகன், அவளைநோக்கி, "இவ் வுலகத்திற் பொருந்திய புகழெல்லாம் தன்னிடத்தே கூடிய அருந்ததியின் கற்பையும் உயர்ந்ததன்றென அகற்றித் தாழ்மைப் படுத்திய குற்றமற்ற கற்பினையுடைய பெண்ணே! மேலே நான் கூறிய முனிவருடைய வாக்கு விசேஷத்தினாலே திருத்தமாகிய அழகினையுடைய நின்மகன் சாதலினின்றுந் தவறி மீண்டும் பிழைத் தெழுந்தான்; இனி நீ வருந்தாதே; என் மனைவியே! இங்கே வருவாயாக" என்றுரைக்கத், தேனானது பூவிதழையசைத்து ஒழுகுகின்ற களிப்பையுடைய மாலையை யணிந்த அச்சுநந்தை, தன் மனத்திற்குள்ளே அசைந்துண்டாகின்ற சந்தோஷமானது மேன்மேலும் வளர்ந்தோங்க, 'இப்பிள்ளை யிறந்தால் இனி உயிர் வாழேன்" என்று இறக்கத் துணிந்த அவளுக்கு உயிரையும் அளவற்ற பொருளையும் கொடுத்த வள்ளலாகிய அக் கந்துகனிடத்தில் மிகவும் விரைவாகப்போய்ச் சேர்ந்தாள். அப்படிச் சேர்ந்த மாத்திரத்திலே வெற்றிலைபோன்ற வேலையேந்திய கந்துகன், அப் பிள்ளைக்கு விஜயை இட்டிருந்த திலகத்தை அழித்துவிட்டு அது வேறு பிள்ளையென்று அவள் கருதாதிருக்கும்படி தந்திரத்தோடு அக் குழந்தையை அவளுடைய கையிற் கொடுத்தான். அப்பொழுது சுருண்டமுகத்தை யுடைய வலம்புரிச் சங்குகள் முழங்கின; பலவிதமான சந்தோஷ வாத்தியங்க ளெல்லாம் சப்

இத்தன; பிரகாசிக்கின்ற முகத்தினையுடைய முத்தைத் தாங்குவதற்காகக் கோபிப்பனபோலக் கருமை யடைந்த கண்ணை யுடைய பயோதரங்கள் பொருந்திய பெண்க ளெல்லோரும் உவகை மிகுதியினாலே, சுடர்விட் டொளிரு கின்ற பொன்களை எல்லோரும் கைக்கொள்ளுமாறு வாரி யிறைத்தார்கள். இந்த உவகை முழக்கத்தை யெல்லாம் கட்டியங்காரன் கேள்விப்பட்டுத், தான் அரசனைக் கொன்று அரசாட்சியைக் கைப்பற்றினதற் கனுசரிப்பாகவே கந்து கன் மகிழ்ச்சி யடைகிறானென்று நினைத்து, "அரசன் இறந்த விசனத்தினாலே ஜனங்கள் அழுகின்ற குரலானது மிகுந்து கலந்திருக்கின்ற வருத்தத்தையுடைய கடைத்தெ ருவிலே யிருந்தும், கந்துகன், எழுபிறப்பிலும் என்னு டைய சிநேகத்தைப் பெறவேண்டி அரசனுக் கிரங்காமல் அவனுக்கு என்மே லேற்பட்ட மிக்க காதலாலே என்னு டைய அரசாட்சியையே விரும்பிச் சந்தோஷங் கொண் டாடுகிறான்; இவனே எனக்குரிய நட்பாளன்" என்று மகிழ்ந்து, அக்கந்துகன் திருப்தி யடையும்படி, ஒருவரிடத் தும் நில்லாமல் திரிவதாகிய அளவற்ற திரவியத்தைக் கொடுத்தான். மேற்கண்டவாறு, செல்வம்பொருந்திய கந் துகன், அழகிய புத்திரனைப் பெற்று மகிழ்ந்ததனாலே, கட் டியங்காரன் விரும்பித் திரவியத்தைக் கொடுத்தபிறகு, தானும் சிவந்த பொற்குன்றை நிகர்த்தனவும், பெரியனவும், நல்லனவுமாகிய திரவியக் களஞ்சியங்களின் வாயில்களைத் திறந்துவிட்டுப் பெருமை பொருந்தியதும், விசால முள் ளதுமான பூமியிலேயுள்ள யாசகர்க்குப் பொன்னைக் கொ டுத்து, அரசன் போர்செய்திறந்த இந்நகரத்திலேயுள்ள போர்க்களத்தில் இப்புத்திரனும் போர்செய்து பகைவனை வென்று தான்பிறந்த பயனை யடையவேண்டி மேன்மே லும் இவ்வாறே தான தருமங்களைச்செய்து, இப் புத்தி ரன் வளர்ந்தோங்குதற்கான மார்க்கங்களைத்தேடி அவற் றின் வழியிலே நடந்து வந்தான்.

இஃதிப்படியிருக்க, விஜயை யானவள், தனது நாயகனாகிய சச்சந்த மன்னனென்னும் நல்ல உயிரானது நீங்கின மாத்திரத்திலே நற் குணத்தையுடைய தனது புத்திரனாகிய ஒரு சிற்றுயிரோடு நின்றவிடத்தில், அச் சிற்றுயிராகிய புத்திரனையும் தலைவிதியானது பிரியும்படிசெய்து பரற்கற்கள் தோன்றுகின்ற சுடுகாட்டிலே மேற்கண்டபடி மறைத்துவிட, நடுக்கடலிலே கப்பலைக் கவிழ்த்துவிட்ட ஒருவன் அடையுந் துன்பத்தைப்போன்ற துன்பத்தையடைந்தாள். அப்படி யடைந்த அவள், பின்னர் எய்திய நிலைமையை இனி மிகுதியாக எடுத்துக் கூறுவாம்.

வாசனை மிகுந்த மாலையையணிந்த அவ் விஜயை யானவள், மேற் கூறியபடி அடைந்த வருத்தத்தினாலே எந்திரமற்ற பாவையைப்போலச் சீக்கிரமாக விம்மியழுது வெறுந்தரையிலே மயங்கி விழுந்தாள்; அப்படி விழுந்த அவளைக் கூனிவடிவமாயிருந்த தேவதை எடுத்துத் தேற்றி அதன்மேல், அந்தத்திலும் ஆதியிலும் அடையக் கூடிய காரியங்களை யெல்லாம் முறைமையாக எடுத்துச்சொல்ல அவள், பிற்காலத்தில் தனக்கும் புத்திரனுக்கும் நன்மையுண்டாகுமெனக் கருதி, அவ்வருத்தத்தி னின்றும் நீங்கினாள். அவ்வாறு நீங்கிப் பின்னும், மகாலட்சுமியை நிகர்த்த அவ் விஜயை யானவள், தன்னுடைய பெருமையிற் சிறந்த மகனுக்கு மேல் உண்டாகக் கூடிய ஆக்கத்தை யெல்லாம் ஒழுங்காகக் கேட்டு மனத் திருப்தியடைந்து, அக் கூனி வடிவமான தேவதையை நோக்கி, "அன்னையே! இனி மேல் நான் செய்யத்தக்க காரியங்களை யெல்லாம் ஒரு மனத்தோடு உரைக்கக் கடவாய்" என்று கூறினாள். அவ்வாறு கூறவே, முன் ஜென்மத்திற்செய்த தீவினையினாலே விஜயையும் பிள்ளையும் பிரியுங்காலம் நேர்ந்து அதன்பொருட்டுக் கலங்குகின்ற அவளுக்காக வருந்தும் அத் தெய்வமானது மேல் நடக்கவேண்டிய காரியத்தைப்பற்றிச் சொல்லத் தொடங்கிற்று.

அவ்வாறு தொடங்கிய அத்தெய்வமாகியகூனி, விஜயையை நோக்கி, "நீலரத்தினத்திலே கருமணலை அழுத்திவைத்தாற்போன்றதும், நீண்டதுமாகிய கூந்தலையும், உலகமெல்லாம் உன் ஏவலிலடங்கி நடந்து வருதற்குக் காரணமான உயர்ச்சிவாய்ந்த கற்பினையும், வேலாயுதத்தையும் நீலோற்பல மலரையும் போன்ற கண்களையு முடைய பெண்ணே! இப்பொழுது இந்த இருளாகிய போர்வையிலே நாம் மறைந்து சென்று, அமரிகை யென்னும் பெரிய ஆற்றிலுள்ள அழகிய மணலிலே சேர்ந்து இளைப்பாறுவோம்; இக்காரியத்தைச் செய்யத்துணிவாயாக; பின் அந்த அமரிகைக்குமேல் ஐம்பது யோசனை தூரங்கடந்து சென்றால், கொடிகள் விளங்குகின்ற புதியமதிலையும் கோபுரத்தையு முடையதும், உலகத்தா ரெல்லோரும் தன்னிடத்தேயிருந்து ஒருவர்க்கொருவர் உறவினராந் தன்மையை நடத்தக் கூடியதுமாகிய தரணி திலக மென்னும் பழமையான ஊர் தோன்றும்; அது, நம்மவர்கள் வாசஞ்செய்யக்கூடியது; ஆயினும் நாம் இந்நிலைமையோடு அவ்விடத்திற்சேர்வது தகாததலால் அங்கே போகாதவர்களாய்ச்சென்று வண்டுகள் நிறைந்த குவளைகள் செறிந்திருக்கின்ற ஆற்றோடைகளும், மனிதரால் உண்டாக்கப்படாமல் தாமே யுண்டாகிய நீர்நிலைகளாகிய பொய்கைகளும், பார்ப்பவர்கள் மனத்தைக் கவரத்தக்க சோலைகளும்நெருங்கிய தண்டகாரணிய மென்கின்ற வனத்திலே யுள்ளதாகிய ஒப்பற்ற முனிவரிருப்பிடத்திலே சேர்ந்து அவர்களைப் போலவே தவவேடந்தரித்துத் தங்குவோம்," என்று கூறினாள்.

கூனியானவள் விருப்பத்தை யுடையவளாய் மேற்கண்டவாறு உயர்ந்த கருத்தையுடைய வாய்மொழிகளைக் கூற, மயக்கந்தீர்ந்த விஜயை யென்னும் மாதுசிரோமணி, அவ்வார்த்தைகளை மிகவும் மதித்தவளாகிக், கிருபையையுடைய

வர்களும், சிறந்த தவம் பொருந்தியவர்களுமாகிய முனிவர்கள் வாழ்கின்ற அத் திசையிற் செல்லக்கருதி, இரத்தினங்கள் மலர்ந்த ஒரு பவளக்கொம்பினது மெய்ம்முழுவதிலும் சிலந்திப் பூச்சியானது பட்டுநூலாற் சுற்றியதைப் போல, இரத்தினுபரணங்களணிந்த தன் தேகமுழுதும் மறையும்படி போர்வையால் போர்த்துக்கொண்டு, பஞ்சியினுற் செய்யப்பட்ட மெத்தையையும் அனிச்சமலரையும் நெருஞ்சியின்ற பழமென்று நினைத்துக் குந்தி அசைந்தசைந்து இரத்தங்கக்கி அஞ்சி வருந்தத்தக்க தாமரை மலர் போன்ற பாதங்கள், அரத்தில் மிதித்து வருந்துவதுபோல வருந்தக்கூடிய பரற்கற்கள்மிகுந்த அரியகாட்டிலே, கொடிபோன்ற இடையானது அசையக் கையைவீசி நடைக்குவருந்தாத தன்மையையுடைய ஒருமயிலானது நடந்தவிதம்போல மலர்ப்பாதங்களாலே செல்லலுற்றுள். அப்பொழுது, முன்னே அழகுபொருந்தியதும், சிறந்ததுமாகிய சந்திரன்போன்ற ஒளிபிரகாசித்த முகத்தில் வருத்தத்தால் அவ்வொளி கெட்டுக்கருகி அதனு லேற்பட்ட கரியபிரகாசமும், கிரணங்களை வீசுகின்றதும், சிறந்த மகரவடிவமாகச் செய்யப்பட்டதுமாகிய காதணியின் அழகிய பிரகாசமும் ஆகிய இவைகள், இனிய மொழிகளை யுடைய அவ்விஜயைக்கு, ஒப்பற்றதும், நீண்டதுமாகிய இருள்தங்கியவழியில் தடையின்றி வழிகாட்டி அவளை நடத்தும் விளக்குக்கள்போன்றன; இவற்றின் உதவிகொண்டு மேற்கூறியபடி சென்றவளும், பிரகாசிக்கின்ற ஆபரணத்தை யணிந்தவளுமாகிய அவள், அவ்விளக்கு வெளிச்சத்திலே கூனியொழிய வேருெரு துணையு மில்லாமையினுலே ஏற்பட்ட அச்சத்தால், பகைவர்மேல் வீசுகின்ற வேலாயுதம்போன்ற கண்கள் சுழல, பாதச்சிலம்புகள் இரங்கிப் போற்றுவன போன்று சப்திக்க, அழகாகக் கைகள் சென்று தேகத்தைப்பற்றிக் காத்துக்கொண்டிருக்க, (அதாவது: கைகளி

லால் தேகத்தை மூடிக்கொண்டு) பிரகாசிக்கின்ற பொன் னாலாகிய கிண்கிணியும் மேகலாபரணமும் ஒலிக்க, கூர் மையான பரற்கற்களையுடைய காடுகளையும் மலைகளையும் கடந்து, அக் கூனியாகிய தேவதையின் உதவியால் ஒரு மின்னலைப்போன்றும் விரைந்து சென்றாள். அதன்மேல் இவ்வாறு சென்றவளும், விசாலமாகிய தாமரை மலரி னிடையேயுள்ள மகரந்தத்தில் வீற்றிருக்கின்ற இலக்கு மியை நிகர்த்தவளுமாகிய அவ் விஜயையும் உள்ளங்கை யளவுபோன்ற அளவுடையனவும், மையுண்டனவுமாகிய கண்களையுடைய அக் கூனியும், தன்னிடத்தே நிறைந்த நீரைக்கொண்ட அமரிகை யாற்றின்நடுவேயுள்ள ஒருஇட வில் சேர்ந்தார்கள். அங்குச்சேர்ந்தவுடன் விஜயை, அயர்வு தீரும் பொருட்டுக் கூனிசொல்லியபடி நித்திரை செய் தாள். கூனியோ அவளுக்குக் காவலாயிருந்தாள். இப்படி யிவர்கள் சேர்ந்து விஜயை நித்திரை செய்த சமயத்தில், ஒருவர்க்குப்பழமையாகிய நல்வினையானது வந்துதோன்ற அதற்கு முன்னே தோன்றி நின்ற துன்பம்பொருந்திய வெவ்விய தீவினையானது நீங்குவதுபோலச் சிவந்த ஆயிரங் கிரணங்களையுடைய சூரியனானவன், வளப்பம் பொருந்திய கீழ்க்கடல் முகட்டில் உதிக்க, அவ்வாறு உதித்த மாத்திரத் திலே உலகத்தில் தங்கியிருந்த இருளானது நீங்கி விடிந் தது. அப்படி விடியுந் தருணத்தில், பகைவருடைய மாமி சத்தைக் கொள்கின்றதும், கூர்மை தங்கிய நுனியை யுடை யதுமாகிய வேலாயுதம்போன்ற நீண்ட கண்களை யுடையவ ளாகிய விஜயை, மேற்கூறிய அவ்வாற்றின் நடுத்திடலிலே, மிகவும் நுண்ணியதும், ஒழுங்குடையதுமான ஒரு மின்ன லானது, வாசனையைக் கொண்டதும், நீண்டதுமாகிய ஒரு சோலையில்வந்து, ஒரு மேகத்தின்மேலே படுத்திருந்ததை நிகர்த்துப், பார்ப்பவர்கள் இமை தெரியாமல் மயங்கி வருந்தத்தக்க உயர்ச்சி வாய்ந்ததும் நுட்பமுள்ளதுமான வஸ்திரத்தின்மேலே படுத்திருந்தாள்.

அத் தருணத்தில், வேடக் கூனியானவள், அவளைப் பார்த்து, "எம தன்னையே! நீ வாழ்வாயாக; பொழுது விடிந்தது; ஆதலின், எழுந்திருப்பாயாக" என்று தன் கையினால் அவளுடைய பாதங்களைத் தடவ, உடனே அவள் கண்விழித்தாள்; அவ்வாறு விழித்தவள், அதற்கு முன் அரசனைக் கனவிற் கண்டுகொண்டு படுத்திருந்தபடியால், மேற்கண்டவாறு விழித்தவுடன் அது மெய்யாகாமற் போனபடியினாலே திடுக்கிட்டு வருந்தி, "ஐயவோ" என்று, ஒளியற்ற சந்திரனானது, பல அணுக்களும் கூடி நிறைந்து ஒரு வடிவமான இப் பூமியில் முளைத்தெழுவது போல எழுந்தாள். அவள் இப்படி எழுந்ததைக்கண்டு, கொல்லைகளில் மேயும் மென்மையாகிய மான்கூட்ட முதலாகத் தோகை நிறைந்த அழகிய சிறகுகளையுடைய அன்னங்களும், மயில்களும் அவ்விடத்திற் சேர்ந்து, கஸ்தூரி மணக்கின்ற அவளுடைய அழகிய தேகத்தின் தோற்றத்தைநோக்கி, அவள்வாட்டத்தை யடைந்திருக்கும் நிலைமைக்காகக் கொட்டாவிவிட்டுச் சகிக்க முடியாமல் அழுவன போல ஆர்ப்பரித்தன. இத்தகைய கெதி யடைந்தவளும், அழகும் விருப்பமும் தங்கிய பயோதரங்களை யுடையவளும், தாமரைப்புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற பொற்கொடி போன்ற இலக்குமியை நிகர்த்தவளுமாகிய அவ்விஜயை, முற்பிறப்பில்செய்து நிலைபெற்ற ஒரு பழைய தீவினையானது இருந்தபடியால், இப்பிறப்பில் இதுவரை இத்தகைய துன்பங்களை யெல்லாம் அடைந்தாள். ஆயினும், இச்சமயம் அத்தீவினையானது அவளைவிட்டு நீங்கியபடியால், இவ்விடத்தினின்றும் புறப்பட்டு முன்னே கூனி கூறியபடி ஒழுங்கை யுடையவர்களும், சிறந்தவர்களுமாகிய தவசிரேஷ்டர்கள் தவஞ்செய்கின்ற ஆசிரமத்தை யடைந்தாள்.

அவ்வாறு சேர்ந்தவுடன், அங்குள்ள சிறந்த தவத்தை யுடைய பெண்க ளெல்லோரும் ஒன்றாகக்கூடி, முன்னே

வாளின்தன்மை பொருந்தியிருந்த நீண்ட கண்களையுடைய விஜயையைத் தோள்கள் பொருந்தும்படி தழுவிக்கொள் பவர்களைப் போன்று எதிர் கொண்டு, அவளிடத்தே சென்று, அவளுக்குத் தேவதையின் சகாயத்தால் வருத்த மில்லா திருந்தும், அக்காட்டின் வழியேவந்ததனுல் வருத்த மிருக்குமென்று கருதி அவளுடைய பாதநோவுக்குச் செய் யத்தக்க பரிகாரங்களைச் செய்து, அவள் தவஞ்செய்யக் கருதியிருக்கும் அவளுடைய மனக்குறிப்புணர்ந்து, மேலே தவத்திற் செல்வதற்கு முன்னர் அனுஷ்டிக்கத்தகுந்த ஒழுங் காகிய நோன்பை அவளுக் கேற்படுத்தி அதை அனுஷ் டிக்கும்படி செய்து அதன்மேல், சந்திரனனது தினந்தோ றும் ஒரு கலை ஏற (அதாவது: வளர்பிறையாயிருக்க) அவ் வளர்பிறையிலே நல்ல சுபதினமும்வந்து பொருந்த அத் தருணத்திலே அந் நோன்பிற்குத் தகுதியாக அவளுடைய ஆபரணங்களைக் களைவிக்கத் தொடங்கினர்கள். அவ்வாறு தொடங்கின மாத்திரத்திலே, அவர்களுடைய கட்டளை யால் விஜயை, திருத்தமாகின்ற தகரமென்னும் வாசனை மரத்தின் விறகாலாகிய சிவந்த நெருப்பிலே, தேனைப் பூசிப் போட் டெரிக்கப்பட்டதும், இனிமை கொள்ளும் படி மணக்கின்றதும், வயிரம் பொருந்தியதுமாகிய கரிய அகிலினது நல்ல புகையிற்சேர்ந்து வாசனையோடு தங்கப் பெறும் தலைமாலை புலம்பவும், தேன் வண்டுக் கூட்டங்க ளும், கருவண்டுக் கூட்டங்களும் பூவில்லாததால் மக ரந்த முண்ணப் பெறுமல், தாங்கள் அவ்விடத்திருந்து இசைபாடுந் தொழிலும் போய்விட்ட படியினுலே அதற் காகப் புலம்பவும், அரிதாகிய பொன்னரிமாலையும், நெற்றி மாலையும், தலை யலங்காரமாகிய முத்தாபரணமும் புலம்ப வும், இவற்றையெல்லாம் வாசனையால் மேன்மையுற்ற கஸ் தூரியணிந்த தனது கூந்தலினின்றும் நீக்கினுள்; மேலும், சித்திரப்பாவையை நிகர்த்த அவ்விஜயை, சந்திரனை நகத்

தால் பெயர்ப்பதுபோல நெற்றியிலணிந்திருந்த திலகத்தை விரலினாலே நீக்கிப், பைம்பொன்னாற் செய்யப்பட்டதும், மகர வடிவானதுமான குழையென்னும் காதணியையும், குண்டலத்தையும், கழுத்தில் அணிந்திருந்த ஆபரணங்களையும், பகைவர்மேல் கோபக்குறியைக் காட்டுகின்ற வெவ்விதாகிய கண்களையுடைய சச்சந்த மகாராஜனுக்கு அமிர்தமாகி, அவனைக் கொல்லுவதற் கேதுவா யிருந்தபடியால் வேல்போன்ற கண்களையுடைய அவளுக்குப் பகையா யமைந்தனவும், அழகையுடையனவுமாகிய பயோதரங்களி லணியப்பட்டிருந்த முத்துமாலையையும், மற்றுமுள்ள பொன்னாபரணங்களையும் நீக்கினாள். பின்னரும் கொடியை வடிவத்தால் வருத்துகின்ற இடையை யுடையவளாகிய அவள், பஞ்சை நிகர்த்த மென்மையையும், மூங்கிலை நிகர்த்தவடிவத்தையு முடைய தோள்களிலே அணியப்பட்டதும், திறந்தவாயை யுடையதுமாகிய மகரமென்னும் ஆபரணம் தன் வாயிலிருந்து கக்கின வடிவமாக அதனிடத்தே தொங்குவனவும், மாறுத கிரணத்தை யுடையனவுமாய் விளங்கும் பலவடங்களாகிய முத்துக்களைப் பார்த்து, "என் தோள்களுக்கு அழகைச்செய்து, மன்னருக்கு இனிமையையுண்டாக்கி அவர் இராஜகாரியங்களைக் கவனியாமல் மாளும்படி செய்த முத்துக்களே! உங்களுடைய உறவு இம்மட்டோடு போதும்; நீங்கள் செய்த உதவிக்காக உங்களைத் தொழுகின்றேன்; நீங்கள் போய்வருவீராக" என்றுகூறி அவற்றையும் நீக்கிவிட்டுக், கழற்றுதற்கருமையாயிருந்தபடியால் கையிலணியப்பட்டிருந்த வளையல்களை உடைத்து, அழகிய செங்காந்தள் மலரும் நிறத்தால் அஞ்சும்படி சிவந்ததும், மெல்லியதுமான விரலில் அணியப்பட்டிருந்த அருமையாகிய பொன்மோதிரத்தையும் நீக்கினாள்; இடைப்பாகத்தின் கீழ் அணியப்பட்டுப் பிரகாசிக்கும் மேகலாபரணங்களெல்லாவற்றையும் பார்த்து, "நம்

மரசர்போய் அரம்பையரைச் சேர்ந் தனுபவிப்பதனாலே இனி உம்மை நோக்கவே மாட்டார்; ஆதலால் நீங்கள் என்னிட மிருப்பதால் எவ்வகைப் பயனுமில்லை; நீங்கள் இதுவரை சேர்ந்திருந்ததற்காக வருந்தாமல் என்னைவிட்டு நீங்குவீராக," என்று சொல்லி அவற்றையும் நீக்கினாள்; இன்னும், பெண்மானை நிகர்த்தவளாகிய அவ்விஜயைமா தேவி, பெட்டையானையின் கையைப்போலத் திரண்ட தொடையி லணியப்பட்ட 'குறங்குசெறி' என்னும் ஆப ரணத்தையும் நீக்கிப், பாதங்களி லணியப்பட்டிருந்த சதங் கையையும், சிலம்பையும், பாதவிரல் மோதிரங்களையும் கழ ற்றி நீக்கினாள்; இவ்வாறு நீக்கியபின்பு அவள், ஒரு பூங் கொடியானது தன்னிடத்தே மலர்கள் அதிகமாக மலர் ந்து பின்னர் அம்மலர்களெல்லாம் உதிர்ந்துவிட அப்போது அடைந்த தோற்றத்தைப்போல, உடம்பு ஒருநூதன வடி வங்கொள்ளத் தோன்றிக், கூனியானவள் அத்தோற்றத் தைக்கண்டு, "உனக்கும் இக்கதி நேர்ந்ததே," என்று வருந்த, அறிவுடையவனாகிய சச்சந்த் மன்னனுடைய புத் திரன், தன்னோன்பால் உயர்ந்துவளரக்கருதிக் காவிக்கல் லில் தோய்த்த நுண்மையான வஸ்திரத்தை யுடுத்தினாள். இப்படி யுடுத்திய பின்னர், நுண்மைத் தன்மையினாலே நூலைத் தாழ்மைப்படுத்திக் கெடுக்கின்ற இடுப்பினையுடைய வரும், சித்திரப்பாவை போன்றவரு மாகிய சேடியர், முற்காலத்தில், "இவள் அரசனோ டனுபவித்த இன்பமிகு தியினாலே உணவு நீங்கினாள்" என்று, வலியப்பொற்கலத் திலே பாலோடு சேர்ந்த சோற்றை நிறைத்து உண்ணும் படி வேண்டி யேந்தினாலும் அதைச் சிறிதும் நோக்காத வளும், சேலைத்தாழ்த்திய கண்களை யுடையவளுமாகிய அவ்விஜயை, முன்பு அழகிய மணியை யணிந்திருந்ததும், காந்தளிதழ் போன்றதுமாகிய தன்னுடையகையே இப் பொழுது சுத்தமான இலைக்கறியை யெடுத்தூட்ட அத

னையுண்டு, இதற்கு முன்னே வீட்டிலுறையுந் தெய்வம் போல விளங்கினதுபோக இத்தருணத்தில் வனத்திலே தங்குகின்ற ஒரு தெய்வம்போலானாள். இப்படி யிருக்குஞ் சமயத்திலே தவப்பெண்கள், தங்களுடைய மெல்லிய விரலினாலே கொய்துவந்த குளநெல்லும், நன்றாக முதிர்ந்து விளைந்த அல்லி யரிசியும் தவசிரேஷ்டர்களின் உணவுக்காகக்காயும் தவாசிரமத்தின் முற்றத்திலே, அவற்றைத் தின்று கொண்டிருந்த அணிலானது, தன்னைக்கண்டு பயந்து கத்திக்கொண் டோடும்படி, காட்டுப்பசுவின்கன்றைத் தன் குட்டியென்று நினைத்துவந்து தழுவியதும், சொரிகின்ற சந்திரகிரணத் தொகுதிபோலும் நல்ல அழகுபொருந்திய மயிர்த்தொகுதியை யுடையதுமாகிய கவரிமானானது, அதற்குப்பாலூட்ட, அவ் விநோதத்தை அவ் விஜயை கண்டு, "நம்முடைய புத்திரனும் இப்படியே அன்னியருடைய பாலையுண்டு வளர்கின்றா னன்றோ?" என்று தன்னுடையபுத்திரனை நினைத்து, அப்படி நடக்கும்போதெல்லாம் வருந்துவாள். இப்படி மகனை நினைத்து அத் தவப் பள்ளியில் விஜயை தங்கி யிருந்தபோது, கூனி வடிவாயிருந்து துணைசெய்துவந்த ஏகஷிதேவதையானது, அங்குள்ள தவமகளிரை நோக்கி, * "ஆரியாங்கனைகளே! பேசத்தக்க இனிய அமைதித் தன்மை, நாணம், அழகு, சாயல், கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை யாகிய பெரிய மடம், காதல் ஆகியவைகளெல்லாம் உலகத்தில் சேர்ந்து விளங்கும்பொருட்டு ஒன்றாகக்கூடி ஒருருவெடுத்தது போன்ற இப்பெண், எல்லா நற்குணங்களும் பொருந்திய உங்களுக்கு அடைக்கலம்; இவளை நீங்கள் யாதொரு தீங்குமின்றிக் காத்தருளவேண்டும்," என்று கூறிப் பின்னரும், அவளுடைய நாட்டையும், குறித்த குலத்தையும் வேறு பெயர்பட மறைத்துக் கூறித் தன்னிருப்பிடஞ் சேரத்

---

* ஆரியாங்கனைகள் - தவப்பெண்கள்.

துணிந்தது. அவ்வாறு துணிந்த அத்தெய்வத்தினுடைய நெஞ்சம், இவ்விடத்திலே அவ்விஜயைக்கு மேல் ஆகவேண்டிய உறுதியான காரியங்களை நினைத்து அவையெல்லாம் கிரமமாக நடக்கும்படி அனுக்கிரகித்துவிட்டுத் தான் வாசஞ் செய்கின்ற அவ்விடத்திலும் போய்ச் சேர நினைத்தபடியால், அதற்கேற்ப அத்தெய்வம், தன்னுடைய தெய்வத்தன்மையாலே, விஜயைக்கும் அக்கருத்தே யுண்டாகி அவளும் அதன் பிரிவுக் கிணங்கும்படி செய்ய, அவள் அதற்கிணங்கி, அத் தெய்வத்தைநோக்கி, "குற்றமற்ற வெண்கொற்றக் குடையையுடைய அரசரது காதல் பொருந்திய நம் அழகுள்ள புத்திரனது தன்மையைப்பற்றி அங்குப்போய் விசாரித்து மீண்டும் இவிடத்திற்குச் சீக்கிரமாகச் சில தினங்களுக்குள்ளே வருவீராக" என்று தன்னுடைய தவ ஒழுங்குக்குத் தக்கபடி அக்கூனி சேடியாயிருந்தாலும் மரியாதையுடன் கூறி, அத் தெய்வமாகிய கூனியை அவ்விடத்தினின்று மனுப்பினாள். "அப்படியே அறிந்து வருவேன்," என்று சொல்லி உடனே அத் தெய்வம் புறப்பட்டது; அப்பொழுது, அவ்வாறு புறப்பட்ட வஞ்சிக்கொம்புபோன்ற அத்தெய்வமாகிய கூனி, "யான் கருதியதையே தானுங் கருதி என்னைப் போய் வாவென் றனுப்பியவளும், இனிமை வாய்ந்தவளுமாகிய இவளை, எனது தெய்வத்தன்மையாலே, புத்திரன் தன்மையைப் போய் அறிந்து வருகிறேனென்று சொல்லி ஏமாற்றி விட்டேன்," என்று அவளுடைய பிரிவுக்காக வருந்திப் பஞ்சுபோன்ற தன்னுடைய மெல்லிய பாதங்களிலுள்ள சிலம்பு, சதங்கை முதலிய பல ஆபரணங்களும் சப்திக்கும்படி நடந்து சென்று, உயர்ந்த கோட்டை மதிலையுடைய இராஜமாபுரத்தில் தன் னிருப்பிடமாகிய சுடுகாடு சேர்ந்தாள். இக் கூனி வடிவமாகிய இத் தெய்வம் இவ்வாறு சொல்லிப் பிரிந்து சென்றபிறகு, மான் பார்வை

போன்ற பார்வையையுடைய விஜயை, இதைத் தெய்வமென்று தெரிந்துகொள்ள முடியாத தன்னுடைய பெண்ணறிவாலே, (அதாவது : பேதைத் தன்மையாலே) தான் சுற்றத்தைவிட்டு நீங்கியிருக்கும் நிலைமைக்காக மிகவும் தளர்ந்து, வண்டுக் கூட்டங்கள் இசைபாடக் கூடியதும், ஒப்பற்ற வாசனை மிகுந்ததுமாகிய சோலைசூழ்ந்த அத் தவபள்ளியினிடத்தே, தன்னை ஏமாற்றிப்போன இக்கூனி வரும்வழியை நோக்கி நின்று பல இரவும் பகலும், "இன்று வருவாள், நாளை வருவாள்," என்னும் ஆசையோடு வசித்துவந்தாள்.

இவள் இங்கே இப்படியிருக்கத் தேன்சொரிகின்ற மாலையையும், வாளாயுதத்தை நிகர்த்தனவும் மையுண்டனவுமாகிய கண்களையும், மயிலை நிகர்த்த சாயலையுமுடையவளாகிய சுநந்தை, தன் பிள்ளையை யிழந்ததனுலேற்பட்டதும், மிகுந்த அக்கினிபோன்றதுமாகிய துன்பத்தைச் சிறிதும் நில்லாதபடி நீக்கி, மீண்டும் இவ்விஜயை புத்திரன் கிடைத்த திருப்தியினுலே சந்தோஷ மிகுந்திருந்தாள் ; அவள் அவ்வாறு மகிழ்ச்சி யடைந்ததனுலே ஆங்குள்ள மற்றவர்களுக்கும் அப்பிள்ளையைவிட்டு நீங்கமுடியாத ஆசை மிகுந்திருந்தது. அவ்வாறு எல்லோர்க்கும் திருப்தியுண்டான அவ் விராப்பொழுதிற்கு இப்பால், அப்பிள்ளை சம்பந்தமா யுண்டான காரியங்களை யெல்லாம் பலரும் கேட்கும்படி இனிச் சொல்வேன் :

மேற் கூறியவாறு புத்திரன் கிடைத்ததன்மேல், எமனும் அஞ்சத்தக்கதும், கொல்லனுற் செய்யப் பட்டதும், கூர்மையை யுடையதுமான வேலாயுதத்தைத் தாங்கியவனும், இளமைப் பருவத்தை யுடையவனுமாகிய கந்துகனும், புகழ்ந்து சொல்லப் புகுந்தால், அச் சொல்லும் அவ்வாறு அளவிட்டுச் சொல்வதற்கு அஞ்சக்கூடிய உயர்ச்சி வாய்ந்த கற்பையுடைய சுநந்தையும், அப் புத்திரனுக்குச்

சிறப்புச்செய்யு நிமித்தம் விரும்பி யழைத்துக் கொண்டு வந்த பிராமணர், பெரியோர் முதலிய புண்ணிய புருடர்கள் கூடி, அவனைக் கந்துகன் எடுக்குங் காலத்திலே, "சீவ" என்று எகூறி தேவதை வாழ்த்தியதற்குப்பொருத்தமாகப், பகைவர்மீது செலுத்தத்தக்க கோப மிகுதியையும், மிக்க புகழையுமுடைய அப் புதல்வனுக்குச் சீவகனென்று பெயரிட்டார்கள். அவ்வாறு பெயரிட்டு வளர்த்துவருங் காலத்திலே, மேகமானது வெளிப்படுத்திய மின்னலை நிகர்த்தவளாகிய சுநந்தை, பிரகாசிக்கின்றனவும், பசுமை யுள்ளனவுமாகிய ஆபரணங்களையணிந்த தன்னுடைய மார்பகமானது தோற்றுவித்த அழகிய பயோதரங்களினின்றுஞ் சுரந்த பாலாகிய அமுதத்தை யூட்ட, ஆகாயம் தனக்கு அலங்காரமாகத் தோற்றுவித்ததும், சிறந்ததுமாகிய சந்திரனை நிகர்த்த சீவகன், அதனையுண்டு, சத்தியுஞ் சிவனுமாகி உலகத்துக் கெல்லாம் போகத்தை யுண்டாக்கினவனும், திரிபுரத்தை நாசஞ்செய்தும், விஷத்தையுண்டும் உலகத்திலுள்ள பல வுயிர்களையும் காத்த புண்ணியனுமாகிய சிவபெருமான் கையிற்றாங்கி யெய்த * கணையாகிய மகாவிஷ்ணு, கிருஷ்ணவ தாரத்தில் ஆயர் பாடியில் நந்தகோன் மனையிலே கம்சனைக் கொல்வதற்கு மறைந்து வளர்ந்ததுபோலக் கட்டியங் காரனைக் கொல்வதற்கு, மேற்கண்ட கந்துகன் சுநந்தை ஆகியவர்க ளிடத்தில் இரகசியமாக இராஜ புத்திரனென்னும் உண்மை வெளிப்படாமல் வளர்ந்துவந்தான். இவன் இப்படி வளர்ந்து வந்த சில நாட்களுக்குப் பின்னர் சுநந்தைக்கு மற்றொரு புத்திரனும் பிறந்து வளர்ந்துவந்தான்; அவன்பெயர் நந்தட்டன்; இத்தன்மையுடன் வளர்ந்து வரும்போது, நமக்குச் சிறந்தவனாகிய இச் சீவகன், அழகிய பொற்கொம்பு போன்ற

* சிவன் எய்யும் கணை - மகாவிஷ்ணு; திரிபுர சம்மார காலத்தில் சிவன் மகாவிஷ்ணுவைப் பாணமாக்கி யெய்தானெனச் சிவ புராணங் கூறும்.

வர்களும், ஆராய்ந் தெடுக்கப்பட்ட ஆபரணங்களை யணிந் தவர்களுமாகிய பாராட்டுந்தாய், உணவூட்டுந்தாய், தாலாட்டுந்தாய், வார்த்தை கற்பிக்குந்தாய், கையிலேந்தி வளர்க்குந்தாய் என்னும் ஐவகைத் தாய்மார்களும் தனக்கு எல்லா நலத்தையும் உண்டாக்கி மேன்மேலும் தன்னைப் பேணி வளர்க்க, அக் கந்துகன் மனையில், பசிய பொன்னு லியற்றி அழகு செய்யப்பட்ட பூமியிலே, பல கிரணங் களையுடைய முத்துச் சரங்கள் தூங்கப்பெற்ற விளையாட் டுக் கருவிகளாகிய சிறு சகடத்தையும், சிவந்த பொன்னாற் செய்யப்பட்ட சிறு தேரையும், செயற்கை யானையையும் தன்கையாற் செலுத்தி நடந்து விளையாடித் தினந்தோறும் வளர்ந்தோங்கிய நலமிகுந்து உயர்ச்சி யுற்றான். இஃதன்றி யும் அக்காலத்திலே இவன், வால சிகிற்சையென்னும் நூலிற் கூறப்படும் பாலக்கிரக தோஷமென்னும் கிரக தேவதைகளின் பகையை வென்று, (அதாவது: அப் பாலா ரிஷ்ட தோஷங்களி னின்றும் நீங்கி) அகப் பரிவார மக ளிர் புத்திரராகிய ஐஞ்ஞூற்றுவரும், மந்திரி சாகரன் மக னாகிய ஸ்ரீதத்தனும், சச்சந்தனுடைய அந்தணனாகிய அச லன் மகன் புத்திசேனனும், மேற்கூறிய மன்னனுக்குரிய செட்டியாகிய தனபாலன் புத்திரனாகிய பதுமுகனும், அவ் வரசனுக்குரிய சிநேகனாகி அவன் பெயரால் பட்டம் பெற் றவனாகிய விசயதத்தன் மகன் தேவதத்தனுமாகிய ஐஞ் ஞூற்று நான்கு தோழர்களோடும், நந்தட்டன், நபுலவி புலர் ஆகிய தம்பியரோடுங் கூடி அவர்களுள் தலைமை பெற்றவனாகிப் பொய்கையிலுள்ள பற்பல புஷ்பங்களிடை யே உயர்ந்து விளங்குகின்ற தாமரை மலர்போன்றும், குளிர்ச்சி பொருந்திய தெய்வலோகத்திலுள்ள தேவர் எல் லாரிடத்திலும் இன்பம் பொருந்த வளர்ந்து பரக்கின்ற அறிவைப் போன்றும், (அதாவது: தேவர்களுடைய அறி வே ஒரு வடிவெடுத்தது போன்றும்) தனக்குப் பகையா

கிய யானையைக் கொல்லும் சிங்கக்குட்டியைப் போன்றும் இவ் வுலகத்தா ரெல்லாரும் துதிக்கும்படி வசித்துவந்தான்; இவன் இவ்வாறு வளர்ந்துவரவே அது காரணமாக ஏற் பட்ட சந்தோஷ மிகுதியால், கந்துகன், இவனுக்குச் சௌ ளத்திற்கு முன்னால் நடத்தவேண்டிய சிறப்புக்களை யெல் லாம் நடத்தித் தினந்தோறும் இரத்தினங்களையும், முத் துக்களையும், குற்றமற்ற பொன்னையும், பவளத்தையும், ஆபரணங்களையும், வேண்டா திருக்கும்போதும் பெற்றுக் கொள்வோர்க்கு மேகமானது சொரிந்து நலத்தைக் கொ டுப்பதுபோன்று, முதலில் வேண்டாதவர்க்குங் கொடுத்து, வரம்பற்ற கொடையனாகிப் பின்பு இன்னது இன்னது வேண்டுமென்று விரும்பி யிரப்பார்க்கு அவர்கள் விரும் பியவற்றைக் கொடுத்து, விரும்பியதைமட்டும் கொடுக்கும் அளவற்ற செல்வத்தையுடைய கற்பகத்தருவையும் நிகர்த் தான்; இரண்டு வேல்போன்றனவும், மையுண்டனவு மா கிய கண்களையுடைய சுநந்தையும், அக் கற்பகத் தருவின் மேலே படர்ந்த காமவல்லி யென்னும் கொடியை நிகர்த் தாள். அதன்மேல் சீவகன், வயதேற வயதேற, உயர்ந்த ஜாதியாகிய பசும்பொன்னின் பிரகாசத்தைப் பெற்று, நற் றன்மை குறையாததும், ஒழுங்கோடு பொருந்திய செல் வம்போற் கருதத் தக்கதுமாகிய குடுமிவைத்த லென்னும் சௌள கன்மத்தையுங் கடந்து, மற்ற கன்மங்களையும் முறையேகடந்து,மேலும் மேலும் வித்தியாப்பியாசம் செய் யும் பருவம் நிறைந்து, ஞானமாகிய செல்வத்தைப்பெற்ற பெரியோர் துதிக்கக்கூடிய இயற்கை யறிவின் விளக்கத் தாலே, நன்னற் காலமென்னும் ஆதிகாலத்திலே தோன் றிய பிர்மதேவனுடைய காதல் பொருந்திய மகனாகிய சுவா யம்பு மனுவை நிகர்த்தான்.

இவ்வாறு சீவகன் வித்தியாப்பியாசஞ் செய்யவேண் டிய பருவத்தை யடைந்தவுடனே, தன்னுடைய உயர்ந்த

அழகினல் மன்மதனுக்கு வருத்தத்தைச் செய்யத்தக்க இச் சீவகனுடைய நற்றுயாகிய சுநந்தை, தனது நாயகனுகிய கந்துகனிடத்திலே பொற்கொடிபோல வணங்கி நின்று ஒருதினம், "சேடனுடைய உச்சியிலே தங்கப்பெற்ற இவ்வுலகத்தில், உயர்ச்சி மிகுந்த நல்ல நெற்றியையுடைய வெற்றிமடந்தை புகழ்மடந்தை யென்னும் இரண்டு பெண்களும், தங்களுடைய மனத்தில் இவனை அடையும்படி நினைத்து வருந்துகின்ற வருத்தம் நீங்கிச்சேரவும், (அதாவது: நூல்களைக் கற்பதனலே வெற்றியும் புகழுமுண்டாகவும்) செந்தாமரைப் புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற இலக்குமி, சிறிது நாள்வரை இவனை விட்டுச் சற்றுவிலகி வருந்தித்தங்கவும், (அதாவது: இவன்படிக்கும் விஷயத்தில் செல்வச் செருக்கின்றி உபாத்தியாயருக்கு அடங்கி நடக்கவும்) நம்முடைய இப்புத்திரன் இனி * மையேடுபிடித்து அக்ஷராப்பியாசஞ் செய்யவேண்டும்; ஆதலால், இப்பொழுதே அதற்கு வேண்டிய காரியங்களில் பிரவேசிப்பது நலம்," என்று உரைத்தாள். அப்படி யுரைத்த மாத்திரத்திலே மத்தளம்போலத் திரட்சியுற்றனவும், வலிமை பொருந்தியனவுமாகிய தோள்களையும், பலமும் வெவ்விய தன்மையுமுடைய வில்லையும் உடையவனுகிய கந்துகனும், பார்ப்பவரை நெருப்பைப் போன்று தகிக்கின்றனவும், வாளை நிகர்த்தனவுமாகிய கண்களையும், வளையலை யணிந்த தோள்களையும் உடையவளாகிய அச் சுநந்தையும் இனிமையினலே வீணையையும் மயக்குகின்ற தித்திப்பாகிய மழலைச் சொற்களையுடைய இச் சீவகனுக்கு, தன்னை ஓதுவாருடைய மனத்தைக் குழையப்பண்ணுகின்ற (அதாவது: இளகும்படி செய்கின்ற) கல்வியென்னும் கன்னியைச் சேர்த்துவைதற்குக்கூடி ஆலோசித்தார்கள்; அப்படி ஆலோசித்த அவர்கள், அக்ஷராப்பியாசம் செய்யத் தீர்மானித்து, நற்றினத்

---

* மையேடு - அக்ஷரங்களை யெழுதி மைதடவித்துடைத்த ஏடு.

திலே, அரிய பொன்னும், இரத்தினமும், முத்தும், பழங் காசும் ஆகிய ஒவ்வொன்றும் குறுணியளவாக அதிகரித்த எல்லாப் * பிரப்பரிசியையும் கொண்டுவந்து வைத்து, சீவகனையும் நீராட்டி யலங்கரித்து உட்காரவைக்க, அச்சணந்தியென்னும் உவாத்தி முதலானவர்கள், பசியபொன்னாற்செய்த ஆசனத்தின் மேலிருந்து, திருந்துகின்ற பொன் மாலையை அணிந்த இவனுக்குச் செல்வமிக்க நாமகளை, (அதாவது: கல்வியை) மற்ற பெண்களைச் சேர்த்துவது போலல்லாமல் சிவந்த பொன்னோலையிலே அவள் அக்ஷரவடிவமாகப்பொருந்தும்படி பொன்னெழுத்தாணிகொண்டெழுதிக்கொடுத்துச் சேர்த்தினார்கள்; (அதாவது: அக்ஷராப்பியாசம் செய்வித்தார்கள்.) இவ்வாறு செய்யும்போது இவனுடைய தோழர்களுக்கும் அக்ஷராப்பியாசம் செய்விக்க, அவர்களும் வாசித்து வந்தார்கள். இப்படிச் செய்த தன்மேல், இலக்குமி வீற்றிருந்து விளங்குகின்ற மார்பையுடையவனாகிய சீவகன், தன் தோழரோடு நாமகளுடைய நலமாகிய வேதசாஸ்திரக் கல்விகளை யெல்லாம் விரும்பிப் பருகி, (அதாவது: முற்றக்கற்று), உபநயன முதலிய சடங்குகளும் செய்யப்பெற்றுப் பின்பு தான் கற்றுக்கொண்ட தனுர்வேதத்திற்கூறிய பாணம் முதலாகிய எல்லா ஆயுத வித்தைகளிலும் தேர்ச்சியடைந்து, காமனும் மனமுருகும்படி இசைநூலிற் கூறிவைத்த பாட்டையும், நாடக நூலிற்கூறிய நாடகவியலையும் கற்றுக் கரை கண்டு பூமியின்மேலே நிலமகள்நெற்றியிலிட்ட திலகத்தைநிகர்த்து

* பிரப்பரிசி - குறுணி கொள்ளும் பாத்திரம் நிறைய வைக்கும் அரிசி; பிள்ளைகளைப் பள்ளிக்குவைக்கும் காலத்தில் அரிசி நெல் முதலியவற்றைக் குறுணி யளவாக அளந்து பல கலங்களில்நிறைத்து வைப்பது வழக்கம்; இராஜ கிருகங்களில் இவற்றிற்குப் பிரதியாகப் பொன் முதலியவற்றை அளந்து வைப்பார்கள்; அவ்வாறு அளந்து வைக்கும் பொருள் யாதா யிருந்தாலும் அரிசிவைக்கும் வழக்கம் முக்கியமா யிருப்பதுபற்றிப் பிரப்பரிசி யென்று சொல்வதுமரபு.

விளங்கினான். இப்படி விளங்கிய இவன், நாடோறும் அழகும் இளமையும் அதிகரித்து உலவினபடியால், மின்னலை, உடனே மறைந்து விடாமல், நிலைபெற்று நின்று தோற்றும்படி செய்து, அதனிடத்தே பெண்வடிவத்தை எழுதினாற்போன்ற தன்மையையும், பிரகாசிக்கின்றதும், நுட்பமுள்ளதுமாகிய இடையையு முடைய குலக்கன்னியரெல்லோரும், இவன்மீது காதல் மிகுந்தமையினாலே, தங்கள் அழகிய தேகத்தில் தோன்றியதும், பொன்னைக்கரைத்தெழுதினாற் போன்றதுமாகிய * பசலையிலே மூழ்கி, மலையானது பயந்து மறைந்து நீங்கும்படி வளர்ந்து நின்றனவும், குங்கும மணிந்தனவுமாகிய தோள்களை யுடைய இவன் பொருட்டுமயங்கிக், கன்றைவிட்டு நீங்கும்படி மறைத்துவைத்த கறவைப்பசுவானது அக் கன்றுக்குப் பாலையூட்ட எவ்வாறு விரும்பி மனமிளகி நிற்குமோ அப்படியே இவனுக்கும் இன்பத்தைக் கொடுத்தற்கு விரும்பி மனங்கரைந்து தெருக்கடோறும் நின்று பார்ப்பவராயினார்; இவர்களன்றி இன்னும், தங்களுடைய அழகை விலைகூறி விற்கின்றவர்களும், வேலினுங் கொடிய கண்களையுடையவர்களுமாகிய பரத்தையரிற் கன்னிப்பெண்களும், வாலிபருடைய மார்பைத் தங்களுடைய அவயவங்களாற் றழுவி அத்தொழிலினாலே வாழக்கூடியவர்களும், " வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக் - கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும் - பண்ணியாழ்க்கரணமும் பாடைப்பாடலுந் - தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங் குழலுங் - கந்துகக்கருத்து மடைநூற் செய்தியுஞ் - சுந்தரச் சுண்ணமுந் தூநீ ராடலும் - பாயற்பள்ளியும் பருவத்தொழுக்கமும் - காயக் கரணமுங் கண்ணிய துணர்தலுங் - கட்டுரை வகையுங் கரந்துறை கணக்கும் - வட்டிகைச் செய்தியு மலராய்ந்து தொடுத்தலுங் - கோலங்கோடலுங் கோவையின் கோப்பும்-

* பசலை - காதல் முதலியவற்றாலுண்டாம் பொன்மைநிறம்.

காலக்கணிதமுங் கலைகளின்றுணிவு - நாடகமகளிர்க்கு நன் கனம்வகுத்த - வோவியச்செந்நூ லுரைநூற் கிடக்கையும்" என்னும் பரத்தையர்க்குரிய கல்விகளை யெல்லாம் கற்றுக் கரைகடந்த இனிய சொற்களை யுடையவர்களும், போகம் நுகரத்தக்க பருவம் வாய்ந்தவர்களுமாகிய * இற்பரத் தையர், † சேரிப் பரத்தையர் முதலானவர்களும், உறுதி யினாலே மலையையும் தோற்கும்படி செய்துயர்ந்த வலி மைபெற்ற புயங்களையுடைய இச் சீவகனது அழகுக்கு மயங்கி இரவும் பகலுமாகிய எல்லாநேரங்களிலும் பல வாறுபிதற்றிக் காதல் சகிக்காதவ ராயினர்.

இவன் இவ்வாறு பார்த்த மாதர்க ளெல்லோரும் மயங்கும்படி வளப்புடன் விளங்கிவருங் காலத்தில், வண் டுகள் தேனைச் சுவைத்துண்டு இசைபாடும் பசியமாலையை யணிந்தவனும், சீவக குமரனென்னும் பெயரையுடையவ னும், பகைவருடைய மாமிசத்தை உண்டு பிரகாசிக்கின்ற வேலாயுதத்தைத் தாங்கியவனுமாகிய இவனுக்கு மேற் குறித்தவாறு கல்விபயிற்றுவித்த அச்சணந்தி யென்னும் ஆசிரியன், தான் கற்றுக்கொண்ட கல்விகளை யெல்லாம் யாதொரு தடையுமின்றிக் கற்றுக்கொடுத்தபின்பு, தெய்வ லோகத்திலுள்ள சுவைபொருந்திய அமிர்தக்கடலானது, இவனிடத்தேவந்து கூடியதென்று சொல்லும்படி இவன் மனத்திற்றங்க ஓர் உறுதியான விஷயத்தை யெடுத்துச் சொல்லத் தொடங்கினன்.

அவ்வாறு தொடங்கிய அவ்வாசிரியன், சீவகனை நோ க்கி, "உத்தம குணசீலனே! ஆகமங்கூறிய வழியினது வகை யினாலே நன்மை தீமைகளை ஆராய்ந்து, நுட்பமாகிய நற்

* இற்பரத்தையர் - ஒருவனுக்கே உரிமையாய் வீட்டிற்சேர்ந் திருக்கும் போகமாதர்.

† சேரிப் பரத்தையர் - வரம்பின்றிப் பணங்கொடுத்தோரெல் லாரையுங் கூடும் பரத்தையர்.

காரியத்திலே புகுந்து, தீமை வகுப்பைச்சார்ந்த வழிகள் பலவற்றையும் நீக்கிச், சூரியதேவனை நிகர்த்த பிரகாசத்தையும், மாயையாகிய இருளை நீக்குந் தன்மையையுமுடைய அருகக்கடவுளால் ஏற்படுத்தப்பட்ட நன்மார்க்கத்தைச் சார்ந்துநின்ற நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்னும் இரத்தினத் திரயமாகிய முக்குணங்களையும் தழுவி யொழுகினால், அவ்வொழுக்கத்தினாலே, நரககதி, விலங்குகதி, மக்கட்கதி, தேவகதி யென்னும் சதுர்க்கதிகளிலே சார்ந்துநின்ற பக்குவ ஜீவன்களுக்கு நல்ல ஆக்கமாகும்," என்று கூறினான். அவ்வாறுகூறிப் பின்னர் ஜீவகன், அவன் தோழர் முதலிய எல்லோரையும் நோக்கி, "அறிவாற்சிறந்த பெருந்தன்மையை யுடையவர், நீக்குவதற்கரிதாகிய தீவினை கழிவதற்கேதுவாகிநின்ற சன்மார்க்கத்தைச் சார்ந்து, அநந்த சுகமாகிய இன்பவாரிதியினிடத்தே மூழ்கி இன்பத்தை யனுபவித்து நின்றார்கள்; உலகவாசையாகிய மிகுந்த நஞ்சையுடைய உடம்பென்னும் பாம்பினிடத்திலே யுள்ள ஐம்பொறிகள் என்னும் பெயரை யுடையனவாகிய ஐந்து வாய்களுக்குக் களிப்பைச் செய்கின்ற விஷயாதிகளில் ஐந்தறிவையுஞ் செலுத்தி அவற்றில் அழுந்தி நின்றவர்கள், துன்பசாகரத்தி லழுந்தி மிக்க வருத்தத்தை யடைந்து நின்றார்கள்; எமனானவன், மிக்க கொடுமையை யுடையவனாய்க் கொலைத்தொழில் செய்கின்ற வாதபித்த சிலேட்டுமங்களாகிய வார்களை ஆராய்ந்தெடுத்து, அவற்றினால், அகப்பட்டோர் தப்பிக்கொள்வதற் கரிதாகிய * ஆயுக்கன்மமென்னும் வலையை உண்டாக்கி வீசிவைத்தான்; அப்படி வலைவீசி வைத்ததை அறிவினாலே அறியத்தக்க நாமும் அறிந்து தவத்தைச்செய்து,

---

* ஆயுக்கன்மம் - வாழ்நாளை உண்டாக்கும் வினை; அதாவது: வாதபித்த சிலேட்டுமங்களால் ஆயுள் இவ்வளவென் றேற்படுத்தி வைப்பது.

அவன் அவ்வாறு ஏற்படுத்திவைத்த அவ்வலேயினின்றும் நீங்கி, இதற்குமுன் அனுபவிக்காத அனுபவத்தையுடைய தாகிய முத்தி யுலகத்தை நோக்கி, நேரான வழிபொருந் தப் போவதை அறியமாட்டோம்; இத்தகைய எளிய தன்மையையுடைய நாம், ஓ! ஓ!! மிகவும் பெரியவர்கள்; (நம்மைக் காட்டிலும் தாழ்ந்தவர்கள் ஒருவருமில்லை.) பெரிய மனவருத்தத்தைச் செய்கின்ற உலக துன்பத்தை யெல்லாம் தவஞ்செய்து நீக்குதற்குக் காரணமானதும், பிறப்பை நீக்கிக்கொள்ளத் தக்கதும், அமிர்தம்போன்ற சிறப்புள்ளதுமான இம் மானிடதேகத்தை அரிய தவப் பயனாலே யடைந்தோம்; அப்படிப் பெற்றும் இதனு லடை யத்தக்க பயனைக் கொள்ளும் விதத்தை அறியாம லிருக் கின்றோம்; நாம் இப்படியேயிருந்து ஐம்பொறிகளாலும் நுகரும் நுகர்ச்சிகளையெல்லாம் அவற்றிற்குரிய ஐம்புலன் களினாலும் அனுபவித்துப் பேணி நமக் கேற்பட்டுள்ள வாழ்நாள் கழிந்துபோனால், அவ்வாறு கழிந்தபிறகு நமது தேகத்தை மிகுந்த அக்கினியானது பற்றி யெரித்து, அது கவர்ந்துகொண்டு போகும்; அப்போது நாம் தரும காரி யங்களைச் செய்யவேண்டுமென்று நினைத்தால் அப்படி நினைத்தவை யெல்லாம் கைகூடுமோ? நீங்க ளெல்லோ ரும் ஆராய்ந்து பார்ப்பீராக; உலகத்தில் எல்லோரும் உண்மைப்பொருளைத் தழுவி ஒழுங்கில் நடப்பதற்காக, அந ந்தானுபந்திக்குரோதம், அநந்தானுபந்திமானம், அநந்தா னுபந்திமாயை, அநந்தானுபந்திலோபம், மித்தியாத்துவம், சம்மியக் மித்தியாத்துவம், சம்மியத்துவப்பிரகிருதி ஆகிய தரிசன மோகனீயப் பிரகிருதி ஏழும் பொருந்தியவர்க ளும், மிக்க மயக்கத்தை யுடையவர்களுமாகிய இவ்வுலகி னர்க்கு முன்னே, அறிவுடையோர் முழங்குகின்ற சப்தத் தையுடைய முரசறைந்து இருள் நீங்கும்படி கூறினாலும் அதனை மனத்திற் கொள்ளாமல் தீயகாரியங்களையே செய்து

முழங்குகின்ற அழல் வடிவமான நரகத்திலே விழுந்து மூழ்குவார்கள்; அவ்வாறு ஆழும் பாவத்தை முன்னே செய்தவர்களாகி அவ்வழியில் நின்றவர்களும் அளவற்ற மயக்கம்பொருந்திய அறிவை யுடையவர்களுமாகிய அவர்களைக் குணவிரதத்திற் சாரும்படி செய்ய முடியுமோ? ஒருநாளும் முடியாது; ஆகலின் அவர் கூட்டுறவைவிட்டு நீங்கி நல்லோருறவை நாடவேண்டும்; மேற் கூறியவர்களுக்கு உபதேசிக்கப்புகின், அவ்வாறு உபதேசிக்கப் புகுந்தவனுடைய அறிவுங் கெடும்; மானிடப்பயிரை விளைவிக்கும் உழவுத்தொழிலை யுடையவர்களே! இன்னும் உறுதியான விஷயங்களைக் கேட்பீராயின் சொல்லுகிறேன்; பவழம்போன்ற நிறம் பொருந்திய இடத்தினையுடைய கருப்பையாகிய நிலத்திலே முத்துப்போன்ற கருவாகிய விதையை விதைத்தலினாலே குழந்தையாகிய நாற்று முளைத்தெழுந்து, அது காளைப் பருவமாகிய செழித்த கதிரையீன்று, பின்பு மூப்பாகிய விளைவை யுண்டாக்கும்; இத்தகைய மானிடப்பயிரை, நோயைச் செய்கின்ற தீவினைகளாகிய பல மிருகங்கள் மேயும்; ஆதலால், அவை அப்படி மேயாதபடி சீலமாகிய வேலியை ஏற்படுத்திக் காப்பீராக," என்று கூறினான்.

இவ்வாறு கூறவே, எல்லாவற்றையுங் கேட்டு நிறைந்த கிரணங்களையுடைய சந்திரனை நிகர்த்த பிரகாசமுள்ள இரத்தினாபரணங்களை யணிந்த ஜீவகனும், பொன்மதிலாலமைந்த வட்டமாகிய சமவசரணத்திலே, சாதுவைச் சரணமாக அடைந்து தவஞ்செய்யும்படி செலுத்தக்கூடியதும், தன்னால் முன் செய்யப்பட்டதுமாகிய நல்வினை, இப்பொழுது அதிற் புகுமாறு செலுத்துதலானும், முன்னே அவ்வாறு நல்வினை செய்து பழகிய தன்னுடைய அறிவு மீண்டும் அத் தவத்திற்சென்று பரத்தலானும், (அதாவது தவத்திற் பிரவேசித்தலானும்) நரகத்திலே விழுவதற்கேதுவாகிய தீய வழியினின்றும் நீங்கிப், பிறவியாகிய

ஆழ்ந்தகடலை நீந்துதற்கு ஒரு தெப்பம் போன்றவனும் அறிவிற் சிறந்தவனுமாகிய அருகக் கடவுளை மனத்தாற் றியானித்து அவனைச் சரணமாக அடைந்தான். அவ்வா றடைந்தவனும், மலர்ந்த மலர்மாலையை யணிந்தவனுமா கிய அச் சீவகன் பின்னர் இரத்தினத் திரயங்கள் மூன்றுள், காட்சியாகிய நல்ல நிலையிலே ஞானமென்னும் கிரணங்கள் பொருந்திய இரத்தினக்கதவைச் சேர்த்திப், பூணுதல்மிகு ந்த ஒழுக்கமென்னும் வயிரத்தாழைப் புணர்த்திப் பூட் டிப் பிறவி நீங்குத லில்லாத தீக்கதிகளெல்லாம் உள்ளே புகாமல் அடைத்து, அதன்மேல் அளவற்ற இன்பத்தை யுடையதும், இதற்குமுன் ஆளுநகை யில்லாதது மாகிய முத்தி யுலகத்தில் போய்ச் சேருவதற்கு ஒரு புதுமையான வழியைத் திறந்துகொண்டான். (அதாவது: இரத்தினத் திரயங்களைத் தழுவித் தீயவழிகளினின்றும் நீங்கி மோ க்ஷத்தை யடையவேண்டுமென்ற எண்ணத்தைக் கொண் டான்.) இவ்வாறு உறுதிபூண்டதை யறிந்து ஆசிரியன், நல்ல தருமத்திற்குத் தலைவனுகி, அருகசரணம், சித்த சர ணம், சாதுசரணம், தன்மசரணம் என்று கூறும் நான் கையு மடைந்து, பழமையான தன் குலதருமத்தைச் செய் யும் உரிமையையும் பூண்டவனும், தொடுக்கப்பட்ட வீரக் கழலையணிந்த கால்களை யுடையவனுமாகிய அச் சீவகனு க்கு அதன்மேலும், நடத்தவேண்டிய ஒழுங்குப்படி நடத் தாததும், அற்பமாகியதுமான இல்லறவழியிலே நின்று அதனுல் உலகத்தார் உயர்ந்த பொருளாகிய வீடு பேற்றி னின்றுந் தப்பிய விதத்தையும், மோக்ஷம் தவருது கிடைக் கும்படி நடத்துகின்ற ஒழுங்காகிய இல்லறத்தின் இயல் பையும், இன்னும் உறுதிப்பாடான மற்ற விஷயங்களையும் மயக்கமற எடுத்துச் சொன்னுன்.

இவ்வாறு ஆசிரியன் நல் விஷயங்களையெல்லாம் எடுத் துச் சொல்லிப் போதித்த பின்னர், சீவகனுக்கு அவனு

டைய உண்மையான பிறப்பையும் உணர்த்தக்கருதி, தன்னைச் செய்யுங் காலத்தில், கொல்லர் இளக்கி அடித்து உருவாக்கும்பொருட்டு நெருப்பிற் சேர்ந்து பழுக்கக் காய்வதும், வெள்ளியைப்போல் பிரகாசிக்கக் கூடியதும், கூர்மை தங்கியதுமான வேலாயுதத்தைத் தாங்கியவர்களாகிய அச் சீவகன் தம்பிமார், தோழன்மார் ஆகிய இளைஞர் கூட்டத்தினின்றும் நீங்கி, இலக்குமி தழுவி விளங்கப் படுவதும், மாலையை யணிந்து பிரகாசிப்பது மாகிய மார்பினையுடைய அச் சீவகனை மாத்திரம் தனியாக அழைத்துக்கொண்டு போய், மலர்ந்த புஷ்பங்களினாற் றொடுக்கப்பட்ட கண்ணிகளைக்கொண்டு கட்டிப் பார்ப்போர் விரும்பும்படி வேய்ந்தாற்போலும் அழகுவாய்ந்ததும், ஆராய்ந்து கொய்யப்படும் மலர் நிறைந்ததுமாகிய சோலையிற் சேர்ந்து, அச் சீவகனுடைய உண்மைப் பிறப்பைத் தெளிவிக்கத் தொடங்கினான். அவ்வாறு தொடங்கிய அவ் வாசிரியன், சீவகன் பிறப்பு பிறரறியாமல் இரகசியமா யிருக்கவேண்டிய தாதலால், பக்கத்தில் ஒருவரு மில்லாதபடி ஆராய்ந்து கொண்டதல்லாமல், பகை யரசர்கள் வளர்த்துப் பேசவும், மனிதர் பேசும் விஷயங்களை யறிந்து சொல்லவும் கற்றுக் கொடுத்துத் தங்கள் எதிரிகளிடம்சென்று காட்டுப்பறவைகள்போல நடித்துப் பக்கத்திலிருந்து அவர்கள் பேசும் இரகசியத்தை யறிந்து வரும்படி ஒன்றிக் கேட்கும் தூதாக ஏற்படுத்தி யனுப்புகின்ற நாகணவாய்ப்புள், கிளிமுதலாகிய ஜீவ வர்க்கங்களும் சமீபத்தி லில்லாதபடி பார்த்துக்கொண்டு, அழகிய தளிர்களையுடைய அசோக விருக்ஷத்தின் நிழலிலே இடப்பட்டதும், பூவினாற் சமைந்தது மாகிய ஆசனத்திலிருந்து, அச்சமயத்தில், பாணங்கள் பொருந்தி வெளிப்படுகின்ற வில்லையுடையவனாகிய அச் சீவகனைப்பார்த்து, "நான் சொல்லப்புகும் இக்கதையை மிக்க கவனத்தோடு கேட்பாயாக," என்று கூறினான். அதற்குச் சீவகனும் இசைந்தான்.

அதன்மேல் அவ் வாசிரியன், சீவகனிடத்தில், "குமரனே! இந்த இராஜமாபுரமும், இதைச் சார்ந்த ஏமாங்கதநாடும் ஆகிய இப் பூமியைத் தனக்குச் சொந்தமாக வுடைய அரசன் யாவனெனில், சச்சந்த னென்னும் பெயரை யுடையவன்; அவனுடைய மனைவியோ, பசும் பொன்னாற் செய்யப்பட்ட மேகலாபரணத்தை யணிந்த இடையையுடையவளும், பசிய வளையலை யணிந்தவளுமாகிய விஜயை யென்பவள்; மேற்கூறிய மன்னன் இவ் விஜயையினிடத்தே நீங்காத அன்புடையவனா யிருந்தமைபற்றி இவளைவிட்டுப் பிரிய மனமில்லாது இராஜ காரியங்களைத் தன் மந்திரியாகிய கட்டியங்காரனை நடத்தி வரும்படி செய்து, தான் இவளுடன் கூடி இன்ப மனுபவித்து வாழ்ந்து வந்தான்; அத் தருணத்தில் இக் கட்டியங்காரன் அவனைக் கொன்று அரசாட்சியைத் தான் கைப்பற்றக் கருதி, அதற்குரிய சூழ்ச்சிகளை இரகசியமாக நடத்தி வந்தான்; அக்காலத்தில் ஒருநாள் இவ் விஜயை, சச்சந்தன் இறப்பதற் கறிகுறியாகச் சொற்பனங்கண்டு அதை அவனிட முரைக்க, சிறந்த கம்மியனாற் செய்யப்பட்ட வீரக்கழலை யணிந்த அம்மன்னன் நிச்சயமாகத் தனக்குக் கேடுவரு மென்பதை யுணர்ந்து, தனக்கு ஆபத்துவருங் காலத்தில் தன் மனைவியாகிய விஜயையைத் தப்புவிக்கும் மார்க்கத்தையும் ஆராய்ந்து, மயில் எந்திரமொன்று செய்வித்து, அதில் ஏறி ஆகாய மார்க்கமாகச் செல்லும்படி இவளைப் பழக்கிவைத்திருக்கச் சிலநாட் கழிந்தபின்னர் கட்டியங்காரன் சச்சந்தனைக் கொல்லப் படையெடுத்தான்; அஃதுணர்ந்த சச்சந்தன், தன் மனைவியாகிய விஜயையை முன்னர்ப் பழக்கிவைக்கப்பட்டிருந்த மயில் எந்திரத்திலேற்றி ஆகாயவழியிற் செல்லும்படி அனுப்பிவிட்டுத் தான் மாத்திரம் எதிர்த்து நின்று யுத்தம்புரிந்து, மகா மயக்கம் பொருந்திய நெஞ்சை யுடையவனும், மூட மந்திரியுமா

கிய இக் கட்டியங் காரனால் கொல்லப்பட்டான்; அதன் மேல் அவன் மனைவியாகிய விஜயை, மேற் கூறியவாறு எந்திரமயிலில் மிக்க வருத்தத்தோடு சென்று, கட்டியங் காரனுடைய வெற்றி முழக்கத்தால் புருஷனிறந்த துணர்ந்து, மயில் எந்திரத்தைக் கையினால் சுற்றி நடத்தாமல் மெய்சோர, அம் மயில் எந்திரமானது தானே சுழன்று கீழிறங்கிச் சுடுகாட்டிற் சேர்ந்தபடியால் இவளும், எவரும் புகுவதற் கரிதாகிய அச் சுடுகாட்டில் சேர்ந்து, அப்போது இவள் கொண்டிருந்த பூரணகருப்பம் முதிர்ந்து பிரசவிக்கும் சமயம் நெருங்க, உடனே ஒரு வலம்புரிச் சங்கமானது, உலகத்தை யெல்லாம் தனக்கு விலையாக விற்கும்படி செய்யக் கூடியதும் சிறந்ததுமாகிய முத்தை யீன்றதுபோலப் புத்திரனைப் பெற்றுத் துணையின்றி வருந்த, அப்பொழுது ஓர் எக்ஷிதேவதை இவளுடைய தாதியாகிய கூனியென்னும் செண்பகமாலை வடிவமாகி வந்து இவளுக்குப் பணிவிடைசெய்து பிரசவவேதனை சிறிது மின்றிப் போக்கி, அப் புத்திரனை, அறத்தை விரும்பிய அக் கூனியாகிய தெய்வம் அழகிய ஓர் தவிசின்மேலே வைத்து, விஜயையினிடத்தில், "பகைஞரிருக்கு மிடத்தில் இப் புத்திரனோடு நீ தனித்துத் திரியின் ஆபத்துண்டாமாதலின் இவனை இவ்விடத்திலேயே வைத்து விலகுவது நலம்; நாம் அவ்வாறு வைத்து விலகினால், இப்பொழுதே ஒரு மனிதன்வந்து இவனைக் கொண்டுபோய் வளர்ப்பான்; பின்பு இவன் குறைவின்றி வளர்ந்து முடிவில் பகைவனை வென்று உன்னையும் பாதுகாப்பான்," என்று சொல்ல, பிரகாசிக்கின்ற ஆபரணங்களையணிந்த இவ்விஜயை, அதற்கிணங்கி உடனே அக் கூனியோடு விலகி மறைந்துநின்று, அப் புத்திரனை நோக்கி, 'மகனே! நான் இனிமேற் செய்யப்போகும் நோன்பானது உன்னைக் காப்பதாக,' என்று வாழ்த்தி நின்றாள். அத் தருணத்தில், அத் தவிசின்மேற்

கிடந்தவனும், கடல்சூழ்ந்த பூமியைத் தனக்குச் சொந்தமாக வுடையவனும், ஆணிற் சிறந்தவனும், குற்றத்தினின்றும் நீங்கிய சிறப்புள்ள உத்தரட்டாதி நக்ஷத்திரத்திற் பிறந்தவனுமாகிய அப் புத்திரன், இளஞ்சந்திரன் ஆகாயத்தினின்றுந் தவறிக் கீழிறங்கி நக்ஷத்திரக் கூட்டங்கள் தன்னைச் சூழச் சுடுகாட்டிற் கிடந்ததுபோல, அச் சுடுகாட்டினிடத்தில் தன்னைச் சூழ்ந்துகிடந்த இரத்தினங்களும், தன்னுடைய நிறமும் வெவ்வேறு விதமாகப் பிரகாசிக்க விளங்கினான். இவ்வாறு அப் புத்திரன் சுடுகாட்டிற் கிடந்து விளங்க, 'உன் புத்திர னிறந்தாலும் வேறொரு புத்திரன் கிடைப்பான்' என்று முந்தியே அருந்தவத்தை யுடைய ஒரு முனிவன் வருங் காரியத்தையெல்லாம் தெரிந்து கூறி யிருந்தபடியால் அதன்படியே நிச்சயமாக நடக்குமென்று உறுதிகொண்டு, இறந்துபோன தன் புத்திரனை அடக்கஞ் செய்வதற்கு அச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்ற ஒரு வணிகன், அப் புதல்வனை அடக்கித் திரும்புங்காலையில் எதிரில் இவ் விஜயை புதல்வனைக்கண்டு, அப் புத்திரனுடைய ஒளி பரவியிருந்த வழியேசென்று சமீபத்திற் பொருந்தி அப் புத்திரனைக் கையினாலெடுக்க, அவனிடத்தே சேர்ந்து வளர்வதற்குச் செய்ததவம் திருத்தமாக நிறைவேறப் பெற்றவனும், சிறப்புற்றவனுமாகிய அப் புத்திரன், 'நல்ல நிமித்தம் பெற்றோம்' என்று அவ்வணிகன், அழகோடு மகிழ்ந்து கொண்டுபோகும்படி நிறையத் தும்மினான்; அப்பொழுது விஜயையுடன் கூனி வடிவமாகி நின்ற எக்ஷி தேவதை, 'நீ ஜீவித்திருப்பாயாக' என்று வாழ்த்திற்று; அதன்மேல் அவ் வணிகன், மேற்கூறிய மகிழ்ச்சியுடனே அப் புத்திரனைக் கொண்டு சென்று தன் மனைவியைக்கண்டு, 'அரிய செல்வத்தை யுடையவளே! நமக்குத் தெய்வம் மீண்டும் கொடுத்த இப் புதல்வனைக் கொள்வாயாக' என்று கொடுத்தான்; அவளும்,

அலைபொருந்திய கடல்போலப் பெருகிய விருப்பத்தோடு கைக்கொண்டு வளர்த்தாள்,'' என்று ஒருகதை வழியாலே கரிய மேனியை யுடையவனாகிய கிருஷ்ணன், பாண்டவர்பொருட்டுத் தூதுசென்ற அக் காலத்தில், அப் பாண்டவர்க்கு மூத்தவனாகிய கன்னனுக்கு அவனுடைய உண்மைப்பிறப்பை உணர்த்தியதுபோல உணர்த்தினான். அது கேட்ட ஜீவகன், ஆசிரியனை நோக்கி, "நீர் கூறிய இப் பெருந்தன்மையையுடைய புத்திரன் யாவன்?" என்று கேட்க, அவ் வாசிரியன், "நீதான்" என்று கூறினான். இவ்வாறு கூறிய மாத்திரத்திலே, அவன், "என் அன்னை தந்தையர்க்கோ இக்கெதி நேர்ந்தது,'' என்று, மலர்ந்து சொரிகின்ற புஷ்பங்களாற் கோக்கப்பட்ட மாலையும், இரத்தினாபரணங்களும், முத்தாரமும், காதி லணிந்திருந்த குண்டலங்களும் சோரவும், அழகிய மலரினாற் றொடுத்த சூடும் பூவாகிய கண்ணி சிதறவும் கலங்கி, அடியற்ற மரம் போல் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்.

மேற்கண்டவாறு ஜீவக குமாரன், கற்பகத்தரு நிலை தடுமாறி விழுந்த தன்மைபோல விழவே, இந்த வார்த்தைகளைத் தந்திரமாகக் கூறிய ஆசிரியன், பெருமையிற் சிறந்தவனாகிய அச் சீவகனைச் சேர்ந்து தழுவிச் சந்தனம் முதலாகிய நல்ல வஸ்துக்கள்சேர்ந்த குழம்பை அவன் மேற் பூசி விசிறியால் வீசி அதனாலே மூர்ச்சை தெளிவிக்க, கல்லினது தன்மை சேர்ந்தனவும், மிக்க பலம்பொருந்தியனவுமாகிய தோள்களையுடைய அவன் மூர்ச்சை தெளிந்து சிறிது உணர்ச்சி யுண்டானவுடன், கவலையாகிய நீர் நிறைந்த கடலிலே மூழ்கினான். (அதாவது: மிக்க சோகத்தை யடைந்தான்.) அதைக்கண்ட ஆசிரியன், அவனை நோக்கி, "ஆணிற்சிறந்த குமரனே! நீ இத்தன்மையை யுடையவனாய்ப் பிறந்ததெல்லாம் உனக்குரிய எம்மைப் போன்றவர் செய்த பாவத்தினாலேயே ஏற்பட்டது; அவ்

வாறு பாவஞ்செய்த படியினாலேயே உன்னை நல்ல நிலைமையிற் கண்டு களிக்கவேண்டிய நாங்கள் இவ்வித நிலைமையிற் கண்டு துக்கிக்கின்றோம்; எப்படி யிருந்தபோதிலும் உனது பகைவன் தலையெடுத்து நிற்கின்றானாதலின், இனி வீரத்தோடு அவனைக் கொன்று பகைமுடித்தலே தகுதி; ஆதலின், முன் நடந்ததைக்குறித்து, அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களையுடைய பெண்கள்போல வீரமற்றுப் புலம்புதலை நீ நினையாதே," என்று அவனுடைய நீண்ட கண்களினின்றும் வடிந்த நீரைத்துடைத்து, உடம்பைத் தடவி மேலும், "அரசிளஞ் சிங்கமே! உன் மனத்திற் சார்ந்திருக்கும் துன்பமாகிய நினைவினின்றும் நீங்குவாயாக," என்று தேறுதலான வார்த்தைகளைக் கூறப் பெருந்தன்மையையுடைய சீவகன் கவலை நீங்கித் தெளிவடைந்தான்.

இவ்வாறு தெளிவடைந்தவுடன் அவன் மிக்க ஆத்திரங்கொண்டு, தன் தந்தையைக்கொன்ற அக் கட்டியங்காரனுடைய உயிரை உடனே கொல்லத்தொடங்கிக் காற்றினாலசைகின்ற சிறந்த நீரையுடைய கடலிற்றோன்றும் அலையைப்போல முழங்கி, மலையும் பிளக்கும்படி ஆர்ப்பரிக்கின்ற சிங்கக்குட்டிபோலச் சீறி, வில்லுடனே பாணத்தையும் தாங்கி, எமனைப்போலக் கண்சிவந்து தோன்றினான். அப்படித் தோன்றினவுடனே யுத்தம் புரிவதற்கு அது தருணமன்றென் றுணர்ந்த ஆசிரியன், மேற்கண்டவாறு கோபக்குறியோடு நின்றவனும், மருமுதலிய வாசனையிலைகளை இடையேவைத்துத் தொடுத்த கண்ணியைச் சூடியவனுமாகிய அச் சீவகனை அக் கோபத்தினின்றும் விலக்குதல் அத்தருணம் அருமையா யிருந்தபடியால், கீழ்க் கூறுகின்ற இவ்விதமாக விலக்கினான். எப்படியெனில், "ஆண்தன்மையிற் சிறந்த சீவகனே! யான் இத் தருணம் உனக்குத் துன்பத்தைத் தருவதாகிய ஒரு காரி

யத்தை உன்னிடம் பெற விரும்புகிறேன்; அதை நீ என் பொருட்டாகச் செய்யவேண்டும்,'' என்று அவ்வாசிரியன் கூற, சீவகன், ஆசிரியனைநோக்கி, "ஆண் தன்மையிற் சிறந்த ஆசிரியரே! நீர்கருதியது யாது? அதனை என்னிடம் யாதொரு தடையுமின்றிப் பெற்றுக்கொள்வீராக,'' என்று சொன்னான். அவ்வாறு சொல்லவே ஆசிரியன், "அரச புத்திரனே! நின் குலமுறைப்படி நின்றந்தையைக்கொன்ற அக் கட்டியங்காரனை அவன்குலத்தோடு உடனேகொல்லுதல் முறையே; ஆயினும், சில காரியங்களை உத்தேசித்து, உலகிற்பொருந்திய ஒருவருடத்தளவு முடிவாகும் வரையிலும் அவன்குலத்தினிடத்தே செலுத்துகின்ற கோபத்தைவிட்டு நீ நீங்கியிருக்குந்தன்மையை யான் விரும்புகிறேன்,'' என்று சொன்னான்; வில்வித்தையில் வல்லவனாகிய சீவகன், தன் தகப்பனைக் கொன்றவனை உடனே கொல்லாதிருப்பதாகிய அக் காரியம் ஏற்றுக்கொள்ளத் தகாததாயினும், ஆசிரியன் சொல்லும் உறுதிவாக்கியத்தைத் தட்டுதல் மாணாக்கனுக்கு முறைமை யன்றென்று கருதி, அதனை ஏற்றுக்கொண்டான். உடனே அவனுக்கிருந்த கோபம் நீங்கிற்று. அப்போது அவனிடத்தில் இரத்தினத் திரயமாகிய குணங்கள் நின்று பிரகாசித்தன.

அச்சணந்தி யாசிரியன் மேற்கூறியபடி மனக்கோணுதலின்றி இதமான வார்த்தைகளைக்கூறி ஜீவனுக்கு அதிகரிக்கின்ற நெருப்பைப் போன் றுண்டாகிய கோபத்தை நீக்கி, அதன்மேல் அவனிடத்தில், தீவினையைத் தான் கோபித்தலாலே அத்தீவினையானது தன்னிடத்தே சாரப்பெறாததும், பரிசுத்தமுள்ள நிதியைப்போன்றது மாகிய இரத்தினத் திரயமென்னும் குணவமிர்தம், நெருப்பிற்காய்ச்சித் தோய்த்த இரும்புண்ட இனிய நீர் அதனிடத்தே விரைவாகக் கலந்து நிற்பதுபோலப் பற்றி நின்ற கலக்கமில்லாத அந் நிலைமையைப்பார்த்து, மேலும் அவன் தன்

னுடைய சொல்லின்படியே அடங்குதற்கு, மிக்கதுன்பம் நிறைந்த அவனுடைய சரித்திரம்போன்ற தன்னுடைய சரித்திரத்தையும் சொல்லக்கருதி, அதைத் தன்கதையென்று கூறின், அச் சீவகன் தன்மீதுள்ள அன்பால் வருந்துவானென்னும் எண்ணத்தால் வேறொருவன் சரித்திரம் போலப் படர்க்கையாகச் சொல்லத் தீர்மானித்து, அவனை நோக்கி, "இராஜபுத்திரனே! நீ அடைந்த இந் நிலைமை போன்ற நிலைமையை யடைந்த ஒருவனுக்கு வந்த துன்பம் கீழே சொல்லும் இத்தன்மையை யுடையதாகும்; இதனைக் கேட்டால் நீ இவ்வாறு வருந்தமாட்டாய்" என்று தன் சரித்திரத்தைக் கூறத் தொடங்கினன்.

இவ்வாறு தொடங்கியவன், அவனிடத்தில், "சீவகனே! கேட்பாயாக; ஐம்பது பட்டணங்களைக்கொண்ட தக்ஷிண ஸ்ரேணியும், அறுபது பட்டணங்களைக்கொண்ட உத்தர ஸ்ரேணியுமாகிய இரண்டிடங்கள் பொருந்தியதும், வித்தியாதரருக்கு வாசஸ்தான மாகியதுமான சிறப்புத் தங்கிய வெள்ளிமலையிலேயுள்ள வாரணவாசி யென்னும் ஊரில் தங்கியவனும், பகைவர் மாமிசம் தங்கியதும் சூரியன்போற் பிரகாசிப்பதுமாகிய வெள்ளிய வேலாயுதத்தையுடைய அரசனுமாகிய சிறப்புற்ற உலோகபால னென்பவன், தேன் தங்கப்பெற்ற திருத்தமாகிய மாலையையணிந்த தன்புத்திரனுக்குப் பட்டங்கட்டி அரசுரிமையை அவனிடத்தில் நிலை நிறுத்திப் பால்போன்ற நிறத்தினையுடைய அன்னம் பாலையும் நீரையும் வேறுபிரித்துப் பாலை உட்கொள்ளுவதைப்போல, நன்மை தீமைகளை ஆராய்ந்து, தவத்திற் செல்லுதலே நன்மையெனத் தெரிந்து, இருடியர் கொள்ளுதற்குரிய தவ வேடத்தைக் கொண்டான்; அவ்வாறு தவவேடங்கொண்டு, பரிசுத்தமாகிய தவஞ்செய்யத் தொடங்கி, வெவ்விய கோபமானது குறைந்துபோக விரதங்களை யனுஷ்டித்து வந்தான்; அப்படி

நோற்றுவந்த வஞ்சமற்றகொள்கையை யுடைய அவன் தனக்கு முன்ஜென்மத்திலே செய்த பாவம்வந்து சேர்ந்தபடியினாலே, விரதத்திற் கிடையூறாக முழங்குகின்ற * யானைத்தீயென்னும் நோய்வந்து பற்ற, அதனால் எப்பொழுதும் பசிமிகுந்து, எவ்வளவு உணவருந்தினும் பசியடங்காமல் தன் விரதக்கொள்கையி னின்றுந் தவறிப் பசியைத்தணித்து விரதத்தை நிறைவேற்றுதற்குரிய உணவகப்படாமல் வருந்திப் பழமையான இவ்வூரில்வந்து, மேகம் இறங்கிப் படிகின்ற மலைகளை நிகர்த்த மாடக் கூட்டத்தி னுள்ளே நுழைந்தான்," என்று மேலும் சொல்லத்தொடங்கினான்; அப்போது குமரனாகிய சீவகன், இக்கதை முடிவதற்கு முன்னே இக்கதாநாயகன் இன்னவ னென்பதைக் கேட்டறிந்து கொள்ளக்கருதி மகிழ்ந்து ஆசிரியனை நோக்கி, "நீர் இப்பொழுது கூறியவனும், மலை, தனக்கு நிகரென்றுகருதி விளையாடுகின்ற மார்பை யுடையவனுமாகிய அம் மனிதன்யார்? அவன் நல்லவாழ்வை யடைவானாக; அவன் இன்னவ னென்பதை எனக்குரைக்க வேண்டும்," என்றுகூற, அதைக்கேட்டு ஆசிரியன், "வாசனை யுலாவுகின்ற மாலையையணிந்த சீவகனே! அம் மனிதன்யானே," என்று சொன்னான். அவ்வாறு சொல்லவே சீவகன், தன் ஆசிரியனுடைய அக் கதையை மேலுங் கேட்கவிரும்பி, "தித்திப்பாகிய பாற்கடலிலே உண்டாகின்ற அமிர்தத்தைநிகர்த்ததும், அலங்கார முள்ளதுமான இக்கதை, முடிவுவரை நடப்பதாக; (அதாவது: இதை முடிவுவரைசொல்வீராக)" என்று கூறினான். அதன்மேல் ஆசிரியன், எஞ்சியகதையையுங் கூறத்தொடங்கிச் சீவகனிடத்தில், "அன்பனே! நான் மேற்கூறியபடி மாடத்திரளிலே நுழைந்த

* யானைத்தீ - எவ்வளவு உணவருந்தினும் அதை உள்ளே பஸ்பமாக்கி ஒன்று மில்லாமற்செய்து எப்பொழுதும் தணியாப்பசியை உண்டாக்கும் ஒருவகை நோய்; இதனை பஸ்மக வியாதி யென்றுஞ் சொல்வதுண்டு.

போது உன்னை வளர்க்கின்றவனாகிய கந்துகன் இல்லத்திற்சென்றேன். அப்போது அக் கந்துகன், செம்மையாகிய பசு, நல்லவாசனையுள்ள மலர்களைமேய்ந்து, தன்கன்றின்மேல் விருப்பங்கொண்டு, அழகுபொருந்திய தனது பால் மடியினின்றுஞ் சொரிந்த இனிய பாலைக் கலம்நிறையவிட்டு, அப் பால் பெருக்கானது நன்றாக வற்றும்படி காய்ச்சி, அதில் அரிசியைக் களைந்துகொட்டி, அப் பால் அவ்வரிசியில் வியாபிக்கும்படி வேகவைத்துச் சமைத்த இனியஉணவை உண்பதற்கு மாற்று இன்னதென்று பகுத்துணர்தற்கரிய பசும்பொன்னாற் செய்யப்பட்ட தட்டுப்பரப்பிய பசும்பொன்னிலத்திலே புகழ்தற்கரிதாகிய உயர்வுள்ள ஆசனத்தின்மேல் தன்தோழரோடு ஏறி அமர்ந்தான். அப்படி அமர்ந்தவன், அழகிய பட்டுவஸ்திரத்தை யணிந்த இடையை யுடையவரும், அன்னம் பரிமாறும் முறைமையை உணர்ந்தவருமாகிய ஸ்திரீகள், முகத்தின் இரு பக்கங்களிலும் இரண்டு குழைகளும் அசைந்து பிரகாசிக்க நின்று உணவைப்பரிமாற, அந்த நல்ல உணவை உண்ணுஞ் சமயத்தில், * ரேழியில் நின்ற என்னைப் பார்த்து, 'ஐய! நீரும் போசன முண்ணுதற்கு வந்து ஆசனத்தில் அமர்வீராக,' என்று எதிர்கொண்டு அழைத்தான்; யானும் மகிழ்ச்சியோடு போய்ப் பக்கத்திலமர்ந்தேன்; அதன்மேல் எனக்கும் அம் மாதர்கள், கீழ்க்கடலிலே உதயமாகின்ற இளஞ்சூரியனைப் போன்ற பொற்றட்டில் உணவிட்டார்கள். அப்போது, மேற்கண்டவாறு பொற்கலத்திட்ட பாலன்னத்தில், கைகுவித்து ஏந்தக்கூடிய (அதாவது: கைநிறையும்படியான) நல்ல நெய்யைச் சொரிந்து சர்க்கரைக் கட்டிகளையும் ஒன்றோடொன்று சேரும்படி நசுக்கிச்சேர்த்து அதன்மேல், 'போடு! போடு,!!' என்று அக் கந்துகன், தனித்தனியாக அன்புடன் ஏவ, அம்

---

* ரேழி - நடை.

மாதர்கள், அவ்வாறே மேலும் மேலும் நெய்யையும் சருக்கரையையும் சொரிந்தார்கள். அதனால் யானும், பல வெள்ளி மலைகளைப்போட்டுப் பெரிய கடலைத் தூர்ப்பதுபோல நெய்யும் சருக்கரையும் சேர்ந்த சோற்றுத்திரளைகளை உண்டு விலாப்பக்கங்கள் பெருக்கும்படி வயிற்றை நிரப்பி, எனதையனாகிய உன்னுடைய கிருபையினாலே, சாதுக்கள் தொழிலாகிய திருப்தியை யுடையவனானேன். அதன்மேல் சுநந்தையும் அவனும் சேர்ந்து எனக்குச் செய்யத்தக்க உபசாரங்களையெல்லாம் செய்தார்கள். களிப்பையுடைய ஆற்று நீர், வேற்றுநீர், ஊற்றுநீர் என்னும் மூன்றுநீரை யுடைய சமுத்திரத்திலே அலைகளோடு மோதித் திரிகின்ற சுறு மீனின் வடிவ மெழுதிய கொடியைத் தன்தேர்மேல் சின்னமாக உயர்த்திக்கட்டிய தலைமைவாய்ந்தவனும், கருப்புவில்லையுடைய குமரனுமாகிய மன்மதனை நிகர்த்த சீவககுமாரனே! மேற்கூறியபடி நின்னை வளர்த்தவர்களாகிய சுநந்தையும் கந்துகனும் என்னை எதிர்கொண்டழைத்து வழிபட்டு அன்னமிட்டுபசரித்துப் பேணவே, எனக்கேற்பட்டிருந்த பசிப்பிணி சிறிது தணிந்து, அதன்மேல் பசிதோற்றுமலிருந்தது; இஃது உன்னுடைய மகிமையினாலும், நீ அங்கிருந்த விசேஷத்தினாலுமே ஏற்பட்டது; அதனால், 'சிறிதுகாலம் இங்கே தங்கிச்சென்றால் நம்மைப்பற்றி யிருக்கும் நோய் சற்றுத்தணியக்கூடும்,' என்று கருதி, அவ்வாறு நினைப்பதற் கேதுவாயிருந்த உன்னுடைய மகிமையாகிய வலையிலே அகப்பட்டு, வெவ்விதாகிய யானைத்தீ யென்னும் நோயினின்றும் சிறிது நீங்கினவனாய் அங்குத்தங்கி யிருந்தேன்.

மோதுங்காலத்தில், திரண்டகல்லும் அவ் விடியைப் பொறுக்கமுடியாமல் நொறுங்கத்தக்க வலிமைவாய்ந்த தோள்களையுடைய சீவகனே! நான் மேற்கூறியபடி உன்மகிமைவலையிலே அகப்பட்டுத் தங்கியிருக்கும்போது, பூமி

யும் தாங்கமுடியாத சுமையாகியதும், அளவற்றது மான செம்பொன் திரவியத்தை யுடையவனும், உன்னை வளர்க்குந் தந்தையுமாகிய கந்துகனுடைய இல்லம், தன்னுடைய நலத்தைத் தானே பொறுக்கமுடியாத (அதாவது: அளவற்ற சிறப்பையுடைய) அசோகவிருக்ஷத்தி னடியில் வீற்றிருக்கின்ற நான்கு திருமுகங்களையுடைய அருகக்கடவுளின் சுற்றத்தாராகிய துறந்தவர்களுக்கெல்லாம் தாராளமாக உள்ளேபுகுந்து வசிக்கத்தக்க சொந்தம் வாய்ந்த வீடாகையினாலே ஒருநாள், அந்த வீட்டினுள்ளே சென்றேன்; அவ்வாறு சென்றபோது, தரித்திருக்கின்ற ஆபரணங்களைத் தாங்கமுடியாதவர்களும், அழகுவாய்ந்தவர்களுமாகிய பெண்களின் நடுவே சிறுபருவமாய் விளையாடிநின்ற உன்னைக்கண்டேன்; அப்படி, எனதையணுகிய நின்னைக் கண்ணுற் கண்ட மாத்திரத்திலே, என்னைப்பற்றிநின்று, முன்கூறியபடி நின் வளர்ப்புத்தந்தையாகிய கந்துகனுடன் போசன முண்டவுடன் நின் மகிமையால் சிறிது தணிந்திருந்த யானைத்தீ யென்னும் கொடிய நோயானது, உயர்ந்த அவுடதத்தைக்கண்டு சிறிதும் நில்லாமல் பறந்தோடுகின்ற படத்தையுடைய அரவத்தின் விஷம் போல அணுவளவு மின்றிக் கெட்டோடியது; அவ்வாறு அந்நோய் பூரணமாக நீங்கவே, யான் உன்னுடைய மகிமையைப்பற்றி மிகவும் அஞ்சி, உன்னைத் தெய்வமோ என்று ஆராய்ந்தேன்; அப்படி ஆராய்ந்த எனக்கு, நெருங்கிய சப்தத்தையுடைய முரசொலியும் நாணுகின்ற உன்னுடைய முழக்கமான வார்த்தை அமிர்தம் பெருகியதுபோல உலாவிச் செவியில் முழங்க, நான் அவ் வார்த்தையைக் கேட்டேன். வளைவாகிய இளஞ்சந்திரனைச்சூழ்ந்து விளங்கும் அழகுள்ள வானவில்லைப்போன்று, மார்பிற் சூட்டப்பெற்றிருக்கின்ற உயர்ந்த ஒளியையுடைய முத்துமாலையைச்சூழ்ந்துகிடந்து தேனைச்சொரிகின்ற மலர்மாலையை யுடையவ

னே! வீரத்தால், பெருமை பொருந்திய இளஞ்சிங்கத்தை நிகர்த்தவனே!! நான் அவ்வாறு கேட்கவே, அளவிடுதற் கரிதாகிய அச்சொல்லும், விளங்குகின்ற ஒளியையுடைய நின் அழகும் உன்னுடைய பிறப்பை இன்னதென் றறிவித் தன; அதனாலே, உன்னை இன்னவனென் றறிந்து, உன்னால் என்நோய் நீங்கப்பெற்றமையினாலே நின்மேல் அதிக விருப்பங்கொண்டு, உனக்குக் கல்விபயிற்ற வேண்டு மென்னும் எண்ணமுடையவனாய் இவ்விடத்திலே இதுகாறும் வசித்து வந்தேன்; அவ்வெண்ணமும் நிறைவேறியது; உனதுபிறப் பையும் உணர்த்த வேண்டியது என்கடமையா யிருந்த படியால் அதையும் இப்பொழுது உணர்த்தினேன்," என்று சொல்லிமுடித்தான்.

கொலையையே தனக்குரிய தொழிலாகக் கொண்டு, அதன்வழியே நடக்கின்ற சிங்கத்தைப் போன்றவனும், கொடுமையாகிய வில்லையேந்திய வீரனுமாகிய சீவகன், மேற்கூறிய கதையைக்கேட்டு, ஆசிரியன் நோயினால் முத லில் துன்பமடைந்து பின் அது நீங்குங்காலம்வந்து சேரச் சுகம்பெற்றதுபோலத் தனக்கும் பகைமுடிக்குங் காலம் பின்னே வந்தெய்துமென் றுட்கொண்டு, அவ்வாசிரியன் கட்டளைப்படியே நடக்கத்துணிந்து, அவன்மீது மிக்கவிசு வாசம் வைத்தவனாகி, அவனைநோக்கி, "ஒளிவிளங்காநி ன்ற உருவத்தையுடைய ஆபரணங்களையணிந்த எனதாசிரி யரே! முயற்சியினாற் பொருந்திய என்னுடைய தவங்கள் தாயாக, நீர் தந்தையாயிருந்து, நான் இதற்கு முன்னிரு ந்தது போன்றிராமல், ஞானத்தை யடைந்த நூதனப்பி றவியாக என்னை இப்போது சிருஷ்டித்தீர்; (அதாவது: ஞானமுடையவ னாகும்படி செய்தீர்) இந்நன்றியை நான் எந்நாளும் மறவேன்; நீர் வாழக்கடவீராக," என்றுகூற, அவ்வாசிரியன், சீவகனைப்பார்த்து, "வலிமை பொருந்தி யதும், அழகுள்ளதுமான ஆண் யானையைநிகர்த்த குமா

ரனே! யான் நினக்குச் செய்யவேண்டியவற்றை யெல்லாம் செய்து முடித்தேன்; இனி உண்மைபொருந்திய தவநெறியிற்செல்ல நாடுகிறேன்; ஆதலால், அதற்கு நீ விடைதருவாயாக," என்றுகூறினன். இதைக் கேட்டவுடன், நல்ல மணம் தன்னிடத்தே தங்கும்படி மலர்ந்த மலர்மாலையை யணிந்தவனும், நீலமணிபோன்ற நிறத்தினையுடைய விஷ்ணுவை நிகர்த்தவனுமாகிய சீவகன், ஆசிரியனைப் பிரிய மனமில்லா திருந்தும் தவத்திற்குச் செல்வோரைத் தடுத்தல் முறையன்றென்று கருதி, அன்பினோடு ஆசிரியன் முகத்தைநோக்கி, "எனதுண்மையாசிரியரே! பெரிய அறிவு பொருந்திய தன்மையை யுடையவர்கள், குற்றமற இல்லறத்தினின்றும் நீங்கிச், சிறந்த தவத்தைச் செய்யப் போகிறே னென்றால், அறத்தோடு சேராதனவும், தடை பொருந்தியனவுமாகிய பிறசொற்களை உலகத்தார் சொல்லித் தடைசெய்ய மாட்டார்; ஆதலால், யானும் தடைசெய்யமாட்டேன்; தாம் எண்ணப்படியே துறவறத்திற் சார்ந்து தவஞ்செய்வீராக," என்று கூறிப் பெருமையிற் சிறந்தவராகிய அவ் வாசிரியருடைய பாதங்களைத் தொழுதுநின்றான்.

அதன்மேல் அவ் வாசிரியன், ஒழுக்கத்தின் எல்லைக்குள் அடங்கி நிற்பதன்றி அதைவிட்டுக் கடந்து வேறு கெட்டவழிகளிற் செல்லாதவனும், கடுங்கோபத்தையுடைய சிம்மம்போன்றவனுமாகிய அச் சீவகனுக்குப், பகைவரைக்கொல்லும் முறைமையை அவன் மனத்தே அழுந்தும்படி எடுத்துரைத்து நிலைநிறுத்திப் பின்பு, செம்பொன்னாற் செய்த மேகலாபரணத்தை யுடைய சுநந்தைக்கும், பல நிதிகளும் உண்டாகின்ற கடலைப்போல் அதிகரித்த திரவியத்தோடுகூடி வசிக்கின்றவனும், மேகம் படிந்த மலைபோலச் சந்தனக் குழம்பு பூசப்பட்டு விளங்காநின்ற மார்பையுடையவனுமாகிய கந்துகனுக்கும், சீவகன் பூரணமாகக்

கல்விகற்றுக்கொண்டதோடு தீக்ஷையும் பெற்றுக்கொண்ட விதத்தையும், தான் துறவறஞ்செல்லக் கருதியிருப்பதையும் அவர்கள் மனத்திற் பொருந்தும்படி சொல்லித் தெரிவித்தான். அதைக் கேட்டவுடன், வேய்ங்குழலிசையினது இனிமைபொருந்திய சொற்களை யுடையவளாகிய சுநந்தை, அவ் வாசிரியனுடைய பிரிவுக்கு ஆற்றாதவளாய், நெருப்பிற் பொருந்திய வெண்ணெய்போல மனங்கரைந் துருகி மெய்சோர்ந்து, மிக்க வருத்தத்தோடு அவனை நோக்கி, "பதினாறுகலைகளும் நிறைந்து மிக்க பிரகாசம் பொருந்திய சந்திரனைப்போன்று எல்லாக்கலைகளும் மனத்தில் நிறைந்த சுவாமி! நமது சீவககுமரனையும் தனியனாகும்படி விட்டுப் பிரிகின்றீரோ! இன்னுஞ் சிலகாலம் இங்குத் தங்கிச் செல்லலாகாதா? தங்களுடைய தெரிசனை காணாதிருக்க எங்களால் இயலுமா? தினந்தோறும் தெரிசித்துத் தங்களோடு வார்த்தையாடி மகிழ்ச்சி யடைந்து வந்த எங்களுடைய மனம் தங்களைக் காணாதிருக்க எவ்வாறு சகிக்கும்?" என்று எத்தனையோ இரக்கமுள்ள வார்த்தைகளைக் கூறியும், முன்னே வித்தியாதரமன்னனாகிய உலோகபாலனென்னும் பெயரையுடையவனாயிருந்து பின்னர் தவவேடங்கொண்ட அவ் வச்சணந்தியாசிரியன், தன் தவமுயற்சியைத் தவிர்த்துச் சிறிதும் நில்லாதவனாய்ப் பழவினை கெடும்படி தவஞ்செய்தற்கு, ஸ்ரீ வர்த்தமாந ஸ்வாமிகளுடைய சமவசரணத்தை நோக்கிச் சென்றான். அதன்மேல் சீவகன், தன் தம்பியரோடும், தோழரோடும் கூடிக் கந்துகனும் சுநந்தையும் நாள் தோறும் மகிழ்ச்சியடையும்படி வாழ்ந்திருந்தான். சுபம்.

நாமகளிலம்பகம் முற்றுப்பெற்றது.

## இரண்டாவது

# கோவிந்தையாரிலம்பகம்.

"ஆர்வ வேரரிந் தச்ச ணந்திபோய்
வீரன் றாணிழல் விளங்க நோற்றபின்
மாரி மொக்குளின் மாய்ந்து விண்டொழச்
சோர்வில் கொள்கையான் றோற்ற நீங்கினான்."

அச்சணந்தி யாசிரியன், முன் கூறியபடி சீவகனைப் பிரிந்து இராஜமாபுரத்தி னின்றும் புறப்பட்டுப்போய், விருஷபர், அஜிதர், சம்பவர், அபிநந்தனர், சுமதி, பத்மப்ரபை, சுபார்ச்வர், சந்திரப்ரபை, புஷ்பதந்தர், சீதளர், சிரேயாம்ஸர், வாசுபூஜ்யர், விமலர், அநந்தர், தருமர், சாந்தி, குந்து, அரர், மல்லி, முனிசுவ்ரதர், நமி, நேமி, பார்சுவர், ஸ்ரீவர்த்தமாநர் ஆகிய இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களுள் ஈற்றில் விளங்கும் தீர்த்தங்கரராகிய ஸ்ரீவர்த்தமாந ஸ்வாமிகளுடைய பாதநிழலாகிய சமவசரணத்திலே, தன்னுடைய தவம் உலகில் விளங்கும்படி, பிறவிக்குக் காரணமாகிய ஆசையின் வேரை அடியோடறுத்து மிக்க தவத்தைச்செய்து அதன்மேல், சோர்வற்ற அத்தவக் கொள்கையையுடைய அவன், விண்ணுகத்திலுள்ள தேவர்க ளெல்லோருந் தொழும்படி, மழைபெய்யும்போது நீரிடத்தே தோன்றி மறையும் நீர்க்குமிழிபோன்று திருமேனியுடனே மறைந்து பிறப்பற்று முத்தியை யடைந்தான்.

கந்துகன் மனையில், தன் தம்பியரோடும் தோழரோடும் தங்கியிருந்த ஆணிற் சிறந்தவனாகிய சீவகனோ, இவ்வுலகத்திலே தேவ ருலகத்தைப்போன்று விளங்கும் நலமுள்ள அவ் விராஜமாபுரத்திலே மேற்கூறிய ஆசிரியன்

சென்றதன்மேல், பசும்பொன்னாற் செய்யப்பட்ட நெற்றிப் பட்டத்தை யணிந்த பெரிய யானையின்மேலும், நீண்ட கொடிகள்கட்டி விளங்காநின்றதும், செம்பொன்னா லாகியதுமான தேரிலும், குதிரைகளிலும் கண்டோர் விரும்பும்படி ஏறி அவற்றை நடத்தி, மன்மதனைப்போல உலாவினான். இவனுக்கு அப்போது வயது பதினைந்து சென்று, மேலே பதினாறுவது வயது நடந்தபடியால், இவன் எல்லா நலத்திலும் சிறந்து விளங்கி, "கல்வி ஞானத்தின் அதிகரிப்பும், பார்வைக்கு இன்பந் தருவதாகிய பருவ அழகும், வில்வித்தை பழகியதனாலே இளம் பருவத்தி லேற்படும் வீரத்தின் மிகுதியும், தாளத்தோடு கண்டத்திலும் வீணையாகிய கருவியிலும் உண்டாகும் பாட்டுடன் சேர்ந்த நாடகத்தால் பிறக்கும் போக இச்சையும், மலையைக் காட்டிலும் விசாலித்த மார்பையுடைய சீவகனன்றி இவ் வுலகத்திலில்லை" (அதாவது: இவையாவும் இவனிடத்திலேயே தங்கியிருக்கின்றன) என்று அறிந்தோர் கூறும்படி மேற் கூறிய விஷயங்களி லெல்லாம் நிகரற்றவனாயினான். இவ்வாறு நிகரற்று விளங்கியவனும், பகைவர்க்கு அச்சத்தைத் தருகின்றதும் வெற்றி பொருந்தியதுமாகிய வேலாயுதத்தை யுடையவனும், உயர்ந்த இரத்தினா பரணங்களை யணிந்த மார்பை யுடையவனுமாகிய இச் சீவகனைக்கண்ட கன்னித் தன்மை யழியாத பெண்களெல்லோரும், அழகினால், "இவன் காமனே" என்று சொல்லி இவனுக்குத் தாழ்ந்து, தங்களுடைய தாமரை மலர்போன்ற கண்களினாலே இவனழகை நுகரும்படி இவன் வசித்துவந்த இவ் விராஜமாபுரத்தில் இதற்குமே லுண்டாகிய காரியங்களை இனி எடுத்துக் கூறுவாம்.

இவன் இவ்வாறு கண்ட கன்னியர் காமனென்று மருளும்படி இராஜமா புரத்திலே உலாவியிருக்குங் காலத்தில், பின்பனிக்காலம் வந்து சேர்ந்தது. அப்போது கட்

டியங்காரனைச் சேர்ந்த பசுநிரை, இராஜமாபுரத்தின் பக்கத்திலுள்ள முல்லை நிலத்தில் தங்கியிருந்தது. அங்குப் பின்பனியினால், மிகுந்திருந்த புஷ்பங்கள் அழிந்து, ஆங்காங்கே அருமையாகத் தோற்றும் சிற்சில அழகிய புஷ்பங்களின் மேல் வண்டுக் கூட்டங்கள் சாய்ந் துலாவும்படி, மலருந் தொழில் அதிகமா யில்லாமல் விளங்குகின்ற முல்லைச்செடிகள், தாங்கள் மலர்தற்குரிய கார்காலமென்று நினைத்து அப் பின்பனிக் காலத்திலும் மிகுந்து மலரும்படி, அவ்வாறு நெருங்கித் தங்கியிருந்த அப் பசுக்கூட்டம் தான் தழுவும் கன்றை நினைத்து, மழை பொழிவதுபோலத் தானேபாலைச் சொரிவதால், ஆயர்கள், அவ்வாறு பால்சுரக்குந் தருணமறிந்து அக்கூட்டத்திலுள்ள பசுக்களில் அப்பாலைக் கறக்கின்ற கல்லென்னும் ஓசையானது ஒரு கடலொலியைக் காட்டினும் மிகுந் துலாவிற்று. இவ்வகைப் பாற்பெருக்கை யுடைய பசுக்கூட்டம் மேற் கண்டவாறு அம் முல்லை நிலத்திற்றங்கி ஒலி மிகுந்திருந்த அந்நாளில், அம்முல்லை நிலத்துக் கருகிலுள்ள குறிஞ்சி நிலத்தைச் சார்ந்ததும், மலர்களிலும் தேனிறால்களிலு மிருந்து சொரிந்த தேனினோடு யானையினது கன்னமதம், கபாலமதம், கோசமதம் என்னும் மும்மதங்களும் சுரப்பதனாலே நீண்ட சுனைகளெல்லாம் தம்மில் ஏற்றத் தாழ்வின்றி ஒத்தனவாய் நிறைந்து ஒழுகுகின்றது மாகிய மலையின்மேலே, சிங்கத்தைப் போன்ற பலத்தை யுடையவர்களாகிய வேடர்களெல்லாரும் வந்து ஓரிடத்திற் கூடினார்கள்; அப்படி ஒன்று சேர்ந்தவர்கள், மேற் கூறியபடி நின்ற கட்டியங்காரனுடைய பசுநிரையைக் கவர்ந்து செல்லும் எண்ண முடையவர்களாய், "பின்பனி நிறைந்த இத் தன்மையையுடைய இந்நாளிலே கட்டியங்கார மன்னனுடைய பசுநிரை, மேய்வதற்காக இக்குறிஞ்சிநிலச் சார்பிலே வந்துசேரும்; ஆதலால், அதை நாம் கைப்பற்றிச் செல்வோம்," என்று

ஒருவரோ டொருவர் பேசிக் கொண்டார்கள்; அப்படிப் பேசின மாத்திரத்திலே, அந்த வார்த்தை வெளிப்புறப் பட்ட அப்பொழுதே அவர்களுக்குச் சகுனமாக ஆந்தைப் பறவை கதறிற்று; அதைக் கேட்டவுடனே அவர்களுள், சகுனக்குறிப்பை உணர்ந்து சொல்லக்கூடிய தொழிலில் பூரணமான அறிவையுடைய ஒருவன், அவ் வார்த்தையின் சப்தத்தையெண்ணி ஆராய்ந்து அதன் குறிப்பினலேற்பட்ட விஷயத்தை எடுத்துக் கூறத் தொடங்கி, அக் கூட்டத்தாரைநோக்கி, "வேடுவ வீரர்களே! இச் சகுனத்தின் குறிப்பைச் சொல்வேன் கேட்பீராக; நாம் பசுநிரையின் சமீபத்தில் சார்ந்து அதை அடித்தோட்டுவோம்; அப்படி ஓட்டிய பொழுதே கட்டியங்கார மன்னனுடைய படைவந்து நம்மோடெதிர்த்துப் போர்புரிய முடியாமல், பட்டுக்குடைகளும், பீலிக்குடைகளும் கீழே கிடக்கும்படி அவற்றைப் போட்டுவிட்டுப் பின்னிட்டோடும்; அஃது அவ்வாறு தோற்றோடியபின்னர் ஒருமனிதன் வந்தெதிர்ப்பான்; அப்படி அவன் எதிர்த்தவுடன் நாமெல்லோரும் அந்த ஒரு மனிதனுடைய தேரின் வலிமையாலே, நெருப்பைக்கொண்டு சுடுவதால் தேனிறாலில் நெருங்கியிருந்த தேனீக்கள் கலைந்து வலிகெட் டோடுவதுபோலக் கூட்டங்குலைந்து பலங்குன்றிப் பசுக் கூட்டத்தை விட்டோடுவோம்; இதுதான் அச் சகுனத்தின் குறிப்பு," என்று கூறினன். அவ்வாறு கூறவே மற்ற வேடர்களெல்லோரும், அந் நிமித்திகனைப்பார்த்து, "வீரமுள்ள வேடுவர் கூட்டத்தில் தைரியமில்லாமல் மிகவுந் தாழ்ந்த ஏழை வேடுவரே! உம்முடைய வார்த்தை மிகவும் நன்றாயிருக்கின்றது; நீர் கூறியபடிவரும் அவ்வொரு மனிதனை, 'வீரத்தில் எமன்' என்று உலகத்தார்கூறினும், தான் கொண்டுவருகின்ற ஒற்றைத் தேரினல் பக்கபலமின்றி அவ் வொருமனிதன் என்னபோரைச்செய்வான்!

அவனுல் நம்மிடத்தில் ஒன்றுஞ் செய்ய வியலாது; மன்னனுடைய திரண்டபடையேவந்து நம்முன்னே கெட்டோடக்கூடிய திறமை நம்மிடத்திருக்கும்போது, அவன் நமக்கு எம்மாத்திரம்! எப்படி யிருந்தபோதிலும் இந்தச் சகுனத்தின் குறிப்பை யெண்ணி, நாம் உத்தேசித்த காரியத்தை நடத்தாமல் நிறுத்தலாகாது; ஆதலால், இன்றைக்கு நாம் ஒரே மனத்தோடுசென்று பசு நிரையைக்கைப் பற்றுவோம்; ஒன்றும் யோசியாமல் எழுந்திருப்பிராக," என்று கூறி எல்லோரும் எழுந்து அப் பசுநிரைவந்து தினந்தோறும் நிற்கின்ற இடத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். இதற்குள் பசுநிரையும் அவர்கள் நினைத்தவிடத்தில் வந்துகூடி யிருந்தது.

இவ்வாறு பசுநிரைவந்து கூடிய அச் சமயத்திலே, மேற்கண்டவாறு புறப்பட்டவர்கள், எப்பொழுதும் வண்டுகளுடைய நெருக்கம் நீங்காத (அதாவது:வண்டுகள் நிறைந்திருக்கின்ற) கள்ளை வயிறு நிறையக்குடித்து, * ஆகோட்பறையைக் குறிஞ்சிப்பறையாகிய உடுக்கையோடு சப்தித்தெழும்படி முழக்கிக் கட்டியங்காரனுகிய அரசனேடு பகைகொண்டு, குறிஞ்சிநிலத்திறைவனும், தங்கள் குலதேவதையுமாகிய முருகக்கடவுளை வணங்கி, 'நமக்கு வெற்றியுண்டாக' என்று ஆர்ப்பரித்து, வீரமிகுந்து சென்ருர்கள். அத் தருணத்தில், இடையூறு வருவதற் கறிகுறியாகக் கரிக்குருவி நிரையினூடு பறந்துசென்று பசுக்கள் மருண்டோடும்படி கதறி அப் பசுக்கூட்டத்தைக் கலைத்தபடியால், முழுதும் மலர்ந்த கோங்குமரம்போலப் பொன்னுபரணங்களைத் தாங்கியிருக்கின்றவர்களாகிய இடைச்சியரது சேர்க்கைநலஞ் சேர்வதற்கு, பசுக்கள் தினவுதீர

* ஆகோட்பறை - பசுநிரையைக் கவருங்காலத்தில் முழக்கும் வாத்தியம்.

உராயும் * ஆதீண்டு குற்றியைப் போன் றிருப்பவனும், (அதாவது: பசுக்கள் தினவுதீரத் தூணில் தேகத்தைத் தேய்ப்பதுபோல இடைச்சியர் தன் தேகத்தைத் தழுவும் படி பொருந்தியிருப்பவனும்) அழகாகக் கோக்கப்பட்ட முத்தாரத்தை யணிந்த மார்பை யுடையவனும், இடை யருக்குத் தலைவனுமாகிய நந்தகோனுடைய தலைமையின் கீழ் அடங்கி யிருக்கின்ற அந் நிரையைகாக்கும் இடைய ரோடு பொருந்தி யிருந்தவனாகிய நிமித்தங் கூறு மிடை யன், இன்று பசுக்கூட்டத்தைக் கவரப் பகைஞர் வருவா ரென்றுணர்ந்து, உடனே அத்தலைவனாகிய நந்தகோனிடத் தில், "எமது தலைவ! இப்பொழுது பசுநிரைக்குள்ளே கரிக்குருவி புகுந்து கதறிக் கூட்டத்தைக் குலைத்தது; இச்சகுனத்தால் இன்று பசுநிரைகவரப்பகைஞர்வருவார்; ஆதலின், நீர் நிரையைக் காக்கும் விஷயத்தில் என் சொல் லையிகழ்ந்து அசிரத்தையாயிருக்கவேண்டாம்; இப்பொழு தே கடினமான காவலை யேற்படுத்தவேண்டும்," என்று கூற, அவனுடைய கட்டளையால் பசு நிரையைக் காக்கும் பொருட்டு, வெள்ளியாற்செய்த வளையலையணிந்து விளங் குகின்ற தோள்களையுடைய புதுமணப் பெண்களாகிய இடைச்சியரைச் சேர்கின்ற புது மணவாளப் பிள்ளைகளும், தாங்கள் சண்டைக்குப் போவது தகாத தாயினும் அச் சமயத்தில் அதை எதிர்பாராமல் மிக்க தைரியத்துடனே பசுநிரையைக் காப்பதற்குச் சென்றார்கள்; புது மண வாளப் பிள்ளைகளே காவலுக்குச் சென்றார்க ளென்றால் மற்றவர்கள் சென்றார்க ளென்பதைச் சொல்லவேண்டிய தில்லை; இவ்வாறு எல்லோரும் சென்று பசுநிரையைக் காத்தபடியால் அன்று, காவல் மிகவும் கடினமுள்ளதா யிருந்தது; மேற்கண்டவாறு காத்திருந்த இடையர்களெல்

---

* ஆதீண்டுகுற்றி - பசுக்கள் தினவுதீர்த்துக்கொள்ளும்படி நட்டுவைக்குந் தூண்.

லோரும், "எவர்வந்தாலும் சரி; ஒருகை பார்ப்போம்; நிரையை இலகுவில் விடுவதில்லை," என்று ஒருவரோடொருவர்பேசி உறுதிகொண்டு, மிகுந்த வீறுப்புடனிருந்தார்கள். அத் தருணத்தில் பசுநிரை, ஆகாயமும் நக்ஷத்திரக் கூட்டங்களும்போல (அதாவது: ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் கலந்து விளங்குவதுபோல) காட்டிலே கலந்து மேய்ந்தது. அப்படி மேய்கிறபோது, முன்கூறியபடி புறப்பட்ட கொடுந்தொழிலையுடைய வேடர்கள், அங்குவந்து நெருங்கி, வீரத்தால் ஆர்ப்பரித்து உடனே, வில்லை வளைத்து இடையரோடெதிர்த்துப் பரந்து பொழிகின்ற மழையைப்போலப் பாணங்களைச் சிதறினார்கள். அப்போது இடையரும் தங்களாலியன்றவரை எதிர்த்துப் போர்புரிந்து முடிவில் போருக் காற்றாமல், மத்தாற் கடைந்த தயிரைப்போலக் கட்டுவிட்டுச் சிதைந்தார்கள்.

அவ்வாறு சிதறியோடிய கோவலர்கள், தங்கள் கருவிகளான வேய்ங்குழலும், கோடாரியும் தங்கள் கையைவிட்டொழிந்து அங்கே கிடக்கும்படி அவற்றையிழந்து, பசுநிரை மேய்ந்த காட்டைவிட்டகன்றுபோய்ப் பசுக்கன்றுகள் மதர்ப்பினாலே தொழுவத்திலுள்ள * உழலை மரங்களையும் முறித்துக்கொண்டு பாய்ந்து வெளியேறி உலாவுகின்ற முற்றத்தையுடைய இடைச்சேரியிலிருந்தவர்களும், மழலை பொருந்திய இனிய சொற்களையுடையவர்களுமாகிய இடைச்சியர் அழும்படி அவர்களிடத்தில், "பசுநிரையைப் பாழும் வேடர் வந்து கொண்டு போயினர்; அவர்கள், எம்மோடெதிர்த்து நிரையை ஓட்டுங்காலத்தில் இரு பிரிவாகப் பிரிந்து நிரையின் இருமருங்கினும் நின்று, தயிர்மத்தில் பிணித்திருக்கும் கயிறானது ஒரு பக்கம் சோர்ந்தால் மற்றொருபக்கம் விரைப்பாக இழுத்துக்கொள்ளப் படுவதுபோல, அந்தப்பக்கத்திலுள்ளவர்

* உழலைமரம் - பசுத்தொழுவின் வாயிலிற்போட்டடைத்திருக்கும் தடை மரம்.

கள் நிரையைக் கைசோரவிட்டால் இந்தப் பக்கத்தி லுள்ளவர்கள் சோரவிடாதவர்களாய் ஓட்டினுர்கள்; (அதாவது: ஒரு பக்கத்தார் கைசோர்ந்தாலும் மற்ருெரு பக்கத்தார் சோர்வுருமல் நிரையை அடித் தோட்டினுர்கள்.) அவர்கள் அவ்வாறு செய்தமையின் நிரை எங்களால் மீட்க முடியாமற் போயிற்று; இனி அஃது அவர்கள் கைவசப்பட்டதேயன்றி நம் கைவசப்பட்டதாகாது," என்று விசனத்தோ டுரைத்தார்கள். அவ்வாறு சொல்லவே, அதைக்கேட்டுக் கடைகின்ற தயிர்ப்புள்ளிகள் நிறைந்த தோள்களையுடைய ஆய்ச்சிய ரெல்லோரும் பெருங்கலக்கத்துடனே ஓரிடத்திற் கூடினுர்கள். அவ்விதம் கூடிய அவர்கள், தம் மார்பிலணிந்த முத்துமாலையோடு, நெருங்கிய கூந்தலி லணியப்பட்டதும், உயர்ச்சியும் குளிர்ச்சியும் பொருந்தியதுமாகிய மலர்மாலையும் சிதைந்து ஒன்ருெடொன்று பின்னிக் கொள்ளும்படி தலைமயிர்குலையக் கையால் வயிற்றி லடித்துக் கொண்டவர்களாய், வலையி லகப்பட்ட மானைப்போன்றும், மயிலைப்போன்றும் வருந்தி யழுதார்கள். அப்படி யழுது பின்னரும், அங்குத் தாய்களைப் பிரிந்து தங்கள் மனையில் நின்ற கன்றுகளோடு, "எம்முடைய அன்னைமாரே! வெவ்விதாகிய போரையுடைய வேடுவர், உங்களுடைய தாய்மார்களை நோகும்படி அடித்துக் கொண்டுபோயினுர்; இனி நீங்கள் எவ்வாறு உயிர் பிழைப்பீர்? அந்தோ! நீங்கள் இவ்விதம் கலங்கி நிற்கும் நிலையைப் பார்க்கவும் காலம் நேர்ந்ததே!" என்று கூறியும் புலம்பினுர்கள்; இவ்வித வருத்தத்தால் இவர்கள் கண்டவிடங்களிலெல்லாம் முட்டியும், மோதியும் விழுந் தழுதபடியால் பாற்குடம், தயிர்க்குடம், நெய்க்குடம் முதலியனவெல்லாம் உடைந்து அவை திரண்டு ஆறுபோலோடத் தலைப்பட்டன.

இவ்வாறு கல்லைப்போற் ருேய்ந்த தயிரும், பாலும் நெய்யோடு கலந்து ஆருயோடும்படி இடைச்சேரியில்

வருத்தமுண்டாக எப்பொழுதும் கெடாதுநின்ற இடையர் படையானது, இப்பொழுது வேடர் பகையுண்டானமையினாலே அவர்களோ டெதிர்த்துப் போர்புரிந்து பலமற்றுப் பின்னிடைந்து கெட்டுவிட்டது; மேலே அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை; அதனாலே மேற்கண்ட ஆயர்க ளெல்லோரும் திரண்டு, 'இச் செய்தியை அரசனுக் கறிவிப்பதே நலம்,' எனக் கருதித் தாங்கள் அணிந்திருந்த தேன் சொரியும் மலர்கள் சிதறிக் கீழே விழும்படி விரைவாக நடந்து, முல்லை நிலத்திலே அலங்காரமாகிய மலர்கள் மிகுந்து விளங்காநின்ற புன்செய் நிலங்களைத் தாண்டி, அதன்மேல் தேன்மிகுந்த தாமரைக்காடு செறிந்த ஏமாங்கதநாட்டின் மருத நிலங்களையுங் கடந்து, பின்னர் அழகிய சுறுமீன்கள் சூழ்ந்திருக்கின்ற அகழி வளைந்த மதிலையுடைய பழைய ஊராகிய இராஜமாபுரத்தைச்சார்ந்து, அங்குள்ள அரசனை கட்டியங்காரனுக்குச் சமீபத்திலுள்ளவனாகிய வாயில் காப்பாளன் கேட்கும்படி அவனிடத்தே, வேடர் நிரைகொண்டு போனதாகிய இக் கலகத்தைப் புக விட்டார்கள்; (அதாவது: கட்டியங் காரனிடம் தெரிவிக்கும்படி நடந்ததைக் கூறினார்கள்.) இவ்வாறு இவனிடத்திற் கூறியதன்றியும், நெய்யைவார்த்துத் தடவிய தலைமயிரிலே ஆராய்ந்து கொய்யப்பட்ட மணமலரையணிந்த அவ் விடையர், கேட்பா ரெல்லாரும்போய் நிரையை மீட்கட்டுமென்று கருதி, "ஊராரே! கேளுங்கள்; வில்லைத் தாங்கிய கையை யுடையவர்களாகிய பல வேடர்கள் காட்டில் நெருங்கி, வளைந்த திமிலையுடைய பல எருதுகள் சூழ்ந்ததும், பசுக்களின் கழுத்தில் கட்டியிருக்கும் மணிகள் எப்பொழுதும் அசைந்துகொண் டிருப்பதுமாகிய பசுநிரையை ஒருமிக்கக் கைக்கொண்டு, பசிய வஸ்திரமானதுகாற்றி லசைந்தாடல்போல் அசைந்து செல்லக்கூடிய அருவி யொழுகுகின்ற உச்சியை யுடையதும், நீண்டதுமா

கிய மலையில், பிறர் செல்வதற்கரிதாகிய வழியைப்பற்றிச் சென்றார்கள்; அவர்களை வென்று நிரைமீட்க எங்களால் முடியவில்லை; அரசன் படையுடன் நீங்க ளெல்லோரும் சென்றாவது நிரையை மீட்பீராக; சிறிதும் தாமதிக்கலா காது; இதுவரை நிரை, நெடுந்தூரஞ் சென்றிருக்கும்," என்று மேற் கூறிய பசுநிரைக் கலகத்தைக் கண்டவிட மெல்லாம் சொல்லி வளப்பம் பொருந்திய அவ் விராஜமா புர முழுவதும் பரப்பி விட்டார்கள். அத் தருணத்தில், தன்னைவளர்த்த சச்சந்த மன்னனைக்கொன்ற பாவியும், அக் கொலைத்தொழிலா லேற்பட்ட இழிவான வெற்றியையும் வலிமையையு முடையவனுமாகிய கட்டியங்காரன், காம் பின் பக்கத்திலே குற்றமற்றனவும் சிறப்புற்றனவு மாகிய இரத்தினங்களைப் பதித்துச் செய்யப்பட்டிருக்கும் சாமரை யைக் கன்னியர்கள் வீச, அப்படி வீசும்போதெல்லாம் அச் சாமரைக் காற்றின் அசைவாலே அவன் காதுகளில் அணியப்பட்டிருந்த மகர குண்டலங்கள் அசைந்து பிரகா சிக்க, அரசர்க்குரிய மரபின்படியே வாசனை பொருந்திய தும், சிறப்புற்றதுமாகிய செங்கழுநீர் மலரைக் கையிற் பிடித்துச் சச்சந்தனிருந்து அரசுசெலுத்திய அக் கொலு மண்டபத்தில், அவனேறியிருந்த சிம்மாசனத்தி லமர்ந்து இராஜகாரியங்களைப்பற்றி விசாரித்துக்கொண் டிருந்தான்.

அவன் இப்படி யிருக்கும்போது, முன்கூறியபடி இடையர்கள் பசுநிரைக் கலகத்தைச் சொல்லக்கேட்ட வா யில் காப்பாளன், கையிலே யெடுத்த வாளாயுதத்தோடும் பிரம்பினோடும் ஆங்குச்சென்று, கைகுவித்துக் கொடிய அர சனாகிய அக் கட்டியங்காரனுடைய அழகிய பாதங்களைத் தொழுது, "எம திறைவ! நம் நாட்டிற்குச் சமீபத்தி லுள்ள அக் காட்டிலே ஒரு பெருஞ்சண்டை யேற்பட் டிருக்கிறது," என்று கூறினான். அப்படிக் கூறவே அக் கட்டியங்காரன், அவ்விதம்சொன்ன வாயில் காப்பாளனை

நோக்கி, "அஃது என்னபோர்? எனக்கு விளங்கும்படி, கூறுவாயாக," என்றுரைத்தான்; அவ்வா றுரைக்கவே அக் காவற் சேவகன், "மன்னரேறே! வேடர் கூட்டத் தார்வந்து நம் பசுநிரையை அடித்துக்கொண்டு போயினர்; ஆய ரெல்லோரும் அவர்களுட னெதிர்த்துப் போர்புரிய வியலாது தோற் றோடிவந்து, 'விரைவில் நிரையை மீட் கவேண்டும்,' என்று கூறுகின்றார்கள்; ஆதலின், நமது படையை அனுப்பி நிரையை மீட்டுக் காப்பீராக," என்று கூறினான். இதைக் கேட்டவுடனே உயிரைக் கொல்லு கின்ற எமனை நிகர்த்தவனாகிய அக்கட்டியங்காரன், அரச பரம்பரையிற் சாராமல் நூதனமாக அரசுபெற்றவ னாத லின், சில அறிவீனராகிய தாழ்ந்த வகுப்பார், தங்களுக்கு ஏதோ விதிவசத்தால் செல்வங் கிடைத்துவிடின், அதை அனுபவிக்க வேண்டிய முறை தெரியாமல் தீயவழியில் அப்பொருளைச் செலவிட்டு, நல்லோ ருறவுநீங்கித் தீயோ ருறவுகொண்டும், அறிவீனரை மதித்தும் அறிவுள்ளவரை மதியாமலும், கோபம் செலுத்தத் தகாத விடங்களில் கோபத்தைச் செலுத்தியும், நாலுபேர் கூடிவிட்டால் தலை தூக்கித் தற்பெருமை பேசியும், உலகமுறையைக் கைவி ட்டு, "தனவந்தர்கள் நடக்கவேண்டிய முறைகள் இவை கள் தாம்," என்று இவற்றையே தழுவி எந் நாளும் நல் லோர் இகழத் திரிவதுபோலத் தற்பெருமை கொண்டு, பக்கத்தி லிருப்போர் மதித்தற்காக, பசுநிரை கவர்ந்த வேடர்கள்மீ தேற்பட்ட கோபம் அதிகரித்து அடங்கா மல் நடந்த விஷயம் சொல்லி முன்னின்றவன் மேலும் செல்வதுபோல நடிக்கத் தொடங்கிச் சமாசாரம் தெரி வித்த சேவகனைக் கோபித்தல் இராஜ தரும மன்றென் றுணராது தன்கையிலிருந்த அழகிய தேனிறைந்த செங் கழுநீர்ப் புஷ்பத்தைப் பிசைந்து, சிவந்த கண்களையும், அற்பமாகிய மயிர்கள் நிறைந்து உடம்பில் விளங்கும் தோ

லேயும், உடற் சுருக்கத்தையும், சிவந்து விளங்கும் முகத்தையும், வெவ்விதாகிய கண் பார்வையையும், தேகத்திலணிந்த சட்டையையு முடைய வாயில் காப்பாளனாகிய அம் * மிலேச்சனைச் சிவந்த கண்களாலே நெருப்புப் புறப்படும்படி விழித்துநோக்கி, "நம் நிரையை வேடர்கள் கொண்டுபோயினர் என்ற இந்த இழிவான சமாசாரத்தை நீ என்னிடம்வந்து கூறினையல்லவா! உடனே போய் மீட்டு வரும் திறமை உனக்கில்லையா? மடையா! இவ்வாறு இந்த அற்பக் காரியத்தையும் நிறைவேற்ற முடியாமல் வீரமிழந்து என்னிடம்வந்து தெரிவிக்கும் உன்னை என் சேவகனாக வைத்திருப்பதால் என்ன பிரயோசனம்?" என்று தன் புத்திக்குத் தகுந்த வார்த்தைகளைக்கூறிக் கோபித்தான். அதன் மேல் இவ்வாறு எமனைப்போன்று கோபித்து முழங்கியவனும், கொலை பொருந்திய வேலாயுதத்தைத் தாங்கியவனும், முறையின்றி உலகத்தைக் காக்குந் தொழிலையுடையவனுமாகிய கட்டியங்காரன், சிறிது நேரம்சென்றபின் அக் கோபஞ் சிறிது தணிந்து, சற்று நிதானித்து, இடையர்களை யழைத்து அவர்களுடைய வாய்மொழியைக் கேட்டு நடந்த விஷயமுற்று முணர்ந்து, உடனே வெற்றி மிகுந்ததும், கடல்போல் பெருகியதுமான தன்னுடைய சேனையை விளித்து, "காற்றினும் வேகமாய்ச்சென்று பசு நிரையை விடாது மீட்பீராக," என்று ஆண் சிங்கத்தையும் இடியையும் போன்று ஆர்ப்பரித்துச் சொன்னான்.

அவ்வாறு கூறினமாத்திரத்திலே நிரைமீட்கும்பொருட்டுக் கார்காலத்திலுண்டான மேகத்தில் அடுத்துப் பொழிதற்கு மழைசெறிந்து மறைந்திருப்பதுபோலச் சமீபத்தில் வெளிப்படுதற்குக் கன்னத்தில் மறைந்து தங்கியிருக்கின்ற மதத்தையுடைய யானைப்படையும், போர் மிகுந்துண்டாவதற் கேதுவான குதிரைகள் பூட்டிய தேர்ப்ப

* மிலேச்சன் - துலுக்கன்.

டையும், அலங்காரமாகக் கத்திரித்து ஒழுங்கு செய்யப் பட்ட மயிரையுடைய குதிரைப்படையும், காலாட்படையு மாகிய நால்வகைச் சேனைகளும், தோல்வார்க் கட்டுகளோற் பட்டு அழகாகத் தோற்றுகின்ற பேரிகை முழங்கவும், கடலிலே உண்டாகியவைகளும், சுரிந்த வடிவத்தை யுடையவைகளுமான சங்குகள் சப்திக்கவும், மேகமானது பவனி புறப்பட்டதுபோலப் பூமி இவற்றின் பாரத்தைத் தாங்க முடியாமல் நெளியப் பரவிச்சென்று, விரைந்தோடி வேடர்களோ டெதிர்த்தன. அப்படி யெதிர்த்தபோது, காற்று உள்ளேவந்து தாக்குதலாலே ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தன்மையையுடைய கடல் கொந்தளித்து அதனோடு யுத்தத்திற் கெழுந்ததுபோலக் கட்டியங்காரனுடைய வேல்நெருங்கிய சேனுவீரரும்,வெவ் விய கோபத்தையுடைய வேடரும், அம் மன்னன் படைக் குரிய வெள்ளிய சங்கு முழங்கவும், இவ் வேடர்க்குரிய துத்தரிக் கொம்பென்னும் ஒருவகை ஊது கொம்பும், குறிஞ்சிப்பறையாகிய துடியென்னும் வாத்தியமும் வாய் விட்டுச் சப்திக்கவும் ஒருவரோ டொருவர்தாக்க, அத் தருணத்தில் வேடர்கள் கருமையாகவும், அரசன் படை வெண்மையாகவும் தோற்றுதலால் அவ்விருவகையாரும் இரவும் பகலும் தம்மில் கோபித்து ஒருபக்கத்திலே வளை ந்து போர்செய்வதை நிகர்த்தார்கள். இவ்வாறு இருபடை யும் தாக்கியவுடன் வேடர்கையிலுள்ள விற்கள் வளைந்து அவற்றால் சொரியப்பட்டனவும், வெப்பத்தை யுடைய னவும், கொடுமையாகிய நுனியை யுடையனவுமாகியபாண ங்கள், அரசன்படையிலுள்ள வீரர்களுடையதும், மல்யுத் தத்திற்றேர்ந்து விசாலித்ததுமான மார்பகத்தைத் தங்க ளுக்கு இடமாகக்கொண்டு பதிந்துதங்க, அதனாலே, அவ் வீரர்களுக்குக் கோபத்தோ டுண்டாகிய ஆண்மை, செவ்வி தாகிய நாவில் உயர்ந்த சொற்களெல்லாம் வரும்படி பல

பாடல்களைச் சொல்லிப் பழகி அச் சொற்கள் முதிர்ந்தவர்களாகிய வித்வான்களுக்கும் அளவிட்டு எடுத்துக்கூறுந் தன்மை யுடையதல்லாமல் ஓங்கும்படி, (அதாவது: வித்வான்களாலும் புகழமுடியாத ஆண்மை மிகும்படி) கொல்லனுடைய தொழில் மிகுந்து விளங்காநின்ற வேலாயுதத்தையுடைய அவ்வீரர்கள், மிக்க ஆத்திரங்கொண்டு, மேற்கூறிய வேடர்களுடைய வளைவாகிய விற்களைத் தங்கள் வாளாயுதங்களால் வெட்டி ஒடித்துக் கெடுத்தார்கள்; இவ்விதம் தங்களைக் கெடுத்த அரசனுடைய வாட்படை கெடும்படி அவ்வேடர்கள், மேலும் வளப்பமாகிய வில்லை நன்ருக வளையும்படி வளைத்துக் கொலையையுடைய புலிக்கூட்டத்தைப்போல வீரத்தோடு நெருங்கினுர்கள்; அப்படி நெருங்கினவுடனே, தங்களுடைய கொதிக்கின்ற நுனியையுடைய அம்புகளால் அவ்வாட்படையிலுள்ள மேற்கண்ட வீரர்களைக் கொன்ருர்கள்; அத்தருணத்தில் அரசன் படையிலுள்ள எண்ணிறந்த குதிரைகள் பட்டு வீழ்ந்தன; பலம் பொருந்திய பலதேர்க ளெல்லாம் தலைகீழாகக் கவிழ்ந்தன; மேருகிரி தலைசாய்ந்து விழுவதை நிகர்த்துப் பெருமையும் அருமையுமுள்ள பலயானைகளும் தலையறுந்து வீழ்ந்தன. இப்படிப்பலவும் மடிந்தவுடனே அரசன் படையில் சாகாமல் எஞ்சியிருந்த வீரர்கள், "இவ்வேடரை இவ்விடத்தி னின்றும் வெளியேறும்படி துரத்தி நாம் இப்பொழுதே வெற்றியைக் கொள்ளுவோம்," என்றுறுதி கொண்டு மேலும் அவர்கள், குறைந்து போயிருந்த தம் படையை நோக்கி, "நீங்கள் நம்படை குறைந்துவிட்டதென்று அதைரியப்படாமல் சற்று வீரத்துடனே, வேடர் படையோடு பொருந்தி நெருக்கித்தள்ளி அப்படைக்குள் சிறிது வலிமையைக் குறையுங்கள்; அவ்வாறு செய்யின் நிச்சயமாக நமக்கு வெற்றியுண்டாகும்," என்று தைரிய வார்த்தைகள் சொல்ல அவ்வாறே அப்படை நெருங்கித்

தாக்கி, வேடர்கள் மிக்க விருப்போடு யுத்தஞ்செய்தமை யால் முடிவில் ஆற்ருமல், அச்சேனையிலுள்ளதும், பொற் பட்ட முதலியவற்றின் பிரகாசம் அசைந்து விளங்குகி ன்றதுமாகிய யானைப்படையும், அலங்காரமாகிய உரோம முடைய குதிரைப்படையும், வேலாயுதத்தையுடையகாலா ட்படையும் சிற்றணுக்கன் என்னும் விருதையும், பீலிக் குடையையும், பிரகாசம் விளங்குகின்ற கொடிகளுடனே போட்டுவிட்டுச் சப்திக்கின்ற கடல் உடைந்தோடுவது போலத் தைரியமிழந்து கூட்டங் குலைந்தோடின; அதன் மேல் சுட்டியங்காரனுடைய புத்திரரும் மைத்துனரும் சிறிது நேரம் எதிர்த்து யுத்தம் புரிந்துகொண் டிருந் தார்கள்.

கட்டியங்காரன்படை இவ்வாறு கெட்டோடியமாத் திரத்திலே, உடன் சென்றிருந்த இடையர்களுட் சிலர், பல்லாற்கிழித்த நாரிலே குளிர்ச்சிபொருந்திய மலர்நெ ருங்கும்படி வைத்துக் கட்டப்பட்டுத் தாங்கள் உரித்தாக அணிந்திருந்த முல்லைக்கண்ணி சிதைந்து சிதற, மிக்க விசையுண்டாகும்படி காலை விறைப்புப்படுத்தி மூச்சட க்கி விரைந்தோடிக் கட்டியங் காரனிடம் பலருடைய குரலுஞ்சேர்ந்து ஒல்லென் ருெலிக்க, "அரசர் பெருமா னே! தங்களுடைய சேனை நிரைகொண்டு சென்ற வேட ருட னெதிர்த்துப் போர்செய்ய முடியாமல் ஆயுதங்கள் விருதுகள் முதலியவற்றை யெல்லாம் போட்டுவிட்டுப் புற முதுகுகாட்டி யோடிவிட்டது; பல வீரர்களும் இறந் தார்கள்; தேர்களும் தலை கவிழ்ந்தன; யானைகளும் பட் டன; குதிரைகளும் உயிரற்றன; வேடுவர் வலிமை அள விடக் கூடாததா யிருக்கிறது," என்று முன்னே சொல்ல, அக் கட்டியங்காரன் கேட்டுத் தன் நெஞ்சில் வருத்தமுற் றிரங்கித் துன்பக் கடலிலே அழுந்தினன். மேற்கண்ட வாறு படை உடைந்த மாத்திரத்தில் இவ் விடையர்கள்

இவ்வாறுவந்து சொல்லக் கட்டியங்காரன் விசனத்தை யடைந்துகொண்டிருக்குஞ் சமயத்தில், வேடர்கள் அரசன் படையில் எஞ்சி யிருந்தவரையும் பூரணமாகச் சிதைத்தோட்டிவிட்டு அப்பால் நிரையை ஓட்டிக்கொண்டு போனார்கள். அதையறிந்த சில இடையர்கள் பின்னர் ஓடிவந்து, அக் கட்டியங் காரனிடத்தில், "செம்பின் றன்மையைக் கொண்டதுபோன்ற (அதாவது: செம்பினு லமைந்ததுபோலப் பிரகாசத்துடன் விளங்குகின்ற) மதில் வளைந்த அழகிய இராஜமாபுரத்தில் அரசு செய்கின்ற ஸ்ரீமானே! மாலையையணிந்து, அம்மாலையினுடைய தேன் தன்மீது சொரியத்தக்க ஒரு பொற்கொம்பு, கச்சையணிந்து காதலையும் அழகையுமுடையனவாய் விளங்கும் பயோதரங்களைத் தனக்கு முக்கிய அவயவங்களாகக் கொண்டிருந்தது போலும் (அதாவது: பயோதரங்களைத் தாங்கிய பொற்கொம்புபோன்ற) பெண்களுடைய செழித்த கயல்மீன் போன்ற கண்களை நிகர்க்கும் அம்புகளைக் கையில் வைத்துக்கொண்டு நீண்ட போர்செய்ய முடியாமல், தங்கள் புத்திரரும் மைத்துனருமாகிய அரசர்களும் சிறிதுநேரம் யுத்தஞ்செய்து, முன்வந்த இடையர்கள் கூறியபடி தங்கள் படை குலைந்தபின்னர், மிக விரைவில் பின்னிடைந்து திரும்பி விட்டார்கள்; வேடர்களோ பசுக்களை விடாமல் கொண்டே போயினார்கள்," என்றுரைத்தார்கள். அதைக் கேட்டுக் கட்டியங்காரன் தன்னால் எதுவுஞ் செய்ய வியலாமையால், அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் மௌனமாயிருந்தனன்.

அவன் அப்படி யிருந்ததைக்கண்டு இடையருக்குத் தலைவனாகிய நந்தகோன், "இனி அரசனிடத்தில் முறையிடுவதாற் பயனில்லை; தமக்கு ஆண்மையிருந்தால் படையுடைந்ததென்று கேட்டமாத்திரத்திலேயே இவர் புறப்பட்டுப்போய்நிரைமீட்டுவந்திருப்பார்; அவ்வாறு ஆண்மை

யில்லாத படியினாலேயே மௌனமா யிருக்கின்றார்; இனி நிரைமீட்டவர்க்கு நம் புத்திரியைக் கொடுப்பதாகப் பறை சாற்றி நகரத்தில் எவரேனும் வீரரிருந்தால் அவர்களை எழுப்பிவிட்டு நிரையை மீட்டு வரும்படி செய்வதே உத்தமம்; அப்படி இந் நகரத்தில் சண்டைக்குப் புறப்படக் கூடிய வீர ரொருவரும் இல்லையானால் வேடர்களே பசு நிரையைக் கொண்டுபோகட்டும்," என்று தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு, நகரத்திலே சென்று, "ஐயன்மாரே! வாள்போன்ற கண்களையும், பொன்னாபரணங்கள் பிரகாசிக்கின்ற மேனியையும், பூங்கொடிபோன்ற அழகையுமுடைய என்மகள் கோவிந்தையைப் பசுநிரை மீட்டு வந்தவர்க்குத் தடையின்றிக் கலியாணம் செய்துகொடுப்பேன்; அப்படிப் பெரிய பசுநிரையைத் திருப்பி வந்தவர்களாகிய குமரர்கள் பெற்றுக்கொள்வாராக," என்று சொல்லிக் கலியாணத்திற் குரித்தாகிய முரசத்தைச் சப்திக்கும்படி வீதிதோறும் அடித்து முழக்கச் செய்தான். இதைக் கேட்டவுடனே இராஜமா புரத்திலுள்ள ஆடவர்கள், "அவ் வேடர்களுடைய மூங்கிலாற் செய்த குதையையுடைய விற்கள் சொரிந்த வெவ்விய நுதியையுடைய அம்புகள் சென்று பதிந்ததனாலே, கட்டியங்கார மன்னனுடைய சேனைக் கூட்டமே ஆற்றாமல் தோற்றோடியது; அப்படியிருக்க நாம் அவ்வேடர்களுக்கு எம்மாத்திரம்! இவன் பசுநிரைமீட்பவர்க்குக் கொடுப்பதாகச் சொன்ன பெண், கருமையும் விசாலமும் பொருந்திய கண்களையுடைய இடைப்பெண்ணல்லாமல், ஆகாயத்தையே தான் செல்லும் மார்க்கமாகக்கொண்டு செல்பவளும், பெறுதற்கரியவளுமாகிய தெய்வப்பெண்ணா யிருந்தாலு மிருக்கட்டும்; அவ்வேடராகிய எமன்களோடு போர்செய்து நிரையைமீட்டு இவளைப் பெற்றுக்கொள்ளும் கொள்கையில் வல்லமையுடையவர் இங்கொருவருமில்லை; எவராவது வல்

லமையுடையவ ரிருந்தால் போகட்டும்; நம்மாலாகாதப்பா!" என்று கைதொழுது அக் காரியத்தில் பிரவேசிப்பதைக் கைவிட்டார்கள்.

அத்தருணத்தில், மேகத்தினின்றும் பிளந்துகொண்டு வெளிப்பட்டு அதனிடத்தே பரந்து தோன்றுகின்ற மின்னலை நிகர்த்தவர்களாகிய பெண்களின்மேல், அடக்கமில்லாத தூர்த்தருடைய நெஞ்சு விரைந்தோடுவது போல வேகங்கொண்டோடுந் தேரை நேரான போக்கிலே போகும்படி செலுத்திப் பின்பு அதிற்பூட்டியதும், மாலையணிந்து விளங்குவதுமாகிய குதிரையை வட்டமென்னுங்கதியிலே செல்லும்படி (அதாவது: வட்டமாகச் செல்லும்படி) ஓட்டிக்காட்டுகின்ற சாரத்திய விசேஷத்தையுடையவனும், வாசனைபொருந்திய மாலையை யணிந்தவனுமாகிய சீவகனுக்கு, அவனுடைய கட்டளையால் வெளியில் நடக்கும் விசேஷத்தை யறிந்துவரச்சென்ற ஒரு மனிதன், அவ்வாறே சென்று திரும்பிவந்து, வேடர் நிரையைக்கொண்டுபோனதால் ஊரார் வருத்தத்தை யடைவதையும், நந்தகோன் நிரைமீட்டார்க்கு மகளைத் தருவேனென்று பறையறைந்த விசேஷத்தையும் தெரிவித்தான். இதைக் கேட்டவுடனே சீவகன், "நல்லொழுக்கத்தையும், பசுவையும், துறந்தாரையும், பெண்டிரையும், பாலரையும், பார்ப்பார் என்று சொல்கின்ற வேதியரையும் இடுக்கண் வந்தகாலத்தில் பாதுகாவாம லிருப்பேனாயின், தன்னிடத்தே தங்கிய வீரமாகிய மனையாள் (அதாவது: வீரம்) அயலானிடத்தே செல்லக்கண்டும், (அதாவது: அயலார்வெற்றிகொண்டு தனக்கு அபஜெயத்தை யுண்டாக்கக்கண்டும்) உடனே சென்று அப்பகைவரை வென்று, அவ்வீரத்தைக் கைக்கொள்ளாமல் சகித்திருந்து, ஆண்மையற்ற பேடியைப்போன்று, பின்னும் உயிர்வாழவேண்டிப் பாற்சோற்றை உண்பதற்கு விரும்பி அத்தொழிலை மேற்கொள்

கின்ற அற்பமான ஒழுக்கத்தை யுடைய அக்கட்டியங்கார ஞேவேன்; ஆதலால், பசுநிரைக்குத் துன்பம்வந்ததென்று ணர்ந்தும் அக்கட்டியங்காரனைப் போன்று மௌனஞ்சாதித்திருத்தல் நம்போன்ற வீரருக் கழகன்று; நாம் இப்பொழுதே சென்று வேடரை வென்று நிரையை மீட்க வேண்டும்," என்று கூறினுன். இவ்வாறு கூறினவன் சிறிதும் தாமதமின்றி உடனே யெழுந்து, குதிரையை அலங்கரித்துத், தேரின்முகத்தை அதன் கழுத்திற்பூட்டித்தேரையும் அலங்கரிக்கவேண்டிய விதத்தில் அலங்கரித்துப் பின்பு தன்னையும் போர்க்குரிய அலங்காரமாக அலங்கரித்துக்கொண்டு, வில்லைவளைத்து நாணேறிட்டுத் தகுதியான பாணங்களையும் ஆராய்ந்தெடுத்துக்கொண்டு, தன்னுடைய வீரரும் பின்தொடரக் கார்காலத்து மேகத்திற்ருேன்றும் மின்னலைப்போல மிகவும் விரைவாகத் தேரைச்செலுத்திஞன். அப்போது வேகமாக ஓடுதலினுல் குதிரைக்குளம்பினின்றும் பூமிமேல் எழுந்ததூளி ஆகாயத்திற்பரவ, அதனுலே பகற்பொழுது மறைந்து அத்தேர் சென்ற வழியெல்லாம் இருள்சூழ்ந்தது. இவ்வாறு கடிதில் தேரைச்செலுத்திச் சீவகன், பசுநிரையை ஓட்டிச் செல்லும் வேடர் சமீபத்தில் நெருங்கிஞன். இத் தேரைக் காணவே, வேடுவர் கூட்டத்தில், முன்பு ஆந்தையின் சகுனத்தை ஆராய்ந்து பலன் கூறியவனுகிய நிமித்திகன், மற்ற வேடரைநோக்கி, "இங்கு வருகின்றவனே, நெய்யிலே தோய்ந்து பளபளப்பாக விளங்குகின்ற வாள்போன்ற கண்களையுடைய பருவமங்கையர், தங்கட்குத் தகுதியான வாலிபரிடத்தே நோக்குகின்ற பார்வை தவருது சென்று அவர்களுடைய மனத்திற்பாய்ந்து வேதனையைச் செய்வதுபோலப் பகைவர்மீது தப்பாமற்பாய்ந்து வேதனையைச் செய்யக்கூடிய அம்புகளையேவுந் தொழிலிலே மிக்க வல்லமைதங்கிய குமரன்; தன்னுடைய பலமுள்ளதே

றொன்றே எல்லாத் திக்குகளிலும் சென்று முதன்மையாகக் கலந்துலாவும்படி அதனைச் செலுத்தி யுத்தஞ்செய்யக்கூடிய இவனுடன் நாம் எதிர்த்துப் போர்செய்து வெல்லுந் தருணம் இஃதன்று; ஆதலால், இப்பொழுது பசுநிரையை விட்டு ஓடிப்போவோம்; முன்னே நான் கூறிய சகுன பலனின்படி இவனை வெல்லுதல் நமக்கரிதாகும்; எதிர்ப்போமானல் நாம் தோற்றோடுவது திண்ணம்,'' என்று கூறினன். அதைக்கேட்டவுடனே அவ் வேடுவர்கூட்டத்தார், அந்நிமித்திகனை நோக்கி, "பெரிய முதலைக்குப் பழமையான நீரையுடைய சமுத்திரத்தில் அதைக் காட்டிலும் வலியதொன்று ஏற்படுமேயானல், நாம் மிக்கவலிமைசெலுத்தக்கூடிய இக்காட்டில் நமக்கும் வலியவர் ஏற்பட அவரைக் காண்போம்; முதலைக்கு ஜலத்தில் தன்னை ஜெயிக்கக்கூடிய வேறொரு எதிரியுமில்லை; அதுபோல நம்மை இக்காட்டில் ஜெயிக்கக்கூடிய எதிரியுமில்லை; எவ்வளவு பலமுடைய வீரன்வந்தாலும் நம்மை இக்காட்டில் ஜெயிக்கமுடியாது; அற்பபலமுள்ள பாம்பு தன்வளையில் நுழைந்து விட்டால் அதன்வாலைப் பிடித்திழுத்து அதை வெளியேற்றுவது எவராலும் முடியாது; அதுபோல் நாம் ஈனஜாதி வேடராயிருந்தாலும் நம் சொந்த இருப்பிடமாகிய இக்காட்டிலிருக்கும் வரையில் நமக்குப் பலம் அதிகமுண்டு; 'உள்ளூர் எலி அயலூர்ப் பூனையை வெல்லும்,' என்னும் பழமொழியை நீர்கேட்ட தில்லையா? இவன் எப்பேர்ப்பட்டவனு யிருந்தாலும் சரி; நாம் நிரையைவிடலாகாது; ஒருகைபார்ப்போம்,'' என்று வீரங்கூறி இரை அகப்படாமல் நெடுநேரம் வருந்திய பசியினுல் இரையைக் கவ்விய நாகம் என்னவந்தாலும் அவ்விரையைவிடாமல் பற்றிக்கொண்டிருப்பதுபோல அப்பசுநிரையைவிடாமல் கைப்பற்றிக்கொண்டு யுத்தஞ் செய்வதற்கு விரைந்தெழுந்தார்கள்.

அப்படி யெழுந்தவுடனே அக்கூட்டத்திலுள்ளவே டர்கள், சீவகனையும் அவனைச்சேர்ந்த வீரர்களையும் பார்த்து, "கட்டியங்கார மன்னனுடைய கடல்போன்றபடை கெட்டோடும்படி பாணப்பிரயோகஞ் செய்து வெற்றிகொண்ட வேடரென்கின்ற இவ்வெமன்களுக்கிடையில் அகப்பட்டுக் கொள்ளாமல், உங்கள் உயிர் பிழைக்கும்படி இவ்விடத்தினின்றும் அகன்றோடிப்போய்விடுங்கள்; எங்களை ஜெயித்தல் உங்களாலாகாது; வீணே எம் கைப்பாணங்களால் மடியவேண்டாம்," என்று உரத்துக்கூவித் தங்களுடைய துத்தரிக்கொம்பை வாயில் வைத்தூதி, வாயினாலே வீரத்தாலிடும், * கொக்கரிப்பையும், † சீழ்க்கையென்னும் ஒருவகைச் சப்தத்தையும் எழுப்பினார்கள்; (அதாவது: கொக்கரிப்பும் சீழ்க்கையுமிட்டு ஆர்ப்பரித்தார்கள். அவற்றிற்கு எதிராகச் சீவகனுடைய சங்கும், போர்ப்பறையும், கொம்பும் அக் காட்டிலே முழங்கின; அப்படி முழங்கவே அவ் விருபடையின் முழக்கமும் மேக முழக்கத்தையும் கடல்முழக்கத்தையும் நிகர்த்து எழுந்தன. அப்படி இருபடைகளிலும் முழக்கமுண்டாக எதிர்த்தவளவிலே, காலில் அழகைச் செய்கின்ற வீரக்கழலையுடையவனும், பெருமையிற் சிறந்தவனுமாகிய சீவகனுடைய பலம்பொருந்தியதேர், விசையுண்டாகும்படி சுழற்றிக் கையினால் வீசுகின்ற ‡ கொள்ளி வட்டத்தையும்,

---

* கொக்கரிப்பு - கோழி கொக்கரிப்பதுபோ லிடுஞ்சப்தம்.

† சீழ்க்கை - நாவின் நுனியை மடித்து ஒருவகையாக இடப்படும் சப்தம்; இது, 'சீட்டியடி,' என்று இக்காலத்து வாலிபருக் கிடையில் தப்பாக மருவி வழங்குகிறது; இவ்விருவகைச் சப்தமும் எதிரிகளை அவமதித்துச் செய்யப்படுவன.

‡ கொள்ளிவட்டம் - நீண்டகம்பியில் பந்தஞ்சுற்றி நெருப்பிற் கொளுத்தி வட்டமாகச்சுற்றும் ஒருவகைத் தொழில்.

* காற்ருடியையும்போல எல்லாத்திக்குகளிலும் விரைவாக ஓடி வட்டமாகச்சென்று வேடர் படையைவளைக்க, அத்தருணத்தில் சீவகனுடைய வீரர்கள் வீரத்தால் முழங்கினார்கள்; அதுகேட்டு வேடரும் வீராவேசமான வார்த்தைகளைக்கூறி ஆர்ப்பரித்தார்கள்; அப்பொழுது சீவகன், பின்னேதான் கட்டியங்காரனோடு செய்யப்போகும் போருக்கு நல்லநாள்பார்த்து முதல்நாள் போர்தொடங்கியதுபோல, முதலில் இப்போரை இந்த நல்லநாளில் தொடக்கஞ்செய்து, வேடர் தனக்கு நிகரில்லாதவ ரானபடியாலும், அரசாட்சி யில்லாததால் அவ் வேடர் தனக்குப் பகைவராகாமையாலும் அவ்வேடரை அஞ்சப்பண்ணிப் பசுநிரையைமாத்திரம் மீட்டுத் தன்னுடைய அருளையும் வீரத்தையும் வெளிப்படுத்தும் நோக்கத்தோடு சென்றவனானபடியாலும் அவ்வேடரைக்கொல்லுங் கருத்தில்லாதவனாய், ஆயுதப்பிரயோகஞ் செய்யாமல், அவர்கள் அஞ்சும்படி சண்டை நடத்துவதுபோல் நடித்து இளங்குமரர் தமக்குள்ளே படைவகுத்து விளையாடுவதை நிகர்த்து விளையாடினான். அப்படி விளையாடிய தருணத்தில் வள்ளற்றன்மையையுடைய அச் சீவகனது தேர் எல்லாப் பக்கங்களிலும் வளைந்து பலதேர்கள்போலச் செல்லும் முழக்கத்தாலும், அத் தேரோடிய விசையா லெழும்பி வளைந்த புழுதியினுடைய மயக்கத்தாலும் அவ்வேடர்கள், சக்கரத்தையுடையவனாகிய திருமால் ஏறிச்செலுத்தும் கருடபக்ஷி

* காற்ருடி - பனையோலைத் துண்டை நடுவில் துளைசெய்து முள்ளில் கோத்து அம் முள்ளின் நுனியில் காய்ந்த ஆட்டுப்புழுக்கையைத் தடையாகக்குத்திவைத்துக் காற்றுவாட்டத்தில் காட்டி அவ்வோலை சுழலும்படி செய்து சிறுவர்கள் விளையாடுவது; இக்காலத்தில் இதைக் காகிதத்தாலும் அழகாகத் தாமரை மலர்போலச் செய்வதுண்டு; இக் காற்ருடியைப் பாண்டிநாட்டுச் சிறுவர்களிடம் மிகுதியாகக் காணலாம்; இது, பட்டணத்துச்சிறுவர்கள் ஆகாயத்தில் பறக்கவிடும் காகிதப்படமன்று.

யின் சிறகொலியினாலே அரவம் மதிமயங்கிப் படத்தையொடுக்கி வீழ்ந்ததுபோல மன வூக்கங்குறைந்து, அடையிற்கிடக்குங் கோழிபோலச் செயலற்றுத் தம்முடையநெஞ்சிற் புகாமற் கைவிட்ட அறத்தைப்போல வீரத்தையும் கைவிட்டார்கள். அப்படித் தைரியமிழந்த வுடனே அவர்கள், வட்டமாக எல்லாத்திசைகளிலும் சென்று பலதேர்கள் போன்றுலவிய சீவகனது ஒற்றைத்தேரை அநேகம் வீரர்கள் அநேகம் தேர்களைக்கொண்டு வளைந்து போர் புரிவதாக நினைத்து, 'இவ்வளவு தேர்ப்படையோடு யுத்தம் புரிதல் அருமை; நாம் ஓடுவதே நலம்,' என்று ஒவ்வொருவரும் உறுதி கொண்டு தங்களுக்குள்ளே, "அரசன்படை கெட்டபின்பு ஒற்றைத்தேரே வருமென்று ஆந்தைப்பறவை கூறுவதாக இந்தப்புருத்தலைபோன்ற சிறிய தலையையுடைய வேடன் (அதாவது: தலைசிறுத் திருப்பதால் மூளையுஞ்சிறுத்து அதனால் அறிவுகுறைந்துபோன இந் நிமித்திக வேடன்) நமக்குச்சொல்லி, நிமித்தங்கூறுவதில் சரியாக ஆராய்ந்து பார்த்துக் கூறாமல் தவறிப்போனான்; இப்போது நம்மை அநேகந்தேர்கள் அளவற்றனவாக வளைந்தன; ஆதலால், இவ்விடத்தில் நாம் பசுநிரையைக் கைக்கொண்டு அடைவதான வெற்றிநமக்குக்கிடைப்பதரிதாகும்; இனி நாம் கடுமையாக, நம்முடைய ஊக்கத்தை ஒரு எழுப்பு எழுப்பி (அதாவது: ஒரு முறை ஊக்கத்தோ டெதிர்த்து எதிரிபடையைப் பின்செல்லும்படி கொஞ்சம் தள்ளிவிட்டு) நாமெல்லோரும் பிழைக்கும்படி, ஒருவருள்ளம்போல ஏகோபித்து ஓடி விடுவோம்; இப்போது இப்படை மேற் கூறியபடி சற்றுப் பின்வாங்கும்படி பாணங்களைச் செலுத்துங்கள்," என்று சொல்லி எல்லோரும் எதிரேறிச்சென்று, அவர்களைக் கொல்லாமல் அவர்களுடைய உயிரை அவர்களுக்குத் தானமாகக் கொடுத்த வள்ளலாகிய சீவகன்மேல் மிக்கமுழக்கத்தோடு பாணமழையைப் பொழிந்தார்கள்.

அவ்வாறு அவர்கள் பாணங்களைச் சொரிந்த மாத்திரத்திலே, பெருமைபொருந்திய மலையில் தொடங்கிப் பெய்ததும், கரிய நிறத்தையுடையதுமாகிய கார்காலத்து மழையைக் காற்று கல்லென இரைந்துகொண் டெழுந்து சிதறும்படி அடித்த தன்மைபோலச், சீவகனாகிய இராஜபுத்திரன், தன்கைவில்லாலே தான் சொரிகின்ற அம்புகளை எதிரில் வரிசையாகத் தொடுத்துத் தன்மேல் வரிசைபடவெழுந்துவந்த அவ்வேடரது வெவ்விய நுனியையுடைய பாணமழையை விலக்கினான். இவ்விதமாகத் தனது வில்லிடத்தே பொருந்திய கடியபாணங்களைத் 'தொடுத்து அவர்களுடைய பாணங்களை விலக்கிய மாத்திரத்திலே, வேடர் சற்றுத்தளர்ந்தபடியால், அத்தருணங்கண்டு சீவகனுடைய வீரர் திருப்பப் பசுநிரை இந்தப்பக்கத்திற் றிரும்பியது; அதைக்கண்டு சந்தோஷ மிகுதியால், இடையர்கள் களிப்பான சப்தமிட்டு முழங்கினார்கள்; அத்தருணத்தில் நிரையைக் கைவிட்ட வேடர்கள் ஒருபக்கத்தில் திரண்டார்கள்; அவ்வாறு திரண்டவுடனே கொல்லாமல் அக் கூட்டத்தைக் கலைக்கும் பொருட்டுப் பாணங்களையேவுதற்குச் சீவகனுடைய அழகைச் செய்யக்கூடியதும், பலம்பொருந்தியதுமாகிய ஒருதோள் முடங்கிற்று; மற்றொருதோள் நீண்டது; (அதாவது: பாணங்களை வில்லிற்றொடுத்து இழுத்துவிடுகின்ற வலக்கையின்தோள் முடங்கவும், வில்லைநீட்டிப் பிடிப்பதாகிய இடக்கை விறைப்பாக நீளவும் பாணங்களைப் பிரயோகித்தான்.) அப்பொழுது ஒப்பற்ற வில்லையுடையவர்களாகிய அவ்வேடர்மேல், சீவகனேவிய பாணங்கள் ஆகாயத்தினின்றும் பெய்கின்ற மழையைப்போலத் தாரையாய் நிறைந்து நின்றன. அவ்வாறு பெய்கின்ற மழையைப்போல மேலே நிறைந்து நிற்கும்படி, தனித்தனியே அவ்வேடருடைய பலதேகங்களைச் சிதைத்தழிப்பவைகளும், வெவ்விய சூர்ப்பக்கத்தை

யுடையவைகளுமாகிய அநேகம் பாணங்களை ஜீவகன், அவர்களது உயிர்க்குச் சேதமின்றிச் சொரிந்து பயமுறுத்தி அதன் மேல், ஐம்பத்தாறுயிரம் பேர்களாகிய அவ்வேடர்கள், தங்கள் கையி லுள்ளவைகளும், எதிர்த்துவந்த பிறரைக் கொல்லத் தக்கவைகளுமாகிய விற்களையும் பாணங்களையும் அஞ்சிக் கிழேபோடும்படி செய்தான்; அவ்வாருகவே அவ் வேடர்க ளெல்லோரும், மையாகிய சுண்ணத்தையணிந்த (அதாவது: தூள்ரூபமா யிருக்கின்ற அஞ்சனத்தை யணிந்த) வேல்போன்ற கண்களையுடைய ஸ்திரீகளது மனம் உறுதியின்றி நோக்கிய விடத்தில் மிக்க விரைவாகச் செல்வதுபோல மனவுறுதிகெட்டு அக் காட்டிலே தாங்கள் குறித்த விடத்திற்கோடி ஒருகணப்பொழுதில் மறைந்தார்கள்.

வேடர்கள் மேற்கண்டபடி ஆயுதங்களைப் போட்டுத் தோற்றேடி மறைந்தவுடன், சீவகன் நிரையைமீட்டுத் திரும்பினுன்; இராகு வென்னும் கிரகமாகிய கரும்பாம்பினுடைய வாயிலகப்பட்ட சந்திரனை நெடியோனுகிய திருமால் அதனினின்றும் வெளியாம்படி மீட்டதுபோல, அவ் வேடர்மீது வாளாயுதத்தினு லேற்படும் தழும்புமில்லாமல், ஆராய்ந்தெடுக்கப்பட்ட வெவ்விய பாணத்தின் வாயாலேற்படும் தழும்பு மில்லாமல் தன்தோளிலே பொருந்திய வில்லினெலியைக்காட்டி அவர்களை அஞ்சியோடும்படி செய்து அதனுலேயே பசுநிரையை இவ்வாறு மீட்டுக்கொண்டு திருமபியவனுகிய இச் சீவக குமாரன், இத்தருணத்தில் எப்படியிருந்தா னெனில், நாடோறும் தான்கற்ற கலைத்திரங்களை யெல்லாம் படிப்படியாகக் காட்டிவந்து முடிவாக இந்நாளில் இந் நிரை மீட்டதைக்கொண்டு தன்வல்லமை முழுதையுங் காட்டினமையால், ஒவ்வொரு திதியிலும் கலைகள் வளர்ந்துகொண்டே வந்து பௌரணமி என்னும் தினத்தன்று பூரணமாகப் பதினுறுகலைகளும் நிறைந்து

மிக்கபிரகாசத்தோடு விளங்கும் வெண்மையான சந்திரன் செல்வதை நிகர்த்தான்.

இப்படி இவன் செல்ல, நிரைமீட்ட விசேஷத்தை யறிந்த சிலர் விரைந்தோடிக் கட்டியங்கார னிடத்தில், "மலர்ந்த புஷ்பங்களாற் ருெடுக்கப்பட்ட மாலையையணி ந்தவனுகிய சீவகன், தன்னுடைய தோழருடனே சென்று, இருவகைப்படையிலும் ஆட்சேத மொன்று மில்லாமல், முன்னே நம்படையை அடித்தோட்டிய வேடரால்கொள் ளப்பட்ட நமது நந்தகோனுடைய பசுநிரையை மிக்க உபாயத்தோடு மீட்டுவிட்டான்," என்று கூறினுர்கள். அவ் விதம் கூறவே தனக்குக் கெட்டநாள்வந்து பொருந்த அதனுலே மதிகெட் டிருக்கின்றவனுகிய அவன், "நம்மு டைய படைபோய் மோதி ஜெயிக்க முடியாமல் தோற் ருேடி வந்ததன்மேல் ஒரு செட்டிமகன் கெட்டித்தன மாய்ச் சென்று வெற்றிகொண்டுவந்தா னல்லவா!" என்று பொருமைகொண்டு அதை வெளிக்காட்டாமல், வாள்பட் டதனு லுண்டாகிய புண்ணுள்ளே கூர்மைதங்கிய வேலா யுதத்தை எறிய அதனுலே ஒருவன் மனம் இற்றதுபோ லத் தன்மனத்திற்குள்ளே அழற்சியை யடைந்தான். நக ரத்திலுள்ள மற்றஜனங்க ளெல்லோரும் சீவகன் வெற்றி யைக்குறித் தேற்பட்ட சந்தோஷ மிகுதியால் இச்சீவக னைப் புகழ்ந்து எவ்விடத்தும் முழங்கினுர்கள்.

இதற்குள் சீவகன், தான்திருப்பிய நிரையை இடை யர்கள் வசப்படுத்திவிட்டுத் தன்னைச்சேர்ந்த வீரருடன் இராஜமாபுரத்திற் புகுந்து வீதிவழியாக வெற்றி விளங் கச்சென்ருன். அப்படி இவன் செல்கின்ற தெருவிலே, கற்புடைய பெண்கள், தாங்கள் வாசஞ்செய்வதும், சூரிய மண்டலம்வரை உயர்ந்து சென்று அச்சூரியனையுந்தொ டக்கூடிய கொடிகளைக் கொண்டிருப்பது மாகிய மாளிகை யிலே, இச்சீவகனுக்கு மகிழ்ச்சிசெய்யும் பொருட்டு வாச

னைப்பொடிகளைக் கலந்து இடப்பட்ட தீம்புகையை எங்கும் பரவும்படி புகைத்து, அழகிய பூமாலைகளை வரிசையாகத் தொங்கக்கட்டி, வாசனை வஸ்துக்கள் கலந்த சந்தனக்குழம்பு முதலியவற்றை எங்கும் தெளித்து, இப்படியே இன்னும் பல சிறப்புக்களையுஞ் செய்து அலங்காரப்படுத்தித் தாமும் இவனுக்கெதிரே மங்கலமாகத்தோன்றும்படி மணமிகுந்த மலர்மாலையை யணிந்து வாயிலில் வந்து நின்று, அரவவடிவம் மேலே எழுதப்பெற் றுயர்கின்ற கொடியை யுடையவனாகிய துரியோதனனுடைய கணக்கிலடங்காப் பெரும்படையைக் கெடும்படி சிதைத்து வெற்றிகொண்டவனும், புரவிகள் பூட்டிய தேரையுடைய குமரனுமாகிய அருச்சுனனை நிகர்த்த இச் சீவககுமரனைப் பார்த்து, அளவில்லா மகிழ்ச்சிபொங்கி, இத்தகைய வீரன் நெடுநாள் உயிர்பெற்று வாழ்ந்திருப்பின் உலகினுக்குப் பெரும்பயனுண்டா மாதலின், இவன் நீண்டகாலம் உலகில் சிறப்போடு விளங்கவேண்டு மென்று மனவுறுதியோடு நினைத்து, "ஐய! நீ மிக்க சீர்த்தியைப் பெற்றுப் பொலிவோடு எண்ணிறந்த காலம் வாழ்வாயாக; உன்பகைஞ ரெல்லோரும் அடியோடு ஒழிக; உன்னால் இப்பேருலகினுக்குச் சீருண்டாவதாக," என்று வாழ்த்தி, இவனுக்கு நீண்ட ஆயுளைக்கொடுக்கும்படி தெய்வத்தைப் பிரார்த்தித்தார்கள். இக் கற்புடைமாதரன்றி, இனிய அமுதத்தை யொத்ததும் சிவந்ததுமாகிய வாயையும், இளங்கிளியினுடைய மழலைச்சொற்களை நிகர்த்த அழகிய சொற்களையும், பொன்னினுடைய பிரகாசம் விளங்குகின்ற தேமல்படர்ந்தனவும் வளர்கின்ற இளமை பொருந்தியனவுமாகிய பயோதரங்களையும் உடையவர்களாகிய மற்ற பெண்களிற்சிலர், இளம் பருவத்தையுடைய இச்சீவக குமரனைக் காணவிரும்பி, மின்னின் தன்மை பொருந்திய தங்களுடைய இடைதுவண்டு வருந்தும்படி வீடுகளைவிட்டு

வெளியிலோடி அன்னங்களும், மயில்களும் வரிசையாக நின்றாற்போல அவ்விராஜமா புரமென்னும் அழகிய நகரத்தின் வீதியைத் தங்களுக்கு இடமாகக்கொண்டு நின்றார்கள்; இன்னும், செல்வத்திலே தங்கித் தமக்குரியாரோடு கலந்து உறவாடுதலாகிய போரைச்செய்யும் * மன்மதன் சேனையாகிய பலமாதர்கள், தங்களுடைய ஒலிபொருந்திய பருக்கைக் கற்களையுடைய பாதச் சிலம்பென்னும் வலியவார்க்கட்டுள்ள சிறுபறைமுழங்க, முக்கிய அவயவங்களாகிய தேரையும் குதிரையையும் அலங்கரித்துப்பூட்டி (அதாவது: அவயவங்களை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு) நல்ல அழகுபொருந்தியனவும் நீண்டனவுமாகிய கண்களைப் பாணங்களாகக்கொண்டு, புருவமாகிய வில்லைப் பூரணமாக வளைத்துப் பெருமையிற் சிறந்தவனாகிய இச்சீவகன்மேலே, இவனுக்கு ஆசையைத்தூண்டி மனங்கலங்கச் செய்தலாகிய போரை நடத்துவதற்கு முன் வேடர்படை நீங்க மற்றொருபடை யெழுந்தது போல எழுந்தார்கள்; (அதாவது: அவயவங்களை அலங்கரித்துக்கொண்டு வேட்கை நிகழும்படி ஆசையோடு தங்கள் பார்வையைச்செலுத்தி இச்சீவகனைப் பார்க்கச் சென்றார்கள்); பின்னும் நூல், சமமாகும் பொருட்டு எதிர்த்தற்கரியதும், நுண்மை பொருந்தியதுமாகிய இடைதளரும்படி வளர்ந்து அடிபரந்து தளராது நிலைபெற் றிருப்பனவும், விருப்பந்தங்கிய கண்களையும் பிரகாசத்தையு முடையனவுமாகிய பயோதரங்களைக்கச்சினால் இறுக்கிக்கட்டி, வீணையின் நரம்பைத்தடவி வாசிப்பதனாலே அந்நரம்புகள் அழுத்த அதுகாரணமாகச் சிவந்ததும், அழகுதங்கியதுமாகிய விரலாலே சீவகன்மேற் போடுதற்கு எடுத்த மாலையைத் தாங்கி, இச்சீவகன் வரவைநோக்கி, மேல்மாடங்களில்

* போகநுகர்ச்சியுள்ள மாதர்களை மன்மதன்படை யென்றல் மரபு.

கண்ணிமையாது பார்த்துக்கொண்டு நின்ற சிலமாதர்கள், தேவலோகத்தில் வசிக்கின்றவர்களும், இமையாநாட்டம் பெற்றவர்களுமாகிய தெய்வமகளிரை நிகர்த்து விளங்கினார்கள்; இன்னும், நெஞ்சும் இடையும் சுருங்கிக் குறைந்துபோகும்படி அடிபரந்தெழுந்து வளர்ந்து இன்பத்தையும் தேமலாகிய பொருளையும் தோற்றுவித்தனவும், செறிவுற்றனவுமாகிய குயங்கள் பொருந்திய மார்பகம் ஒருபாதியே தோன்றவும் மற்றொரு பாதிமறையவும் ஒருவர்பின் ஒருவராக நின்று சீவகனை நோக்கியவர்களும், வேலாயுதத்தையும் நீலோற்பல மலரையும் நிகர்த்து நீண்ட கண்களை யுடையவர்களுமாகிய சிலமாதர்கள், தங்களுடைய தேகம் பாதிதோன்றி மெல்லியவடிவமா யிருப்பதனாலே, நாகலோகத்தை விட்டுப் புறப்பட்டுச் சீவகனைப் பார்த்தற்பொருட்டு இராஜமாபுரத்தின் வீதியிலேவந்து கூடியவர்களும் நாகர்களுக்குரியவர்களுமாகிய நாககன்னியரை நிகர்த்துத் தோன்றினார்கள். இப்படி இவர்களெல்லோரும் கூடி மிக்கவிருப்பத்தோடு பார்க்கும்போது, ஒளிபொருந்திய அரத்தினாலே அராவிக் கூர் செய்யப்பட்ட கூர்மை பொருந்திய இரண்டு வேலாயுதங்கள், தமக்குள்ளே ஒன்றோடொன் றெதிர்த்துப் போர்செய்யும்போது இடையில் ஆட்செல்ல முடியாததுபோல, எதிரே ஆடவர்கள் நடமாடுந்தன்மை நீங்கும்படி (அதாவது: நேரில் ஆடவர்போகாதபடி), இணையிணையாகச் சேர்ந்து ஒன்றோடொன்று போர்செய்வதை நிகர்த்துப் புரண்டு தம்மைப்பார்க்குங் குமரருக்கு விருப்ப மிகுதியா லேற்படுந் துன்பத்தை யுண்டாக்கி நீண்டு விளங்குகின்றனவும், அழகிய நீலோற்பல மலர்போன்றனவும், விசாலம் பொருந்தியனவுமாகிய அப்பெண்களுடைய கண்களெல்லாம் ஒன்றாகக்கூடி, ஒரே தன்மையை யுடையனவாய், நீண்ட சூரியன் செல்லுகின்ற வழியையே நோக்கி முகமலர்ந் திருக்கின்ற வரி

சையான இதழ்களையுடைய நெருஞ்சி மலர்கள்போல, நிரைமீட்டு ஜெயத்தோடு செல்கின்ற இச் சீவக குமாரனுடைய தேர் செல்கின்ற வீதியிலே விருப்ப மிகுதியால் அத்தேரையே நோக்கி ஒருமிக்க நெருங்கின; இன்னும், மேற்கூறிய பெண்களெல்லோரும், மற்றநாளில் அலங்கரிப்பதைக் காட்டிலும் விசேஷமாக அலங்கரித்த அலங்கரிப்போடு அன்றைக்குச் சீவகனைப் பார்க்கும் நிமித்தம் ஆங்காங்கே உப்பரிகைகளில் கூடியிருந்தமையால், மேற்போர்வைகளும், இடையிலணியும் வஸ்திரங்களும், காதணிகளாகிய * தோடுகளும், † குழைகளும், பூவாரங்களும், இரத்தின பாரணங்களும், முத்தா பரணங்களும், கைவளைகளும், மற்ற ஆபரணங்களும் தங்களுடம்பிற் சேர்ந்து, அவற்றின் கிரணமிகுந்த ஒளிகள் ஒன்றாகக்கலக்கும்படி, அவற்றை யணிந்த சிலமின்னல்களை வரிசையாக நிறுத்தினாற்போலப் பழமையான ஊராகிய அவ்விராஜமாபுரத்திலுள்ள பலவகைக் கூறுபாடான தெருக்களில் அமைந்திருந்த அம் மேல் மாடங்களெல்லாம் உயர்ந்த அவயவ அழகையுடைய அப்பெண்களையே தோற்றுவித்துக் கொண்டிருந்தன; (அதாவது: மேலிடங்களெல்லாம் மின்னலைநிகர்த்த பெண்களே நிறைந்திருக்கும்படி விளங்கின.)

இவ்வாறு கூடி யிருந்தவர்களுள், ஆசைமிகுந்தொழுகத்தக்க (அதாவது: ஆசை அதிகரிக்கத்தக்க) மயிலைக் காட்டிலும் சிறந்த அழகுவாய்ந்தவர்களும், அழகிய குயங்களையுடையவர்களும், அமுதத்தை நிகர்த்த இனிமை வாய்ந்தவர்களும், மேகலாபரணத்தை யணிந்த இடையையுடையவர்களுமாகிய சில பரத்தைப்பெண்கள், சீவகன் மேற்கண்டபடி வெற்றியோடு செல்வதைப்பார்த்து, முறைமையாக மங்கலவாழ்த்துக்கூறி, "ஆணிற்சிறந்த சீவககுமாரனே! நீ அழகோடு செல்வாயாக," என்பாரும், "இப்

* தோடு - காதோலை. † குழை - குண்டலம்.

பூமியின் ஆளுகையும் உனக்குச் சொந்தமாகச்சேர்க," என்பாரும், இவன்மேல் அதிகரித்து விழுவதால் இவனுக்குச்சிறிது வருத்தமுண்டாக எவ்விடத்தும் வாசனைப்பொடியைச் சொரிந்தும் குளிர்ச்சிபொருந்திய மகரந்தம் உதிர்கின்ற மாலைகளை வீசியும் வாசனைச்சாந்தைக் கைக்கொண்டெறிந்தும் நிற்பாரும், பக்கத்தில் நிற்கும் பெண்ணைப்பார்த்து, "கட்டுதலையுடைய அழகிய மாலையையணிந்தவளே! 'கேட்டதை இல்லையென்னுமற் கொடுக்குங்கொயில் சிறந்தவன் கன்னன் ஒருவனே; கொல்லுகின்ற எமனைப்பார்க்கிலுங் கொடிதாகிய வாட்போரைச் செய்கின்ற படையில் வெற்றிபெற்றுச் சிறந்தவன் அருச்சுனன் ஒருவனே; இவ்விரண்டும் ஒருவனிடத்தே நில்லா,' என்று வழங்குங்கூற்று, நற்பயன் விளங்குகின்ற ஆராய்ச்சியையுடையவர்களும், நுட்பமான நூலொழுங்குள்ளவர்களுமாகிய பெரியோர்கள் சொன்ன மொழியாகும்; அதன்படியே கொடைத்திறமும் படைத்திறமும் ஒருவனிடத்தில் அமைவது அருமை; அப்படியிருந்தும், அவ்விரண்டையும் நமக்குச் சிறந்தவனாகிய இச் சீவகனிடத்தே கண்டோம்," என்று சொல்லி இவனைத் தொழுது நிற்பாரும், "உலகமெல்லாம் போற்றத்தக்கவனா யிருத்தலின், பெருமையிற் சிறந்தவனாகிய இவனைப்பெற்ற நற்றாய், செய்யப்பட்ட தவம் நிறைந்தவள்," என்பாரும், "இவனைக்கணவனாக அடையப்போகின்ற உத்தமஸ்திரீ, எந்தமலையிலேயிருந்து இவனைப்பெறும்படி அரியதவத்தைச் செய்தாளோ! அஃது எவ்வளவு கடுமையை யுடையதாயிருப்பினும் நாமும் இவனை இந்தஜென்மத்தில் பெறவிட்டாலும் அடுத்த ஜென்மத்திலாவது பெறுமாறு அத் தவத்தைச் செய்தற்கு அதன்வழியிலே சார்வோம்," என்று சொல்வாரும், இன்னும் இவனை விரும்பிப்பார்த்து, வேட்கைமிகுதியினாலே நெஞ்சுலர்ந்து, அவ்வாறு இவனிடத்

தேகொண்டதும், மிக்க சிறப்புள்ளதுமாகிய தம்முடைய வேட்கை நோயைத் தம்தோழியிடத்திற்சொல்லி நிற்பவரும், இவனைநோக்கி, "பகைவரை வென்ற செல்வனே! எம்மீது கிருபைசெய்து நாளை எங்கள் கனவினிடத்தே வந்து செம்மையாகிய மலர்மாலையை யணிந்த உன்மார்பகத்தை யாங்கள் காணும்படி காட்டுவாயாக," என்பாரும், தாம்கூறும் வார்த்தை யொன்றையுங் கேட்பா ரில்லாமையால் மயங்கிநின்று, தாம் இவனிடத்தே விரும்பும் அனுபவங்களைத் தங்களுடைய மனத்தோடு சொல்வாரும், இன்னும் இவனுடைய அழகு முழுவதையும் நோக்கி, "பெருமையிற் சிறந்தவனாகிய இச்சீவக குமாரனுக்கு மண்ணுலகத்திலுள்ள இம் மனிதர் எந்தவகையினாலும் நிகராக மாட்டார்; ஆதலால், வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய இக்குரிசிலை நிகர்ப்பவர்கள் விண்ணுலகத்திற்றானிருப்பார்களோ? அதையும் நாம் அறியேம்," என்பாரும், வீணையிசையின் இனிமைத் தன்மை தன்னிடத்தே தங்குகின்ற சொல்லையுடையவர்களாகிய இவ்வுலக மாதர்கள், இங்குக்கிடைக்காத இவனுடைய நல்ல அழகைக்கண்டு அனுபவிக்கும் பொருட்டு, இந்த அண்ணலைத்தாம் செய்த தவத்தாலே பெற்றவர் தேவரோ! மனிதரோ! மற்றியாவரோ! அவர் எவராயிருந்தாலும் உலகத்தாரெல்லோராலும் மிகவும் விரும்பத்தக்கவ ராவார்," என்பாருமாகி, முழந்தாளளவாக உடுக்கும் * வட்டுடையை அணிந்து விளங்கும் வீரரடங்கிய சேனையை யுடைய இவ்வள்ளலாகிய சீவகனை அவ்வீதியில் வரக்கண்ட மாத்திரத்திலேயே, வேட்கையாகிய திரண்ட அக்கினியானது தங்கள் தேகத்தூடுநின்று எரிய, அதனாலே காய்ச்

* வட்டுடை - வீரர் முழந்தாளளவாக உடுக்கும் ஒருவகை உடை; இதனைச் சல்லடமென்றும், குறுங்காற் சட்டையென்றும் இக்காலத்தவர் கூறுவர்; பூசாரிகளும், கரகமெடுத் தாடுவோரும் கூட இதனை யணிவதுண்டு.

சிய அரக்கை நிகர்த்ததும், சிவந்ததுமாகிய வாயழகின் நலம் கருகின்றார்கள்; அப்படி நின்றவர்கள், பின்னரும் ஆசை அதிகரித்துத் தேகமெலிதலின், இடையி லணிந் திருந்த பட்டாடையின்மேல் தரிக்கப்பட்டு விளங்கிருந் தமேகலை, கழன்று பஞ்சுபோன்ற மெல்லிய பாதங்களில் விழுந்து அவற்றைச்சூழவும் கைகளில் அணியப்பட்டிரு ந்த அழகிய வளையல்கள் கழன்று அம்மேகலையின்மேல் விழவும் மெய்சோர்ந்தார்கள்.

அப்படி நிற்கும்போது அவர்களைக் கடந்து ஆணிற் சிறந்தவனாகிய சீவகனுடைய தேர் அப்பாற்செல்ல, அத் தேருக்குப் பின்பக்கத்தில் நின்றவர்களும், கச்சுமேலே போகப்போக வளருகின்ற அழகுபொருந்திய குயங்களை யுடையவர்களும், முன்னே வளையல்கள் கழலப்பெற்றவர் களுமாகிய அம் மாதர்கள், அத் தேர் மறையுமளவும் பார் த்துநின்று, அவனுடைய அழகு தங்களுடைய கண்ணுக் குத் தெரியாமல் மறைந்து போகப்போக, அவனைத்து தித்து இரண்டு கைகளையும் மேலே தூக்கித் தொழுது அக் கைகளைக் கீழே தொங்கவிட, அப்போது அக் கைகள், முன்னிலும் அதிகமாக மெலிவுற்றபடியால் முன்னே வளை யல்களை யிழந்ததன்றி, அவ்வளையல்களுக்கு மேற்புறத்தில் அவை நழுவாதபடி அவற்றிற்குக் காவலாகவும், நெருக் கமாகவும் இடப்பட்டிருந்த * தொடிகளும் நிலத்தில் கழ ன்று பலவிடங்களில் விழும்படி அவற்றைச் சிதறிச்சொ ரிந்தன; பின்பு அவனுடையதேர், அப்பால் செல்லுகின்ற வீதியிலே அவ்விடத்து நின்று பார்க்கும் சில பெண் களுக்கு வேட்கையால் உடம்பில் பசப்புநிறம் பரவும்படி சென்றது. அப்படி ஆங்குச்சென்ற மாத்திரத்திலே அவ்

* தொடி - வளையல்களுக்குக் காவலாகப் பக்கத்தில் நெருக் கமா யிடப்படுவது; இதனை இக்காலத்துப் பெண்கள் கங்காண மென்று கூறுகின்றார்கள்.

விடத்தில் மேற்கூறியவாறு பசப்புப் பரவப்பெற்று நின்ற மாதர்கள், தங்களுடைய தோளடியிலுண்டான அப்பசலை நீரும்படி அதற்கு மருந்தாகப் பெருமையிற் சிறந்தவனாகிய அச் சீவகனுடைய அழகைப் பருகுகின்றவர்போல, ஒளிபொருந்திய முகத்திலே மலர்ந்த மலர்போலும் குளிர்ந்து விளங்குகின்றனவும், விசாலமுள்ளனவுமாகிய தங்கள் கண்களாலே வளைத்து அவனைப்பார்த்து, வேட்கை மிகுதியால் நடுங்கினவர்களாய், நாணமாகிய முதன்மைபெற்ற தளை தடுத்தலாலே, அவனுடன் செல்லமாட்டாமல் நிற்க, கொலைபொருந்திய முகத்தையுடைய புலியோடு வீரத்தில் நிகராவோனாகிய அச் சீவகன், அங்குச் சிறிதும் நில்லாது சென்று, செழித்த திரவியத்தை யுடையதும், மதிலாற் சூழப்பட்டதுமான கந்துகன் மாளிகைக்குள்ளே புகுந்தான்.

அவ்வாறு புகுந்த மாத்திரத்திலே அவனுடைய தேரிற்பூட்டிய குதிரைகள், பொன்னாலாகிய அத் தேர்நுகத்தால் தொடுக்கப்பட்டிருந்த தொடுப்பைவிட்டு நீங்கி (அதாவது: தேரினின்றும் அவிழ்த்துவிடப்பட்டு)த் தாங்கள் நிற்குமிடமாகிய குதிரைச் சாலையிலே புகுந்தன; அதன்மேல் இரத்தினவட்டில் நிறைய இனிய மதுவை வார்த்து, அம் மதுவாகிய பலியையும், புஷ்பத்தையும், சந்தனத்தையும், விளக்கையும் மங்கலமாக முன்னே ஏந்தித் தேருக்கு வழிபாடுசெய்யப், பிரகாசிக்கின்ற அத் தேரானது, மின்னலைச் சொரிகின்ற செம்பொன்னாற் கட்டப்பட்ட தேர்ச்சாலையிலே புகுந்தது. பின்பு, ஆயிரத்தெட்டுப் பெண்கள் நெருங்கிச், சாமரை, தீபம், பொன்னாற் செய்த நிறைகுடம், இணைக்கயல், கண்ணாடி, தோட்டி, * கதலிகை, வெண்முரசு என்னும் அஷ்ட மங்கலத்தையுமேந்தித் தங்களுடைய தெற்றிப்பட்டமும், காதுகளி லணியப்பட்ட குண்டலங்களும் மின்னவும், மற்ற அவயவங்

* கதலிகை - துகிற்கொடி.

களி லணியப்பட்ட பல ஆபரணங்கள் சப்திக்கவும், தேக த்தி லணியப்பட்ட உத்தரியம், தன்னுடைய பாரத்தால், மென்மையான இடையையும் பிடரையும் வருத்தவும் எதிர் கொண்டு சூழ்ந்து, தேனொழுகுகின்ற மலர்மாலையை யணிந்த சீவகனை மாளிகைக்குள்ளே அழைத்துக் கொண்டு சென்றார்கள். அவ்வாறு சீவகன் உட்புகுந்தவுடனே, அவனை வளர்த்த தாயாகிய சுநந்தையும், அவன் உயர்ச்சி யிருந்து வளர்வதற் கேதுவாயிருந்த தந்தையாகிய கந்துக னும் உடனே, வீசுகின்ற கிரணங்களால் அழகைச்செய் யும் வெள்ளிய வேலையுடைய தங்கள் பிள்ளையாகிய அவனை எதிர்கொண்டுவந்து சமீபத்திற்புகுந்து, அவனுக்கு ஆல த்தி முதலியவற்றாலே திருஷ்டி பரிகாரஞ்செய்து தீங்கு வாராமற் காத்து, அவன் வெற்றிபெற்று வந்ததைக் குறித் துக், கிரணங்களைச் சொரியக் கூடியனவும், ஆராய்ந்தெடுக் கப்படுவனவுமாகிய பசிய ஆபரணங்களை யணிந்தவனும், ஆயிரம் சிவந்த கண்களை யுடையவனுமாகிய இந்திரனுக்குச் சொந்தமானதும், எப்பொழுதும் தன்னிடத்தே வசிக் கின்றவர்க்கு இளமையா யிருக்குந்தன்மையைக் கொடுப் பதனால் உயர்ச்சிபெற்றதுமாகிய தெய்வலோக பதவியை அடைந்தது போன்ற ஒப்பற்ற களிப்பை யடைந்தார்கள்.

இவர்கள் இப்படியிருக்க, நந்தகோன், சீவகன் வெற்றி கொண்டு பசுநிரையை மீட்டியதற்காகத் தான் முரசறைந் தபடி தன்மகளை அவனுக்குக் கொடுக்கவேண்டுமென்னும் கருத்துடையவனாய், அவ் விஷயத்தை அவனிடம்சென்று, தெரிவிக்க நினைத்தான்; அப்படி நினைத்தவனும், கூட்ட மிருந்த பசுநிரையை ஆள்கின்றவனும், வளப்பம் பொ ருந்திய முல்லைமாலையை யணிந்தவனும், பெருமையிற் சிறந்தவனுமாகிய அந் நந்தகோன், தான் சந்திரனைக்கண்ட மாத்திரத்தில் கெடக்கூடிய ஜாதியிற் சார்ந்திருந்தும் அத ற்குக் கெடாமல் மலர்ந்திருந்து, தன்னுடைய அழகிய

வடிவத்தினாலே, நெருங்கிய அச்சந்திரனுடைய அழகை யே கெடுக்கத்தக்க உயர்ச்சிவாய்ந்த தாமரைப் பூவின் நடுவாகிய அழகிய இடத்திலே வீற்றிருக்கின்றவளும், நுனியிலே புகைகின்ற நெருப்பின் தன்மை சேர்ந்தன வாகிய வாளாயுதங்கள்போன்ற கண்களை யுடையவளும், பொன்போன்ற நிறத்தை யுடையவளுமாகிய இலக்குமி சேர்ந்திருக்கும்படி, நீண்ட தன்மைமிகுந்ததும், மலைபோ ன்றதுமாகிய மார்பையுடைய வள்ளலாகிய அச் சீவக னைக் கண்டு, "ஆண் தன்மையிற் சிறந்த வீரரே! இப் போது கேடு விளைந்திருக்கின்ற இந்த ஏமாங்கதநாட் டுக் கிறைவராகிய சச்சந்தமன்னர் தமது மனைவியரும், விஜயை யென்னும் பெயரை யுடையவரும், மணக்கின்ற பூங்கொம்பை நிகர்த்த அழகுவாய்ந்தவருமாகிய தேவி யாரை விரும்பி, அவ் வம்மையினுடைய சேர்க்கை யின்ப மாகிய வலையி லகப்பட்டு, இராஜ காரியங்களைக் கவனிக்க முடியாமல், இராஜ்யபாரத்தை யெல்லாம், இப்போ திருக் கின்ற தமது மந்திரியாகிய கட்டியங்காரனிடம் சேர்த்து, இவனை அரசு நடத்திவரும்படி செய்து, தாம் அந்தப் புரத் திலேயே யிருந்து, முடிவில் மகா கொடியனாகிய இக் கட் டியங்காரன் அரசை அபகரிக்கும் சித்த முடையவனாய் எல்லோரையும் தன் வசப்படுத்திக்கொண்டு போருக் கெழ, அத் தருணத்தில் பூரணகருப்பமாயிருந்த தம் மனை வியாராகிய விஜயைமாதேவியாரை மயில் எந்திரத்தி லேற்றிப் பிழைத்தோடும்படி அனுப்பிவிட்டு, இவனுடன் தாமாத்திரம் தனித்து யுத்தம்புரிந்து, துணையில்லாக் காரணத்தால் இப் பாதகனாகிய கட்டியங்காரனால், இரு வினையுஞ் செய்தற்குக் காரணமாகிய உயிர்போக்கப் பட் டார்; (அதாவது: கொல்லப்பட்டார்;) அப்படி அவர் இறக்க, அவருடைய செங்கோலானது அவர் கையினின் றும் நவறி இக் கட்டியங்காரனிடம் சேர்ந்த அன்றே,

நம்முடைய மன்னர் இறந்த வருத்தத்தால் அவருடனே இறக்கத் துணிந்தேன்; அவ்வாறு துணிந்தவன், 'நாம் அரசருக்காகவே உயிரைவிட்டோ மென்பதைக் கட்டியங் காரன் உணர்ந்தால் பின்னர் நம் குலத்தவரையெல்லாம் நாசம்செய்வான்; ஆதலால் அப்பழிவிளையாமல் வேறொரு காரணத்தால் உயிர்விட்டதுபோலக் காட்டி யிறப்பதே நலம்,' என்று முடிவுசெய்து, உயர்ந்த சிகரத்தையுடைய ஒரு மலையின்மீதேறி அதனின்றும் கால்வழுக்கி வீழ்ந்த வன்போன்று வீழ்ந்து என்னுடைய கரிய தலையை உடைத்துக்கொண்டு சாகத் தொடங்கினேன். அப்படி யெண்ணியும் மீண்டும், 'அரசர் மனைவி தவறிப்போ யிருப்பதால் அவர் கருப்பத்தில் புத்திர ருதிக்கும் பக்ஷத்தில் அப் புத்திரர்வளர்ந்து எப்படியும் இக் கொடியனைக் கொல்லுதல் கூடும்; அக்காலத்தில் நாம் உயிரோ டிருந்தால் அதைக் கண்டு களித்துத் திருப்தியடைந்து, அப் புத்திரருடைய குளிர்ந்த குடை நிழலின்கீழ் வாழலாம்; ஆதலால், இப்பொழுது உயிர்துறத்தல் கூடாது; பக்ஷிகள் மரத்தில்வந்து ஒரு பழத்தைக் கௌவிக்கொண்டு நெடுந்தூரத்திற் சென்று வேறோரிடத்தில் உண்ண அத் தருணத்தில் சிதறி விழுந்து மறைந்திருந்து ஒரு மரமாகத் தோன்றும் ஆலம்வித்தைப் போன்றதும், இப்போது தாய் கருப்பத்திலேதங்கி மறைந்து வேற்றிடம் சென்றிருப்பதும், திருமாலை நிகர்த்த நம் சச்சந்த மகாராஜருடைய சந்ததியுமாகிய அக்கரு, ஆணாகத் தோன்றுவது இல்லாமற் போயின், (அதாவது: ஆணாய்ப் பிறக்காவிடின்) அதன்மேல் நம் வாழ்நாளை முடித்துக்கொள்ளலாம்,' என்று எண்ணி, அப்பொழுது போவதற்கு ஒருப்பட்டு நின்ற இவ்வுயிரைத் தாங்கி, வருத்தத்தினிடத்தே மிகுந்து சார்ந்திருந்தேன்; இது மிகவும் இரகசியமான விஷயம்; இது வெளிப்படின் யானும் என் குலத்தாரும் கட்டியங் கார

னால் அடியோ டழிவோம்; இஃது எவ்வகையாலும் வெளிப்பட லாகாது; ஆதலால், இதனை நீர் கேட்டு வெளிப்படுத்தாமல் மனத்தடக்கி மறந்துவிடுவீராக; இஃதன்றி இன்னும் சில விஷயங்களைக் கூறுவேன்; அவற்றைக் கேட்டு எனக்குத் திருப்தியான விடை பகருவீராக; மேற் கூறியவாறு சாகாமல் வருத்தக்கடலி லாழ்ந்திருந்த யான், யாரெனிலோ, தம் குலத்தோடு இச்சமயம் கெட்டிருக்கின்ற சச்சந்த மன்னருக்கு நெடுங்காலத்துக்கு முன்னரே * குடியடிமைப்பட்ட குடியின் வழியிலே தோன்றி வளர்கின்றவன்; அரசர்க்கு நெய், பால், தயிர் முதலியன உதவுதலாகிய நலத்துக்குத்தக்க இடையர் வகுப்பினுட் சார்ந்தவன்; என் பெயரோ கோவிந்தன்; 'கோதாவரி! கோதாவரி!!' என்று பெயர் கூறப்பட்டுப் புகழால் அப்பெயர் எங்கும் பரவியவளும், இலட்சணம் பொருந்தியவளும், எனது நலத்துக்குத் தக்கவளுமாகிய என் மனைவிபெற்ற பெண், கோவிந்தை யென்னும் பெயரை யுடையவள்; கச்சும் சிதைய வளரும் பயோதரங்களையும், இளமையையுமுடைய என் மகளாகிய அவளுடைய செழித்த கண்களின் பார்வை, முதலில் ஆடவருடைய தோளில் பாய்ந்து பின்பு மனத்திற்சென்று வேதனைசெய்து, அதனால், அவ்

---

* குடியடிமை - இடையர் முதலியோர் மன்னரிடத்தாவது தனவந்தரிடத்தாவது திரவியம் பெற்றுக்கொண்டு தாம், தம் குலத்தோடு அடிமைப்பட்டதாகச் சீட்டெழுதிக் கொடுத்து அதன்படியே நடந்து வருவது; ஒருவன் எழுதிக் கொடுத்திருப்பினும் அவன் வழியில் வருவோ ரெல்லாரும் அக் கட்டுப்பாட்டுக் குள்ளடங்கி விலைகொண்டோர்க்கு விசேஷ நாட்களில் தயிர், நெய், பால் முதலியன கொடுத்துப் பெருமை பாராட்டுவார்கள்; விலை கொண்டோர் செல்வத்திற் றாழ்ந்தும் விலைப்பட்டோர் உயர்ந்து மிருந்தாலும் மேற் கூறிய வரம்புக் குட்பட்டே நடப்பார்கள்; இது பண்டைக்கால வழக்கம்; இத்தகையரைக் குடியிடையர் குடிவலையர் என்று சொல்வது மரபு.

வாடவ ரெல்லோருக்கும் இரண்டு பாணங்களைத் தங்கள் தோளடியிலே புகுத்தி ஊடுருவிச் செல்லும்படி அப்பா லிழுத்துப் பின்னர் நெஞ்சிலே அழுத்தியிட்ட தன்மையை நிகர்த் திருப்பதனாலே (அதாவது: தங்கள் தோளில் பாய்ந்த அவளுடைய பார்வையால் ஆசையுண்டாகி அவ் வெண்ணம் எல்லா ஆடவருடைய நெஞ்சிலும் புகுந்து அதனால் அம்பழுந்தியதுபோல் வேதனை மிகுதலாலே) பலர் அவள் சேர்க்கையை விரும்பி அது கிடைக்கப் பெறு தகுறையால் வருந்திப், பூங் கொம்பையும் தன்னுடைய அழகினாலே கெடுக்கின்ற அவளை மணஞ்செய்து தரும் படி இரந்து என்னிடம் கேட்டார்கள்; அப்படிக் கேட்டு வருந்தி என் தலைவாயிலிலே நின்ற எமது ஆயர் கூட் டத்தாரிடத்தி லெல்லாம் சந்தோஷமான முகக்குறிகாட்டி இணங்காமல் மறுத்துவிட்டு, உயர்ந்த மாப்பிள்ளை தேடிக் கொடுக்கவேண்டுமென்று கருதி அவ் வழியிலே நின்றேன்; ஐயனே! அப்படி ஒருவருக்குங் கொடாமல் மறுத்து வீட்டில் வைத்திருந்த அவளை, இப்போது வேடர்கொ ண்டு சென்ற பசுநிரையை மீட்டுவந்தவர்க்குத் தருவதாகப் பறையறைந்து இந்நகரில் தெரிவித்தேன்; அதன் பின்னர் தாம் சென்று ஒருவரையுங் கொல்லாமல் உபாயமாக நிரை மீட்டு வந்தீர்; ஆதலின், பாடகத்தை யணிந்ததும், சிவ ந்த பொன்போன்றதுமாகிய சிற்றடியையும், அழகுபரந்த இடைப் பாகத்தையும், வளையலணிந்த முன் கைகளையும், பிரகாசிக்கின்ற இரத்தின பரணங்களையுமுடைய அப் பெண்ணைச் சிவந்த முதற்சாதிப் பொன்னாற் செய்யப்பட்ட ஏழு பாவைகளுடனே உமக்கு மணம்புரிந்து தருவேன்; நீர் குறைவற்ற அக் கலியாணத்திற்கு இணங்கி மணமக னவீராக," என்று கூறினன். அப்படிக் கூறிப் பின்ன ரும், தான் இடைச்சாதியா யிருப்பதனால் இக் காரியத் துக்கு ஒருவாறு சம்மதிக்காமல் தடைசெய்தாலும் செய்

யக் கூடுமென்று கருதி, அவனை இணங்குவித்தற் பொருட்டாக, "பசிய மலர்மாலையை யணிந்த வள்ளலே! ஆணிற் சிறந்தவரே! நீர், அவளையும், என்னையும், என்குலத்தையும் விரும்புதல் தாழ்மையென்று குறித்துத் தள்ளிவிடாதீர்; நல்ல நிறமும் அழகும்பொருந்திய குயங்களையும், காதலும் இளமையுந் தங்கிய பார்வையையுமுடைய அவள், ஸ்பரிஸத்தில் வெண்ணெயைப்போன்ற மென்மைதங்கிய இனிமையை யுடையவள்; பருகுதற்கு விரும்புகின்ற பாலைப்போலத் தித்திப்பாகிய சொற்களை யுடையவள்; சட்டியடியிற் பிடித்துச் சிறிது தீயும்படி முறுக வுருக்கிய பசுவினெய் போன்ற பளபளப்பான மேனியை யுடையவள்; இவையன்றி அவளுடைய இரண்டு கண்களும் இரண்டு கருவிள மலராகும்; அவள் இடைச்சியா யிருந்தாலும் அவளை மணம்புரிவதால் உண்டாகத்தக்க குறையாது? எக்குறைவும் நேராது; குறக்குலத்தில் வளர்ந்தவளா யிருந்தும் அழகு குறித்துச் செழித்த கயல்போன்ற கண்களையுடைய வள்ளியை நன்மணமிகுந்த கடப்பமலர் மாலையை யணிந்த முருகன் மணம்புரிந்து அவளுடைய அழகை அனுபவித்தான்; பூமிதேவிக்கு நாயகனாகிய திருமாலும், நீண்ட பசுநிரையையுடைய ஆயர்குலத்தில் பிறந்தவளாகிய நப் பின்னைப்பிராட்டியாரை மணந்து, அவளைச் சேர்ந்து அவளுடைய இலவமலர்போன்ற வாயின் அமிர்தத்தைஉண்டு களித்தானல்லவா? ஆதலால், இடைக்குலமென்னும் தாழ்வைக்கருதாதீர்; இனி, யான் கூறிய எல்லாவற்றையும் மனங்கொண்டருளி, உமக்குத் தொண்டுசெய்பத் தக்க அடிச்சியாகிய அவளை, அலங்கரிக்கப்பட்ட மலர் நிறைந்த மாலைசூட்டி மணம்புரிவீராக; என்னையும் சாமானிய னென்று நினையாதீர்; அப்படி நீர் மணம்புரியுங் தருணத்தில் சிறப்பாகக் கலியாணம் நடத்துவதில் பின் வாங்கக்கூடியவனல்லன்; அக் கலியாணத்திற்குச் செம்மையாகிய பசுவின் பாலினின்று முண்டான நல்ல நெய்யையும்,

சுமையாகிய தயிரையும் இவ் வுலகமெல்லாம் நிறையும்படி நிறைப்பதன்றி, இங்கிடமில்லாமற்போயின் பாதாள லோக மெல்லாம் நிறைத்திடுவேன்,'' என்றும் கூறினான்.

இதைக் கேட்டவுடன் சீவகன், "நம்முடைய குலத் தார், தளிர்கள் நெருங்கியதும், பலவிதப் புஷ்பங்களால் பல வடிவமாகத் தோற்றும்படி பரப்பிக் கட்டப்படுவது மாகிய வகைமாலையையும், பொன்னுபரணங்களையுமுடைய பெண்களைக் கலியாணஞ்செய்யும்போது, அக் கன்னியர்க ளில் நற்குலத்திற்றோன்றிய காரணத்தால் சிறப்பு மிகுந்த வருடைய, பிரகாசமுள்ள குயங்கள் பொருந்தியதும், பிற ரால் தீண்டி உயர்ச்சி யழியாததுமாகிய மார்பகத்தை எதிர்ப்பட்டவர்களாய்ச் சேர்வதல்லது, தங்குலத்திற்குப் பொருந்தாதவர்களை முதன்மையாக மணம்புரியமாட்டார் கள்; அதுவுமன்றித் தேவரொழிய மனிதர்க்கு இவ்வாறு குலத்திற்குத் தக்கவரைத்தேடி மணம்புரிதலே முறை மையாயிருக்கின்றது; ஆதலின், இவளை மணம் புரிதல் நமக்குத்தகாது,'' என்று கருதிப் பின்னரும், "இவன் நம் மை மிகவும் விரும்பி இதனைக் கூறுகின்றமையால் பூரண மாக இவ் விஷயத்தைத் தடைசெய்யின் இவனுக்கு மனவே தனையுண்டாகும்; இடையரினும் வாணிகஞ்செய்வோ ரிருக் கின்றமையின் இவ் விடையர் வணிகர்வகுப்பிற் சிறிது சார்வார்களாதலால், நமது தோழருள் வணிகனான பதுமுக னுக்கேனும் இப்பெண்ணை மணம்புரிவிப்பது நலம்; அப் படிச் செய்வதற்கும் இவனுக்கு நிறைந்த திருப்தி ஏற்பட மாட்டாதாதலால், வெளிப்படையில், இவளை நமக்குப் பொருத்த முடையவளாக எண்ணி நாமே மணஞ்செய்து கொள்ள இணங்கி, 'இவள் எனக்குத் தகுதியுள்ளவள்; ஆதலின், ஏற்றுக்கொள்கிறேன்,' என்று சொன்னதாகப் பொருள் தருவதும், உட்கருத்தில், இவளை நமக்குத் தகுதி யற்றவளாகவும், பதுமுகனுக் குரியவளாகவும் நினைத்து

நாம் ஏற்றுக்கொள்ளும் விஷயத்தை மறுத்துப் பதுமுக னுக்கு மணம் புரிவித்தற்கிணங்கி, 'இவள் எனக்குத்தகுதி யற்றவள்; இடைச்சாதியரான நீங்களும் சிறிது வைசிய வகுப்பைச் சார்ந்தவராதலின் வைசியனுகிய என்தோழன் பதுமுகனுக்கே உரித்தானவள்; ஆதலின், இவளை யான் தானம் பெற்றுப் பதுமுகனுக்கே கொடுத்துவிடுவேன்,' என்று சொன்னதாகப் பொருள் தருவது மாகிய இரு பொருள் பயக்கத்தக்க ஒருவாக்கியத்தைச்சொல்லி அத ஞல், இவன் நமக்கென்றே நினைத்து மனத்திருப்தியோடு கொடுக்க நாம் பெற்று அவளை நம்முடைய வார்த்தையின் உட்கருத்தின்படி பதுமுகனுக்கே கொடுத்துவிடுவோம்; இஃது ஆரம்பத்தில் இவனுக்குத் திருப்தியைத் தரத்தக்க தும், 'சீவகன் இழிகுலப்பெண்ணை மணம்புரிந்தான்,' என்று நமக்குவரும் பழிப்பை நீக்கத்தக்கதும், நம்மு டைய வார்த்தைக்கும் பழுதுவராமற் செய்யக் கூடியது மான உபாயமா யிருக்கிறது; இதுவே சரியான யோசனை" என்று முடிவாகத் தன்மனத்தில் தீர்மானித்தான்.

இவ்வாறு முடிவுசெய்துகொண்டவுடன், வலிய கொம் புகளையுடையதும், இளமைப்பருவம் பொருந்தியதுமாகிய யானையை நிகர்த்தவனுகிய சீவகன், நந்த கோனுடைய முகத்தைப்பார்த்து, "உயர்வையும் இளமையையும் பொ ருந்திய பயோதரங்களை யுடையவளாகிய உன் இளங்குமரி யும், இலக்குமியை நிகர்த்தவளுமாகிய அப்பெண், "எனக் குச் சூட்டொடு கண்ணி யல்லவோ? நீ இந்த வார்த்தைக ளைக்கூறிக் காலத்தை நீட்டித்தல் செய்வானேன்? இது குண மோ?" என்று அவன் நெஞ்சகங் குளிரும்படி சொன்ஞன்.

"எனக்குச் * சூட்டொடு கண்ணியல்லவோ? நீ இந்த வார்த்தைகளைக் கூறிக் காலத்தை நீட்டித்தல் செய்வா

---

* சூட்டொடுகண்ணி - இது, முதற்கருத்துக்கு, 'சூட்டுதலோடு பொருந்திய கண்ணி' யென்றும், இரண்டாவது கருத்துக்கு, 'நெற் றிச் சூட்டும், கண்ணியும்' என்றும் பொருள் பட்டது.

னேன்? இது குணமோ? ” என்று இவ்வாறு இருபொருள் படக் கூறியதில், வெளிப் படையில் நந்த கோனுக்குத் தகுதியாக, உலகத்தில், ‘மார்பிற்குமாலையிடுக’ என்றும், ‘தலைக்கு மாலை சூட்டுக’ என்றும் வார்த்தைகள் வழங்கப் படுதலின், இவ் வழக்கத்தை யனுசரித்து, “நின்மகள் எனக்குச் சிரசில் சூட்டுந் தன்மையோடுகூடிய கண்ணி யல்லவோ? (அதாவது : சிரசில் சூட்டுந் தன்மையுள்ள கண்ணிபோன்ற உயர்ந்த பொருத்த முடையவளல்லவோ) இவளை நான் தடையின்றி ஏற்றுக்கொள்கிறேன்; நீ இவ் வித வார்த்தைகளைக்கூறி ஏன் காலத்தைத் தாமதப்படுத்து கின்றாய்! விரைவில் மணத்திற்குரிய காரியங்களை நடத்தா மல் இவ்வாறு காலத்தைக்கடத்துவது தகுதியோ?” என்று பொருள்தந்தது; சீவகன் மன வெண்ணத்திற்குத்தகுதியாக உட்கருத்தில், ‘சூட்டு’ என்பது, ஸ்திரீகள் சூடும், ‘நெற் றிச்சூட்டு’ (அதாவது : நெற்றிமாலை) என்றும், ‘கண்ணி’ என்பது, ‘ஆடவர் சிகையிற் சூடுங் கண்ணி’ என்றும் வழ ங்குவதால், “எனக்கு நின்மகள் ஆடவர்க் காகாததும், ஸ்திரீகளுக் குரியதுமான நெற்றிச்சூட்டும், மற்றொருவ கைக்கு (அதாவது : உங்கள் ஜாதிக்குச்சிறிது பொருத் தமாகிய பதுமுகனுக்கு) ஆடவர் சிறிது ஏற்றுக்கொள் ளத்தக்க * கண்ணியு மல்லவோ (அதாவது : எனக்கு, ஆட வர்க்காகாத நெற்றிச் சூட்டுப்போலத் தள்ளத்தக்கவளும் பதுமுகனுக்கு, ஆடவர்க்காகும் கண்ணிபோலச் சிறிது ஏற்றுக்கொள்ளத் தக்கவளுமல்லவோ) ஆதலால், உன்னி டம் இவளை ஏற்றுப் பின்னர் பதுமுகனுக்குத்தான் கொ டுத்துவிடுவேன்; அப்படியிருக்க நீ என்னைமணம்புரிந்து

* ‘கண்ணியும்’ என்பதற்குமுன் இன்னவனுக்கு என்னும் குறிப்புக் காட்டாதிருந்த போதிலும், பதுமுகன் வணிகனும், அவ னுக்கு இவள் ஆடவர் சூட்டுங்கண்ணிபோலச் சிறிது பொருத்த முடையவளாயு மிருப்பதை முன்னிட்டு அவ்வார்த்தை அவனுக்கே என்னுங்குறிப்பு, தானே யேற்பட்டது.

கொள்ளும்படி இவ் வார்த்தைகளைக் கூறி நேரத்தைப் போக்குவதால் என்ன பிரயோசனம்? இது தகுதியானகாரியமா?" என்று பொருள்பட்டது.

இவ்விருவகைப் பொருள்களுள்ளும் முதல் வகையையே மனத்துட்கொண்டு சீவகன் இணங்கிவிட்டானென்று மகிழ்ந்து, தேன்சொரிகின்ற முல்லை மாலையையும், சிவப்பாகிய காவியூட்டிய ஆடையையு முடைய இடையர் தலைவனும், வாசனைமிகுந்த முல்லை மாலையையணிந்தவனுமான நந்தகோன், உடனே தன் சேரிக்குச்சென்று, கடையும்போது கேட்கும் தயிர்முழக்கமாகிய நன்னிமித்தமுண்டாகத் தன்னில்லத்திற் புகுந்து, "மான்குட்டிகள் இலைகளைக் கடிக்கக்கற்ற (அதாவது : மான்குட்டிகள் கடித்துச் சிறிது சிறிது குறைவுபட்டிருக்கும் இலைகளையுடைய) மல்லிகை வகையைச்சார்ந்த மௌவல் என்னும் செடியாலும், நெருங்கிய இருவாட்சிச்செடியாலும் பந்தல் அமைத்து அதிலே நமது அருமைப் புத்திரியாகிய கோவிந்தையின் கலியாணச்சடங்கு நிறை வேறுவதாக; உடனே அதற்குரிய காரியங்களை நடத்துங்கள்; தாமதமின்றி மேற்கூறிய செடிகளைக் கொண்டுவந்து பந்தரமையுங்கள், கலியாணத்திற்குரிய பொருள்களைச்சேகரியுங்கள்; மாதர்க ளெல்லோருங் கூடிப் பெண்ணை ஸ்நானஞ்செய்வித்து, நம் ஜாதிக்குரிய ஆடையாபரணங்களாலே அலங்கரியுங்கள்," என்று தன் இனத்தவர்க்குக்கூறினன். இதைக் கேட்ட மாத்திரத்திலே குளிர்ச்சி மிகுகின்ற மாலையையணிந்த இடைமாதர்கள், "சுவைமிகுந்த கனியின் தன்மைதோற்றுகின்ற சொற்களையுடைய இப்பெண்ணினது அழகுபொருந்திய சிறிய நெற்றியும், புருவமும் தங்களுடைய வடிவத்தினலே, திருமகனுடைய வளைவாகிய கருப்புவில்லைக்கெடுத்தன; நீலோற்பல மலர்போன்ற கண்களோ தங்களுடைய அழகால் கயல்மீனைக்கெடுத்தன; இவை

இவ்வாறு சிறந்து விளங்கும் இவ்விளம் பருவத்தைக்கண்டு இனி இளைஞராகிய ஆயர்கள் உயிர்பெற்றிரார்; (அதாவது: இவளுடைய மயக்கத்தால் மடிவர்)" என்று கூறுவதுபோலப் பாதச்சிலம்பு சப்திக்கும்படி, சித்திரப்பாவையை நிகர்த்த அக்கோவிந்தையைக்கொண்டுவந்து, ஸ்நானஞ்செய்வித்தற் பொருட்டாகத் தெய்வத்தைவணங்கி உட்காரவைத்தார்கள். அப்படி இருத்திநெருங்கிய இடைச்சியர், "நம்முடைய பசுவும் தொழுவும் நிலைபெற்றிருப்பது போன்று ஒவ்வொரு யுகமுடிவிலும் நிலைபெற்று நெடுங்காலம் வரையும் நீயும் நின்கணவனும் நிலையான வாழ்வடைந்து விளங்குவீராக," என்று தங்கள் ஜாதிக்குரிய மரபின்படி, பின்னே தாழ்கின்ற பெரியகூந்தலையுடையவளாகிய அக்கோவிந்தையை வாழ்த்தி, நாழியிலிருந்த நெய்யை, இளம்பசுவின்கன்று தின்று நுனிகுறைந்திருந்த அறுகம் புல்லாலே தோய்த்தெடுத்து அவளுடைய தலையிலே வார்த்துத்தேய்த்து, அகப்பையாலே நீரைமொண்டு சொரிந்து நீராட்டினார்கள்; அதன்மேல் அலங்கரிக்கத்தொடங்கி, முன்னே அவள் அணிந்திருந்தவைகளும், நெய்விற்ற பணத்தால் செய்யப்பட்டவைகளுமாகிய பசிய பெற்றோட்டையும், குண்டலத்தையும் கழற்றி நீக்கிவிட்டுக் கலியாணக்கோலத்திற்கேற்ற மங்கலமான கடிப்பிணையென்னும் ஆபரணத்தைக் காதுகளிலணிந்து, தொடுத்தலையுடைய மலர்மாலையையும் மார்பிலிட்டவர்களாய்ப்பின்பு ஓரிலையிலே வைத்தெடுத்துவந்த சந்தனத்தைப்பூசி, இடையர்க்குத் தகுதியானதும், மிகவுஞ் சிறியதுமான அலங்காரத்தைச் செய்தார்கள்; அவ்வலங்காரத்தைக்கண்டு மற்ற ஆய்ச்சியரெல்லோரும், "இவ்வித அலங்காரம் உலகத்தில் எங்குமிராது," என்று மதிமயங்கிநின்றார்கள்.

இவ்வாறு அலங்காரம் முடிந்ததன்மேல் ஆயரெல்லோரும் சேர்ந்து, முல்லை நிலத்திற்குரிய, 'ஏறங்கோள்' என்னும் பறைமுழங்க, அக்கோவிந்தையை ஒருபல்லக்கில்

வைத் தெடுத்துக்கொண்டுபோய்ப் பழமையான ஊராகிய இராஜமாபுரமெங்கும் திருவிழாக்கொண்டாட, அந்நகரத் தினூடுசென்று, பின்னர், கந்துகன் மாளிகையிலே சேர்க்க, அதன்மேல் நந்தகோன், கலியாணத்திற் குரிய எல்லாச் சிறப்புக்களையும் நடத்திப் பெருமை மிகுந்த நன்னீர் நிறைந்த கலசத்தைத் தன் கையிலேந்தித் தன்மகள் கோவிந்தையைக் கன்னிகாதானம் செய்வதாகச் சொல்லிச் சீவகன் கையிலே அந்நீரைச் சொரிந்தான்; சீவகனும், பதுமுகனுக்காக அவளைத்தான் பெற்றுக்கொள்வதாகப் பலரறியும் படிசொல்லி அதனை ஏற்றுக்கொண்டான். அப்போது நந்தகோன் சீவகன்கூறிய வார்த்தையைக்கேட்டுத் தன்மகள் சீவகனுக்கன்றிப் பதுமுகனுக்கே உரியவளாயினள் என்பதை யுணர்ந்தான். ஆயினும், அப் பதுமுகன், சீவகனுக்குத் தோழனாதலினாலும், பெரும்பாலும் அவனை நிகர்த்தவனாதலாலும், சீவகனே இக்காரியத்தைச் செய்வதாலும் பாதகமில்லை யென்று நினைத்துச் சீவகனது புத்தி சாதுரியத்திற்காக மகிழ்ந்தவனாய்ப் பதுமுகனுக்கும் கோவிந்தைக்கும் மணத்தை நிறைவேற்றி, நன்மையுடைய அழகு நிறைந்த அக்கோவிந்தைக்கு, இளமைபொருந்திய பசு இரண்டாயிரமும், நல்லபொன்னாற்செய்த இலட்சணமமைந்த பாவை ஏழும் சீதனமாகக்கொடுத்துப் பதுமுகனோடு சேர்ந்து வாழும்படி அவளுக்குப் புத்திகூறிவிட்டுத் தன் சேரிக்கேகினன்.

அவன் அவ்வாறுபோக, இங்குக் கூறிவந்த இராஜமாபுரத்தில் அப்பெண்ணும் மாப்பிள்ளையும் கூடி யிருந்தார்கள்; அப்படி யிருக்கும்போது சித்தசன் சேனையென்னும் அக் கோவிந்தையின் கண்ணும், குயமுமாகிய அவயவங்கள் மனவுறுதியைக்கெடுத்துப், பதுமுகனுக்கு வருத்தத்தை யுண்டாக்கின; அப்படி வருத்தத்தை யுண்டாக்கின சமயத்தில் மான்மகன் அவனுடைய மனத்தை இல்லறவின்பத்திற் செல்லும்படி திருப்பினன்; அவ்வாறு

திருப்பவே அப் பதுமுகன் ஆற்ருதவனுய் அக் கோவிந்தையின் முத்துமாலை அறுபட்டு அதிலுள்ள முத்துக்கள் சிதறும்படி அவளுடன் விளையாடினுன்; அவ்வாறு விளையாடினவனும், மாலையைத்தரித்த வேலை யுடையவனுமாகிய அவன், மேலும் அக்கூட்டுறவானது தனக்கு மிக்க இன்பத்தைச் செய்ததனுலே, கூடும்போது, இனிமையைச் செய்து, தம்மிடத்தே மதுமிகுந்த இரண்டுகழுநீர் மலர்கள் சேர்ந்திருந்தாற்போலக் குளிர்ச்சியை யுடையனவாகியும், பிரிந்தபோது துன்பத்தைச்செய்து, வெள்ளிய வேலாயுதங்களைப்போலாகியும் விளங்குகின்ற நீண்ட கண்களை யுடையவளும், மணம் வீசுகின்ற மாலையையணிந்தவளுமாகிய அக்கோவிந்தையினேடு விளையாடும் விளையாட்டை வெறுக்காமல் மகிழ்ச்சியோடு நாடோறும் நடத்தி அடங்காமல் கரைபுரண்டோடும் இன்பக்கடலிலே அழுந்தினுன். இவ்வாறு அவளுடைய உறவால் மேன்மேலும் அவனுக்கு அளவற்ற இன்பமுண்டானபடியால், ஒவ்வொரு நாளும் அவளைப் பார்த்து, "இவள், தித்திப்பாகிய பாற்கடலைத் தேவர்கள் அலைபொங்கும்படி கடைந்து மிகுந்த பிரயாசத்துட னெடுத்துத் தம்மிடத்தே சேர்த்துவைத்த அமுதமோ! அல்லது, அழகிய பாற்குடங்களையுடைய இடையர்மகளோ!" என்று புகழ்ந்துரைத்துப் பின்னும் நீக்க முடியாத இல்லற வொழுக்கத்தினுலே பெரிய மாலையையும், மூங்கில்போன்ற தோள்களையு முடைய அப் பெண் பரவசமாகும்படி தானும் மதிமயக்கங் கொண்டவனுய் உறவாடி அவளுடன் இணைபிரியாது வாழ்ந்துவந்தான். அப்போது சீவகனுக்கு வெற்றியாலும், அழகாலும், உயர்ந்த ஒழுக்கத்தாலும் அளவற்ற புகழ் உலகத்தில் பரவினமையால் எல்லோருங் கொண்டாட அவனும் வீரலட்சுமியைச்சேர்ந்து மகிழ்ச்சிபெற்று வசித்துவந்தான். சுபம்.

கோவிந்தையா ரிலம்பகம் முற்றுப்பெற்றது.

## ஞாபகக்குறிப்பு.

இந்நூலை ஆக்குவித்தோருடைய புத்திரருக்கு மணம்நடந்த
சமயத்தில் இதன் அச்சுவேலை தொடங்கப்பட்டதாதலின்
அக்காலத்தை விளக்கிக்கொண்டிருக்குமாறு ஷை
திருமணத்தில் என்னால் கூறப்பெற்ற வாழ்த்
துக்கவி இங்கே சேர்க்கப்பெற்றிருக்கிறது.

## திருமணவாழ்த்துக்கவி.

ஆசிரியவிருத்தம்.

திருமலரு மணமுநிறை தருபிண்டி யடியிலுறை
ஸ்ரீவர்த்த மானர் பாதஞ்
செம்மையொடு பணியுந் திருப்பறம் பூரில்வளர்
ஜீவகா ருண்யர் மரபிற்
றிகழுருக் கொடுவந்த வாதிநயி னாரெனுஞ்
செம்மல்மா தவபுதல்வனுஞ்
சீர்த்திபெறு சம்பத் தெனும்பெயர்க் குரிசிலுந்
திங்கள்வரை யோங்கு பொழிலார்

தருவளம் பெருகுபெரு மண்டூரி னூர்பெரிய
தருமர்பார் சுவநாதராஞ்
சற்குணர் திருக்குமா ரத்திபே ரழகெலாந்
தங்குகம லாவதி யெனும்

தக்கபுகழுத்தமி சிறந்தநற் கற்புநிறை
சௌபாக்கிய வதியு மிங்கு
சார்ந்தபிர மாதீச வருடமுதன் மதியிலே
தங்குமிரு பானொன் பதில்

வருபரிதி வாரமோ டைந்தான திதிமிக்க
வண்ணமுறு புனர்பூசமும்
வாய்த்தசுப தினமுதய மேடத்தி லேபெரியர்
வாழ்த்தமதி சேர்மந்திரம்
மகிமைமிகு மாசிரியர் செப்பிடப் பொற்புநிறை
வாத்தியமெ லாமுழங்க
மாதா பிதாக்கண்முதல் வந்தவுற வினரெலா
மனமகிழ்ந் தாசிகூற

உருவள ரலங்கார மேன்மேலு மோங்கவே
யுத்தம மணம்பெற்றுமா
வுவகையுட னுலகில்வரு தனபாக்கி யங்களுட
னொப்புமா சாரமுதலா
வுறைகின்ற மனைவாழ்வு மிறைவனருளும்பெற்
றுரைக்குநற் குண மனைத்து
முள்ளசற் புத்திரர் பவுத்திரர்க ளும்பெற்
றுயர்ச்சிமிக வாழ்க மாதோ.

இங்ஙனம்:

வீ. ஆறுமுகன்.